கடைசிக்கால இரகசியங்கள்!

இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தின
சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டிய விசேஷங்கள்

விஜயகுமார் சாமுவேல்

அர்ப்பணிப்பு

சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும்
ஆட்டுக்குட்டியானவருக்கும்
ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும்
சதா காலங்களிலும் உண்டாவதாக.

நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே பாவங்களற
நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக
நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும்
வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

இந்தச் செய்தி தொகுப்பிற்கு துவக்கமும் நிறைவும் காரணருமான
பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம், ஸ்தோத்திரிக்கிறோம்.
கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்தார்;
இதனிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்.

மனமுவந்து இப்பணியில் உற்சாகப்படுத்தி, உதவிச்செய்த
கிறிஸ்துவுக்குள்ளான சகோதர, சகோதரிகளுக்கு மனமார்ந்த நன்றி.
பிரியமானவர்களே, நீங்கள் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள
பிரயாசத்தை மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே!

தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன்
ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்.
இந்தக் கடைசிக்கால இரகசியங்களை வாசித்து, அறிந்து
கைக்கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள். காலம் சமீபமாயிருக்கிறது.

கடைசிக்கால இரகசியங்கள் !

பொருளடக்கம்

1. இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தின விசேஷம் 5
2. சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பரலோகத்தின் தேவன்! 22
3. அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டியானவர்! 36
4. முத்திரிக்கப்பட்ட நியாயத்தீர்ப்புகள்! 51
5. எக்காளங்கள் எச்சரிக்கும் பேரழிவுகள்! 67
6. கடைசிக்கால ஊழியங்கள்! 85
7. வானத்தில் தோன்றும் அடையாளங்கள்! 103
8. பூமியில் தோன்றும் அடையாளங்கள்! 119
9. சீயோன் மலையில் தேவனுடைய ஊழியக்காரர்! 136
10. பூமியில் ஊற்றப்படும் ஏழு கோபகலசங்கள்! 155
11. மகா பாபிலோனின் இரகசியம்! 174
12. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகை! 196
13. இயேசுகிறிஸ்துவின் ஆயிரம் வருஷ ஆளுகை! 215
14. இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்! 235
15. நினையாத நாழிகையில் இயேசுகிறிஸ்து! 259
16. உங்களோடு சில வார்த்தைகள் 276

வெளியாக்கப்படாத மறைபொருளுமில்லை,
அறியப்படாத இரகசியமுமில்லை (லூக்கா 12:2).
உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால்,
கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி,
சொப்பனத்தில் அவனோடே பேசுவேன் (எண்ணாகமம் 12:6).
மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்;
வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின்
வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு,
நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும்
உரியவைகள் (உபாகமம் 29:29).

1. இயேசுகிறிஸ்து வெளிப்படுத்தின விசேஷம்

தரிசனங்கள் வெளிப்படுத்தும் இரகசியம்!

வேதாகமத்தில் வெளிப்படுத்தின விசேஷம், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின கடைசிக்கால சம்பவங்களைப்பற்றின தரிசனங்களின் தொகுப்பாகும். உலகத்தின் ராஜ்யங்கள், நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாகி, அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணவிருப்பதை (வெளி. 11:15) இந்தத் தரிசனங்கள் முன்னறிவிக்கிறது. மனுக்குலம் ஏதேன் தோட்டத்தில் இழந்த பரதீசைத் திரும்பப் பெறவிருப்பதையும் இவை வெளிப்படுத்துகிறது.

உபத்திரவங்களுக்கும் துன்பங்களுக்கும் உட்பட்டிருக்கும் விசுவாசிகளை ஆறுதல்படுத்தி, நிறைவில் நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் பெறவிருக்கும் நிச்சயமான வெற்றியை இவை முன்னறிவித்து உற்சாகப்படுத்துகிறது. சாத்தானும் அவனோடிருக்கும் தீய சக்திகளும், அவிசுவாசிகளும் முடிவில் நியாயந்தீர்க்கப்படவிருப்பதை இது உறுதிச்செய்கிறது.

மேலும் இயேசுகிறிஸ்துவின் அதிசீக்கிரமான வருகையையும், பிசாசானவனும் அவனது சேனையும் பேரழிவிற்குட்படவிருப்பதின் நிச்சயத்தையும் வெளிப்படுத்துகிறது. எனவே, சபையும் விசுவாசிகளும், விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும், உண்மையிலும் அன்பிலும்

முடிவுப்பரியந்தம் நிலைத்திருந்து இரட்சிக்கப்பட இந்த வசனங்கள் ஊக்குவிக்கின்றன.

இந்த வசனங்களை வாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்!

இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களை முத்திரைபோட வேண்டாம் (வெளி. 22:10) என யோவான் கட்டளைப்பெற்றார். வெளிப்படுத்தின விசேஷத்தை, விசுவாசிகளாகிய நாம் வாசித்து விளங்கிக்கொள்ள கர்த்தர் விரும்புகிறார். இந்தத் தரிசனங்கள் புரியக்கூடாதவைகள் அல்ல. இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது (வெளி. 1:3) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பிதாவாகிய தேவன், சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்கு, சபைகளுக்கு, விசுவாசிகளுக்கு காண்பிக்கவேண்டும் என்பதே, இந்தத் தரிசனங்களின் நோக்கமாகும். இயேசுகிறிஸ்துவின் மகிமையையும் வல்லமையையும் வெளிப்படுத்தி, மாசில்லாத சுத்த பக்தியுள்ளவர்களாய், அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவரின் வருகைக்குக் காத்திருக்க விசுவாசிகளை இது ஊக்குவிக்கிறது. இயேசுகிறிஸ்துவின் வருகையை ஆவலாய் எதிர்பார்த்து காத்திருந்து, நித்தியஜீவனை அடைய, இந்த சத்திய வசனங்கள் வழிநடத்துகிறது.

இந்தப் புஸ்தகத்தை வாசித்து தியானிக்கும்போது, வருங்காலத்தைப்பற்றின நம்பிக்கையையும் நிச்சயத்தையும் பெற்றுக்கொள்ளுகிறோம். இந்த வசனங்கள், தேவனுடைய முகத்தைத் தரிசிக்கும் ஆவலைத் தூண்டி, சமாதானமும் சந்தோஷமுமான வாழ்வை வாஞ்சித்து நாடித்தேட ஊக்குவிக்கிறது. வரவிருக்கிற, புதிய வானம் புதிய பூமியையும், கர்த்தருடைய ராஜ்யத்தின் மகிமையையும் பரிசுத்தத்தையும், சாபங்களில்லாத நித்திய ராஜ்யத்தையும் இவ்வசனங்கள் நினைப்பூட்டி உற்சாகப்படுத்துகின்றன.

ஆனால், அநேகர் இந்தத் தரிசனப் புஸ்தகத்தின் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கவே தயங்கித் தடுமாறி நிற்கிறதை அறிவோம். வேதாகமத்தையும்,

வசனங்களையும் வாசிக்காமல் எவ்வாறு அவற்றைக் கைக்கொள்ளமுடியும்? நம்மைச் சுற்றிலுமெங்கும், துரிதமாய் நடந்தேறும் இயற்கையின் சீற்றங்கள், பேரழிவுகள், வஞ்சகங்கள், துரோகங்களைக் கண்டு உணர்வடைவோம். எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிருப்பதை, இந்தச் சம்பவங்களினால் அறிந்து எச்சரிக்கப்பட்டு, வேதாகமத்தை வாசித்து, பூரண இரட்சிப்படைய ஒப்புக்கொடுப்போம்.

அநேகரால் புறக்கணிக்கப்படுகிற இந்தத் தரிசனப் பகுதிகளை வாசித்து தியானித்து கைக்கொண்டு ஆசீர்வதிக்கப்பட வாய்ப்பைப்பெற்றிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டு, விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் உண்மையிலும் முடிவுபரியந்தம் நிலைத்திருந்து நித்திய ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ளுவோம்.

முடிவின் ஆரம்பம்!

சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டிய விசேஷங்களைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததை, இயேசு தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினார். தேவவசனத்தினிமித்தமும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித்தமும், அப்போஸ்தலனாகிய யோவான் பத்மு என்னும் தீவிலே ரோம அரசாங்கத்தினரால் சிறையிலடைக்கப்பட்டிருந்தார்.

பத்மு மத்தியதரைக்கடல் பகுதியில், எபேசு பட்டணத்திற்குத் தென்மேற்கே சுமார் 80 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் ஒரு தீவாகும். அப்பகுதியிலுள்ள எரிமலைச் சிதறலினால் உண்டான கூர்மையான பாறைகளால் நிறைந்த இந்தத் தீவின் கருங்கல் சுரங்கங்களில், அந்தச் சிறைக்கைதிகள் வேலைசெய்யும்படியாக நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். யோவான் பத்மு தீவில் சிறையிருப்பிலிருந்த காலங்களில், கடினமான சூழ்நிலையில், கர்த்தருடைய நாளிலே ஆவிக்குள்ளானார். அப்பொழுது கர்த்தர், இவ்வுலகத்தின் முடிவில் சம்பவிக்கவேண்டியவைகளை, தரிசனங்களாக யோவானுக்கு வெளிப்படுத்தினார்.

யோவான் தரிசனமாகக் கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளையும்,

புஸ்தகத்தில் எழுதும்படியாகக் கர்த்தர் அவருக்குக் கட்டளையிட்டார் (வெளி. 1:19). இந்தத் தரிசனங்கள், அப்போஸ்தலனாகிய யோவானால், பெற்றுக்கொண்ட வரிசையில் கி.பி. 95ஆம் ஆண்டு தொகுக்கப்பட்டு, வெளிப்படுத்தின விசேஷத்தில் இடம்பெற்றுள்ளன.

கடைசிக்கால இரகசியங்களை வெளிப்படுத்தும் வேதப்பகுதிகளைக் குறிப்பதற்கு அப்போகலிப்ஸ் (APOCALYPSE) என்கிற கிரேக்க சொல் பயன்படுத்தப்படுகிறது. இது மறைப்பொருள் வெளிப்படுத்தப்படுவதைக் குறிக்கிறது. புதிய ஏற்பாட்டின் வெளிப்படுத்தின விசேஷமும், பழைய ஏற்பாட்டின் தானியேல் புஸ்தகமும்; சகரியா, யோவேல் தீர்க்கதரிசன புஸ்தகங்களின் பகுதிகளும்; புதிய ஏற்பாட்டின் மத்தேயு 24,25 அதிகாரங்களும், லூக்கா 21ஆம் அதிகாரமும், 1 தெசலோனிக்கேயர் 4ஆம் அதிகாரத்தின் சில வசனங்களும் இந்த வகைகையைச் சார்ந்தவைகளாகும்.

வெளிப்படுத்தின விசேஷத்தின் பொருள் விளக்க அடிப்படை!

கடைசிக்கால சம்பவங்களைப்பற்றின இந்தத் தரிசனங்களை விளங்கிக்கொள்ள கண்டவைகள், இருக்கிறவைகள், இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளை அடையாளங்கண்டு அவற்றை அறிந்துகொள்ளுதல் அவசியமாகும்.

- <u>கண்டவைகள்</u> - தரிசனம் தந்த இயேசுகிறிஸ்துவையும், தரிசனம்பெற்ற யோவானையும், அவருக்குக் கொடுக்கப்பட்ட பணிகளையும் விவரிக்கிறது.
- <u>இருக்கிறவைகள்</u> - ஆதித்திருச்சபைகளின் ஆவிக்குரிய தன்மைகளையும், அந்தச் சபையினரான விசுவாசிகள் நித்தியராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ள செய்யவேண்டியவைகளையும் தொகுத்தளிக்கிறது. இதுவே இந்நாட்களின் சபைகளுக்கான, எச்சரிப்பும் ஆலோசனையுமாகவும் இருக்கிறது.
- <u>பின்பு சம்பவிப்பவைகள்</u> – நான்காம் அதிகாரம் துவங்கி 22ஆம் அதிகாரம் வரையிலான வேதப்பகுதியில் தொகுக்கப்பட்டிருப்பவைகள், இன்றும், இன்னும் நிறைவேறவில்லை. இக்காலத்தில் ஏற்படுகிற பூமியதிர்வு பெருவெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றங்களும், கொள்ளைநோய்களும், வரவிருக்கும் பேரழிவுகளின் முன்னோடியே அல்லாமல், அவை 4 முதல் 22 வரையிலான சம்பவங்கள் அல்ல என்பதாக அறியலாம்.

கிருபையின் நாட்கள், சபையின் காலத்தின் நிறைவில், இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில் சபை மறுரூபப்பட்டு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. இதுவே ஏழு வருட உபத்திரவத்தின் நாட்களின் துவக்கமாகவிருக்கும்.

தரிசன புஸ்தகச் செய்திகளின் சுருக்கம்!

இந்தப் புஸ்தகத்தில் தொகுக்கப்பட்டிருக்கும் இரகசியங்களை, மேலோட்டமாக பார்க்கும்போது, இவை ஐந்து பிரிவுகளாக அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. முதலாம் பிரிவில், தரிசனம் தந்த மனுஷக்குமாரனுக்கு ஒப்பானவரையும், தரிசனம் பெற்ற யோவானையும், கட்டளையாக அவருக்குக் கொடுக்கப்பட்ட பணியையும், முதலாம் அதிகாரம் முன்னுரையாக விவரிக்கிறது.

நீ கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப்பின்பு, சம்பவிப்பவைகளையும் எழுது என்கிற பொறுப்பைப்பெற்ற யோவான், அவற்றைச் செய்து முடித்த விவரங்கள், எஞ்சிய நான்கு பிரிவுகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இரண்டு மற்றும் மூன்றாம் அதிகாரங்களில், ஏழு சபைகளுக்கான தரிசனம் இரண்டாம் பிரிவாக, விவரிக்கப்பட்டுள்ளது.

பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கும் சிங்காசனத்தின் காட்சியையும், சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பவரையும், அவரைச் சூழ்ந்து இருப்பவர்களையும், அங்கு நடைபெறவிருக்கும் சம்பவங்களையும், மூன்றாம் பிரிவில் காண்கிறோம். ஆட்டுக்குட்டியானவர் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கும் காட்சி, கடைசிக்கால நிகழ்வுகளின் துவக்க விழாவைப்போன்று இந்தப் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளது. இவைகளை, நான்கு மற்றும் ஐந்தாம் அதிகாரங்களில் யோவான் விவரித்து எழுதியுள்ளார்.

இதைத் தொடரும், நான்காம் பிரிவில், கர்த்தர் எச்சரிக்கும் உபத்திரவக்கால நியாயத்தீர்ப்புகள் மற்றும் வாதைகளின் விளக்கங்களும், பாபிலோனின் அழிவும் இடம்பெற்றுள்ளன. ஆறாம் அதிகாரம் துவங்கி பதினெட்டாம் அதிகாரம் வரையிலுள்ள வேதப்பகுதியில் இவைகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

பத்தொன்பதாம் அதிகாரம் துவங்கியுள்ள நிறைவுப்பகுதியில், இந்தத் தரிசன புஸ்தகத்தின் உச்சகட்ட நிகழ்வுகள் தொகுத்து எழுதப்பட்டுள்ளன. ஆட்டுக்குட்டியானவரின் கலியாணமும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையும்; ஆயிரங்கால அரசாட்சியும், வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பும், ஐந்தாம் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளன. மேலும் இந்தப் பிரிவு, புதிய வானம், புதிய பூமி, புதிய எருசலேமை விளங்கச்செய்கிறது. தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்; என்கிற அழைப்போடு இந்தத் தரிசன வார்த்தைகள் நிறைவு பெறுகின்றன.

சபைகளுக்கான முதலாம் தரிசனம்!

முதலாம் தரிசனத்தின் வார்த்தைகள், ஏழு கடிதங்களாக தொகுக்கப்பட்டு, 2 மற்றும் 3ஆம் அதிகாரங்களில் இடம் பெற்றுள்ளன. இந்தக் கடிதங்கள், சபைகளின் கிரியைகளையும் ஆவிக்குரிய நிலையையும் ஆராய்ந்தறிந்து, சபைகளின் நிறைவு மற்றும் குறைவுகளைத் தொகுத்தளிக்கிறது.

கர்த்தருடைய பாராட்டுகளும் ஆலோசனைகளும் எச்சரிப்புகளும் இவற்றோடு தொகுக்கப்பட்டு, இவை சபைகளுக்கான ஆவிக்குரிய இடைநிலை தேர்ச்சி அறிக்கையைப் போன்று (Interim Spiritual Progress Report) காட்சியளிக்கிறது.

சபைகளைக் குறித்த இந்த வார்த்தைகளை, ரோம சாம்ராஜ்யத்தின் ஆசிய பகுதியிலிருந்த எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா மற்றும் லவோதிக்கேயா என்னும் பட்டணங்களில் இருந்த ஏழு சபைகளுக்கும் அனுப்பும்படியாக யோவான் கட்டளைப்பெற்றார்.

இரண்டாம் தரிசனம் - கடைசிக்கால திருப்புமுனை!

"இவைகளுக்குப்பின்பு" என்று 4ஆம் அதிகாரத்தைத் துவக்குகிற யோவான், இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளை, புதிய தரிசனத்தின் வெளிப்பாடுகளாகத் தொகுத்து எழுதிவைத்திருக்கிறார். யோவான் பெற்ற

இரண்டாம் தரிசனம் 4ஆம் அதிகாரம் துவங்கி 5ஆம் அதிகாரம் வரையிலுள்ளது.

நான்காம் அதிகாரம் முழுமையும், சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பரலோகத்தின் தேவனின் மேன்மையையும், மகிமையையும், அவருடைய உன்னதமான திட்டங்களையும் தீர்மானங்களையும் செயல்படுத்த நியமிக்கப்பட்டிருக்கிற கட்டமைப்புகளையும் விவரிக்கிறது. இந்தப் பரலோகத்தின் காட்சியும், விவரிக்கப்பட்டிருக்கும் சம்பவங்களும், கடைசிக்கால நிகழ்வுகள் யாவற்றிற்கும் திருப்புமுனையாக அமைந்துள்ளன.

இந்த வேதப்பகுதி, முன்குறிக்கப்பட்ட காலத்தில் நிகழவிருக்கும் இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையை உறுதிச்செய்கிறது. ஏனெனில் ஆட்டுக்குட்டியானவர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள் (வெளி. 5:9,10) என்று எழுதப்பட்டிருக்கிறது. இதனால், ஆயத்தமாயிருக்கும் பரிசுத்தவான்களின் கூட்டமைப்பான சபை, இதற்கு முன்னரே, மறுரூபமடைந்து தேவனுடைய சந்நிதானத்தில் இருக்கும் என்பதாக அறிகிறோம். மேலும் இது கிருபையின் நாட்களின் நிறைவையும், சபையின் காலத்தின் முடிவையும் வெளிப்படுத்துகிறது.

ஐந்தாம் அதிகாரத்தின் காட்சியும் சம்பவங்களும், வெளிப்படுத்தின விசேஷத்தின் எஞ்சிய பகுதிகளில் புதைந்திருக்கும் இரகசியங்களை தெளிவுபடுத்தும் திறவுகோலாக அமைந்துள்ளது. ஐந்தாம் அதிகாரம், கடைசிக்கால நிகழ்வுகளில், ஆட்டுக்குட்டியானவரும், குமாரனாகிய தேவனுமானவரின் பங்களிப்பை வெளிப்படுத்தி உறுதிச்செய்கிறது.

முத்திரிக்கப்பட்ட புஸ்தகம்!

சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்திலே, உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தை யோவான் கண்டார். முக்கியமான தகவல்களைக்கொண்ட

இவ்வகையான புஸ்தகங்கள், அக்காலத்திலே, முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருக்குமாம்.

ஆறாம் அதிகாரம் துவங்கிய வேதப்பகுதியில், இந்த முத்திரிக்கப்பட்ட புஸ்தகத்தை, ஆட்டுக்குட்டியானவர் திறந்து, அதன் ஏழு முத்திரைகளை உடைத்து, பூமியின்மேல் வருவதற்கு நியமிக்கப்பட்டிருக்கும். நியாயத்தீர்ப்புகளை வெளிப்படுத்தவிருக்கிறார். சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொண்டு, கிறிஸ்துவின் ராஜ்யம் இவ்வுலகிலே ஸ்தாபிப்பதற்கான தேவனுடைய விரிவான திட்டங்களையும் தீர்மானங்களையும் இந்தப் புஸ்தகம் உள்ளடக்கியிருப்பதைப்போலத் தோன்றுகிறது. இது உள்ளும்புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருக்கும். அம்மட்டும் இரகசியமாயிருந்த நியாயத்தீர்ப்புகளும் அதன் விவரங்களும் வெளிப்பட்டு, அதனதன் வேளையில் நிறைவுபெறவிருக்கிறது.

ஆட்டுக்குட்டியானவர் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கவிருக்கும் காட்சி, கடைசிக்கால நிகழ்வுகளின் துவக்க விழாவைப்போன்று இருக்கும். வரவிருக்கும் உபத்திரவக்கால நிகழ்வுகளுக்கும், நியாயத்தீர்ப்புகளுக்கும் இது ஆரம்பமாயிருக்கும்.

பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார் (யோவான் 5:22) என்கிற வசனத்தின்படி, இந்தச் சம்பவம் ஒரு உன்னதமான அதிகாரப் பரிமாற்றத்தை, பகிர்ந்தளிப்பை வெளிப்படுத்தி உறுதிச்செய்யும். ஆட்டுக்குட்டியானவர் அந்தப் புஸ்தகத்தை வாங்கி, நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும்போது, பரலோகத்தில் சடிதியாய் மகிழ்ச்சியின் ஆரவாரமும், துதியும் பாடலும் வெளிப்படும்.

உபத்திரவக்காலம்!

இந்தத் தரிசனப் புஸ்தகத்தில் ஆறாம் அதிகாரம் துவங்கி பதினெட்டாம் அதிகாரம் வரைப் பதிவு செய்யப்பட்டிருக்கும் நிகழ்வுகளில் பெரும்பாலானவைகள், கர்த்தர் எச்சரிக்கும் உபத்திரவக்காலத்தின் விளக்கங்களாகும். உலகமுண்டானது

முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும் (மத்தேயு 24:21) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

பரிசுத்தவான்களின் கூட்டமைப்பான சபை மறுரூபப்பட்டு இயேசுகிறிஸ்துவோடு மத்திய ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படும்போது (1 தெசலோனிக்கேயர் 4:13-18) சபையின் காலம், கிருபையின் நாட்கள் நிறைவுபெற்று, உபத்திரவக்காலம் துவங்கும். உபத்திரவக்காலம் தானியேலின் எழுபதாவது வாரம் (தானியேல் 9:24-27) எனவும்; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம் (எரேமியா 30:7) எனவும் குறிப்பிடப்படுகிறது. தானியேலின் தரிசனப்படி, 69 வாரங்களைப்போன்றே காலங்களைக் கணக்கிடுவோமானால், எழுபதாவது வாரம் எனும் கர்த்தர் எச்சரிக்கும் உபத்திரவக்காலம், ஏழு ஆண்டுகள் இருக்கும் என அறியலாம்.

உபத்திரவக்காலத்தில் நடைபெறவிருக்கும் சம்பவங்கள், தேவனுடைய பரிசுத்தத்தினால் வெளிப்படும் நீதியையும் கோபாக்கினையையும் தெளிவாக முன்னறிவித்து, நம்மை எச்சரிக்கிறது. இவை நாம் உலகத்தைச் சார்ந்து செயல்படாமல், நித்தியத்தை நோக்கிப்பார்த்து, கவனமாய்த் தேவசித்தத்தைச்செய்ய நம்மை வழிநடத்துகிறது. இதற்கு மேலாக, நாம் கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகளாக, தேவனுடைய கோபாக்கினைக்குட்பட இருக்கிறவர்களை விடுவிக்கும்படியாக அவர்களை எச்சரிக்கவும் நம்மை நெருக்கி ஏவுகிறது.

இந்த வேதப்பகுதியில், அம்மட்டும் இரகசியமாயிருந்த நியாயத்தீர்ப்புகளின் விவரங்கள், ஒன்றன்பின் ஒன்றாக நடந்தேறவிருக்கும் மூன்று பிரிவுகளாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஏழு முத்திரைகள் உடைக்கப்படும்போது வெளிப்படும் நியாயத்தீர்ப்புகள், ஏழு எக்காளங்கள் ஊதும்போது உண்டாகும் ஆபத்துகள்; தொடரும் ஏழு கோபகலச வாதைகளுடன் தேவனுடைய கோபம் முடிகிறதாக (வெளி. 15:1) எழுதப்பட்டிருக்கிறது. இவற்றினிடையே விவரிக்கப்பட்டிருக்கும் சம்பவங்கள், கடைசிக்கால நிகழ்வுகளைத், தொடர்ச்சியாக நாம் அறிந்துகொள்ள உதவுகிறது.

இந்த நியாயத்தீர்ப்புகளும் வாதைகளும், பூமியையும் சமுத்திரத்தையும் ஆகாயத்தையும் சேதப்படுத்தவும், பூமியிலுள்ளவர்களை வேதனைப்படுத்தவும் கொலைசெய்யவும் அதிகாரத்தை உடையதாயிருக்கும். முத்திரைகள் உடைக்கப்படும்போது வெளிப்படும் நியாயத்தீர்ப்புகளால், பூமியின் காற்பங்கிலுள்ளவர்கள் கொலைசெய்யப்படவிருக்கிறார்கள் (வெளி. 6:8).

எக்காளங்கள் ஊதப்படும்போது வெளிப்படும் ஆபத்துகளால், எஞ்சியுள்ள மனுஷரில் மூன்றிலொருபங்கு கொல்லப்படவிருக்கிறார்கள் (வெளி. 9:18). அந்நிலையிலும், எஞ்சியுள்ளோர்கள் தங்கள் கைகளின் கிரியைகளையும், கொலைபாதகங்களையும், சூனியங்களையும், வேசித்தனங்களையும், களவுகளையும் விட்டு மனந்திரும்பமாட்டார்கள்(வெளி. 9:20,21)என்றுஎழுதப்பட்டிருக்கிறது.

கடைசிக்கால ஊழியங்கள்!

ஆனாலும் தேவன் தம்முடைய மிகுந்த இரக்கங்களின்படியே, எஞ்சியுள்ளோர்களை நிர்மூலமாக்காமலும் கைவிடாமலுமிருந்து, அவர்களும் இரட்சிக்கப்படுவதற்கேதுவான வாய்ப்புகளைத் தரவிருப்பதாக அறிகிறோம். கடைசிக்கால ஊழியமாக, திறக்கப்பட்ட சிறு புஸ்தகத்தைப்பெற்ற யோவான், மறுபடியும் தீர்க்கதரிசனஞ்சொல்லக் கட்டளைபெறவிருக்கிறார்.

கடைசிக்காலத்தில் வெளிப்படவிருக்கும் இரண்டு சாட்சிகளும் எஞ்சிய மக்களை மனந்திரும்பும்படியாக எச்சரித்து, வருங்காலங்களைப்பற்றின தெளிவான தீர்க்கதரிசன வார்த்தைகளாலும் அடையாளங்களினாலும் எச்சரிக்கவிருக்கிறார்கள். இதனிமித்தம், அந்நாட்களின் இறுதியில், மனுஷரில் மீதியானவர்கள் பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்துவார்கள் (வெளி. 11:13) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இந்த வேதப்பகுதியின் பிரதானமான நோக்கம், கிறிஸ்துவின் அன்பை அறிந்து உணர்ந்து, அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ள நாம், அஜாக்கிரதையினாலோ அல்லது நிர்விசாரத்தினாலோ நமக்கருளப்பட்டிருக்கிற இந்த அரியவாய்ப்பை இழந்துவிடக்கூடாது என்பதேயாகும். நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் என்கிற வார்த்தையின்படி, நீதி செய்யவும், கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்திலும், உண்மையிலும், மனத்தாழ்மையிலும் நிலைத்திருக்கவும், நம்மையே அர்ப்பணிப்போம். விவரிக்கப்பட்டிருக்கும் வாதைகளுக்கு விலக்கிப்பாதுகாக்கப்பட்டு, கர்த்தருடைய வருகையிலே நாம் அவரோடே எடுத்துக்கொள்ளப்பட்டு, நித்தியராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ள, அழைக்கப்பட்டிருக்கிறோம்.

தரிசனப் புஸ்தகத்தின் அடைப்புப் பகுதிகள்!

வெளிப்படுத்தின விசேஷத்தில் தொகுக்கப்பட்டிருக்கும் கடைசிக்கால நிகழ்வுகளுக்கு இடையே, இவைகளைச் சார்ந்த சில சம்பவங்கள், இவற்றிற்கு விளக்கம் அளிக்கும்வகையில், 3 பிரதான பகுதிகளாக இணைக்கப்பட்டுள்ளன. இவைகள் கடைசிக்கால நிகழ்வுகளையும், தேவனுடைய திட்டங்களையும், நாம் தொடர்ச்சியாக முழுமையாக அறிந்துகொள்ள உதவுகின்றன. இந்தச் சம்பவங்களை, அடைப்புப் பகுதிகள் (Parenthetical Passages) எனக் குறிப்பிடுகிறோம்.

முதலாவதாக, ஆறாம் முத்திரை உடைக்கப்படுவதற்கும் ஏழாம் முத்திரை உடைக்கப்படுவதற்கும் இடையே, ஏழாம் அதிகாரத்தில் இரண்டு சம்பவங்கள் இணைக்கப்பட்டுள்ளன. முதலாவது, இஸ்ரவேலரில் முத்திரிக்கப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் தேவனுடைய ஊழியக்காரரைப்பற்றியதாகும். அடுத்தது, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான, ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினால் மீட்கப்பட்ட திரள்கூட்டமான ஜனங்களைக் குறித்ததாகும்.

இரண்டாவது பகுதி, ஆறாம் எக்காளம், ஏழாம் எக்காளம் ஊதப்படுவதற்கும் இடையே, வெளி. 10:1 முதல் 11:13 வசனங்களில் இணைக்கப்பட்டுள்ளது. இந்தப்பகுதி கடைசிக்கால ஊழியங்களாக விவரிக்கப்பட்டிருக்கிறது. இது திறக்கப்பட்ட சிறு புஸ்தகத்தையும், கடைசிக்காலத்தில் வெளிப்படவிருக்கும் இரண்டு சாட்சிகளையும் உள்ளடக்கியிருக்கிறது.

மூன்றாவதாக, 12ஆம் அதிகாரம் துவங்கி 14ஆம் அதிகாரம் வரையிலான வேதப்பகுதி இணைக்கப்பட்டுள்ளது. இவற்றில், வானத்தில் தோன்றும் நான்கு அடையாளங்களும், பூமியில் காணப்படும் மூன்று அடையாளங்களும் விவரிக்கப்பட்டுள்ளன. காலவரிசைப்படி பார்ப்போமேயானால், இந்த வேதப்பகுதியையும், கோபகலசங்களையும் அடுத்து (16ஆம் அதிகாரம்), இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைச் சார்ந்த (19ஆம் அதிகாரம்) சம்பவங்களே தொடரவேண்டும். ஆனால் பாபிலோனின் அழிவை விவரிக்கும் 17 மற்றும் 18ஆம் அதிகாரங்கள் இடையில் தொகுக்கப்பட்டுள்ளன.

இவை, பாபிலோனின் மகா நகரம் விழுந்தது (வெளி. 14:8) என்றும்; மகா பாபிலோனுககு தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையை கொடுக்கும்படி நினைப்பூட்டப்பட்டது (வெளி. 16:19) என்றும் சொல்லப்பட்ட சம்பவங்களின் விளக்கவுரையைப்போன்று அமைந்துள்ளன. 17ஆம் அதிகாரம், தேவனுடைய எதிர்பார்ப்புகளுக்கு மாறுபட்ட தன்மைகளையுடைய மதவழிபாட்டு அமைப்பின் (Religious System) அழிவையும், 18ஆம் அதிகாரம், அரசியல் பொருளாதார கட்டமைப்பின் (Political and Economic System) அழிவையும் விவரிக்கின்றன.

ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம்!

இந்தத் தரிசனப் புஸ்தகத்தின் உச்சக்கட்ட நிகழ்வுகளான ஆட்டுக்குட்டியானவரின் கலியாணமும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையும், அதனைச் சார்ந்த சம்பவங்களும், வெளிப்படுத்தின விசேஷத்தின் பத்தொன்பதாம் அதிகாரத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. ஆட்டுக்குட்டியானவருக்கும், மீட்கப்பட்ட பரிசுத்தவான்களின் கூட்டமைப்பான சபைக்கும் உள்ள உறவின் நிறைவை, ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் வெளிப்படுத்துகிறது.

கிருபையின் நாட்களில், இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது ஸ்தாபிக்கப்படும் உறவில், முடிவுபரியந்தம் நிலைத்திருப்போர், இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில் அவருடன் சபையாக எடுத்துக்கொள்ளப்படுவார்கள். இப்படியாக, மறுரூபப்படவிருக்கும் சபை சதாகாலமும் அவரைச் சார்ந்து செயல்படும் வாழ்வின் துவக்கம், ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணமாகும். இது இரட்சகருக்கும் இரட்சிக்கப்பட்ட தேவஜனத்துக்கும் இடையே ஏற்படவிருக்கும் ஆவிக்குரிய உறவின் நிறைவை வெளிப்படுத்தும் உருவகமாகும். இதன் வளர்ச்சிப்பரிணாமம், யூதகுலத்துக் கலியாண சம்பிரதாயங்களைப்போன்றே அமைந்துள்ளது.

யூதகுல கலியாண வழக்கங்களைப்போன்றே, இயேசுவுக்கென மணவாட்டியாக நியமிக்கப்பட்டிருக்கிற நாம், பிதாவாகிய தேவனால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டிருக்கிறோம். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்தக் கிருபையின் காலம், கர்த்தரை அறிந்தவர்களாய், ஆயத்தத்தோடு இயேசுகிறிஸ்துவின் வருகைக்குக் காத்திருக்கும் நாட்களாகும். இந்தக்

காத்திருப்பின் காலம், கிறிஸ்துவோடுள்ள உறவில், அர்ப்பணிப்பில், உறுதியாய் நாம் இருப்பதை நிரூபிக்க நியமிக்கப்பட்டிருக்கிற காலமாகும். ஆகவே நாம் ஜாக்கிரதையாய் விழித்திருந்து, விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும் உண்மையிலும், அன்பிலும் முடிவுபரியந்தம் நிலைநிற்க ஆலோசனைப் பெற்றிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவை இன்னும் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள், இரகசிய வருகையில் மறுரூபப்படும் மணவாட்டி சபையிலொருவராக இருக்கமுடியாது என்பது இங்கு வெளிப்படும் உண்மையாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை!

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை, பிரமிக்கத்தக்கதான மிகப்பெரிய நிகழ்வாயிருக்கும். அப்பொழுது பூமியிலுள்ள அனைவரும் அவரைக் காண்பார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகையில் அவர் சமாதானத்தை உண்டுபண்ண வந்தார். இரண்டாம் வருகையில் அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ண வரவிருக்கிறார்.

முதலாம் வருகையில் இயேசு பட்டணங்கள்தோறும் கிராமங்கள்தோறும் பிரயாணம்பண்ணி, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைப் பிரசங்கித்து வந்தார். தம்முடைய பாடுமரணத்திற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர், அவர் கழுதையின்மேல் ஏறி எருசலேமுக்குள் பவனியாகச் சென்றார். ஆனால் இரண்டாம் வருகையில் அவர் தாம் நிச்சயமாகப் பெறவிருக்கும் வெற்றியை வெளிப்படுத்தும்வகையில் வெள்ளைக்குதிரையின்மேல் ஏறிவரவிருக்கிறார்.

முதலாம் வருகையில் இயேசுகிறிஸ்து இரட்சகராக வெளிப்பட்டார். இரண்டாம் வருகையில் அவர் நீதியுள்ள நியாயாதிபதியாக வரவிருக்கிறார். பூமியின் ராஜாக்களோடும் அவர்களுடைய சேனைகளோடும் அவர் யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயிப்பார். அக்காலத்தில், அந்திக்கிறிஸ்து என்று அறியப்பட்டிருக்கிற மிருகமும், கள்ளத்தீர்க்கதரிசியும் பிடிக்கப்படவிருக்கிறார்கள். இந்த மிருகங்கள், கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்படுவார்கள்.

தேவஜனத்தைத் திசைத்திருப்பும் பிசாசின் வஞ்சகம்!

வெளிப்படுத்தின விசேஷத்தின் இருபதாம் அதிகாரம், பிசாசானவன் ஆயிரம் வருஷமளவும் செயல்படக்கூடாமல் கட்டப்படவிருப்பதையும், பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலையும், கிறிஸ்துவுடனேகூட அவர்களின் ஆயிரம் வருஷ அரசாட்சியையும் விவரிக்கிறது. அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாக்கப்படவிருப்பதையும், கிறிஸ்துவுக்கு விரோதமாக பூமியில் எழும்பும் சாத்தானின் கிளர்ச்சியையும் முன்னறிவிக்கிறது.

இதைத் தொடர்ந்து, சாத்தானால் மோசம்போன மனலத்தனையானவர்களின் அழிவையும், மரணமடைந்த எஞ்சியுள்ளோர்களின் உயிர்த்தெழுதலையும், பெரிய வெள்ளைச் சிங்காசன கடைசி நியாயத்தீர்ப்பையும் விளக்குகிறது. பிசாசானவன் ஆயிரம் வருடங்கள் செயல்படக்கூடாமல் கட்டப்பட்டு, நிறைவில், அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டு, இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படவிருப்பதை இந்த வசனங்கள் எடுத்துரைக்கிறது.

இந்த உண்மையை தேவஜனம் அறியாமலிருக்க, பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிற பிசாசானவன், அநேக கல்விமான்களையும் வஞ்சித்து திசைத்திருப்பியிருக்கிறான். இந்த வசனத்தின் விளக்கமாக, அவர்கள் தங்களுடைய கொள்கைகளுக்கு ஏற்றவாறு, சர்ச்சைக்குரிய பல கருத்துக்களை வெளியிடுகிறார்கள். இதனிமித்தம், இயேசுகிறிஸ்துவின் ஆயிரம் வருஷ ஆளுகையைப்பற்றியதான இந்த வேதப்பகுதி, அதிகமான விவாதத்திற்குரிய பகுதியாகக் காணப்படுகிறது.

நிச்சயமாகவே முடிவு உண்டு - இயேசுவைப் பற்றிக்கொள்!

இயேசுகிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களில் சிலர், வெளிப்படுத்தின விசேஷத்தை வாசிக்கும்போது தடுமாறுகிறதையும், இந்த வசனங்களைத் தியானிக்கத் தயங்குகிறதையும் அறிவோம். பிசாசனவன், தன்னுடைய நிச்சயமான அழிவை முன்னறிவிக்கும் இந்தச் சத்தியத்தை, தேவஜனம் அறிந்து எச்சரிக்கப்படுவதைத் தடைசெய்ய முற்படுகிறான். இது கடினமான

வேதப்பகுதி என்பதைப்போன்ற தவறான எண்ணங்களை விதைக்கிறான்; பொய்யான செய்திகளைத் தன் ஊழியர்கள் மூலம் பரப்புகிறான்.

இப்படியாக, இந்தச் சத்திய வார்த்தைகள் வெளிப்படுத்தும் உண்மையை அறிந்து உணர்ந்துகொள்ளாமல், இவ்வுலகத்தின் உபத்திரவங்களுக்கும் நெருக்கங்களுக்கும் ஊடாகக் கடந்து செல்லும்போது, வாழ்வின் துன்பங்களுக்கு எதிர்த்து நிற்கத் திராணியற்றவர்களாய், சிலர் சோர்ந்து மடிந்துபோகிறார்கள். வஞ்சகனின் பொய்யை நம்பி, துன்பங்களும் வேதனைகளுமே வாழ்வு என அவற்றைப் பொறுமையாய் சகித்துக்கொள்ளப் பழகி, அறியாமல் வாழ்நாள் முழுவதும் பாடுகளுக்குட்படுவோரும் உண்டு. வேதவாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எழுதப்பட்டிருக்கிறது.

பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின!

மீட்கப்பட்ட தேவஜனம் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும், தேவனுடைய ராஜ்யத்தின் விவரங்களும் விளக்கங்களும், இந்தத் தரிசனப்புஸ்தகத்தின் கடைசி இரண்டு அதிகாரங்களில் தொகுக்கப்பட்டுள்ளன. ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின என்கிற வசனத்திற்கேற்ப, புதுசிருஷ்டிப்பின் நிறைவான பாக்கியநிலை, புதிய வானம், புதிய பூமி, புதிய எருசலேம் என்பதாக இங்கு விவரிக்கப்பட்டுள்ளது.

வரும்நாட்களில் கண்டு அனுபவிக்கவிருக்கும் பரலோக மேன்மைகளின் ஒரு சிலதுளிகளே இங்குச் சொல்லப்பட்டிருக்கிறது. தொகுக்கப்பட்டிருக்கும் விவரங்கள், இந்நாட்களில் அறிந்துணர்ந்துகொள்ளுவதற்கு அப்பாற்பட்டதாகத் தோன்றுகிறது. இங்குப் பட்டியலிடப்பட்டிருக்கும் தகவல்களும் விவரங்களும் மிகவும் சொற்பமானவைகள் என்று அறியும்போது, இவைகளின் முழுமை, யூகித்தும் பார்க்கக்கூடாததாய்த் தோன்றுகிறது. எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார் (1 கொரிந்தியர் 2:9,10).

நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கும் நித்திய குடியிருப்பை விவரித்துச் சொல்ல, நாமறிந்த வார்த்தைகளில் விவரிப்பது அரிதாகக் காணப்படுகிறது. நித்திய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க, இந்நாட்களில் வெளிப்படும் எச்சரிப்புகளுக்குச் செவிகொடுத்து ஆயத்தப்பட நாம் அழைக்கப்படுகிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நிறைவு வாக்குத்தத்தத்தோடும், இந்தத் தரிசனங்களைப் பதிவு செய்த யோவானின் மறுமொழியோடும், வாழ்த்துதலோடும் இந்த அத்தியாயமும், தரிசனங்களும் நிறைவுபெறுகின்றன.

இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்; மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

தேவனைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள்;
நம்முடைய ராஜாவைப் போற்றிப் பாடுங்கள், பாடுங்கள்.
தேவன் பூமியனைத்திற்கும் ராஜா;
கருத்துடனே அவரைப் போற்றிப் பாடுங்கள்.
தேவன் ஜாதிகள் மேல் அரசாளுகிறார்;
தேவன் தமது பரிசுத்த சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார்
(சங்கீதம் 47:6-8).
இருபத்து நான்கு மூப்பர்களும்,
நான்கு ஜீவன்களும் வணக்கமாய் விழுந்து;
ஆமென், அல்லேலூயா, என்று சொல்லி,
சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்
தேவனைத் தொழுதுகொண்டார்கள்
(வெளி. 19:4).

2. சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பரலோகத்தின் தேவன்!

பரலோகத்தில் தொடரும் இரண்டாம் தரிசனம்!

சபைகளுக்கான முதலாம் தரிசனத்தில் யோவான் பெற்ற வார்த்தைகள், நிருபங்களாக, ஏழு கடிதங்களாகத் தொகுக்கப்பட்டு, வேதாகமத்தில் வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தில் 2 மற்றும் 3ஆம் அதிகாரங்களில் இடம்பெற்றுள்ளன. இந்தக் கடிதங்கள் சபைகளின் கிரியைகளையும், ஆவிக்குரிய நிலையையும் ஆராய்ந்தறிந்து, சபைகளின் நிறைவு மற்றும் குறைவுகளைத் தொகுத்தளிக்கிறது.

சபைகளுக்கான இந்த ஏழு கடிதங்கள் 3ஆம் அதிகாரத்தில் நிறைவுபெறுகின்றன."இவைகளுக்குப்பின்பு" என்று 4ஆம் அதிகாரத்தைத் துவக்குகிற யோவான், இதைத் தொடர்ந்து தான் கண்டவைகளையும், கேட்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளையும், புதிய தரிசனத்தின் வெளிப்பாடுகளாகத் தொகுத்து எழுதிவைத்திருக்கிறார். அப்போஸ்தலனாகிய யோவான் பெற்ற இரண்டாம் தரிசனம், வேதாகமத்தில் வெளிப்படுத்தின விசேஷம் 4ஆம் அதிகாரம் துவங்கி 6ஆம் அதிகாரம் வரையிலான பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவைகளுக்குப்பின்பு, இதோ பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன். முன்னே எக்காளசத்தம்போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது: இங்கே ஏறிவா, இவைகளுக்குப்பின்பு சம்பவிக்கவேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன் என்று விளம்பினது (வெளி. 4:1) என்று யோவான் எழுதியிருக்கிறார். இங்கு,

"முன்னே எக்காளசத்தம்போல பேசக் கேட்டிருந்த சத்தம்" என்கிற குறிப்பு, முதலாம் அதிகாரத்தின் மனுஷகுமாரனுக்கொப்பானவரோடு, இயேசுகிறிஸ்துவோடு இந்த நிகழ்வுகளை இணைக்கிறது. முதல் தரிசனத்தில், நியாயாதிபதியாக ஒரு விரிவான இடைக்கால அறிக்கையை சபைகளுக்குத் தந்த கர்த்தர், இதைத் தொடர்ந்து நடைபெறவிருந்த சம்பவங்களை இந்தத் தரிசனத்தில் வெளிப்படுத்துகிறார்.

இதற்கென யோவான் பூலோகத்திலிருந்து பரலோகத்திற்கு ஏறிவர கட்டளைப்பெற்றார். கர்த்தர் இவைகளுக்குப்பின்பு சம்பவிக்க வேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன் என்றார். உடனே ஆவிக்குள்ளான யோவான், பரலோகத்தில் தான் கண்ட காட்சியையும் நிகழ்வுகளையும் அதன் முக்கியத்துவங்களையும் அறிந்துணர்ந்து, யாவற்றையும் அப்படியே பதிவுசெய்திருக்கிறார்.

பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கும் சிங்காசனத்தின் காட்சியையும் (The Throne Room Scene), சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பவரையும், அவரைச் சூழ இருப்பவர்களையும், அங்கு நடைபெறவிருக்கும் சம்பவங்களையும், வெளிப்படுத்தின விசேஷம் 4 மற்றும் 5 ஆம் அதிகாரங்களில் யோவான் விவரித்து எழுதியுள்ளார். இந்தக் காட்சியும் சம்பவங்களும், கடைசி கால நிகழ்வுகள் யாவற்றிற்கும் திருப்புமுனையாகவும், திறவுகோலாகவும் அமைந்துள்ளன.

சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பரிசுத்தர்!

உடனே ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது, இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது, அந்தச் சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார். வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார்; அந்தச் சிங்காசனத்தைச்சுற்றி ஒரு வானவில்லிருந்தது. அது பார்வைக்கு மரகதம்போல தோன்றிற்று (வெளி. 4:2-3) என்று யோவான் எழுதியிருக்கிறார்.

ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென் (1 தீமோத்தேயு 6:16) என்கிற

வசனத்தின்படி, அங்கு சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் பரிசுத்தரின் ரூபத்தை, அவருடைய கண்கள், முகம் போன்ற தோற்றத்தைக் காணக்கூடாதவராய், யோவான் அவருடைய மகிமையின் சாயலை, பிரகாசத்தையே கண்டு இங்கு வெளிப்படுத்துகிறார்.

தேவனுடைய மகிமை பார்வைக்கு வச்சிரக்கல் என்கிற வைரம் போன்ற தெளிவான படிகக்கல்லுக்கும், பதுமராகம் என்கிற ஒளிரும் சிகப்பு கல்லுக்கும் ஒப்பாயிருந்தது. சிங்காசனத்தைச்சுற்றி ஒரு வானவில்லிருந்தது; வானவில்லின் வர்ணங்களில் பச்சை நிறம் மேலோங்கி, அது பார்வைக்கு மரகதம்போல தோன்றிற்று.

உயரமும் உன்னதமுமான சிங்காசனம்!

ஏசாயா தீர்க்கதரிசி தான் கண்ட காட்சியை ஏசாயா 6:1-3 வசனங்களில் விவரித்துள்ளார். ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக்கண்டேன்; அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது. சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள்; அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகளிருந்தன. அவனவன் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து; ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள் என்று எழுதியிருக்கிறார்.

இதைப்போலொத்தக் காட்சி, தானியேலின் தரிசனத்திலும் வெளிப்பட்டதைப் பார்க்கிறோம். நான் பார்த்துக்கொண்டிருக்கையில், சிங்காசனங்கள் வைக்கப்பட்டன. நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார்; அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போலவும், அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும் பஞ்சைப்போல துப்புரவாகவும் இருந்தது; அவருடைய சிங்காசனம் அக்கினிஜுவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது (தானியேல் 7:9) என்று தானியேல் குறிப்பிடுகிறார்.

தனக்கு வெளிப்படுத்தப்பட்ட தரிசனத்தின் காட்சியை எசேக்கியேல் தீர்க்கதரிசி, எசேக்கியேல் முதலாம் அதிகாரம் 26 முதல் 28 வசனங்களில் எழுதிவைத்திருக்கிறார். அவைகளின் தலைகளுக்குமேலுள்ள

மண்டலத்தின்மீதில் நீலரத்தினம்போல விளங்கும் ஒரு சிங்காசனத்தின் சாயலும், அந்த சிங்காசனத்தின் சாயலின்மேல் மனுஷசாயலுக்கு ஒத்த ஒரு சாயலும் இருந்தது. அவருடைய இடுப்பாகக் காணப்பட்டதுமுதல் மேலெல்லாம் உட்புறம் சுற்றிலும் அக்கினிமயமான சொகுசாவின் நிறமாயிருக்கக்கண்டேன்; கீழெல்லாம் அக்கினிமயமாகவும், அதைச் சுற்றிலும் பிரகாசமாகவும் இருக்கக்கண்டேன். மழைபெய்யும் நாளில் மேகத்தில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே சுற்றிலுமுள்ள அந்தப் பிரகாசம் காணப்பட்டது; இதுவே கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனமாயிருந்தது; அதை நான் கண்டபோது முகங்குப்புற விழுந்தேன். அப்பொழுதுபேசுகிற ஒருவருடைய சத்தத்தைக் கேட்டேன் என்று சொல்லியிருக்கிறார்.

இப்படியாக, சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணும், காணக்கூடாத தேவனுடைய மகிமையின் பிரசன்னத்தை, தேவமனிதர்கள் தாங்கள் உணர்ந்தவகையில் வெளிப்படுத்தினார்கள். தேவனுடைய மகிமை பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தது. சிங்காசனத்தைச் சுற்றியிருந்த வானவில்லில் பச்சை நிறம் மேலோங்கி அது மரகதம்போல தோன்றிற்று. அவருடைய இடுப்புக்கு மேலெல்லாம் உட்புறம் சுற்றிலும் அக்கினிமயமான மஞ்சள் நிறமாயும், கீழெல்லாம் அக்கினிமயமாகவும், அதைச் சுற்றிலும் பிரகாசமாகவும் இருந்தது. மேகத்தில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே சுற்றிலுமுள்ள அந்தப் பிரகாசம் காணப்பட்டது என்பதாக நாம் அறிகிறோம்.

இருபத்து நான்கு மூப்பர்கள்!

அந்தச் சிங்காசனத்தைச் சூழ இருபத்துநான்கு சிங்காசனங்களிருந்தன. இருபத்துநான்கு மூப்பர்கள் வெண் வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடி அந்தச் சிங்காசனங்களின் மேல் உட்கார்ந்திருக்கக்கண்டேன் (வெளி 4:4) என்று யோவான் எழுதியிருக்கிறார். பரிசுத்த பிதாவின் சிங்காசனத்தைச் சுற்றிலும் வட்டம்போல சூழ்ந்து, இருபத்துநான்கு மூப்பர்களும், தேவனுடைய சிங்காசனத்தை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள், வெண்வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடி சிங்காசனங்களின்மேல் உட்கார்ந்திருந்தார்கள்.

வெண்வஸ்திரம் ஆவிக்குரிய வாழ்வின் பிரித்தெடுக்கப்பட்ட நிலையையும், பரிசுத்தத்தையும் நீதியையும் வெளிப்படுத்துகிறது. வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிறவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள் (வெளி 7:14) என்றும்; சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே (வெளி 19:8) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், வெண்வஸ்திரம் இரட்சிப்பின் வஸ்திரம்; இது மனமகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறது. தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்ட ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது (வெளி 6:9,11) என்றும்; பாவமான வாழ்விலிருந்து இரட்சிக்கப்பட்டவர்களுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும் (வெளி. 3:5) என்பதாகவும் வாசிக்கிறோம்.

கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன்; என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது; மணவாளன் ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக்கொள்ளுகிறதற்கும், மணவாட்டி நகைகளினால் தன்மைச் சிங்காரித்துக் கொள்ளுகிறதற்கும் ஒப்பாக, அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார் (ஏசாயா 61:10) என்று எழுதப்பட்டிருக்கிறது.

அந்த மூப்பர்கள் தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடி சிங்காசனங்களின் மேல் உட்கார்ந்திருந்தார்கள். பொன் ராஜரீகத்தையும், கிரீடம் ஆளுகையையும் வெளிப்படுத்துகிறது. இயேசுகிறிஸ்துவோடு ஆளுகைச்செய்யும் கிருபை, பிதாவாகிய தேவனால் விசுவாசிக்கிறவர்களுக்கு இலவசமாகத் தந்தருளப்படுகிறது. அல்லேலூயா!

யார் இந்த மூப்பர்கள்?

இந்த மூப்பர்கள், ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே கழுவி தங்கள் பாவங்களறச் சுத்திகரிக்கப்பட்டு, மீட்கப்பட்ட பரிசுத்தவான்கள் என்று தேவமனிதர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆனாலும், சில வேதபண்டிதர்கள், இந்த மூப்பர்கள், தேவதூதர்களைப்போன்ற பரலோகவாசிகள் என்பதாகவும் சொல்லுகிறார்கள். இந்தத் தரிசன புஸ்தகத்தில் இவர்களைப்பற்றிய மற்ற குறிப்புகளோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த இருபத்துநான்கு மூப்பர்களும், மீட்கப்பட்ட பரிசுத்தவான்கள் என்பதாகவே அறிகிறோம்.

இந்த மூப்பர்கள் வெளிப்படுத்தின விசேஷம் 5:9,10 வசனங்களில் ஒரு புதியபாட்டைப் பாடினார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள்: தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோமென்று புதிய பாட்டைப் பாடினார்கள். இந்தப் பாட்டில் அவர்கள், எங்களை மீட்டுக்கொண்டு, எங்களை ராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம், என்கிற வார்த்தைகள் அவர்களுடைய மனுஷீகத் தன்மையை வெளிப்படுத்தி உறுதிச்செய்கிறது.

வேதாகமத்தில் 1 தெசலோனிக்கேயர் 4:16,17 மற்றும் 1 கொரிந்தியர் 15:51,52 வசனங்களில் குறிப்பிட்டுள்ளபடி, இந்த பரிசுத்தவான்கள் மறுரூபமாக்கப்பட்டு, மேகங்கள் மேல் ஆகாயத்தில் அதற்கு முன்னரே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவேண்டும் என்பதாக அறிகிறோம். மீட்கப்பட பரிசுத்தவான்களின் கூட்டமாகிய சபை மறுரூபப்பட்டு மத்திய ஆகாயத்தில் இயேசுகிறிஸ்துவோடு எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்வாகிய ‘இரகசிய வருகை’ குறிப்பிட்ட இந்தக் கால கட்டத்தில் நிறைவுபெற்று இருக்கும் என்பது, இவற்றால் உறுதிச் செய்யப்படுகிறது.

யோவானின் தரிசனத்தில் அவர் கண்ட, பரலோகத்தில் வீற்றிருக்கும் இருபத்துநான்கு மூப்பர்கள், மீட்கப்பட்ட பரிசுத்தவான்கள் என்பதாக நாம் அறிந்தோம். மீட்கப்பட்டவர்களில் யார் அந்த இருபத்துநான்கு மூப்பர்கள் என்று வேதாகமத்தில் வெளிப்படையாக குறிப்பிடப்படவில்லை. மறு ஜென்மகாலத்திலே மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும்போது, நீங்களும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும், நியாயம் தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 19:28) என்று இயேசு சொல்லியிருக்கிறார். இதன் அடிப்படையில், அந்த இருபத்துநான்கு மூப்பர்கள், பன்னிரண்டு அப்போஸ்தலர்களும், பன்னிரண்டு பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுமாயிருக்க வாய்ப்பு உண்டு என்பதாக அறியலாம்.

இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகை

வெளிப்படுத்தின விசேஷம் 3:3 வசனத்தில், நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும்வேளையை அறியாதிருப்பாய் என்று எச்சரித்த கர்த்தர், 3:11இல், இதோ சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு என்கிறார். மேலும், 3ஆம் அதிகாரம் 20ஆம் வசனத்தில் இதோ , வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் என்றார். யோவானுக்கு வெளிப்படுத்தின இரண்டாம் தரிசனத்தில், இயேசுவின் வருகையில் மீட்கப்பட்டவர்களில் சிலர் மூப்பராக வெண்வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடி சிங்காசனங்களின்மேல் உட்கார்ந்திருக்க அவர் கண்டார்.

இந்தச் சம்பவங்களின்மூலம், நாம் வாழும் இந்தக் காலக் கட்டம், யோவானின் முதலாம் தரிசனம் நிறைவுபெற்று, இரண்டாம் தரிசனத்தின் சம்பவங்கள் துவங்கும் நிலையில் இருப்பதாக அறிகிறோம். இந்த இடைப்பட்டக் காலத்தில், எவ்வேளையிலும் கர்த்தரின் வருகை இருக்க வாய்ப்பிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாய் காணப்படும், மீட்கப்பட்ட பரிசுத்தவான்களின் கூட்டமைப்பான சபை மறுரூபப்பட்டு எடுத்துக்கொள்ளப்படும்போது, கிருபையின் நாட்கள் நிறைவுபெறும் என்றும், சபையின் காலம் முடிவுபெறும் என்பதையும் அறிந்திருக்கிறோம். இதுவே கர்த்தர் எச்சரித்துள்ள உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவக்காலத்தின் ஆரம்பமாயிருக்கும். ஆயத்தமாயிராதபடியால், இயேசுவின் வருகையில் கைவிடப்பட்ட அனைவரும் இந்த உபத்திரவக் காலத்திற்கு உட்படுவார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது.

நம்மைச் சுற்றிலும் துரிதமாக நடந்தேறும் நிகழ்வுகளினாலும், வேதாகமத்தில் கடைசிக் காலத்தைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறி வருகிறதைக் கண்டும், நாம் கடைசிக் காலத்தில் இருப்பதாக அறிந்திருக்கிறோம். அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார் (மாற்கு 13:32) என்று சொல்லப்பட்டிருந்தாலும்; நாள், நாழிகை என்று குறிப்பிடப்படும் அளவுக்கு

கடைசிக் கட்டத்தில் இருக்கிறோம் என்பதை நம்மால் உணரமுடிகிறது. ஆகையால், நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத்தேயு 24:44) என்ற எச்சரிப்பையேற்று, ஜாக்கிரதையாய்க் கர்த்தரின் வருகைக்கு ஆயத்தப்படுவோம்.

தேவனுடைய ஏழு ஆவிகள்!

அந்தச் சிங்காசனத்திலிருந்து மின்னல்களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன. தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்துகொண்டிருந்தன. அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாகப் பளிங்குக்கொப்பான கண்ணாடிக் கடலிருந்தது (வெளி. 4:5, 6a)

சிங்காசனத்திலிருந்து புறப்பட்ட மின்னல்களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும், கர்த்தருடைய மகிமையையும், மாட்சிமையையும், அற்புதத்தையும் வெளிப்படுத்தியது. மின்னல்களும், அதிர்வுகளும், இடிமுழக்கங்களும், காணக்கூடாத தேவனுடைய மகிமையுள்ள பிரசன்னத்தின், வெளியரங்கமான அடையாளங்களாக பலவேளைகளில் காணப்படுகிறது. இவ்வகையான பயங்கரமான வெளிப்பாடுகளினிமித்தம், சீனாய் மலை அடிவாரத்தில் தேவஜனங்கள், தேவனைக் குறித்த பயத்தில் இருந்தனர் என்று வாசிக்கிறோம். இவைகள் இயற்கையின் சீற்றம் போன்று காணப்பட்டாலும், இவை பாவமான உலகின்மேல், பரிசுத்தமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனின், நீதியின் கோபாக்கினையின் வெளிப்பாடே ஆகும்.

தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்துகொண்டிருந்தன. தேவனுடைய ஏழு ஆவிகள் என்பது, எல்லாவற்றையும் போதித்து, எல்லாவற்றையும் நினைப்பூட்டுகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனைக் குறிக்கிறது (யோவான் 14:26). யோவான் சபைகளை வாழ்த்தி எழுதும்போது, பரிசுத்த ஆவியானவரை, தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கிற ஏழு ஆவிகள் (வெளி. 1:4) என்று குறிப்பிடுகிறார். வெளிப்படுத்தின விசேஷத்தில், பரிசுத்த ஆவியானவர் என்று எங்குமே குறிப்பிடாமல், ஆவியானவர் என்றும், பரிசுத்த ஆவியானவரின் முழுமையான தன்மைகளை வெளிப்படுத்தும் வண்ணமாக, தேவனுடைய ஏழு ஆவிகள் என்றுமே யோவான் குறிப்பிடுகிறார்.

அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாகப் பளிங்குக்கொப்பான கண்ணாடிக்கடலிருந்தது. தேவனுடைய சந்நிதியில் யோவான் தன்னால் விவரிக்கக்கூடாத ஒரு காட்சியைக் கண்டார். கடலைப்போன்று பரந்து விரிந்ததும், கண்ணாடியைப்போன்று திடமும் தெளிவுமானதும், பளிங்குக்கொப்பானதும், விஸ்தாரமுமான தளத்தைக் கண்டார். ஜெயங்கொண்டவர்கள் தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு அந்தக் கண்ணாடிக் கடல்மேல் நின்றார்கள் என்பதாகவும், கடலருகே நிற்கிறதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது (வெளி. 15:2). அநேகர் தேவனுடைய சந்நிதானத்தில் கூட்டிச் சேர்க்கப்படுவதற்கு ஏதுவான கட்டமைப்பைப்போன்று இது தோன்றுகிறது.

சிங்காசனத்தைச் சுற்றிலுமிருந்த நான்கு ஜீவன்கள்!

அந்தச் சிங்காசனத்தின் மத்தியிலும் அந்தச் சிங்காசனத்தைச் சுற்றிலும் நான்கு ஜீவன்களிருந்தன. அவைகள் முன்புறத்திலும் பின்புறத்திலும் கண்களால் நிறைந்திருந்தன. முதலாம் ஜீவன் சிங்கத்திற்கொப்பாகவும், இரண்டாம் ஜீவன் காளைக்கொப்பாகவும், மூன்றாம் ஜீவன் மனுஷமுகம் போன்ற முகமுள்ளதாகவும், நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவுமிருந்தன. அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்றும் அவ்வாறு சிறகுகளுள்ளவைகளும், சுற்றிலும் உள்ளேயும் கண்களால் நிறைந்தவைகளுமாயிருந்தன. அவைகள் இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன (வெளி. 4:6b - 8).

அப்போஸ்தலனாகிய யோவான், சிங்காசனத்திற்கும், சூழ வீற்றிருந்த இருபத்துநான்கு மூப்பர்களுக்கும் இடைப்பட்ட பகுதியில், தேவனுக்கும் ஜனங்களுக்கும் இடையே, நான்கு ஜீவன்கள் நிற்கக் கண்டார். கேருபீன்கள் மத்தியில் வாசம்பண்ணுகிறவரே, பிரகாசியும் (சங்கீதம் 80:1) என்றும்; கர்த்தர் ராஜரீகம் பண்ணுகிறார், ஜனங்கள் தத்தளிப்பார்களாக, அவர் கேருபீன்களின் மத்தியில் வீற்றிருக்கிறார், பூமி அசைவதாக (சங்கீதம் 99:1) என்றும்; சேனைகளின் கர்த்தாவே, கேருபீன்களின் மத்தியில் வாசம்பண்ணுகிற இஸ்ரவேலின் தேவனே, நீர் ஒருவரே பூமியின் ராஜ்யங்களுக்கெல்லாம் தேவனானவர்; நீர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர் (ஏசாயா 37:16) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

நான்கு ஜீவன்களும், கேருபீன்கள் சேராபீன்கள் போன்ற பரலோகவாசிகள் என்று அறிகிறோம். ஒவ்வொன்றும் அவ்வாறு சிறகுகளுள்ளவைகளும், சுற்றிலும் உள்ளேயும் கண்களால் நிறைந்தவைகளுமாயிருந்தன. அவைகள் துரிதமாய்ப் பறந்து செல்லும் ஆற்றல் உடையவைகளும், அளவுகடந்த ஞானம் உள்ளவைகளாய், ஓயாமல் தேவனைத் துதித்துக்கொண்டிருப்பதோடு, தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தைப் பாதுகாக்கும் பொறுப்பையும் பெற்றிருந்தன.

அவைகள் சிருஷ்டிப்பின் முழுமையையும் பிரதிபலிப்பதைப்போன்று காணப்படுகிறது. சிங்கம் காட்டு மிருகங்களையும் தைரியத்தையும், காளை நாட்டு மிருகங்களையும் தாழ்மையையும் அர்ப்பணிப்பையும், மனுஷமுகம் அறிவுத்திறனையும் ஞானத்தையும், கழுகு பறவைகளையும் விவேகத்துடன் துரிதமாய்ச் செயல்படும் ஆற்றலையும் வெளிப்படுத்தி, தேவனுடைய சித்தத்தை நடப்பிக்கிறதாகத் தோன்றுகிறது.

அவைகள்: இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன. ஓயாமல் அவைகள் தேவனைத் துதித்து, தங்கள் தாழ்மையையும், கீழ்ப்படிதலையும், தேவன் பேரிலுள்ள மதிப்பையும் மரியாதையையும் வெளிப்படுத்திக்கொண்டே இருந்தன.

தேவனைத் தொழுதுகொண்டார்கள்

மேலும், சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருக்கு அந்த ஜீவன்கள், மகிமையையும் கனத்தையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்தும்போது, இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்குமுன்பாக வைத்து; கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர், நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள் (வெளி. 4:9-11).

இருபத்துநான்கு மூப்பர்களும், நான்கு ஜீவன்களும் வணக்கமாய் விழுந்து: ஆமென், அல்லேலூயா என்று சொல்லி, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் தேவனைத் தொழுதுகொண்டார்கள் (வெளி. 19:4) என்று எழுதப்பட்டிருக்கிறது. தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார் (யோவான் 4:24). உண்மையான விசுவாசிகள் யாவரும், அவர்களுடைய மனமாற்றத்தையும் இரட்சிப்பையும், இக்காலத்தில் பெற்ற நன்மைகளையும், வருங்காலத்தைக் குறித்த நம்பிக்கையையும், மகா பரிசுத்தமுள்ள தேவனுக்கு முழுமையாக உரியதாக்கி, ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளுகிறார்கள். இதைப்போன்றே பரலோகத்திலும், சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருக்கு, மகிமையையும் கனத்தையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்துகிறார்கள்.

பரலோகம் அனைத்தும் பிதாவாகிய தேவனைத் தொழுதுகொள்ளும். தேவதூதர்கள் தேவனுடைய தன்மைகளை, மகிமையை கனத்தை நினைவுகூர்ந்து ஸ்தோத்திரம் செலுத்தி, அவரைத் துதிக்கிறார்கள். மூப்பர்கள் அவருடைய சிருஷ்டிப்பின் மகிமையையும் வல்லமையையும் நினைவுகூர்ந்து போற்றித் துதிக்கிறார்கள். தேவன் பரிசுத்தரும், சிருஷ்டிப்பின் தேவனுமாயிருக்கிறபடியால், அவரே ஆளுகைச் செய்வதற்கும், பூமியை நியாயம் தீர்ப்பதற்கும், மேலான அதிகாரம் படைத்தவருமாயிருக்கிறார். அல்லேலூயா!

கடைசிக் காலத்திற்கான திருப்புமுனை!

யோவான் பெற்ற இரண்டாம் தரிசனத்தின் முதல் பகுதியில், பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கும் சிங்காசனத்தின் காட்சியையும், சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பரிசுத்தரின் மகிமையையும் கண்டார் என்று எழுதப்பட்டிருக்கிறது. அந்தச் சிங்காசனத்திலிருந்து புறப்பட்ட மின்னல்களைக் கண்டார்; இடிமுழக்கங்களையும், சத்தங்களையும் கேட்டார். சிங்காசனத்தைச் சுற்றிலும் வட்டம்போல சூழ்ந்து, தேவனுடைய சிங்காசனத்தை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கும் இருபத்துநான்கு மூப்பர்களையும், அந்தச் சிங்காசனத்தின் மத்தியிலும் அந்த சிங்காசனத்தைச் சுற்றிலுமிருந்த நான்கு ஜீவன்களையும் கண்ணெதிரேப் பார்த்தார். மேலும், சிங்காசனத்திற்குமுன்பாக எரிந்துகொண்டிருந்த,

தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்களையும், அந்த சிங்காசனத்திற்கு முன்பாக இருந்த பளிங்குக்கொப்பான கண்ணாடிக்கடலையும் கண்டார்.

இவைகள் அனைத்தும் வெளிப்படுத்தின விசேஷம் 4ஆம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய யோவானால் விவரித்து எழுதப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரம் முழுமையும், சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பரலோகத்தின் தேவனின் மேன்மையையும், மகிமையையும், அவருடைய உன்னதமான திட்டங்களையும் தீர்மானங்களையும் செயல்படுத்த நியமிக்கப்பட்டிருக்கிற கட்டமைப்புகளையும் விவரிக்கிறது. இந்தப் பரலோகத்தின் காட்சியும், விவரிக்கப்பட்டிருக்கும் சம்பவங்களும், கடைசிக் கால நிகழ்வுகள் யாவற்றிற்கும் திருப்புமுனையாக அமைந்துள்ளது.

இந்தக் காட்சிகளையும் வார்த்தைகளையும் கூர்ந்து கவனிப்போமேயானால், இந்த 4ஆம் அதிகாரம் கிருபையின் நாட்களின் நிறைவையும், சபையின் காலத்தின் முடிவையும் வெளிப்படுத்துகிறதாக அறிய முடிகிறது. மேலும். இது அதிசீக்கிரமாய் நிகழவிருக்கும் இயேசுகிறிஸ்துவின் வருகையை வெளிப்படுத்தி உறுதிச் செய்கிறது. இதைத் தொடர்ந்து 5ஆம் அதிகாரத்தின் காட்சியும் சம்பவங்களும், வெளிப்படுத்தின விசேஷத்தின் எஞ்சிய பகுதிகளில் புதைந்திருக்கும் இரகசியங்களைத் தெளிவுபடுத்தும் திறவுகோலாக அமைந்துள்ளது. இந்த 5ஆம் அதிகாரம், கடைசிக் கால நிகழ்வுகளில், ஆட்டுக்குட்டியானவரும், குமாரனாகிய தேவனுமானவரின் பங்களிப்பை வெளிப்படுத்தி உறுதிச் செய்கிறது. அல்லேலூயா!

நீங்களும் ஆயத்தமாயிருங்கள்

பிள்ளைகளே, இது கடைசிக்காலமாயிருக்கிறது; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக்காலமென்று அறிகிறோம் (1 யோவான் 2:18) என்று எச்சரிக்கப்படுகிறோம். இம்மட்டும் தியானித்த கடைசிக்கால நிகழ்வுகளைக் காட்டிலும், அப்போஸ்தலனாகிய யோவான் பெற்ற இரண்டாம் தரிசனத்தின் காட்சிகளும் விவரங்களும், இந்த நிகழ்வுகள் யாவும் திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்படும் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் பரிசுத்த தேவனின் பிரதான இருப்பிடத்திற்கே, நம்மை அழைத்துச் செல்வதைப்போன்று இருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு சகலமும் பூமியிலே, இவ்வுலகிலே ஆயத்தமாய் இருப்பதாகப் பார்த்தோம். பரலோகத்தின் காட்சிகளும் சம்பவங்களும், இவற்றை வெளிப்படுத்தித் தெளிவுபடுத்துகிறபடியால், அதிவேகமாய் செயல்பட நாம் அழைக்கப்படுகிறோம். இந்த வேதப்பகுதியைத் தொடர்ந்து, இந்தத் தரிசனப் புஸ்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நிகழ்வுகளில் பெரும்பாலானவைகள். கர்த்தர் எச்சரிக்கும் உபத்திரவக்காலத்தின் விளக்கங்கள்போன்று தோன்றுகிறது. உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லியிருக்கும் வார்த்தைகளை மறுபடியும் நினைவுகூருவோம்.

நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கும் சிங்காசனத்தையும், அதில் வீற்றிருக்கும் மிகவும் உன்னதமானவரான பரிசுத்தரையும், சிங்காசனத்தைச் சுற்றிலும் இருப்போரையும், இருப்பவைகளையும் குறித்து அறிந்துகொள்ளவும், தியானிக்கவும்கர்த்தர்கொடுத்த கிருபைகளுக்காக அவருக்குநன்றிசெலுத்துவோம்.

தேவமனிதர் ஒருவர் அனுதினமும், வெளிப்படுத்தின விசேஷம் நான்காம் அதிகாரத்தை வாசித்து தேவனைத் தொழுதுகொள்ளுவாராம். அந்த நான்கு ஜீவன்களையும், இருபத்துநான்கு மூப்பர்களையும்போன்று, பரலோகத்தின் தேவனுக்கு மகிமையையும் கனத்தையும் ஸ்தோத்திரத்தையும் செலுத்தி, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுது கொள்ளுவாராம்.

இப்படியாக, அவர் தேவனை ஆராதிக்கும் வேளைகளிலே, ஆவியிலே தேவனுடைய மகிமையுள்ள சிங்காசனத்தின் முன்பாகவே சென்று, அவரை ஆராதிக்கவும், தன்னுடைய விண்ணப்பங்கள் எல்லாவற்றையும் ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்தவும் கிருபைப்பெற்றாராம். ஆம், பிரியமானவர்களே, இதுவே, தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற புத்தியுள்ள ஆராதனையாக இருக்கிறது. ஆமென். அல்லேலூயா!

சிங்காசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும்
சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன்;
அவர்களுடைய இலக்கம்
பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாகவுமிருந்தது.
அவர்களும் மகா சத்தமிட்டு அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர்
வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும்
கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப்
பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள்
(வெளி. 5:11-12).

3. அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டியானவர்!

யோவான் பெற்ற தரிசனம்!

யோவான் தனது இரண்டாம் தரிசனத்தில் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கும் சிங்காசனத்தின் காட்சியையும், சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பரிசுத்தரின் மகிமையையும் கண்டார். பரலோகத்தின் தேவனின் மேன்மையையும், மகிமையையும்; அவருடைய உன்னதமான திட்டங்கள் தீர்மானங்களைச் செயல்படுத்த நியமிக்கப்பட்டிருக்கிற கட்டமைப்புகளையும், வெளிப்படுத்தின விசேஷம் நான்காம் அதிகாரம் விவரிக்கிறது.

இந்தக் காட்சிகளும் வார்த்தைகளும், கிருபையின் நாட்களின் நிறைவையும், சபையின் காலத்தின் முடிவையும் வெளிப்படுத்துகிறதாக அறிகிறோம். மேலும் இது, அதிசீக்கிரமாய் வரவிருக்கும் இயேசுகிறிஸ்துவின் வருகையை வெளிப்படுத்தி உறுதிச்செய்கிறது.

இதைத் தொடர்ந்து ஐந்தாம் அதிகாரத்தின் காட்சியும் சம்பவங்களும், வெளிப்படுத்தின விசேஷத்தின் எஞ்சிய பகுதிகளில் புதைந்திருக்கும் இரகசியங்களை தெளிவுபடுத்தும் திறவுகோலாக அமைந்துள்ளன. இந்த ஐந்தாம் அதிகாரம், கடைசிக் கால நிகழ்வுகளில், ஆட்டுக்குட்டியானவரின் பொறுப்புகளை வெளிப்படுத்தி உறுதிச்செய்கிறது.

மேலும் இது, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை, அநேக தூதர்களும், சர்வ சிருஷ்டிகளும்,

நான்கு ஜீவன்களும் இருபத்து நான்கு மூப்பர்களும், ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் செலுத்தி வணக்கமாய் விழுந்து தொழுதுகொண்டதை விவரிக்கிறது. இந்தப் பரலோகத்தின் காட்சியும், விவரிக்கப்பட்டிருக்கும் சம்பவங்களும், கடைசிக் கால நிகழ்வுகள் யாவற்றிற்கும் திருப்புமுனையாக அமைந்துள்ளது. அல்லேலூயா!

முத்திரிக்கப்பட்டிருந்த புஸ்தகம்!

தேவனுடைய சிங்காசன அறையில், சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்திலே தான் கண்ட புஸ்தகத்தைப் பற்றிய காட்சியை, யோவான் ஐந்தாம் அதிகாரம் முதல் நான்கு வசனங்களில் விவரித்திருக்கிறார். அன்றியும், உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தைச் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்திலே கண்டேன். புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யாரென்று மிகுந்த சத்தமிட்டுக் கூறுகிற பலமுள்ள ஒரு தூதனையுங் கண்டேன். வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின் கீழாவது, ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறக்கவும், அதைப் பார்க்கவும் கூடாதிருந்தது. ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறந்து வாசிக்கவும் அதைப் பார்க்கவும் பாத்திரவானாகக் காணப்படாததினால் நான் மிகவும் அழுதேன் (வெளி. 5:1-4) என்று எழுதியிருக்கிறார்.

வருங்காலத்தின் நிகழ்வுகள் அனைத்தும் தேவனுடைய அதிகாரத்துக்கும் ஆளுகைக்கும் உட்பட்டு, தேவனால் முன்குறிக்கப்பட்ட காலங்களில் நடந்தேறவிருக்கிறது. இப்படியாக, வேதாகமத்தில் வெளிப்படுத்தின விசேஷத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் சம்பவங்கள், நம் கண்ணெதிரே நடைபெறவிருக்கும் கடைசி நாட்களில் நாம் இருக்கிறோம். நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையும், அதைத் தொடரும் உபத்திரவத்தின் கால நிகழ்வுகளும், பூமியின்மேல் ஊற்றப்படவிருக்கும் தேவனுடைய நியாயத்தீர்ப்பும் துரிதமாய் வரவிருக்கிறது.

சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்திலே, உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தை யோவான் கண்டார். இந்த புஸ்தகம், பாப்பிராஸ் என்கிற ஒருவகையான காகிதத்தில் எழுதப்பட்ட சுருள்போன்று இருந்திருக்கலாம்.

முக்கியமான தகவல்களைக் கொண்ட இவ்வகையான புஸ்தகச் சுருள்கள், அக்காலத்திலே, முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருக்குமாம்.

இங்கு தேவனுடைய வலதுகரம் என்பது, வருங்காலத்தைக் குறித்த அவருடைய நிறைவான ராஜரீகத்தையும், சகலமும் அவருடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்கிறதையும் வெளிப்படுத்துகிறது. கர்த்தரின் வலதுகரம் உயர்ந்திருக்கிறது. கர்த்தரின் வலதுகரம் பராக்கிரமஞ்செய்யும்; கர்த்தருடைய வலதுகரம் உன்னதமானது; அவரது வலதுகரம் நீதியால் நிறைந்திருக்கிறது. அவரது வலதுகரம் நம்மை இரட்சிக்கும்; என்று சங்கீதங்களில் எழுதப்பட்டிருக்கிறது. எல்லாவிதமான தீங்கின் கிரியைகளிலிருந்தும், சகலவிதமான பிசாசின் தந்திரங்களிலிருந்தும், இப்பூமியிலே தேவஜனத்தை மீட்டெடுப்பது தேவனுடைய வலதுகரமே.

தேவனுடைய வலதுகரம் என்பது, அந்தப் புஸ்தக சுருளில் எழுதப்பட்டவைகளை செயல்படுத்தும் அவருடைய அதிகாரத்தையும் ஆளுகையையும் வெளிப்படுத்துகிறது. ஆறாம் அதிகாரம் துவங்கிய வேதப்பகுதியில், இந்த முத்திரிக்கப்பட்ட புஸ்தக சுருளையே, ஆட்டுக்குட்டியானவர் திறந்து, பூமியின்மேல் வருவதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் நியாயத்தீர்ப்புகளைச் செய்கிறார். இந்தச் சுருள், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொண்டு, கிறிஸ்துவின் ராஜ்யத்தை இவ்வுலகிலே ஸ்தாபிப்பதற்கான விரிவான தேவனுடைய திட்டங்களையும் நோக்கங்களையும் உள்ளடக்கியிருப்பதைப் போன்று தோன்றுகிறது. இந்தப் புஸ்தகச் சுருள், உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்தது.

முத்திரைகளை உடைக்க பாத்திரவான் யார்?

உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு முத்திரிக்கப்பட்ட இந்த நியாயத்தீர்ப்புகள், கடைசிக் கால நிகழ்வுகளை உள்ளடக்கிய விரிவானதும் முக்கியமானதுமான அதன் தன்மையை வெளிப்படுத்துகிறது. இந்த வார்த்தைகள் தானியேல் தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்தப்பட்டு, முடிவுகாலமட்டும் புதைபொருளாக வைக்கப்பட முன்னதாக முத்திரிக்கப்பட்டவைகளைப் போன்று (தானியேல் 12:4,9) காணப்படுகிறது. ஏழு முத்திரைகள் முழுமையான பரிசுத்த நிலையை வெளிப்படுத்துகிறது.

இந்த வார்த்தைகள் யாவும், தேவனால் அங்கீகரிக்கப்பட்டு, புஸ்தகத்தைத் திறக்கவும், அதின் முத்திரைகளை உடைக்கவும், பாத்திரவான் ஆனவராலே திறந்து, வாசிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட நியமிக்கப்பட்டிருந்தது.

புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யாரென்று மிகுந்த சத்தமிட்டுக் கூறுகிற பலமுள்ள ஒரு தூதனை யோவான் கண்டார். வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின் கீழாவது, ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறக்கவும், அதைப் பார்க்கவும் பாத்திரவானாகக் காணப்படாததினால் யோவான் மிகவும் அழுதார் என்று எழுதப்பட்டிருக்கிறது.

முத்திரைகளை உடைத்து, அந்தப் புஸ்தகத்தைத் திறக்க, தகுதியும் தேவனுடைய அங்கீகாரமும் தேவையாயிருந்தது. தேவமனிதர்களும், பரிசுத்தவான்களும், தீர்க்கதரிசிகளும் எழுதப்பட்ட நியாயத்தீர்ப்புகளை வெளிப்படுத்த ஒருவேளை தகுதியுள்ளவர்களாய் இருந்திருக்கலாம். ஆனால், அவற்றை அறிந்து முன்னறிவிப்பது மட்டுமல்லாமல், நியாயத்தீர்ப்பு செய்யும்படியாகவும் தகுதியுள்ளவர்களாய் இருக்க இன்னும் மேலான பரிசுத்தமும் அர்ப்பணிப்பும் வேண்டியிருந்தது. அம்மட்டும் யோவான் பரலோகத்தில் கண்ட தேவனுடைய சிங்காசனத்தின் காட்சிகளும், செயல்களும் துரிதமாய் நடைபெறவிருந்த கடைசிக் கால நிகழ்வுகளை வெளிப்படுத்தின. தகுதியுள்ளவர்களாக ஒருவரும் காணப்படாததினால், யோவான் கலங்கி, நியமிக்கப்பட்ட நியாயத்தீர்ப்புகளும், சத்துருவின் சங்காரமும் இன்னும் தாமதிக்குமோ என எண்ணி மிகவும் அழுதார்.

யூதா கோத்திரத்துச் சிங்கம்!

தேவனுடைய சிம்மாசனத்தின் முன்பாக, யோவான் இதைத் தொடர்ந்து கண்ட காட்சிகளையும், கேட்ட வார்த்தைகளையும், 5 முதல் 7 வரையிலான வசனங்களில் எழுதி வைத்திருக்கிறார். அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: நீ அழ வேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான். அப்பொழுது, இதோ அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும்

மத்தியிலே நிற்கக்கண்டேன்; அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது; அந்தக்கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம். அந்த ஆட்டுக்குட்டியானவர் வந்து, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினார் (வெளி. 5:5-7) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பிதாவாகிய தேவனிடத்திலிருந்து புஸ்தகத்தைப் பெற்றுக்கொள்ள தகுதியுள்ளவர்களாக ஒருவரும் காணப்படாததினால் யோவான் மிகவும் அழுதபோது, அங்கிருந்த மூப்பர்களில் ஒருவன் அவரை நோக்கி: நீ அழவேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான். யார் அந்த யூதா கோத்திரத்துச் சிங்கம்?

யூதா பாலசிங்கம், சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை, ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள் (ஆதியாகமம் 49:10) என்று யாக்கோபு, யூதா கோத்திரத்தில் தோன்றவிருக்கும் மேசியாவைக் குறித்துச் சொல்லியிருக்கிறார். இராஜாவாகிய தாவீதுக்கும் கர்த்தர்: உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும் என்கிறார் என்று சொல்லச்சொன்னார் (2 சாமுவேல் 7:16). யூதா கோத்திரத்தில், தாவீதின் வம்சத்தில் தோன்றிய இயேசுகிறிஸ்துவே, யூதா கோத்திரத்துச் சிங்கம்; அவரே தாவீதின் வேர் என்றும் அறியப்பட்டிருக்கிறார்.

அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டி!

இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்று மூப்பர்களில் ஒருவர் சொன்னார். அப்பொழுது, இதோ அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக்கண்டேன் என்று யோவான் எழுதிவைத்திருக்கிறார். யூதராஜசிங்கம் என்று அறியப்பட்டிருக்கிறவர், இங்கு அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டியைப் போன்று காட்சியளிக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் இந்தத் தோற்றம், முதலாம் வருகையில் உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கும் தேவஆட்டுக்குட்டியாக, இரட்சகராக, அவர் வெளிப்பட்டதையும்; இரண்டாம் வருகைக்குப் பின்னர் ராஜாவாக, சிங்கம்போன்று நியாயாதிபதியாகச் செயல்படுவதையும் குறிக்கிறது. இதையே, குமாரனாகிய இயேசுகிறிஸ்து மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குப் பிதாவானவர் கொடுத்திருக்கிறார் (யோவான் 5:27). என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

அங்கிருந்த மூப்பர்களில் ஒருவன் யோவானைத் தேற்றி, யூதா கோத்திரத்துச் சிங்கம், புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்ற உடனே, அவரைக் காணும்படியாகத் திரும்பிய யோவானுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. அங்கே யூதராஜசிங்கத்திற்கு பதிலாக அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே அவர் நிற்கக்கண்டார்.

இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகையில் ஆட்டுக்குட்டி அவரது அடையாளமாக இருந்தது. யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி (யோவான் 1:29) என்று அவரை அறிமுகப்படுத்தினார். மேசியாவாகிய இயேசுவின் வருகையை முன்னறிவித்த ஏசாயா தீர்க்கதரிசியும், அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார். ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை, அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்க்கத்திரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார் (ஏசாயா 53:7) என்று எழுதிவைத்திருக்கிறார். மேலும் இயேசு, நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன் என்றார். இயேசு உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தைஇரட்சிக்கஒருஆட்டுக்குட்டியைப்போலவந்தார்.

ஆனால், இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவர் யூதராஜசிங்கமாக, வல்லமையும், பராக்கிரமமுடையவராக, பூமியை நீதியாய் நியாயந்தீர்க்க வரவிருக்கிறார். இதோ, கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார்; அவர் தமது புயத்தினால் அரசாளுவார்; இதோ, அவர் அளிக்கும் பலன் அவரோடேகூட வருகிறது; அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது (ஏசாயா 40:10) என்று எழுதப்பட்டிருக்கிறது.

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி – யூதராஜசிங்கம்?

இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் என்று எழுதப்பட்டிருக்கிறது. அப்படியே பரலோகத்திலுள்ளவைகளையும், இயேசுகிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே, அவர் மூலமாய்த் தேவனுக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று. கிறிஸ்துவானவர் பரலோகத்திலுள்ளவைகளைச் சுத்திகரிக்க, பரலோகத்திலே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார் என்பதாக சொல்லப்பட்டிருக்கிறது.

சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று (கொலோசெயர் 1:19-20) என்று எழுதப்பட்டிருக்கிறது.

நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது. ஆதலால், பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாயிருந்தது; பரலோகத்திலுள்ளவைகளோ இவைகளிலும் விசேஷித்த பலிகளாலே சுத்திகரிக்கப்பட வேண்டியதாமே. அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார் (எபிரெயர் 9:22-24) என்று எழுதப்பட்டிருக்கிறது.

மோசே, நியாயப்பிரமாணத்தின்படி, சகல ஜனங்களுக்கும் எல்லாக் கட்டளைகளையும் சொன்னபின்பு, இளங்காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தைத் தண்ணீரோடும், சிவப்பான ஆட்டுமயிரோடும், ஈசோப்போடுங்கூட எடுத்து புஸ்தகத்தின்மேலும் ஜனங்களெல்லார்மேலும் தெளித்து, இவ்விதமாகக் கூடாரத்தின்மேலும் ஆராதனைக்குரிய சகல பணிமுட்டுகளின்மேலும் இரத்தத்தைத் தெளித்து (எபிரெயர் 9:20,21) சுத்திகரித்தார்.

பரலோகத்திலுள்ளவைகள் பாவத்தினால் கறைப்படாதவைகள் என அறிந்திருக்கிறோம். ஆனாலும், மீட்கப்பட்ட தேவஜனம் பரலோகத்தில்

பிரவேசிக்கும் முன்பாகப் பூமியிலே பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் பலிகளினாலே சுத்திகரிக்கப்பட்டதுபோலவே, கிறிஸ்துவானவர் தம்முடைய சொந்த இரத்தத்தைக் கொண்டு பரலோகத்திலுள்ளவைகளையும் சுத்திகரித்து, மீட்கப்பட்ட தேவஜனத்தின் பரலோக பிரவேசத்திற்கு ஆயத்தப்படுத்துவது, தேவனுடைய சித்தமாயிருப்பதாக அறிகிறோம்.

சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலது கரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கி, யூதராஜசிங்கம் போன்று வல்லமையும், பராக்கிரமமுடையவராக, பூமியை நீதியாய் நியாயந்தீர்க்க அவர் நியமிக்கப்பட்டிருந்தார். அதற்காக அவர் ஆட்டுக்குட்டியானவராகத் தம்முடைய சொந்த இரத்தத்தால் தன்னைப் பாத்திரவானாக்கி, பூரணப்படுத்துகிறது தேவனுக்கேற்றதாயிருந்தது. யூதராஜசிங்கம்போன்று வல்லமையோடு நீதியாய் நியாயந்தீர்க்க, ஆட்டுக்குட்டியின் அர்ப்பணிப்பும், சாந்தமும், கீழ்ப்படிதலும், மரணபரியந்த தாழ்மையும், அவசியமாயிருந்தது. மேலும், கடைசிக் கால நிகழ்வுகள் அனைத்திலும், நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, வேதாகமத்தில் ஆட்டுக்குட்டியானவர் என்றே குறிப்பிடப்படுகிறதைக்காணலாம்.

ஏழு கொம்புகளும் ஏழு கண்களும்!

சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்க ஒருவனும் பாத்திரவானாகக் காணப்படாததினால் யோவான் மிகவும் அழுதபோது, மூப்பர்களில் ஒருவன் யோவானை நோக்கி: யூதா கோத்திரத்துச் சிங்கம், புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றார். உடனே. அவரைக் காணும்படியாகத் திரும்பிய யோவான், அங்கே சிங்கத்திற்கு பதிலாக அடிக்கப்பட்ட ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக்கண்டார். அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது; அந்தக் கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம் என்று எழுதப்பட்டிருக்கிறது.

அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி என்பது, கொல்கொதாவின் கோர சிலுவையில் அறையுண்டு இரத்தம் சிந்தி, தன்

ஜீவனையே மனுக்குல இரட்சிப்பிற்காக ஈந்தருளின, நம்முடைய இரட்சகர் இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறது. மரித்து உயிர்த்த இயேசு, அடிக்கப்பட்டவண்ணமாகவே, நிற்கிறதைக் கண்டார். மரித்தாலும் சதாகாலங்களிலும் உயிரோடிருப்பவராக, பட்டக்காயங்களுடனும், சிந்துகின்ற இரத்தத்தோடும் சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே அவர் நிற்கக்கண்டார்.

அந்த ஆட்டுக்குட்டி ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது. ஏழு கொம்புகள், நிறைவான வல்லமையையும் அதிகாரத்தையும் குறிக்கிறது. நம்மைப்போன்று மாம்சத்தோடும் இரத்தத்தோடும் இயேசுகிறிஸ்து இவ்வுலகில் ஜீவித்தபோது, தேவன் வல்லமையினாலும் பரிசுத்த ஆவியினாலும் அவரை அபிஷேகம்பண்ணினார் என்பதை நாம் அறிவோம். அவருடைய ஊழிய நாட்களில் வெளிப்பட்ட அவருடைய வல்லமை அதிகாரத்தைக் காட்டிலும் பலமடங்கு மேலானதும் நிறைவானதுமான அதிகாரங்களை ஆட்டுக்குட்டியானவர் உடையவராக இருக்கிறார். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்து பரத்துக்கேறிச் செல்லுமுன்னர் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னதையும் நாம் அறிவோம். இந்தக் கடைசிக் கால நிகழ்வுகளிலெல்லாம், அவர் ராஜாதிராஜாவாக சர்வ வல்லமையுடையவராய் அனைத்தின்மேலும் அதிகாரமுடையவராக இருக்கிறார்.

ஏழு கண்கள் என்பது அவருடைய சர்வ ஞானத்தையும், எல்லாவற்றையும் பகுத்தறியும் அவரது ஆற்றலையும் குறிக்கிறது. அந்தக்கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம் என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் கண்கள், பரிசுத்த ஆவியானவரின் நிறைவானதும், அளவிற்குட்படாததுமான தன்மைகள் அவரில் தங்கியிருப்பதையும் வெளிப்படுத்துகிறது.

ஆட்டுக்குட்டியானவர் புஸ்தகத்தை வாங்கினார்!

ஆட்டுக்குட்டியானவர், சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினார் என்று எழுதப்பட்டிருக்கிறது. சிலுவையிலே வெற்றிசிறந்த ஆட்டுக்குட்டியானவரும், யூதராஜசிங்கமுமானவர். தேவனால் தனக்குத் தந்தருளப்பட்ட

அதிகாரத்தினாலும், சிந்தின தம்முடைய மாசற்ற திருஇரத்தத்தினாலும் தேவனுடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கத் தகுதியைப்பெற்றார்.

ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த அந்த புஸ்தகத்தை அவர் வாங்கி, தம்முடைய ராஜரீகத்தை விளங்கப்பண்ணினார். அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார் (யோவான் 5:22) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

இந்த முக்கியமான நிகழ்வு, சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்த பிதாவாகிய தேவன், தம்முடைய குமாரனாகிய ஆட்டுக்குட்டியானவருக்கு, வருங்காலத்தின் காரியங்கள் அனைத்தையும் தெரியப்படுத்தி, நியாயந்தீர்க்கும் அதிகாரத்தை தந்தருளினதை வெளிப்படுத்தி உறுதிச்செய்கிறது. ஆட்டுக்குட்டியானவர் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட இந்தச் சம்பவம், வெளிப்படுத்தின விசேஷத்தின் உச்சக்கட்டமாகவும், திருப்புமுனையாகவும் அமைந்துள்ளது. ஒவ்வொரு முத்திரையாக உடைக்கப்படும்போதும், அது அம்மட்டும் மறைக்கப்பட்டிருந்த அந்த இரகசியங்களுக்குத் திறவுகோலாய்ச் செயல்படுகிறது. இப்படியாக, அதனதன் வரிசையிலே நியாயத்தீர்ப்புகள் வெளிப்பட்டுச் செயல்படுத்தப்பட உள்ளது. சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆட்டுக்குட்டியானவர் சர்வவல்லமையும் சகல அதிகாரமுமுடையவராயும் எல்லாவற்றையும் அறிந்தவராகவும் இருக்கிறார். உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டியை, கொடுக்கப்பட்ட காலங்களிலே இரட்சகராக ஏற்றுக்கொள்ளாது உதாசினப்படுத்துகிறவர்கள், ராஜசிங்கமாக அவரை நியாயத்தீர்ப்பிலே சந்திப்பது மிகவும் பயங்கரமாயிருக்கும். முதலாம் வருகையிலே மனுஷகுமாரனாகிய இயேசு இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே வந்தார். ஆனால், அவருடைய இரண்டாம் வருகையோ, அவருடைய எதிராளிகளை மேற்கொள்ளவும், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்குப் பலன் அளிக்கவுமே வரவிருக்கிறார். அல்லேலூயா!

சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்!

ஆட்டுக்குட்டியானவர், சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினபோது, பரலோகத்தின் சிங்காசனத்தின் முன்பாக, அழுகையும் சஞ்சலமும் சடிதியாய் மாறி, அங்கு ஆனந்தக்களிப்புடன் கூடிய புதுப்பாட்டு வெளிப்பட்டது. தம்முடைய மரணத்தினாலே ஆட்டுக்குட்டியானவர் மீட்பை உண்டு பண்ணினதினாலும், மனுக்குலம் பூமி அனைத்தின்மேலும் இழந்த அதிகாரத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள இருப்பதின் நிமித்தமும், சஞ்சலம் சந்தோஷமாகவும், துக்கம் மகிழ்ச்சியாகவும் மாறின.

அத்தருணத்திலே, சிங்காசனத்தைச் சுற்றிலுமிருந்தோர், புதிய பாட்டைப் பாடி, ஆட்டுக்குட்டியானவரைப் போற்றிப் பாடிப் புகழ்ந்ததாகவும், வணங்கி ஸ்தோத்திரித்ததாகவும் காண்கிறோம். அதைத் தொடர்ந்து, சிங்காசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்கள் மகா சத்தமிட்டு ஆட்டுக்குட்டியானவருடைய மகத்துவங்களையும் மேன்மைகளையும் அறிக்கையிட்டார்கள். இப்படியாக, பரலோகத்தில் வெளிப்பட்ட சந்தோஷமும் மகிழ்ச்சியும் ஆர்ப்பரிப்பும், அனைத்து ஜீவராசிகளையும், வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவையும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவையும் பற்றிப்பிடித்ததாக எழுதப்பட்டிருக்கிறது. அல்லேலூயா!

மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் (யோவான் 16:20) என்று எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம் (ஏசாயா 35:10) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கினபோது, அந்த நான்கு ஜீவன்களும், இருபத்துநான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும், பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு, ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து: தேவரீர்

புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்குமுன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோமென்று புதிய பாட்டைப் பாடினார்கள்.

பின்னும் நான் பார்த்தபோது, சிங்காசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன்; அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாகவுமிருந்தது. அவர்களும் மகா சத்தமிட்டு: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள்.

அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவரவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன். அதற்கு நான்கு ஜீவன்களும் ஆமென் என்று சொல்லின. இருபத்து நான்கு மூப்பர்களும் வணக்கமாய் விழுந்து சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டார்கள் (வெளி. 5:8-14).

ஜாக்கிரதையாய்ச் செயல்படுவோம்!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கும் சிங்காசனத்தையும், அதில் வீற்றிருக்கும் மிகவும் உன்னதமானவரான பரிசுத்தரையும், சிங்காசனத்தைச் சுற்றிலும் இருப்போரையும், இருப்பவைகளையும் குறித்து அறிந்துகொள்ள கர்த்தர் கொடுத்த கிருபைகளுக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம். மேலும், கடைசிக் கால நிகழ்வுகளின் துவக்க விழாவைப்போன்று அமைந்துள்ள, ஆட்டுக்குட்டியானவர் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கவிருக்கும் காட்சியையும் தியானித்தோம். இதுவே வரவிருக்கும் உபத்திரவக் காலத்தின் நிகழ்வுகளுக்கும், நியாயத்தீர்ப்புகளுக்கும் ஆரம்பமாகவும் இருக்கிறது.

இந்த வேதப்பகுதியைத் தொடர்ந்து, இந்தத் தரிசன புஸ்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நிகழ்வுகளில் பெரும்பாலானவைகள், கர்த்தர் எச்சரிக்கும் உபத்திரவக்காலத்தின் விளக்கங்கள்போன்று தோன்றுகிறது. உலகமுண்டமானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லியிருக்கும் வார்த்தைகளை மறுபடியும் நினைவுகூருவோம்.

இம்மட்டும் தியானித்த கடைசிக் கால நிகழ்வுகளைக் காட்டிலும், அப்போஸ்தலனாகிய யோவான் பெற்ற இரண்டாம் தரிசனத்தின் காட்சிகளும் விவரங்களும், இந்த நிகழ்வுகள் யாவும் திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்படும் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் பரிசுத்த தேவனின் பிரதான இருப்பிடத்திற்கே, நம்மை அழைத்துச் செல்வதைப்போன்று இருப்பதாகப் பார்த்தோம். மேலும், தரிசனத்தின் இந்தப் பகுதியில் விவரிக்கப்பட்டிருக்கும் நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் பங்களிப்பு, நம்மைப் பரவசப்படுத்தி, நாமறிந்த அவருடைய வாக்குத்தத்தங்களை நினைப்பூட்டி நம்மை உற்சாகப்படுத்துகிறது. இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது (வெளி. 22:12) என்றும் சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார் (ரோமர் 16:20) என்றும்; இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும் (வெளி. 22:20) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் வருகைக்குச் சகலமும் பூமியிலே, இவ்வுலகிலே ஆயத்தமாய் இருப்பதை அறிந்திருக்கிறோம். பரலோகத்தின் காட்சிகளும் சம்பவங்களும், இவற்றை வெளிப்படுத்தி தெளிவுபடுத்துகிறது. மட்டுமல்லாமல், நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவுக்கு கடைசிக்காலத்தில் தந்தருளப்பட இருக்கிற நிச்சயமான நியாயத்தீர்ப்பின் அதிகாரத்தையும், நிகழவிருக்கும் சம்பவங்கள் தொகுக்கப்பட்டிருப்பதையும் அறிந்திருக்கிறோம்.

ஆகையால் பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும், பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள் (2 பேதுரு 3:14) என்று பேதுரு எச்சரித்திருக்கிறார். உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால்

விழித்திருங்கள் என்றும்; நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத்தேயு 24:42,44) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இதனிமித்தம், மிகவும் ஜாக்கிரதையாயும் அதிவேகமாகவும் செயல்பட நம்மையே நாம் அர்ப்பணிப்போம். அல்லேலூயா! ஆமென்.

தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும்
பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு,
சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும்
ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய
இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு எங்கள் தேவனுக்கு முன்பாக
எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்;
நாங்கள் பூமியிலே அரசாளுவோமென்று
புதிய பாட்டைப் பாடினார்கள்
(வெளி. 5:9,10).

4. முத்திரிக்கப்பட்ட நியாயத்தீர்ப்புகள்!

தொடரும் தரிசனம்!

இரண்டாம் தரிசனம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கும் சிங்காசனத்தின் காட்சியையும், சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பரிசுத்தரின் மகிமையையும், கடைசிக் கால நிகழ்வுகளில், ஆட்டுக்குட்டியானவரின் பொறுப்புகளையும் ராஜரீகத்தையும் விவரிக்கிறது. இந்தக் காட்சியும், சம்பவங்களும், வெளிப்படுத்தின விசேஷத்தின் எஞ்சிய பகுதிகளில் புதைந்திருக்கும் இரகசியங்களைத் தெளிவுபடுத்தும் திறவுகோலாக அமைந்துள்ளது.

அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஆட்டுக்குட்டியானவர் வந்து, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலது கரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினார். அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கினபோது, பரலோகத்தில் சுஷியாய் மிகுந்த மகிழ்ச்சியின் ஆரவாரம் வெளிப்பட்டது. நான்கு ஜீவன்களும், இருபத்துநான்கு மூப்பர்களும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, அவரை வாழ்த்திப் புதிய பாட்டைப் பாடினார்கள், பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாகவுமிருந்த அநேக தூதர்கள் மகா சத்தமிட்டு ஆட்டுக்குட்டியானவரைத் துதித்தார்கள். வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்.

உபத்திரவக் காலம்!

இந்தத் தரிசனப் புஸ்தகத்தில் ஆறாம் அதிகாரம் துவங்கி பதினெட்டாம் அதிகாரம் வரை பதிவு செய்யப்பட்டிருக்கும் நிகழ்வுகளில்

பெரும்பாலானவைகள், கர்த்தர் எச்சரிக்கும் உபத்திரவக்காலத்தின் விளக்கங்கள் போன்று காணப்படுகிறது. உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும் (மத்தேயு 24:21) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

பரிசுத்தவான்களின் கூட்டமைப்பான சபை மறுரூபப்பட்டு இயேசு கிறிஸ்துவோடு மத்திய ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறபோது (1 தெச. 4:13-18) சபையின் காலமும், கிருபையின் நாட்களும் நிறைவுபெற்று, உபத்திரவக்காலம் துவங்கவுள்ளது. உபத்திரவக்காலம் தானியேலின் எழுபதாவது வாரம் (தானியேல் 9:24:27) எனவும்; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம் (எரேமியா 30:7) எனவும் குறிப்பிடப்படுகிறது. தானியேலின் தரிசனப்படி, 69 வாரங்களைப்போன்றே காலங்களைக் கணக்கிடுவோமானால், எழுபதாவது வாரம் எனும் உபத்திரவக்காலம் ஏழு ஆண்டுகள் இருக்கும் என அறியலாம்.

உபத்திரவக்காலத்தில் நடைபெறவிருக்கும் சம்பவங்கள், தேவனுடைய பரிசுத்தத்தினால் வெளிப்படும் நீதியையும் கோபாக்கினையையும் தெளிவாக முன்னறிவித்து நம்மை எச்சரிக்கிறது. இவை நாம் உலகத்தைச் சார்ந்து செயல்படாமல், நித்தியத்தை நோக்கிப்பார்த்து, கவனமாய் தேவசித்தத்தைச்செய்ய நம்மை வழிநடத்துகிறது. இதற்கு மேலாக, நாம் கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகளாக, தேவனுடைய கோபாக்கினைக்குட்பட இருக்கிறவர்களை விடுவிக்கும்படியாக அவர்களை எச்சரிக்கவும் நம்மை நெருக்கி ஏவுகிறது.

முதலாம் முத்திரை – வெள்ளைக்குதிரை?

ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த புஸ்தகத்தில், முதல் நான்கு முத்திரைகள் உடைக்கப்படுவதும் ஒரே வகையில் எழுதப்பட்டிருக்கிறது. முதல் நான்கு முத்திரைகள் உடைக்கப்படும்போது, சிங்காசனத்தைச் சூழநின்ற நான்கு ஜீவன்களில் ஒவ்வொன்றும், அப்போஸ்தலனாகிய யோவானை நோக்கி: நீ வந்து பார் என்று இடிமுழக்கம்போன்ற சத்தமாய்ச் சொல்லக்கேட்டார். யோவான் ஒவ்வொன்றிலும் ஒரு குதிரையையும் அதன்மேல் ஏறியிருக்கிறவனையும் கண்டார். ஐந்து மற்றும் ஆறாம் முத்திரைகள் தனித்தன்மை

உடையதாகவும், ஏழாம் முத்திரை, ஏழு எக்காள நியாயத்தீர்ப்புகளை உள்ளடக்கியதாகவும் இருக்கிறது. உபத்திரவக்காலத்தில் நடக்கவிருக்கும் எல்லா சம்பவங்களும், இந்த ஏழு முத்திரைக்குள்ளாக அடங்கியிருக்கிறது. ஆட்டுக்குட்டியானவராகிய இயேசுகிறிஸ்து, ஒவ்வொரு முத்திரையை உடைக்கும்போதும், அதில் எழுதப்பட்டிருக்கிற நியாயத்தீர்ப்புகள் வெளிப்பட்டுச் செயல்படுத்தப்படவுள்ளன.

வேதாகமத்தின் பல தரிசனங்கள் நிறைவுபெற்று, பின்னர் அவை செய்தியாகவும், இந்நாட்களில் அவை சரித்திரமாகவும் மாறியிருக்கிறது. இப்படியாக, நிறைவுபெற்ற தரிசனங்களையும், சம்பவங்களையும் இணைத்து எளிதாக நாம் அவற்றை இந்நாளில் புரிந்துகொள்ளமுடிகிறது. மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள் (உபாகமம் 29:29) என்று எழுதப்பட்டிருக்கிறது. மேலும், இந்தப் புஸ்தகத்தையும் ஏழு முத்திரைகளையும் குறித்த தரிசனங்களை அறிந்துகொள்ள, இந்தத் தரிசனங்கள் இந்நாளில் இன்னும் நிறைவேறவில்லை என்பதை நாம் தெளிவாக மனதில்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்கக்கண்டேன். அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று என்னை நோக்கி: நீ வந்து பார் என்று இடிமுழக்கம்போன்ற சத்தமாய்ச் சொல்லக்கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ, ஒரு வெள்ளைக்குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான்; அவனுக்கு ஒரு கிரீடங் கொடுக்கப்பட்டது; அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான் (வெளி. 6:1,2) என்று யோவான் தான் கண்ட காட்சியை விவரித்திருக்கிறார்.

யோவான் இங்குக் கேட்ட இடிமுழக்கம்போன்ற சத்தம் என்பது, வெளிப்பட்ட உறுதியான நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது. வெள்ளை சமாதானத்திற்கு அடையாளமாயிருக்கிறது. வில் தூரத்திலிருந்து மறைந்து சத்துருவைத் தாக்க உபயோகப்படுகிறது. இந்நாட்களின் வழக்கின்படி இது, சமாதான உடன்படிக்கையின் தூதுவர் என மனிதர் ஒருபுறம் தங்களைக் காட்டிக்கொண்டாலும், மறுபுறம் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளை இயக்கக்கூடிய ஆற்றலை உடையவர்களாக இருப்பதைக் காட்டுகிறது. ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் என்பதும்,

அவனுக்கு ஒரு கிரீடங்கொடுக்கப்பட்டது என்பதும், உலக அரசியலில் அவர்களது உயர்ந்த நிலையை வெளிப்படுத்துகிறது. இவர்கள் தந்திரமுள்ளவர்கள்; இரகசியமான பல காரியங்கள் அவர்களுக்குள் இருக்கும் என்பதாக அறியலாம். இந்நாட்களில் உலக அரங்கில் நடந்தேறும் சம்பவங்களுக்கு இது ஒத்து காணப்பட்டாலும், இப்பொழுது நாம் காண்பதெல்லாம் ஒரு முன்னோடியே.

இரண்டாம் முத்திரை – சிவப்பான குதிரை!

அவர் இரண்டாம் முத்திரையை உடைத்தபோது, இரண்டாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன். அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது. அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலைசெய்யத்தக்கதாகச் சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துப்போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது; ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது (வெளி. 6:3,4) என்று எழுதப்பட்டிருக்கிறது.

சிவப்பான குதிரை இரத்தம் சிந்துதலையும், யுத்தங்களையும் குறிக்கிறது. அதின்மேல் ஏறியிருந்தவன் சமாதானத்தைப் பூமியிலிருந்து எடுத்துப்போடும்படியான அதிகாரம் உடையவனாக இருந்தான். இது உலக மகா யுத்தம் போன்றவற்றைக் குறிக்காமல், உள்நாட்டுக் கலவரங்களையும், ஜனத்துக்கு விரோதமாக ஜனமும், ஜாதிக்கு விரோதமாக ஜாதியும் எழும்புகிறதையும் குறிக்கிறது. இரகசியமான பல காரியங்களை உள்ளடக்கிய தந்திரமுள்ளவனின் சமாதான உடன்படிக்கைக்குப் பின்னர், சமாதானத்தை பூமியிலிருந்து எடுத்துப்போடும்படியான ஒரு பெரிய பட்டயம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

இதையே, நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, முடிவு கால நிகழ்வுகளைக் குறித்த தம்முடைய ஒலிவமலைப் பிரசங்கத்தில்: யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும் முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம் (மத்தேயு 24:6-8) என்று சொல்லியிருக்கிறார்.

மூன்றாம் முத்திரை – கறுப்புக்குதிரை!

அவர் மூன்றாம் முத்திரையை உடைத்தபோது, மூன்றாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ, ஒரு கறுப்புக்குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான். அப்பொழுது, ஒரு பணத்துக்கு ஒருபடி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும், நான்கு ஜீவன்களின் மத்தியிலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டேன் (வெளி. 6:5,6) என்று எழுதப்பட்டிருக்கிறது.

கறுப்புக்குதிரையின்மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான். இது உள்நாட்டுக் கலவரங்களாலும் யுத்தங்களாலும் தேசத்திலே உண்டாகும் பஞ்சங்களையும், பொருளாதார தாக்கங்களையும் குறிக்கிறது. மழைத்தாழ்ச்சியினால் உண்டாகும் பஞ்சம் அல்ல, இவை கலவரங்களினால் உண்டாகும் பணவீக்கம், பொருள் பற்றாக்குறை, தட்டுப்பாடு போன்றவையாகும். ஒரு பணம் என்பது ஒரு வேலையாளின் ஒருநாள் சம்பளம் என்பதாக அறியலாம். எளியவர்களின் அத்தியாவசியமான தேவைகள் சந்திக்கப்படாமல், ஆடம்பரமாக எண்ணப்பட்ட எண்ணெயும் திராட்சரசமும் குறைவின்றிக் காணப்படும் பொருளாதாரமாக இது விவரிக்கப்படுகிறது.

கோதுமையும் வாற்கோதுமையும் குறைவுபட்டது; எண்ணெயும் திராட்சரசமும் குறைவுபடவில்லை. இந்தக் காலக் கட்டத்திலே, ஆகார பற்றாக்குறை மிகவும் கொடியதாக இல்லாததைப்போன்று காணப்பட்டாலும், உபத்திரவத்தின் காலம் இன்னும் தொடரும் வேளையில், எளிய மக்கள் மாத்திரமல்லாமல், எல்லோரும் குறைவுபட்டு மிகுந்த உபத்திரவங்களுக்கு உட்படுவார்கள் என அறியலாம். இதேப்போலொத்த ஒரு சூழ்நிலையில் கர்த்தர் எசேக்கியேல் தீர்க்கதரிசியை நோக்கி: மனுபுத்திரனே, இதோ, அப்பமும் தண்ணீரும் அவர்களுக்குக் குறையவும், அவனவன் திடுக்கிடவும், அவர்கள் தங்கள் அக்கிரமத்திலே வாடிப்போகவும், நான் எருசலேமிலே அப்பம் என்னும் ஆதரவுகோலை முறிக்கிறேன்; அவர்கள் அப்பத்தை நிறையின்படியே விசாரத்தோடே சாப்பிட்டு, தண்ணீரை அளவின்படியே திடுக்கிடுதலோடே குடிப்பார்கள் (எசேக்கியேல் 4:16,17) என்றார்.

நாம் ஏற்கனவே தியானித்தபடி, வெளிப்படுத்தப்பட்டிருக்கும் உபத்திரவக்காலத்தின் சம்பவங்கள், தேவனுடைய நீதியையும் கோபாக்கினையையும் தெளிவாக முன்னறிவித்து நம்மை எச்சரிக்கிறது. இவை நாம் உலகத்தைச் சார்ந்து செயல்படாமல், பரிசுத்தத்துடன், நித்திய இராஜ்யத்தை நோக்கிப்பார்த்து, தேவசித்தத்தைச்செய்ய நம்மை வழிநடத்துகிறது.

நான்காம் முத்திரை – மங்கினநிறமுள்ள குதிரை!

அவர் நாலாம் முத்திரையை உடைத்தபோது, நாலாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லுஞ் சத்தத்தைக் கேட்டேன். நான் பார்த்தபோது இதோ, மங்கினநிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன்பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்டமிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது (வெளி. 6:7,8) என்று யோவான் தான் கண்ட காட்சியை விவரித்திருக்கிறார்.

மங்கினநிறமுள்ள குதிரையின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன்பின் சென்றது என்று எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவை அண்டிக்கொள்ளாதவர்கள் மரணத்திற்குட்பட்டு, அவர்கள் சென்றடையும் இடம் பாதாளமாயிருக்கிறது. இரண்டாம் முத்திரையின் பட்டயத்தோடும், தொடர்ந்த பஞ்சத்தோடும், நான்காம் முத்திரை உடைத்தபோது வெளிப்பட்ட கொள்ளைநோய்போன்ற சாவினாலும், பூமியின் துஷ்டமிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது என்று எழுதப்பட்டிருக்கிறது.

முதல் மூன்று குதிரைகளின்மேல் ஏறி வந்தவர்கள் வருவித்த சேதங்கள் இங்கு பட்டியலிடப்பட்டிருக்கிறது. முதலாம் முத்திரை உடைக்கப்பட்ட போது தோன்றிய வெள்ளைக்குதிரையின்மேல் ஏறியிருந்தவன், பூமியில் சமாதானத்தின் உடன்படிக்கையை ஏற்படுத்துவதைப்போல் காணப்பட்டாலும், அவன் இரகசியமான பல காரியங்களை உள்ளடக்கிய தந்திரமுள்ளவனாய், தூரத்திலிருந்து மறைந்து தாக்கும் வில்லை உடையவனாய் இருந்தான்.

உம்முடைய அம்புகள் கூர்மையானவைகள், அவைகள் ராஜாவுடைய சத்துருக்களின் இருதயத்திற்குள் பாயும்; ஜனங்கள் உமக்குக் கீழே விழுவார்கள் (சங்கீதம் 45:5) என்றும்; தீங்குகளை அவர்கள்மேல் குவிப்பேன்; என்னுடைய அம்புகளையெல்லாம் அவர்கள்மேல் பிரயோகிப்பேன். அவர்கள் பசியினால் வாடி, எரிபந்தமான உஷ்ணத்தினாலும், கொடிய வாதையினாலும் மாண்டுபோவார்கள்; துஷ்டமிருகங்களின் பற்களையும், தரையில் ஊரும் பாம்புகளின் விஷத்தையும் அவர்களுக்குள் அனுப்புவேன் (உபாகம் 32:23,24) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இந்த உபத்திரவத்தின் தாக்கம், அடுத்த மூன்று சேதங்களின் துவக்கமாக இருப்பதாக அறிகிறோம். பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், கொள்ளைநோயினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான அதிகாரம் மரணத்திற்கும் பாதாளத்திற்கும் கொடுக்கப்பட்டது.

இவைகளெல்லாம் தேவனுக்கும், ஆட்டுக்குட்டியானவருடைய ஆளுகைக்கும் அதிகாரத்திற்கும் உட்பட்டே நடைபெறவிருக்கிறது என்பதையும்; இந்தப் புஸ்தகத்தையும் ஏழு முத்திரைகளையும் குறித்த தரிசனங்கள், இந்நாளிலே இன்னும் நிறைவேறவில்லை என்பதையும் நாம் தெளிவாக மனதில் கொள்ள அழைக்கப்படுகிறோம்.

ஐந்தாம் முத்திரை – இரத்தசாட்சிகளின் தொகை!

அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன். அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டன. அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் பணிவிடைக்காரரையும் தங்கள் சகோதருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது (வெளி 6:9-11) என்று எழுதப்பட்டிருக்கிறது.

முதல் நான்கு முத்திரைகள் உடைக்கப்பட்டதால் வெளிப்பட்ட நியாயத்தீர்ப்புகள் பூமியிலே கிரியைகளை நடப்பிக்கும்போது, யோவான் பரலோகத்தில் இருந்தார் என்பதை நாம் அறிவோம். இந்த ஐந்தாவது முத்திரையின் கிரியைகள் முதல் நான்கிலிருந்து வேறுபட்டிருப்பதைக் காணலாம். தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் இரத்த சாட்சிகளாய் மரித்தவர்களின் ஆத்துமாக்களை பலிபீடத்தின்கீழே யோவான் கண்டார். பண்டைகாலத்தில் பலிசெலுத்தப்படுகையில், மாம்சத்தின் உயிரான இரத்தம், பலிப்பீடத்தின் கீழே ஊற்றப்பட்டது.

தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களால், கொலைசெய்யப்பட்டவர்கள், தங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று தேவனை நோக்கி மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். அவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்படும்படியாக வேண்டினார்கள். இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் சாட்சியினிமித்தம் கொல்லப்பட்டவர்கள் என்பது ஆதியிலிருந்து இரத்தசாட்சியாய் மரித்த அனைவரையும் உள்ளடக்கியுள்ளது. இம்மட்டும் இவ்விதமாக மரித்தோரின் தொகை நிறைவடையாமல் உள்ளதாக சொல்லப்பட்டிருக்கிறது.

இதற்குப் பின்னர் மிகுந்த உபத்திரவத்தின் காலத்திலே அநேகர் இரத்தசாட்சியாய் மரித்து இந்தத் தொகை நிறைவாகவிருக்கிறது. அந்த காலத்திலிருந்து இன்னுங்கொஞ்சங்காலம் செல்லும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கடைசிக் கால உபத்திரவம், கொஞ்சம் காலம்தான் என்றாலும் மிகவும் கொடூரமாயிருக்குமாம். இரகசிய வருகையிலே கைவிடப்பட்ட விசுவாசிகளும் மற்றவர்களும், இரட்சிக்கப்பட்டு நித்திய ஜீவனையடைய இரத்தசாட்சிகளாய் மரிக்க வேண்டியிருக்கும் என்பதாகச் சொல்லப்படுகிறது. அல்லது அவர்கள் உபத்திரவக்காலத்தின் கொடூரங்களைப் பொறுமையுடன் சகித்து முடிவுபரியந்தம் விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டியதாயிருக்கும்.

இந்தக் கடைசிக் காலக் கட்டத்தில், இரகசிய வருகையிலே கைவிடப்பட்டு, உபத்திரவக்காலத்திலே பூமியில் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்ற விரும்புகிறவர்கள் ஒரு தீர்மானம் எடுக்க நிர்ப்பந்திக்கப்படுவார்களாம். ஒன்றான மெய்த்தேவனையும் அவர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் உறுதியாய் பற்றிக்கொண்டு

உபத்திரவங்களை அனுபவிப்பதா? அல்லது எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளும் மனதுடன், உலக அளவிலான பொதுவான கொள்கைகளைப் பின்பற்றிச் சோரம்போவதா? என்பது அதுவாகும். எம்மதமும் சம்மதம் என்று, எல்லோரையும் ஏற்றுக்கொண்டு உலகத்தோடு ஒத்து வாழும் ஒரு மனப்பான்பான்மையோடு, கிறிஸ்தவக் கொள்கைகளை உறுதியாய்ப் பற்றிக்கொள்ள மனதில்லாத அவலநிலையை இது குறிக்கிறது.

தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டதினால், ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது எந்தவொரு நியாயத்தீர்ப்பும் பூமியிலே வெளிப்படாது என்பதாக அறிகிறோம். அக்கிரமசெய்கைக்காரர் மனந்திரும்பும்படியாக வாய்ப்பளித்து, நீடியபொறுமையுடன் கர்த்தர் நியாயத்தீர்ப்பைத் தாமதித்திருக்கிறார். கர்த்தரின் நியாயத்தீர்ப்பிலும், அவருடைய இரக்கம் இப்படியாக வெளிப்படுகிறது. பரிசுத்தத்தையும் வெற்றியையும் வெளிப்படுத்தும்படியாக வெள்ளை அங்கிகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இந்தக் காத்திருப்பின் நாட்கள், மகா உபத்திரவத்தின் காலம் நிறைவுபெறும் வரை ஒரு சில ஆண்டுகளே இருக்கும் என அறிந்திருக்கிறோம்.

ஆறாம் முத்திரை – கோபாக்கினையின் நாள்!

அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக்கண்டேன்; இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம்போலாயிற்று. அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது, அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது. வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம்போலாகி விலகிப்போயிற்று; மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின.

பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு, பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும்,

ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்றார்கள் (வெளி. 6:12-17) என்று யோவான் எழுதி வைத்திருக்கிறார்.

இந்த வசனங்களில் பட்டியலிடப்பட்டிருக்கும் சம்பவங்கள், கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வரவிருப்பதை முன்னறிவிப்பதைப்போன்று நடந்தேறவிருக்கிறது. இந்தக் கடைசிக் கால சம்பவங்கள், ஆறாவது முத்திரை துவங்கி துரிதமாகச் செயல்பட ஆரம்பிக்கிறது. முதல் ஐந்து முத்திரையைச் சார்ந்த சம்பவங்களை நாம் சரித்திரத்தோடு ஒப்பிட்டு உணர்ந்துகொள்ள முடிகிறது. சரித்திரத்திலே சமாதான உடன்படிக்கை, வஞ்சகம், உள்நாட்டுக் கலவரங்கள், பஞ்சம், கொள்ளைநோய் போன்றவை இடம்பெற்றிருக்கிறது. ஆனால், ஆறாவது முத்திரையைச் சார்ந்த சம்பவங்கள் முன் எப்பொழுதும் சம்பவித்திராத நிகழ்வுகளை வெளிப்படுத்தி, கடைசிக் காலத்தின் உண்மைத்தன்மையை உறுதிச்செய்கிறது.

ஆட்டுக்குட்டியானவர் ஆறாம் முத்திரையை உடைத்தபோது, அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது. இதை அறிவிக்கும்வண்ணமாகப் பூமி மிகவும் அதிர்ந்தது. மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின. சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம்போலாயிற்று; வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது. கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும் (யோவேல் 2:31) என்றவார்த்தையின்படி இவை நடந்தேறவிருக்கிறது.

மிகவும் கொடிதான பூமி அதிர்வுகளினால், எரிமலைகள் வெடித்து சிதறும்போது, பெருமளவில் நெருப்பும், கருப்பு நிற புகையும், எரிந்த சாம்பலும், வானத்தில் சிதறடிக்கப்படுகிறது. 1883ஆம் ஆண்டு இந்தோனேசியா தேசத்தில் வெடித்துச் சிதறிய வெடிமலை, அது இருந்த தீவின் 70 சதவீதத்தைச் சேதப்படுத்தி, தீவுகள் இடங்களைவிட்டு அகன்றுபோயின என்றபடி, அந்தத் தீவின் தோற்றத்தையே மாற்றிவிட்டதாக வரலாற்றில் எழுதப்பட்டிருக்கிறது. அதன் சிதறல்கள்2000 கிலோமீட்டர் தூரத்திலிருந்த ஆப்ரிக்கக் கண்டத்திலும் சென்று விழுந்ததாம். பல நாட்கள் வேதாகமத்தில் குறிப்பிட்டிருக்கிறதுபோல கரும்புகையினால் சூரியன் கறுத்தது, எழும்பின தூசியின் நிமித்தம், சந்திரன் இரத்தம்போலாயிற்று.

இப்படிப்பட்ட வேளைகளில், பூமியின் சகல மனுஷரும் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தையையும் அதின் உண்மையையும் உணருவார்கள். அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது. அவருக்கு முன்பாக யார் நிலைநிற்கக்கூடும் என்று அலறி தங்களை அவருடைய கோபத்திற்கு மறைத்துக்கொள்ள தீவிரிப்பார்கள். ஏழு எக்காளம் மற்றும் தேவனுடைய கோபகலசங்களின் நியாயத்தீர்ப்பிலும், கர்த்தருடைய கோபாக்கினை பூமியின்மேல் தொடர இருக்கிறது.

ஆறாம் முத்திரை – இஸ்ரவேல் எண்ணிக்கை நிறைவு!

ஆறாம் முத்திரை உடைக்கப்பட்ட பின்பு நிகழவிருக்கும் சம்பவங்களின் தொடர்ச்சியாக கர்த்தர் யோவானுக்கு வெளிப்படுத்தினவைகளை, ஏழாம் அதிகாரத்தில், 'இவைகளுக்குப்பின்பு' என்று அவர் தொடர் தரிசனமாக எழுதிவைத்திருக்கிறார். இந்த வேதப்பகுதியில், பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம்பெற்றிருந்த நான்கு தூதர்களைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. வேறொரு தூதன் ஒருவன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து அப்பொழுது ஏறிவந்து அவர்களை நோக்கி: இஸ்ரவேல் கோத்திரத்தாரில் தேவனுடைய ஊழியக்காரர்கள் இலட்சத்துநாற்பத்து நாலாயிரம்பேர் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுச் சொன்னான்.

இவைகளுக்குப்பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின்மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின்மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கக்கண்டேன். ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக் கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவரக்கண்டேன்; அவன், பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம்பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி: நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான். முத்திரைபோடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக்கேட்டேன்; இஸ்ரவேல்

புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்டவர்கள் இலட்சத்துநாற்பத்து நாலாயிரம்பேர் (வெளி. 7:1-4) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இந்த யூதர், இஸ்ரவேலர் இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது ஆயத்தமாயிராதவர்கள் என அறியலாம். ஆயத்தமாயிருந்திருந்தால் அப்பொழுதே மறுரூபப்பட்டு அவர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பார்கள். இந்தத் திரளான யூதர்கள், இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகைக்குப் பின்னர், அவரே அம்மட்டும் அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த மேசியா என்றும், இரட்சகர் என்றும் அறிந்து, தொடர்ந்து வரவிருந்த உபத்திரவங்களுக்கு நீங்கலாகும்படியாக முத்திரிக்கப்பட்டார்கள்.

என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய ஊழியக்காரிகள் மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள் (அப்போஸ்தலர் 2:18) என்ற வசனத்தின்படி, அவர்கள் நெற்றிகளில் தேவனுடைய ஊழியக்காரர் என்ற முத்திரை போடப்படவிருந்தது. யோசேப்பின் குமாரராகிய எப்பிராயீம் மனாசே என்பவர்களில், மனாசே கோத்திரம் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது. எப்பிராயீம் கோத்திரம் தனியே குறிப்பிடப்படாமல், யோசேப்பு கோத்திரம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. தாண் கோத்திரத்தில் ஒருவரேனும் இந்தப் பட்டியலில் இடம்பெறவில்லை. தாண், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவன் மல்லாந்து விழும்படியாய் அதின் குதிகாலைக் கடிக்கிறதற்கு வழியில் கிடக்கிற சர்ப்பத்தைப் போலவும், பாதையில் இருக்கிற விரியனைப்போலவும் இருப்பான் (ஆதியாகமம் 49:17) என்று யாக்கோபு தாணைக்குறித்து சொல்லியிருக்கிறார்.

உபத்திரவத்தின் காலத்தில் இந்த ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் இயேசுகிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களில், 12,000 பேரே முத்திரையைப்பெறவும், மோசநாசங்களிலிருந்து பாதுகாக்கப்படவும் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என அறிகிறோம். யூதரும், இஸ்ரவேலரும் சத்திய சுவிசேஷத்தை அறியவும், இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும், இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படவும் அநேக காலம் வாய்ப்பைப் பெற்றிருந்தனர் என நாம் அறிவோம். அநேக புறஜாதியார் இவ்வகையான அரியதொரு வாய்ப்பை அஜாக்கிரதையினால் இழந்துபோகிறதைப்போல கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட தேவஜனத்திலும், சரியான முடிவை ஏற்றகாலத்திலே எடுக்கத் தவறிய அநேகர், அதனுடைய விளைவைச் சந்திக்கவிருக்கிறார்கள்.

ஆறாம் முத்திரை – தேவனைச் சேவிக்கிறவர்கள்!

இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் பாஷைகளிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள். தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழநின்று, சிங்காசனத்திற்கு முன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுதுகொண்டு, ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக் ஆமென், என்றார்கள்.

அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான். அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை, வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள் மேல் படுவதுமில்லை. சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்றான் (வெளி. 7:9-17) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்டவர்களும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியினிமித்தம்

இரத்தசாட்சிகளாய் மரித்த பரிசுத்தவான்களும் தேவனுடைய சந்நிதானத்தின்முன் தேவதூதர்களோடு நின்று, சிங்காசனத்திற்கு முன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுதுகொண்ட காட்சியை இந்தத் தரிசனம் விவரிக்கிறது. இவர்கள் இரவும் பகலும் தேவனுடைய ஆலயத்திலே அவரைச் சேவிப்பார்கள் எனவும், இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை என்கிறதுமான தேவனுடைய வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அவர்கள் கடந்துவந்த மிகுந்த உபத்திரவங்களினிமித்தம், சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார் என்று எழுதப்பட்டிருக்கிறது.

தேவன் கிரியைகளுக்குத்தக்கதாய்ப் பலனளிப்பார்!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, உபத்திரவக்காலத்தின் இந்த விரிவான தகவல்களினாலும், தொடர்ந்து வரவிருக்கும் பயங்கரமான நியாயத்தீர்ப்புகளினாலும், கர்த்தர் நம்முடைய வாழ்வில் என்ன செய்ய விளைகிறார், விரும்புகிறார்? எதற்காக இவ்வளவு கொடிய துன்பம், துக்கம் வேதனையை நம் வாழ்வில் கர்த்தர் அனுமதிக்கிறார்? என்பதை நாம் அறிந்து செயல்படுவது மிகவும் அவசியமாயிருக்கிறது.

முதலாவது ஒருவராவது கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார் (1 தீமோத்தேயு 2:4). அடுத்து, தேவன் தம்முடைய அன்பையும், நீடிய பொறுமையையும் தம்முடைய செயல்களினாலே வெளிப்படுத்தி உறுதிச்செய்கிறார். நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள் (2 பேதுரு 3:15) என்று எழுதப்பட்டிருக்கிறது. நிறைவாக, தேவன் தாம் நீதியுள்ளவர் என்பதை விளங்கச்செய்கிறார். கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரியப்படுவார்; அவருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது (சங்கீதம் 11:7) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் அன்பையும், மனதுருக்கத்தையும், கிருபையையும், இரக்கத்தையும் பிரதானப்படுத்திப் போதிக்கவேண்டிய

நாம், இவ்விதமான சத்தியங்களினாலே, தேவஜனங்களை ஏன் அச்சுறுத்தி குற்றப்படுத்துகிறோம்? என்பதும் ஒரு கேள்வியாக எழும்புகிறது. கர்த்தருடைய பரிசுத்தத்தையும், பாவத்தைச் சகிக்கக்கூடாத தன்மையையும், நீதியையும் வெளிப்படுத்தி எச்சரிப்பது, அறியாமையினாலே பல வேளைகளில், அன்பற்ற நிலை என்றும் கடினமான போதனை என்பதாகவும் சொல்லப்படுகிறது.

தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார் (ரோமர் 2:6) என்று எழுதப்பட்டிருக்கிறது. இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது (வெளி. 22:12) என்ற வார்த்தைகளின் உண்மையை அறிந்திருக்கிற நாம், தேவஜனத்தைப் பாவத்தின் நிச்சயமான விளைவுகளை நினைப்பூட்டி எச்சரிப்பது நாம் செய்யக்கூடியவைகளில் மிகவும் அன்புள்ளதும், அழிவிலிருந்து அவர்களை தப்புவிக்கக்கூடியதாகவும் இருக்கிறது. அல்லேலூயா! ஆமென்.

காவற்காரன் தேசத்தின்மேல் பட்டயம் வருவதைக்கண்டு,
எக்காளம் ஊதி, ஜனத்தை எச்சரிக்கும்போது,
எக்காளத்தின் சத்தத்தைக் கேட்கிறவன் அதைக் கேட்டும்,
எச்சரிக்கையாயிராமல், பட்டயம் வந்து
அவனை வாரிக்கொள்ளுகிறது உண்டானால்,
அவனுடைய இரத்தப்பழி அவன் தலையின்மேல் சுமரும்
(எசேக்கியேல் 33:3,4).

5. எக்காளங்கள் எச்சரிக்கும் பேரழிவுகள்!

இம்மட்டும் வெளிப்பட்ட தரிசனம் .. ..

இயேசுகிறிஸ்து தம்மடைய தூதனை அனுப்பி, அப்போஸ்தலனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷங்களில், ஏழு சபைகளைக்குறித்தும், பரலோக சிங்காசனத்தில் வீற்றிருக்கும் பரிசுத்தரின் மகிமையைக்குறித்தும், கடைசிக்கால நிகழ்வுகளில், ஆட்டுக்குட்டியானவரின் ராஜரீகத்தையும், பொறுப்புகளைப்பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. தம்முடைய பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலிருந்த ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த புஸ்தகத்தை ஆட்டுக்குட்டியானவர் வாங்கினதும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.

பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார் (யோவான் 5:22) என்ற வசனத்தின்படி, இந்தச் சம்பவம் ஒரு உன்னதமான அதிகாரப் பரிமாற்றத்தை, பகிர்ந்தளிப்பை வெளிப்படுத்தி உறுதிச்செய்கிறது என்பதாகப் பார்த்தோம். ஆட்டுக்குட்டியானவர் அந்தப் புஸ்தகத்தை வாங்கினபோது, நியாயத்தீர்ப்புச்செய்யும் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டபோது, பரலோகத்தில் துதியும் பாடலும் மகிழ்ச்சியின் ஆரவாரமும் வெளிப்பட்டது.

வெளிப்படுத்தின விசேஷத்தின் ஆறாம் அதிகாரம் துவங்கியுள்ள வேதப்பகுதியில், இந்த முத்திரிக்கப்பட்ட புஸ்தகத்தை ஆட்டுக்குட்டியானவர் திறந்து, அதன் ஏழு முத்திரைகளை உடைத்து, பூமியின்மேல் வரவிருக்கும் நியாயத்தீர்ப்புகளை வெளிப்படுத்துகிறார். இந்த நியாயத்தீர்ப்புகள், கிறிஸ்துவின் ராஜ்யத்தை இவ்வுலகிலே ஸ்தாபிப்பதற்கான தேவனுடைய

தீர்மானங்களையும், திட்டங்களையும் உள்ளடக்கியிருப்பதாகப் பார்த்தோம். சபை மறுரூபப்பட்டு இயேசுகிறிஸ்துவோடு மத்திய ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறபோது, சபையின் காலமும், கிருபையின் நாட்களும் நிறைவுப்பெற்று, உபத்திரவக்காலம் துவங்கவுள்ளது. தானியேலின் தரிசனப்படி, 69 வாரங்களைப்போன்றே இந்தக் காலங்களைக் கணக்கிடுவோமானால், எழுபதாவது வாரம் எனும் கர்த்தர் எச்சரிக்கும் உபத்திரவக்காலம், ஏழு ஆண்டுகள் இருக்கும் என அறிந்தோம்.

அம்மட்டும் இரகசியமாயிருந்த நியாயத்தீர்ப்புகளும் அதன் விவரங்களும் வெளிப்பட்டு, அதனதன் வேளையில் நிறைவுபெற இருக்கிறது. முதல் ஆறு முத்திரைகளும் உடைக்கப்படும்போது நிகழவிருப்பவைகளை முன்னதாகப் பார்த்தோம். ஏழாம் முத்திரை உடைக்கப்படும்போது வெளிப்படும் எக்காள நியாயத்தீர்ப்புகள், வெளிப்படுத்தின விசேஷம் எட்டாம் அதிகாரம் துவங்கியுள்ள வேதப்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது. எக்காளங்கள் ஊதப்படும்போது உண்டாகும் பேரழிவுகளும் அதன் விளைவுகளும், இப்பொழுதுதான் உபத்திரவக்காலத்தின் தாக்கங்கள் வெளிப்படத் துவங்குகிறதோ என எண்ணத்தோன்றுகிறது.

ஏழாம் முத்திரையின் ஏழு எக்காள நியாயத்தீர்ப்புகள்!

ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த புஸ்தகத்தில், முதல் நான்கு முத்திரைகள் ஒவ்வொன்றிலும் யோவான் ஒரு குதிரையையும் அதன்மேல் ஏறியிருக்கிறவனையும் கண்டார். ஐந்து மற்றும் ஆறாம் முத்திரைகள் தனித்தன்மை உடையதாக இருந்தன. ஏழாம் முத்திரை, ஏழு எக்காள நியாயத்தீர்ப்புகளை உள்ளடக்கியதாகவும், உபத்திரவக்காலத்தில் நடக்கவிருக்கும் எல்லாச் சம்பவங்களும் இந்த ஏழு முத்திரைகளுக்குள்ளாக அடங்கியிருப்பதாகவும் அறிந்தோம்.

இதற்கு இடைப்பட்டபகுதியில், இலட்சத்துநாற்பத்து நாலாயிரம் இஸ்ரவேலர், இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகைக்குப் பின்னர், அவரே அம்மட்டும் அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த மேசியா என்று அறிந்து, தொடர்ந்து வரவிருந்த உபத்திரவங்களுக்கு நீங்கலாகும்படியாக, முத்திரிக்கப்படுவார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. மேலும், சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து

வந்ததும், இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்டவர்களும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக நிற்கக் கண்டார். அவர்கள் இரவும் பகலும் தேவனுடைய ஆலயத்திலே அவரைச் சேவிப்பார்கள் எனவும்; அவர்கள் இனி பசியடைவதுமில்லை, தாகமடைவதுமில்லை என்கிறதுமான தேவனுடைய வாக்குத்தத்தத்தை அவர்கள் பெற்றுக் கொள்ளவிருந்தார்கள்.

ஏழாம் முத்திரை உடைக்கப்படும் முன்னர் வெளிப்படுத்தின விசேஷம் ஏழாம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் இந்த இரு சம்பவங்கள், கடைசிக் கால நிகழ்வுகளை, நாம் தொடர்ச்சியாகவும் முழுமையாகவும் அறிந்துகொள்ள உதவுகிறது.

பரலோகத்தில் அரைமணிநேர அமைதல்!

அவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது, பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல் உண்டாயிற்று (வெளி. 8:1) என்று எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில் ஆயத்தமாயிருந்த பரிசுத்தவான்கள் எடுத்துக்கொள்ளப்பட்டப் பின்னர், உபத்திரவக்காலத்தில் உணர்வடைந்த இஸ்ரவேலர் முத்திரிக்கப்படவிருந்தார்கள். இந்நிலையில் ஆட்டுக்குட்டியானவர் ஏழாம் முத்திரையை உடைக்கும்போது, பரலோகத்தில் அரைமணிநேர அமைதல் உண்டாகிறது.

மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (லூக்கா 15:7) என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், பரலோகத்தின் மகிழ்ச்சியின் ஆரவாரத்திற்கு பதிலாக வேதனையோடு கூடிய அமைதல் உண்டாயிற்று. முந்தின அதிகாரத்தின் இறுதிப் பகுதிகளில் தூதர்களும் பரமசேனையும், சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழநின்று. சிங்காசனத்திற்கு முன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுதுகொண்டு: ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக, ஆமென், என்றார்கள் (வெளி. 7:11,12) என்று எழுதப்பட்டிருக்கிறது. இதனால், அம்மட்டும் வெளிப்பட்ட நியாயத்தீர்ப்புகளுக்குப் பின்னரும் மனந்திரும்பாத ஜனத்தின்மேல்

வெளிப்படவிருந்த பேரழிவுகளை எண்ணி வேதனையினிமித்தம், பரலோகத்தில் அமைதல் உண்டாயிற்று என்று அறியலாம்.

தேவவசனத்தினிமித்தமும் சாட்சியினிமித்தமும் கொலைசெய்யப்பட்டவர்கள், தங்கள் இரத்தத்தைக்குறித்து, எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று தேவனை நோக்கி மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள் என முன்னர் பார்த்தோம். அப்பொழுது தங்களைப்போலக் கொலைசெய்யப்படப் போகிறவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. எக்காளத்தின் நியாயத்தீர்ப்புகள், அவர்கள் விண்ணப்பத்திற்கு பதிலளிப்பதைப்போன்று, மனந்திரும்பாத ஜனத்தின்மேல் வெளிப்பட இருந்தது. இதனால் ஏற்பட்ட திகைப்பினாலும் அதிர்ச்சியினாலும், பரலோகத்தில் அமைதல் உண்டாயிருக்கலாம் என்றும் அறியலாம். இது பெருங்காற்றுக்கும் புயலுக்கும் முன்னர் காணப்படும் அமைதியைப்போன்று உள்ளது.

ஏழு தூதர்களுக்கு ஏழு எக்காளங்கள்!

பின்பு, தேவனுக்கு முன்பாக நிற்கிற ஏழு தூதர்களையுங் கண்டேன், அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டது (வெளி. 8:2) என்று எழுதப்பட்டிருக்கிறது. நான் தேவசந்நிதானத்தில் நிற்கிற காபிரியேல் (லூக்கா 1:19) என்று வேதாகமத்தில் தேவதூதன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டதையும்; பிரதான தூதனாகிய மிகாவேல் (யூதா 1:9), பெரிய அதிபதியாகிய மிகாவேல் (தானியேல் 12:1) என்று குறிப்பிடப்பட்டிருப்பதையும் நாம் அறிவோம். தேவனுக்கு முன்பாக நிற்கிற ஏழு தூதர்கள் என்கிறபோது, அவர்கள் காபிரியேல், மிகாவேல் போன்ற தூதர்களாக இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

ஏழு எக்காளத்தின் நியாயத்தீர்ப்புகள், முத்திரைகள் உடைக்கும்போது வெளிப்பட்ட சம்பவங்களைக் காட்டிலும், கொடூரமானவைகளாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இதைக்காட்டிலும், ஏழாவது எக்காளம் தொனிக்கும்போது வரவிருக்கும் ஏழு கோபகலசங்களின் தாக்கங்கள், எக்காள நியாயத்தீர்ப்புகளுக்கு மேலான சேதங்களை ஏற்படுத்தவிருப்பதாக எழுதப்பட்டிருக்கிறது. முதல் நான்கு எக்காளங்கள் தொனிக்கும்போது, பூமியின் தாவரங்களிலும், சமுத்திரத்திலும், நீர்நிலைகளிலும், வானமண்டலத்திலும்

மூன்றிலொருபங்கின்மேல் சேதங்களை விளைவிக்கவிருக்கிறது. இது உபத்திரவக்காலத்தின் முதல் பகுதியில் நடைபெறும் என்பதாக அறிகிறோம். கடைசி மூன்று எக்காளங்கள் தொனிக்கும்போது, அவை பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ என்பதைப்போன்று, பேய்த்தனமான ஆபத்துகளை வருவிக்கவிருந்தது. இது மகா உபத்திரவக்காலம் எனக் குறிப்பிடப்படும் இரண்டாம் பகுதியில் நடந்தேற நியமிக்கப்பட்டிருந்தது.

எக்காளச்சத்தம்!

வேதாகமத்தின் நாட்களில் எக்காளம் நெடுந்தொனியாய் ஊதப்படுகையில், தேவஜனம் கூட்டிச்சேர்க்கப்பட்டார்கள். சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள்; விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள். ஜனத்தைக் கூட்டுங்கள். சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள்.. (யோவேல் 2:15,16) என்று எழுதப்பட்டிருக்கிறது. எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள்; வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள் (சங்கீதம் 150:3) என்றும்; மாதப்பிறப்பிலும், நியமித்தகாலத்திலும், நம்முடைய பண்டிகைநாட்களிலும், எக்காளம் ஊதுங்கள் (சங்கீதம் 81:3) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

யுத்தநாட்களில் ஜனங்களை எச்சரிக்கும்படியாகவும், முக்கியமான நிகழ்வுகளை நினைப்பூட்டும்படியாகவும் எக்காளத்தை அந்நாட்களில் தொனித்தார்கள். எக்காளத்தின் சத்தத்தைக் கேட்கிறவன் அதைக் கேட்டும், எச்சரிக்கையாயிராமல், பட்டயம் வந்து அவனை வாரிக்கொள்ளுகிறது உண்டானால், அவனுடைய இரத்தப்பழி அவன் தலையின்மேல் சுமரும் (எசேக்கியேல் 33:4) என்று எழுதப்பட்டிருக்கிறது. எக்காளச்சத்தம் பேரழிவுகளை முன்னறிவித்து நியாயத்தீர்ப்புகளை நடப்பிக்கச் செய்தது. எக்காளம், தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தி, அவருடைய நியாயத்தீர்ப்புகள் நடப்பிக்கப்படுவதைத் தெரியப்படுத்துகிறது.

வேதாகமத்தில், பழைய ஏற்பாட்டில் நிழலாட்டமாய் நடந்தேறின சம்பவங்கள் (யோசுவா 6:4-10), புதிய ஏற்பாட்டில் ஆச்சரியப்படும்படியான முழு உருவைப்பெற்று நிஜமாக்கப்படுகிறதைக் காண்கிறோம். யோசுவா புஸ்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிழலாட்டமாய் நடந்த சம்பவங்களுக்கும், வெளிப்படுத்தின விசேஷத்தில் தரிசனமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும் எக்காள நியாயத்தீர்ப்புகளுக்குமுள்ள ஒற்றுமைகள் நம்மை வியப்படையச்செய்கிறது.

தேவஜனம் வனாந்திர யாத்திரையின் நிறைவாய், வாக்களிக்கப்பட்ட கானானைச் சென்றடையும்வேளையில், எரிகோ பட்டணம் இஸ்ரவேலருக்கு முன்பாக அடைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது, கர்த்தருடைய ஆலோசனையின்படி, பட்டணத்தைக் கவிழ்த்துப்போடுவதற்கு ஆயத்தமாக, தொனிக்கும் ஏழு எக்காளங்களைப் பிடித்திருக்கிற ஏழு ஆசாரியர் கர்த்தருக்கு முன்பாக நடந்து எக்காளங்களை ஊதினார்கள். ஏழு ஆசாரியர் பெட்டிக்கு முன்பாக ஏழு கொம்பு எக்காளங்களைப் பிடித்துக்கொண்டுபோகவேண்டும். ஏழாம் நாளில் பட்டணத்தை ஏழுதரம் சுற்றிவரக்கடவர்கள்; ஆசாரியர் எக்காளங்களை ஊதவேண்டும் (யோசுவா 6:4) என்று கட்டளைப்பெற்றார்கள். ஏழாம்நாளில், பட்டணத்தை ஏழுதரம் சுற்றிவந்தார்கள். ஏழாந்தரம் ஆசாரியர் எக்காளங்களை ஊதுகையில், ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள். எக்காள சத்தத்தை ஜனங்கள் கேட்டு, மகா ஆரவாரத்தோடே முழங்குகையில், எரிகோ பட்டணத்தின் அலங்கம் இடிந்து விழுந்தது.

கடைசிக் காலத்தில் பரிசுத்தவான்களும், வாக்களிக்கப்பட்ட பரமக் கானானைச் சுதந்தரிக்கும் முன்னர் தொனிக்கும் ஏழு எக்காளங்களும் நியாயத்தீர்ப்பை நடப்பித்து, ஆரம்ப நாட்களைப்போன்றே, கடைசிக் காலத்திலும் ராஜ்யங்களைக் கவிழ்த்துப்போட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்கு இளைப்பாறுதலைத் தரவிருக்கிறது. இதற்கு ஆயத்தமாக ஏழு முத்திரைகளும், ஏழாம் முத்திரையை உடைக்கும்போது, ஏழு தூதர்கள் ஏழு எக்காளங்களை ஊதி நியாயத்தீர்ப்புகளை வருவித்தது மட்டுமல்லாமல், ஏழு கோபகலசங்களும் தொடரும்போது பூமியின் ராஜ்யங்கள், கர்த்தருடைய ராஜ்யங்களாயின. ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின, அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின (வெளி. 11:15). அல்லேலூயா!

பரிசுத்தவான்களுடைய ஜெபங்கள்!

வேறொரு தூதனும் வந்து, தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்துப் பலிபீடத்தின் படியிலே நின்றான்; சிங்காசனத்திற்குமுன்பாக இருந்த பொற்பீடத்தின்மேல் சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அப்படியே

பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தப்பட்ட தூபவர்க்கத்தின் புகையானது தூதனுடைய கையிலிருந்து தேவனுக்குமுன்பாக எழும்பிற்று. பின்பு, அந்தத் தூதன் தூபகலசத்தை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான். உடனே சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சியும் உண்டாயின (வெளி. 8:3-5) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இங்கு வேறொரு தூதன் என்று அறிமுகப்படுத்தப்படுபவர், சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனே என அறியலாம். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனைப் பிதா உங்களுக்குத் தந்தருளுவார் (யோவான் 14:16) என்று நம்முடைய இரட்சகர் இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார் (ரோமர் 8:26) என்று பவுல் எழுதியிருக்கிறார். தேவனுக்கு முன்பாக எவ்வாறு விண்ணப்பிக்கவேண்டும் என்று அறியாதிருக்கிற தேவனுடைய பிள்ளைகளின் ஜெபத்தை, ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு, ஏற்ற சம்பவங்களை நினைப்பூட்டி, தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல்செய்கிறார். இந்த வசனத்தின் அடிப்படையிலும், வேறொரு தூதன் என்று குறிப்பிடப்படுபவர் பரிசுத்த ஆவியானவரே என்று அறியலாம்.

சிங்காசனத்திற்குமுன்பாக இருந்த பொற்பீடத்தின்மேல் சகல பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம் அந்த தூதனுக்குக் கொடுக்கப்பட்டது. இங்கு தூபவர்க்கம் என்பது, தேவனுடைய சித்தத்தைப்பற்றின அறிவும் (1 யோவான் 5:14), ஜெபங்களை ஏறெடுக்கும் பரிசுத்தவான்களுக்குக் கர்த்தர் அருளின வாக்குத்தத்தங்களும் (2 கொரிந்தியர் 1:20), அவர்கள் தங்கள் வாழ்வில் செய்த நற்காரியங்களும் (எபிரெயர் 6:10) என அறியலாம். இப்படியாகப் பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடு செலுத்தப்படும் இந்த மிகுந்த தூபவர்க்கத்தின் புகையானது, தூதனுடைய கையிலிருந்து தேவனுக்குமுன்பாக எழும்புகிறது; அது தேவனுடைய சந்நிதானத்தில் சுகந்தவாசனையாகச் சென்றடைகிறது. அல்லேலூயா!

பின்பு, அந்தத் தூதன் தூபகலசத்தை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, பூமியிலே கொட்டினான். உடனே சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சியும் உண்டாயின. பலிபீடத்து நெருப்பு பூமியிலே கொட்டப்படுவது, பலியினாலே உடன்படிக்கை பண்ணின பரிசுத்தவான்களின் ஜெபங்களை, கூக்குரலைக்கேட்டு, கர்த்தர் அருளும் பதிலைப்போல, இந்தச் சத்தங்களும், இடி முழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சியும் எக்காள நியாயத்தீர்ப்புகளின் துவக்கத்தை அறிவிக்கிறது. இந்தச் சம்பவங்கள், இவை பரலோகத்தின் தேவனுடைய அங்கீகாரத்தையும் ஒப்புதலையும் பெற்றிருப்பதை உறுதிச்செய்கிறது.

முதலாம் எக்காளம் – தாவரங்கள் மீதான வாதை!

அப்பொழுது, ஏழு எக்காளங்களையுடைய ஏழு தூதர்கள் எக்காளம் ஊதுகிறதற்குத் தங்களை ஆயத்தப்படுத்தினார்கள். முதலாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது இரத்தங்கலந்த கல்மழையும் அக்கினியும் உண்டாகி, பூமியிலே கொட்டப்பட்டது. அதினால் மரங்களில் மூன்றிலொருபங்கு வெந்துபோயிற்று, பசும் புல்லெல்லாம் எரிந்துபோயிற்று (வெளி. 8:6,7) என்று எழுதப்பட்டிருக்கிறது.

முதல் எக்காளச்சத்தம், இரத்தங்கலந்த கல்மழை மற்றும் அக்கினி, பூமியிலே கொட்டப்பட இருப்பதை முன்னறிவிக்கிறது. இதனால் மூன்றிலொருபங்கு மரங்களும், பசும்புல்லும் பூமியில் எரிந்துபோகவிருந்தது. இயற்கையின் பேரழிவுகள் சில வேளைகளில், இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவனுடைய சித்தத்தைச்செய்ய உபயோகப்படுத்தப்படுகிறது. வானமண்டலத்தின் எரி நட்சத்திரம் போன்றவை ஓடும் பாதையிலிருந்து விலகி, பூமியில் விழும்போது, இவ்வாறான சேதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எவற்றால் இந்த அழிவுகள் உண்டாகிறது என்பதைக்காட்டிலும், அவை ஏற்படுத்தும் தாக்கங்களே இங்கு முக்கியமானதாக இருக்கிறது.

இங்கு விவரிக்கப்பட்டிருக்கும் வாதைகள், தேவஜனம் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து விடுவிக்கப்படும் முன்னர், கர்த்தர் நடப்பித்த பலத்த கிரியைகளுக்கு ஒத்திருப்பதைக் காணலாம். கர்த்தர் இடிமுழக்கங்களையும் கல்மழையையும் அனுப்பினார். அக்கினி தரையின்மேல் வேகமாய்

ஓடிற்று. எகிப்து தேசத்தின்மேல் கர்த்தர் கல்மழையைப் பெய்யப்பண்ணினார். கல்மழையும கல்மழையோடே கலந்த அக்கினியும் மிகவும் கொடியதாயிருந்தது. எகிப்துதேசம் எங்கும் மனிதரையும் மிருகஜீவன்களையும், வெளியிலே இருந்தவைகள் எவைகளோ அவைகள் எல்லாவற்றையும் அந்தக் கல்மழை அழித்துப்போட்டது. அது வெளியின் பயிர்வகைகளையெல்லாம் அழித்து, வெளியின் மரங்களையெல்லாம் முறித்துப்போட்டது (யாத். 9:23-25) என்று எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலர் இருந்த கோசேன் நாட்டைத் தவிர எகிப்துதேசம் அனைத்தும் இதனால் பாதிக்கப்பட்டது. இந்த முதலாம் எக்காள நியாயத்தீர்ப்பின் தாக்கமோவென்றால், பூமியின் மூன்றிலொருபங்கைப் பாதிக்க இருக்கிறது. தாவரங்கள் மீதான வாதை, பூமியின் வாழ்வாதாரமான உணவைப் பாதிக்கும் என அறியலாம்.

இரண்டாம் எக்காளம் – சமுத்திரத்தில் வாதை !

இரண்டாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது அக்கினியால் எரிகிற பெரிய மலைபோன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட்டது. அதினால் சமுத்திரத்தில் மூன்றிலொருபங்கு இரத்தமாயிற்று. சமுத்திரத்திலிருந்த ஜீவனுள்ள சிருஷ்டிகளில் மூன்றிலொருபங்கு செத்துப்போயிற்று. கப்பல்களில் மூன்றிலொருபங்கு சேதமாயிற்று (வெளி 8:8,9) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இரண்டாம் எக்காளச்சத்தம், அக்கினியால் எரிகிற பெரிய மலைபோன்றதொன்று சமுத்திரத்திலே போடப்பட இருப்பதை முன்னறிவிக்கிறது. இதனால் மூன்றிலொருபங்கு சமுத்திரம் இரத்தமாகும். சமுத்திரத்திலுள்ள ஜீவராசிகளில் மூன்றிலொருபங்கு செத்துப்போகும்; கப்பல்களில் மூன்றிலொருபங்கு சேதமடையும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அக்கினியால் எரிகிற பெரிய மலை என்பது, மத்தியத்தரைக்கடல் தீவுகள் ஒன்றில் புகைந்துகொண்டிருக்கும் பெரியதொரு எரிமலை வெடித்துச் சிதறுவதால் ஏற்படும் தாக்கங்களாக இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

ஒரு சிலர், இது இன்றைய நாட்களின் அணு ஆயுத பிரயோகத்தினால் உண்டாகும் பேரழிவுகள் எனவும், இன்னும் சிலர், வான மண்டலத்திலிருந்து விழும் எரிகற்கள் அல்லது வால் நட்சத்திரம் போன்றவைகளால் ஏற்படும்

விளைவுகள் என்பதாகவும் சொல்லுகிறார்கள். இதன் காரணம் எதுவாக இருந்தாலும், பூமியிலே இதனால் ஏற்படும் சேதங்களே இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. சமுத்திரத்தின் வாதை, பூமியின் மற்றொரு வாழ்வாதாரமான வர்த்தகத்தைப் பாதிக்கும் என அறியலாம்.

மூன்றாம் எக்காளம் – நீர் நிலைகளில் வாதை !

மூன்றாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழுது ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப்போல எரிந்து, வானத்திலிருந்து விழுந்தது; அது ஆறுகளில் மூன்றிலொருபங்கின்மேலும், நீரூற்றுகளின்மேலும் விழுந்தது. அந்த நட்சத்திரத்திற்கு எட்டியென்று பெயர். அதினால் தண்ணீரில் மூன்றிலொருபங்கு எட்டியைப்போலக் கசப்பாயிற்று; இப்படிக் கசப்பான தண்ணீரினால் மனுஷரில் அநேகர் செத்தார்கள் (வெளி. 8:10,11) என்று எழுதப்பட்டிருக்கிறது.

மூன்றாம் எக்காளம் தொனிக்கும்போது, ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப்போல எரிந்து, வானத்திலிருந்து ஆறுகளில் மூன்றிலொருபங்கின்மேலும், நீரூற்றிகளின்மேலும் விழுந்தது. எட்டி என்பது ஒரு கசப்பான மருத்துவத் தன்மையுடைய மரத்தைக் குறிக்கிறது. எட்டியென்ற அதன் பெயரே அதன் தன்மைகளை விளக்குவதாக உள்ளது. இதை அதிகமாக உட்கொண்டால் அது விஷமாக மாறும். அவள் செய்கையின் முடிவோ எட்டியைப்போலக் கசப்பும், இருபுறமும் கருக்குள்ள பட்டயம்போல் கூர்மையுமாயிருக்கும் (நீதிமொழிகள் 5:4) என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப்போல எரிந்து, வானத்திலிருந்து விழுந்தது என்று யோவான் எழுதியிருக்கிறார். எனவே, இது வான மண்டலத்திலிருந்து விழும் எரிகற்கள் அல்லது வால்நட்சத்திரம் போன்றவைகளாக இருக்கலாம் என சொல்லப்படுகிறது. இந்நாட்களின் கண்டம் விட்டு கண்டம் பாயும் அதிசக்தி வாய்ந்த அணு ஆயுத தாக்குதலாகவும் இது இருக்க வாய்ப்பு உண்டு எனவும் அறியலாம். அணு ஆயுதங்கள் என்கிறபோது, முந்நாளைய சோவியத் யூனியனின் (ரஷ்யா) ஒரு அங்கமாயிருந்த உக்ரேன் நாட்டில், செர்நோபில் என்ற இடத்திலிருந்த அணு உலையில் நடந்த பெரிய விபத்தை இதற்கு முன்னோடியாக சிலர் குறிப்பிடுகிறார்கள். இந்நாட்களில், நடந்து முடிந்த இந்தச் சம்பவம்போன்று, இனிவரும் உபத்திரவக்காலத்தில் நடக்கும் என்று நாம் அறியலாம்.

1986ஆம் ஆண்டில் வெடித்துச் சிதறிய இந்த அணு உலை, அதிக அளவில் நெருப்பையும், புகையையும், கதிரியக்கங்களையும் வெளிப்படுத்தி, ஒன்பது நாட்கள் பற்றி எரிந்ததாக வரலாறு சொல்லுகிறது. ரஷ்ய உக்ரேனிய மொழியில் செர்நோபில் என்பதற்கு எட்டி என்றும் அர்த்தமுண்டாம். இதன் அடிப்படையில், நீர் நிலைகள் கசப்பான தண்ணீராக மாறுவதற்கு, அணு ஆயுதங்கள் வெளிப்படுத்தும் கதிரியக்கங்களும் காரணமாகிறது. இப்படிக் கசப்பாக மாறின தண்ணீரினால் மனுஷரில் அநேகர் செத்தார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. நீர் நிலைகளின் வாதை, பூமியில் மற்றொரு அடிப்படைத்தேவையான தண்ணீரைச் சேதப்படுத்தும் என அறியலாம்.

நான்காம் எக்காளம் – வான மண்டலத்தில் வாதை !

நான்காம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது சூரியனில் மூன்றிலொரு பங்கும், சந்திரனில் மூன்றிலொருபங்கும், நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கும் சேதப்பட்டது. அவற்றவற்றில் மூன்றிலொருபங்கு இருளடைந்தது. பகலிலும் மூன்றிலொருபங்கு பிரகாசமில்லாமற்போயிற்று. இரவிலும் அப்படியேயாயிற்று (வெளி. 8:12) என்று எழுதப்பட்டிருக்கிறது.

நான்காம் எக்காளச் சத்தம், சூரியன் சந்திரன் மற்றும் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கை இருளடையச்செய்யவிருக்கிறது. இதற்கான காரணம் சொல்லப்படவில்லை என்றாலும், தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை என அறிந்திருக்கிறோம். அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும் (சங்கீதம் 33:9) என்று எழுதப்பட்டிருக்கிறது. மேலும், முந்தின வாதையின், அதிக அளவில் வெளிப்படும் நெருப்பும் புகையும், கதிரியக்கங்களுங்கூட இவ்விதமான தாக்கங்களை வான மண்டலத்தில் உண்டாக்க வாய்ப்பிருக்கிறது.

பகலிலும் மூன்றிலொருபங்கு பிரகாசமில்லாமற்போயிற்று, இரவிலும் அப்படியேயாயிற்று, என்ற வார்த்தைகள், வெளிச்சம் குறைவுபட்டதைமாத்திரம் குறிக்காமல், அதோடு இணைந்திருக்கும் வெப்பத்தையும், சூரிய சந்திர வான மண்டலத்தின் கதிரியக்கங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வாய்ப்பிருக்கிறது. இப்படி இருக்குமேயானால், இந்த வெப்பம் மற்றும் கதிரியக்க மாற்றங்களினால் ஏற்படும் விளைவுகள், மிகவும் அதிகமான பேரழிவுகளை பூமியில் ஏற்படுத்தும் என அறிந்திருக்கிறோம். கட்டுப்பாடில்லாத பாக்டீரியா (நுண்ணுயிர்) தாக்கங்கள்,

பெருமளவில் கொள்ளைநோய்களைப் பூமியில் ஏற்படுத்தக்கூடும். இதனால், வான மண்டலத்தின் வாதை, மற்றொரு அடிப்படைத்தேவையான சரீர நலனைச் சேதப்படுத்தும் என அறியலாம்.

பின்பு, ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்துவரக்கண்டேன்; அவன் மகா சத்தமிட்டு: இனி எக்காளம் ஊதப்போகிற மற்ற மூன்று தூதருடைய எக்காள சத்தங்களினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ ஐயோ (ஆபத்து வரும்) என்று சொல்லக்கேட்டேன் (வெளி. 8:13) என்று எழுதப்பட்டிருக்கிறது. ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதும் முன்பாக, யோவான் அங்கு கழுகைப்போல ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்துவந்து, பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு, இன்னும் மூன்று கொடிய ஆபத்துகள்வரும் என்று எச்சரிப்பதைப்போன்று, ஐயோ, ஐயோ, ஐயோ என்று சொல்லக்கேட்டார். இந்தக் கொடிய ஆபத்துகள், அடுத்த மூன்று எக்காளங்கள் ஊதப்படுகையில் வெளிப்படவிருக்கிறது.

ஐந்தாம் எக்காளம் – முதலாம் ஆபத்து – பாதாளக்குழி!

ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது வானத்திலிருந்து பூமியின்மேல் விழுந்த ஒரு நட்சத்திரத்தைக் கண்டேன். அவனுக்குப் பாதாளக்குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது. அவன் பாதாளக்குழியைத் திறந்தான்; உடனே பெருஞ்சூளையின் புகையைப்போல அந்தக் குழியிலிருந்து புகை எழும்பிற்று; அந்தக் குழியின் புகையில் சூரியனும் ஆகாயமும் அந்தகாரப்பட்டது (வெளி. 9:1,2) என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஐந்தாவது எக்காளத்தின் தாக்கங்கள், எக்காள நியாயத்தீர்ப்புகளில், ஒரு திருப்புமுனைபோலக் காணப்படுகிறது. வானத்திலிருந்து பூமியின்மேல் விழுந்த ஒரு நட்சத்திரம் என்பது, வான மண்டலத்திலிருந்து தள்ளப்படவிருக்கிற (வெளி. 12:4) சாத்தானின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவன் என்பதாக அறியலாம். இந்நாள்மட்டும், சாத்தான் தேவனுடைய சந்நிதானத்தில் போய் நிற்க அனுமதியுடையவனாய், தேவனுக்கு முன்பாக விசுவாசிகளின்மேல் குற்றஞ்சாட்டுகிறவனாயிருக்கிறான் (வெளி. 12:10). அவனைச் சேர்ந்தவர்களில் ஒருவனுக்குப் பாதாளக்குழியின் திறவுகோல் கொடுக்கப்படவிருக்கிறது. பாதாளக்குழி அசுத்த ஆவிகளின் உறைவிடம் என்று அறிந்திருக்கிறோம். அதை அவன் திறக்கும்போது, அம்மட்டும் கட்டப்பட்டிருந்த

அசுத்த ஆவிகள் கட்டவிழ்க்கப்படவிருக்கிறது. பெருஞ்சூளையின் புகையைப்போல அந்தக் குழியிலிருந்து எழும்பவிருக்கிற புகையில், சூரியனும் ஆகாயமும் அந்தகாரப்படுமாம்.

இந்த ஐந்தாம் தீர்ப்புத் துவங்கி, பேரழிவுகளும் வாதைகளும், பூமியின் புல்லையும் பசுமையான எந்தப் பூண்டையூம் எந்த மரத்தையும் சேதப்படுத்தாமல், தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரைமாத்திரம் சேதப்படுத்த உத்தரவு பெறுகிறது. இந்தக் காலக்கட்டத்தில், ஆயத்தமாயிருந்த பரிசுத்தவான்கள் மறுரூபப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பார்கள் எனவும்; இரகசிய வருகைக்குப் பின்னர், இயேசுகிறிஸ்துவை மேசியா என ஏற்றுக்கொண்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் இஸ்ரவேலர் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைப்பெற்று, இந்த வேதனைகளிலிருந்து தப்புவிக்கப்படுவர் எனவும் அறிந்திருக்கிறோம். அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் புறப்பட்டுப் பூமியின்மேல் வந்தது; அவைகளுக்குப் பூமியிலுள்ள தேள்களின் வல்லமைக்கொப்பான வல்லமை கொடுக்கப்பட்டது. அந்நாட்களில் மனுஷர்கள் சாவைத்தேடியும் அதைக் காணாதிருப்பார்கள், சாகவேண்டுமென்று ஆசைப்படுவார்கள், சாவோ அவர்களுக்கு விலகி ஓடிப்போம் (வெளி 9:3,6) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பார்வைக்கு வெளியே வெட்டுக்கிளிகள்போல் காணப்பட்டாலும், இவைகள் தேள்களின் வல்லமைக்கொப்பான வல்லமை உடைய கொடிய வேதனைகளை உண்டாக்கும் அசுத்த ஆவிகள் என்று சொல்லப்படுகிறது. இந்த அசுத்த ஆவிகள் வெட்டுக்கிளி வடிவில், சரீரத்தில் கொடிய சேதங்களை உண்டுபண்ணவும். தேள்களைப்போன்று ஆவியில் சோர்வை உண்டாக்கவும் அதிகாரம் பெறவிருந்தது. வெட்டுக்கிளிகளின் குறுகிய வாழ்நாளைப்போலவே, இந்த அசுத்த ஆவிகளுக்கும், ஐந்து மாதம் அவர்களை வேதனைப்படுத்தும்படி உத்தரவு கொடுக்கபட்டது. ஜப்பான் நாட்டில் ஹிரோஷிமா, நாகசாகி பட்டணங்களில் அணுகுண்டு வீசப்பட்டபோது தப்பிப் பிழைத்தவர்களும், இவ்விதமாகவே பாதிக்கப்பட்டார்களாம். அவர்கள் சரீரத்தில் ஏற்பட்ட காயங்களினாலும் அங்கவீனங்களினாலும் தேள்கொடுக்கினால் உண்டாகும் வேதனைகளுக்குட்பட்டுச் சாகவேண்டும் என்று விரக்தியில் விரும்பியும், அவர்களுக்குச் சாவும் கிட்டாமல் போனதாகச் சொல்லப்படுகிறது.

வெட்டுக்கிளிகளின் உருவில் காணப்படும் இந்த அசுத்த ஆவிகளின் தோற்றம் மிகவும் அருவருக்கப்படத்தக்கதாகவும், பயமுறுத்துவதாகவும் விவரிக்கப்பட்டுள்ளது (வெளி. 9:7-10). குதிரைகளுக்கு ஒப்பான அதன் உருவம்,

யுத்தத்திற்கு ஆயத்த நிலையையும்; தலைகளின் மேலிருந்த பொன்மயமான கிரீடம் அவைகளை ஜெயங்கொள்ளுகிறவர்களாகவும், மனித முகங்கள் அவைகளின் சாதுர்யத்தையும்; கூந்தல் ஸ்திரீகளுடைய கூந்தல்போல கவர்ச்சியுடையவைகளாகவும் அவைகளைக் காட்டுகிறது. சிங்கங்களின் பற்கள் போலிருந்த அவைகளின் பற்கள் அழிக்கவும் துன்புறுத்தவும் ஆற்றலுள்ளவைகளாகவும், இருப்புக் கவசங்களைப்போன்ற மார்க்கவசங்கள் அவைகளை அழிக்கமுடியாதவைகளாகவும், அவைகளுடைய சிறகுகள் துரிதத்தன்மையையும், தேள்களுக்கு ஒப்பான கொடுக்குள்ள வால்கள் அவைகளின் புண்படுத்தும் வல்லமையையும் வெளிப்படுத்துகிறது.

யோவான் தான் கண்டக் காட்சியை யுத்தக்களத்திற்கும், அவைகளுடைய சிறகுகளின் இரைச்சலை யுத்தத்திற்கு ஓடுகிற அநேகங் குதிரைகள் பூண்ட இரதங்களின் இரைச்சலுக்கும் ஒப்பாயிருந்தன என்று குறிப்பிடுகிறார். இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்களும், அவிசுவாசிகளும் இந்த அசுத்த ஆவிகளைத் தங்கள் சுயசக்தியினால் மேற்கொள்ளுவது கூடாதக்காரியம் என அறிந்திருக்கிறோம். ராஜா இல்லாதிருந்தும், பவுஞ்சு பவுஞ்சாய்ப் புறப்படுகிற வெட்டுக்கிளிகள் (நீதிமொழிகள் 30:27) என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், வெட்டுக்கிளிகளைப்போன்ற இந்த அசுத்த ஆவிகளின் கூட்டத்திற்கு, ஒரு ராஜன் உண்டு. இந்தப் பாதாளத்தின் தூதனுக்கு அழிக்கிறவன் எனப் பொருள்படும் வகையில், எபிரெயு பாஷையிலே அபெத்தோன் என்றும், கிரேக்கு பாஷையிலே அப்பொல்லியோன் என்றும் அவனுக்குப் பெயர் (வெளி.9:11). இந்த ஐந்து மாத உபத்திரவத்திற்குப் பின்னர் இன்னும் இரண்டு வாதைகள், ஆறாம் மற்றும் ஏழாம் தூதர்கள் எக்காளங்கள் ஊதும்போது வரவிருக்கிறது.

ஆறாம் எக்காளம்–இரண்டாம் ஆபத்து–குதிரைச்சேனை!

ஆறாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது அவனுக்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின் நான்கு கொம்புகளிலுமிருந்து ஒரு சத்தந்தோன்றி, எக்காளத்தைப் பிடித்திருந்த ஆறாம் தூதனை நோக்கி: ஐப்பிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்களையும் அவிழ்த்துவிடு என்று சொல்லக்கேட்டேன். அப்பொழுது மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொல்லும்படிக்கு ஒருமணிநேரத்திற்கும்,

ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும் ஆயத்தமாக்கப்பட்டிருந்த அந்த நான்கு தூதர்களும் அவிழ்த்துவிடப்பட்டார்கள் (வெளி. 9:13-15) என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஆறாம் எக்காளத்தின் தாக்கங்கள், முந்தின வாதைபையப்போன்றே, தேவனுடைய இரகசிய வருகையில் கைவிடப்பட்டு, அவருடைய முத்திரையைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் மேலேயே வரவிருக்கிறது. இது கைவிடப்பட்டவர்களில் எஞ்சியுள்ள மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொல்லும்படிக்கு, குறிப்பிட்ட காலத்திற்குக் கட்டவிழ்க்கப்பட்ட அசுத்த ஆவிகளினாலே நடக்கவிருக்கிறது. இந்த வாதைக்குப் பின்னர், இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள் நீங்கலாக, பூமியின்மேலுள்ளோரின் ஜனத்தொகையில் பாதி மனுஷர்கள் அழிக்கப்பட்டிருப்பார்கள் என அறியலாம்.

தேவதூதர்கள் கட்டப்பட்டிருந்ததாக வேதாகமத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. எனவே ஐப்பிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதர்கள், என்பவர்கள், பரலோகத்திலிருந்து கீழே தள்ளப்பட்ட அசுத்த ஆவிகள் என அறியலாம். அந்நாட்களின் நினைத்தும் பார்க்கக்கூடாத அளவில், குதிரைச்சேனைகளாகிய இராணுவங்களின் தொகை இருபது கோடியாயிருந்தது. ஐந்தாம் எக்காள வாதை எவரையும் கொல்லாது அவர்களைத் துன்பப்படுத்தியது; ஆனால் இந்த ஆறாவது எக்காளப் பேரழிவு, மனுஷரில் மூன்றிலொருபங்கைக் கொலை செய்ய இருக்கிறது.

கட்டவிழ்க்கப்பட்ட நான்கு அசுத்த ஆவிகளின் தலைமையில் செயல்படும் இருபது கோடி சேனையுங்கூட அசுத்த ஆவிகள் என்பதாக, ஒரு கோணத்தில் சொல்லப்படுகிறது. குதிரைகளின்மேல் ஏறியிருந்தவர்கள் அக்கினிநிறமும் நீலநிறமும் கந்தகநிறமுமான மார்க்கவசங்களையுடையவர்களயிருந்தார்கள். குதிரைகளுடைய தலைகள் சிங்கங்களின் தலைகளைப்போலிருந்தன. அவைகளுடைய வாய்களிலிருந்து அக்கினியும் புகையும் கந்தகமும் புறப்பட்டன. அவைகளுடைய வாய்களிலிருந்து புறப்பட்ட அக்கினி புகை கந்தகம் என்னும் இம்மூன்றினாலும் மனுஷரில் மூன்றிலொருபங்கு கொல்லப்பட்டார்கள். அந்தக் குதிரைகளின் வல்லமை அவைகளுடைய வாயிலேயும் வால்களிலேயும் இருக்கிறது. அவைகளுடைய வால்கள் பாம்புகளுக்கு ஒப்பானவைகளாயும், தலைகளுள்ளவைகளாயுமாயிருக்கிறது. அவைகளாலே சேதப்படுத்துகிறது (வெளி. 9:17-19) என்று எழுதப்பட்டிருக்கிறது.

நோவாவின் காலத்துப் பெருவெள்ளத்துக்குப் பின்னர், இதுவே பூமியில் உண்டாகும் பேரழிவாக இருக்கும். இந்தக் காட்சிகள், இயற்கைக்கு அப்பாற்பட்ட

அசுத்த ஆவிகளின் கொடூரமான தன்மைகளை விவரிப்பதாகக் காணப்படுகிறது. ஐந்தாம் எக்காளத்தில் தேள்களுக்கு ஒப்பான கொடுக்குள்ள வெட்டுக்கிளியின் வால்கள் அவர்களைத் துன்புறுத்தியது. ஆனால், இந்தக் குதிரையின் வால்கள், பாம்புகளுக்கு ஒப்பானவைகளாயும், தலைகளுள்ளவைகளாயுமிருந்து, அவைகளாலே அவர்களை அழித்துப்போட இருக்கிறது.

மற்றொரு கோணத்தில், இந்தச் சம்பவங்கைப் பார்ப்போமேயானால், யோவான் அந்நாட்களில் கண்ட காட்சி, அசுத்த ஆவிகளின் தூண்டுதலினால், கடைசிக் காலங்களில் நடைபெறும் யுத்தங்களைக் குறிப்பதைப் போன்றும் இருக்கிறது. யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும் (மத்தேயு 24:6,7) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த யுத்தங்களில், நவீனப் போர் ஆயுதங்களைப் பிரயோகிப்பதினாலும், இப்படிப்பட்டப் பேரழிவுகள் உண்டாக வாய்ப்பிருக்கிறது. அந்த ஆயுதங்களிலிருந்து புறப்படும் அக்கினி புகை கந்தகம் என்னும் இம்மூன்றினாலும் மனுஷரில் மூன்றிலொருபங்கு கொல்லப்படுவார்கள் என்றும் அறியலாம். எது எப்படியாக இருந்தாலும், இவை அசுத்த ஆவிகளால் உபத்திரவக்காலத்தில் ஏற்பட்டு, பெரும் சேதங்களை மனுஷர்மேல் விளைவிக்கும் என்பதே அடிப்படை உண்மை.

எச்சரிக்கும் எக்காளச்சத்தம் !

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நாம் வாழும் இந்தக் காலம், இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் கடைசிக் காலம் என அறிந்திருக்கிறோம். இந்நாட்களில், உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியனால் விழித்திருங்கள் என்றும்; நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்பதும் போன்றதான எச்சரிப்பின் வார்த்தைகள் நமக்கு உண்டு.

இவ்விதமாய்க் கர்த்தர் தாமே தேவ எக்காளத்தோடு வானத்திலிருந்து இறங்கிவரும்போது, ஆயத்தமாயிருக்கிற நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு,

எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம் என்பது வேதாகமம் அறிவிக்கும் உண்மை. இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவோர், தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் தேவனுடைய ஆலயத்திலே அவரைச் சேவிப்பார்கள். இதற்கு மாறாக, பூமியிலே கைவிடப்படும் மனுஷர் உபத்திரவக்காலத்திற்குட்படுவார்கள். மேலும், கைவிடப்பட்ட மனுஷர்கள், நித்தியநித்தியமாய் அனுபவிக்கவிருக்கும் வேதனைகளின் முன்னோடியான வாதைகளையும் நியாயத்தீர்ப்புகளையும், கர்த்தர் உபத்திரவக்காலத்தில் அவர்களுக்கு வெளிப்படுத்தி, அப்பொழுதாவது அவர்கள் மனந்திரும்பி கர்த்தரைப் பற்றிக்கொள்ள வாய்ப்புகளைக் கொடுக்கிறார்.

அப்படியிருந்தும், அந்த வாதைகளால் கொல்லப்படாத மற்ற மனுஷர்கள் பேய்களையும், பொன் வெள்ளி செம்பு கல் மரம் என்பவைகளால் செய்யப்பட்டவைகளாயும் காணவும் கேட்கவும் நடக்கவுமாட்டாதவைகளாயுமிருக்கிற விக்கிரகங்களையும் வணங்காதபடிக்குத் தங்கள் கைகளின் கிரியைகளை விட்டு மனந்திரும்பவுமில்லை, தங்கள் கொலைபாதகங்களையும், தங்கள் சூனியங்களையும், தங்கள் வேசித்தனங்களையும், தங்கள் களவுகளையும் விட்டு மனந்திரும்பவுமில்லை (வெளி. 9:20-21) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இந்த விரிவான தியான வார்த்தைகளின் பிரதானமான நோக்கம், கிறிஸ்துவின் அன்பை அறிந்து உணர்ந்து, அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ள நாம் கவனக்குறைவினாலோ அல்லது அஜாக்கிரதையினாலோ நமக்கருளப்பட்டிருக்கிற இந்த அரியவாய்ப்பை இழந்துவிடக்கூடாது என்பதேயாகும். நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள் (எபேசியர் 5:16) என்றும்; இரவு சென்று போயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம் (ரோமர் 13:12) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் என்கிற வார்த்தையின்படி, நீதி செய்யவும், கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்திலும், உண்மையிலும், மனத்தாழ்மையிலும் நிலைத்திருக்கவும், நம்மையே அர்ப்பணிப்போம். விவரிக்கப்பட்டிருக்கும் எல்லா வாதைகளுக்கும் விலக்கிப்பாதுகாக்கப்பட்டு, கர்த்தருடைய வருகையிலே நாம் அவரோடே எடுத்துக்கொள்ளப்பட, நித்தியராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ள, கர்த்தர்தாமே தம்முடைய கிருபைகளை நம்

அப்பொழுது அவன் (வானத்திலிருந்து இறங்கிவந்த பலமுள்ள
வேறொரு தூதன்) என்னை நோக்கி:
நீ மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும்,
பாஷைக்காரரையும், ராஜாக்களையுங்குறித்துத்
தீர்க்கதரிசனஞ்சொல்லவேண்டும் என்றான்
(வெளி. 10:11).

6. கடைசிக்கால ஊழியங்கள்!

தரிசனங்களின் புஸ்தகம்!

ஏழாம் முத்திரை உடைக்கப்படும் முன், வெளிப்படுத்தின விசேஷம் ஏழாம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் இரு சம்பவங்கள், கடைசிக் கால நிகழ்வுகளை, நாம் தொடர்ச்சியாகவும் முழுமையாகவும் அறிந்துக்கொள்ள உதவுகிறது. இதைப்போன்றே, ஏழாம் எக்காளம் ஊதும் முன்பாகவும், பத்து மற்றும் பதினோராம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் சம்பவங்கள், கடைசிக்காலத்தில் தேவனுடைய திட்டங்களை, முழுமையாக அறிந்துகொள்ள உதவுகிறது.

இந்த வேதப்பகுதியில், கைவிடப்பட்ட நிலை என்றெண்ணப்படுகிற உபத்திரவக்காலத்தின் கொடூரமான வாதைகளுக்கும், நியாயத்தீர்ப்புகளுக்கும், பேரழிவுகளுக்கும் இடையேயும், பரிசுத்தப் பிதாவின் மனதுருக்கம், அழிவுக்குட்பட்டிருக்கும் ஆத்துமாக்களை மீட்கும்படியாக வெளிப்படுகிறதைக் காண்கிறோம். அப்படியிருந்தும், அந்த வாதைகளால் கொல்லப்படாத மற்ற மனுஷர்கள் பேய்களையும், விக்கிரகங்களையும் வணங்காதபடிக்குத் தங்கள் கைகளின் கிரியைகளை விட்டு மனந்திரும்பவுமில்லை, தங்கள் கொலைபாதகங்களையும், தங்கள் சூனியங்களையும், தங்கள் வேசித்தனங்களையும், தங்கள் களவுகளையும் விட்டு மனந்திரும்பவுமில்லை, என்ற வார்த்தைகளுடன் ஒன்பதாம் அதிகாரம் நிறைவுபெறுகிறது.

மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையும் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொல்ல வேண்டும் (வெளி. 10:11) என்கிற வார்த்தை, தேவனுடைய அன்பின் வெளிப்பாடாக, உபத்திரவக்காலத்திலும் மனந்திரும்புதலுக்கான அழைப்பாக, வெளிப்படுகிறது. மேலும் இதனைத் தொடர்ந்து, கர்த்தர் இரண்டு சாட்சிகளுக்கு

ஆயிரத்து இருநூற்று அறுபது நாளளவும் தீர்க்கதரிசனஞ்சொல்லும்படி அதிகாரம் கொடுக்க இருக்கிறார்.

இந்த தீர்க்கதரிசன வார்த்தைகள், இரட்சிப்பிற்கேதுவான தேவனுடைய அபிஷேகம் நிறைந்த வார்த்தைகளை வெளிப்படுத்தும். அந்நாட்களின் இறுதியில், மனுஷரில் மீதியானவர்கள் பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தினார்கள் (வெளி. 11:13) என்று எழுதப்பட்டிருக்கிறது. மனந்திரும்பி சுவிசேஷத்தில் நம்பிக்கையுங்கள் என்பதைப்போன்ற அழைப்பு, ஊழியர்கள் என்று குறிப்பிடப்படுகிற இந்தத் தீர்க்கதரிசிகளால் வெளிப்பட இருக்கிறது. இந்த அறைகூவல், இரத்த சாட்சிகளாக மரித்து இரட்சிக்கப்பட இருப்போரின் தொகையை நிறைவாக்கும் (வெளி 6:11) என நாம் அறியலாம். அல்லேலூயா!

வானத்திலிருந்து இறங்கிவந்த தூதன்!

பின்பு, பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவரக் கண்டேன்; மேகம் அவனைச் சூழ்ந்திருந்தது, அவனுடைய சிரசின்மேல் வானவில்லிருந்தது. அவனுடைய முகம் சூரியனைப்போலவும், அவனுடைய கால்கள் அக்கினி ஸ்தம்பங்களைப்போலவும் இருந்தது (வெளி.10:1) என்று எழுதப்பட்டிருக்கிறது. வானத்திலிருந்து இறங்கிவர யோவான் கண்ட அந்தத் தூதனைச் சுற்றிலும் மேகம்போல தேவனுடைய மகிமை சூழந்திருந்தது. அவனுடைய சிரசின்மேலிருந்த வானவில், தேவனுடைய உடன்படிக்கையையும், உண்மையையும், இரக்கத்தையும், பாதுகாவலையும் நினைப்பூட்டுகிறது.

அந்தத் தூதனுடைய முகம் சூரியனைப்போல காணப்பட்டது. தேவனுடைய உறவில் நிலைத்திருப்பவர்கள், அவருடைய மகிமையைப் பிரதிபலிப்பார்கள் என அறிந்திருக்கிறோம். தேவனுடைய மனுஷனாகிய மோசேயின் முகம் அவ்விதமாக பிரகாசித்தது (யாத்திராகமம் 34:30). அக்கினி ஸ்தம்பங்களைப்போன்ற கால்கள், இருளடைந்த சூழ்நிலைகளில், கால் இடறாது நல்வழியில் நடத்தவல்ல சுத்திகரிப்பை வெளிப்படுத்துகிறது. அவர்களுக்கு வெளிச்சத்தையும் அவர்கள் நடக்கவேண்டிய வழியையும் காட்ட இரவிலே அக்கினி ஸ்தம்பமும், அவர்களை விட்டு விலகவில்லை (நெகேமியா 9:19) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பலமுள்ள தூதனின் தோற்றத்தைப்பற்றின விரிவான இந்த விளக்கம், அந்தத் தூதனை, தேவனுடைய சந்நிதானத்தில் நிற்பவனாகவும், அந்தக் காலக்கட்டத்தில் பூமியில் எஞ்சியுள்ள மனுஷர்களுக்கு மிகவும் முக்கியமான நற்செய்தியை அறிவிக்க ஆளுகையையும் அதிகாரத்தையும் பெற்றவனாகவும் காட்டுகிறது.

திறக்கப்பட்ட சிறு புஸ்தகம்!

திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் அவன் கையில் இருந்தது; தன் வலதுபாதத்தைச் சமுத்திரத்தின்மேலும், தன் இடதுபாதத்தைப் பூமியின்மேலும் வைத்து, சிங்கம் கெர்ச்சிக்கிறதுபோல மகாசத்தமாய் ஆர்ப்பரித்தான்; அவன் ஆர்ப்பரித்தபோது ஏழு இடிகளும் சத்தமிட்டு முழங்கின (வெளி. 10:2-3) என்று எழுதப்பட்டிருக்கிறது. சிங்கம் கெர்ச்சிக்கிறதுபோல மகாசத்தமாய் ஆர்ப்பரித்த தூதனுடைய சத்தம், அவன் அறிவிக்கவிருக்கும் செய்தியின் முக்கியத்துவத்தையும், தேவனுடைய ஆளுகையையும், அதிகாரத்தின் வல்லமையையும், மகத்துவத்தையும் வெளிப்படுத்துகிறது. ஏழு இடிகளும் சத்தமிட்டு முழங்கின என்பது, வெளிப்படவிருக்கும் செய்தியின் முழுமையையும், நம்பகத்தன்மையையும் உறுதிச்செய்கிறது.

அந்தப் பலமுள்ள தூதன், தன் வலதுபாதத்தைச் சமுத்திரத்தின்மேலும், தன் இடதுபாதத்தைப் பூமியின்மேலும் வைத்திருந்தான். இந்தக் காட்சி, அந்த தூதனுக்குச் சமுத்திரத்தின்மேலும் பூமியின் மேலும் கொடுக்கப்பட்டிருந்த முழுமையான ஆளுகையையும் அதிகாரத்தையும் வெளிப்படுத்துகிறது. சமுத்திரம் என்பது இங்குப் புறஜாதியாரை, அதாவது, ஜனங்களையும் கூட்டங்களையும் ஜாதிகளையும் பாஷைக்காரரையும் குறிக்கிறது. திரளான தண்ணீர்கள், ஜனங்களும் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாம் (வெளி. 17:1,15) என்று எழுதப்பட்டிருக்கிறது. பூமியின்மேல் கொடுக்கப்பட்ட அதிகாரம் என்பது, புறஜாதியாரைத் தவிர்த்து, பூமியின் மேலிருந்த ஏனையோரின்மேல் அந்தத் தூதன் பெற்றிருந்த ஆளுகையைக் குறிக்கிறது. இவர்கள், இரகசிய வருகையில் கைவிடப்பட்டு, அழிவுகளுக்குத் தப்பியும் மனந்திரும்பாத எஞ்சியுள்ளவர்கள் என்று நாம் அறியலாம்.

அந்தத் தூதன் கையிலிருந்த சிறு புஸ்தகம், ஆட்டுக்குட்டியானவர், சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவருடைய கையிலிருந்து வாங்கின முத்திரிக்கப்பட்டிருந்த புஸ்தகத்தைக் காட்டிலும் அளவில் சிறியதாக

இருந்தது. மேலும், முத்திரிக்கப்பட்டிருந்த புஸ்தகத்தில் எழுதப்பட்ட நியாயத்தீர்ப்புகள், அந்தக் காலக்கட்டத்தில் இன்னும் முற்றிலும் நிறைவுபெறாதப்பட்சத்தில், தூதன் கையிலிருந்த திறக்கப்பட்ட சிறு புஸ்தகம், ஆட்டுக்குட்டியானவரின் கையிலிருந்த புஸ்தகமாக இருக்க வாய்ப்பு இல்லை என்பதாக நாம் அறியலாம். விவரிக்கப்பட்டுள்ள இந்தத் தூதனுடைய தன்மைகள், தேவனுடைய அன்பையும், மாட்சிமையையும், மகத்துவத்தையும் இருள்சூழ்ந்த நிலைகளிலும், கால் இடறாது நல்வழியில் நடத்தவல்ல அவருடைய தன்மையையும் வெளிப்படுத்துகிறது. எனவே, அவன் கையிலிருக்கும் சிறு புஸ்தகம், உபத்திரவக்காலத்தில் கர்த்தருடைய பெரிதான கிருபையினால் வெளிப்படும் இரட்சிப்பின் நற்செய்தியை உள்ளடக்கிய சத்திய வார்த்தைகள் என்பதாக அறிய முடிகிறது.

வேதாகமத்தில், பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன வார்த்தைகள் நிறைவேறினபோது, அவை புதிய ஏற்பாட்டில், சரித்திரங்களாக இடம்பெற்றிருப்பதை நாம் அறிவோம். இதைப்போன்றே, புதிய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன வார்த்தைகளின் நிறைவேறுதலும், சபையைக்குறித்த சாட்சிகளும், இரகசிய வருகை மற்றும் உபத்திரவக்காலத்தின் முற்பகுதியில் நிறைவுபெற்ற சம்பவங்களும், இந்தச் சிறிய புஸ்தகத்தில் சரித்திரமாக எழுதப்பட்டிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. இந்த வருங்காலங்களைப் பற்றின தீர்க்கதரிசன வார்த்தைகள், எஞ்சிய மக்களை மனந்திரும்பும்படியாக எச்சரிக்க இருப்பதாக அறியலாம். அல்லேலூயா!

ஏழு இடிமுழக்கங்கள்!

தேவனுடையச் சிங்காசனத்திலிருந்து மின்னல்களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன (வெளி. 4:5) என்று எழுதப்பட்டிருக்கிறது. இடி முழக்கங்கள், வரவிருக்கும் மழையையும், புயலையும் முன்னறிவிக்கிறது. ஆனால், ஆவிக்குரிய உலகில், வேதாகமத்தில் பல இடங்களில், மின்னல்களும் இடி முழக்கங்களும் சத்தங்களும், தேவனுடைய சத்தத்தையும், மகிமையுள்ள அவருடைய பிரசன்னத்தையும் வெளிப்படுத்துகிறது. அந்த பலமுள்ள தூதன் ஆர்ப்பரித்தபோது, ஏழு இடிகளும் சத்தமிட்டு முழங்கின என்பது, சொல்லப்படவிருக்கும் செய்தி தேவனால் அங்கீகரிக்கப்பட்ட முழுமையான சத்திய வார்த்தைகள் என்பதை உறுதிச்செய்கிறது.

கர்த்தரோடே வழக்காடுகிறவர்கள் நொறுக்கப்படுவார்கள்; வானத்திலிருந்து அவர்கள்மேல் முழங்குவார் (1 சாமுவேல் 2:10) என்றும்; கர்த்தர் வானத்திலிருந்து குமுறி, உன்னதமானவர் தமது சத்தத்தைத் தொனிக்கப்பண்ணினார் (2 சாமுவேல் 22:14; சங்கீதம் 18:13) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இந்த ஏழு இடி முழக்கங்களும், ஏழு முத்திரைகள் ஏழு எக்காளங்களைப்போலவே, தேவனுடைய தீர்மானங்கள் திட்டங்களை, பூமியின்மேல் நடப்பிக்கும் தேவனுடைய சத்தமாக இருக்கிறது.

அவ்வேழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கினபோது, நான் எழுதவேண்டுமென்றிருந்தேன். அப்பொழுது: ஏழு இடிமுழக்கங்கள் சொன்னவைகளை நீ எழுதாமல் முத்திரைபோடு என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன் (வெளி. 10:4) என்று யோவான் எழுதியிருக்கிறார். வெளிப்படுத்தின விசேஷத்தில் இந்த வார்த்தைகள் மட்டுமே, முத்திரையிடப்பட்டு மறைக்கப்பட்டுள்ளன. மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிராணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம்செய்யும்படிக்கு நமக்கும்நம்முடையபிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும்உரியவைகள்(உபாகமம்29:29)என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த வேதப்பகுதியின் சூழ்நிலையோடு இணைத்து இந்த வசனங்களைத் தியானிக்கும்போது, மறைக்கப்பட்ட வார்த்தைகள், அப்போஸ்தலனாகிய யோவானுக்கென சொல்லப்பட்ட பிரத்தியேகமான வார்த்தைகளைப்போன்று காணப்படுகிறது. அவர் தேற்றப்பட்டு, சோர்வடையாமல் தொடர்ந்து தரிசனங்களைப்பெற்றுத் தன் பணியை நிறைவுசெய்ய, அவருக்குக் கொடுக்கப்பட்ட, தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் ஒரு வெளிப்பாடாக இது இருக்கலாம். அந்தப் புஸ்தகத்தைத் திறந்து வாசிக்கவும் அதைப் பார்க்கவும் பாத்திரவானாக ஒருவனும் காணப்படாததினால் நான் மிகவும் அழுதேன் (வெளி 5:4) என்று யோவான் முன்னர் எழுதியிருப்பதை நினைவில்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

தூதன் இட்ட ஆணை!

சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கிறதாக நான் கண்ட தூதன், தன் கையை வானத்திற்கு நேராக உயர்த்தி; இனி காலம் செல்லாது; ஆனாலும் தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே

அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவரகசியம் நிறைவேறும் என்று, வானத்தையும் அதிலுள்ளவைகளையும், பூமியையும் அதிலுள்ளவைகளையும், சமுத்திரத்தையும் அதிலுள்ளவைகளையும் சிருஷ்டித்தவரும், சதாகாலங்களிலும் உயிரோடிக்கிறவருமானவர்மேல் ஆணையிட்டுச் சொன்னான் (வெளி. 10:5-7) என்று யோவான் எழுதியிருக்கிறார்.

இனி காலம் செல்லாது என்று சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் ஆளுகையையும் அதிகாரத்தையும் பெற்றிருக்கிற அந்த தூதன், சர்வத்தையும் படைத்தவரும், சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருமானவர்மேல் ஆணையிட்டுச் சொன்னான். ஏழாம் தூதன் எக்காளம் ஊதப்போகிறபோது, தேவரகசியம் நிறைவேறும் என்றான். தேவனாகிய கர்த்தர், துரிதமாய் செயல்பட்டு, அவருடைய நீதியின் ஆட்சியைப் பூமியிலே ஸ்தாபிக்க இருக்கிறார். ஏழு முத்திரையின் நியாயத்தீர்ப்புகளும், ஏழு எக்காளங்கள் தொனிக்கும்போது ஏற்படும் பேரழிவுகளும், பூமியில் கைவிடப்பட்டோர் எச்சரிக்கப்பட்டு மனந்திரும்ப காலத்தையும் வாய்ப்புகளையும் கொடுத்தது. இந்த சம்பவங்களுக்குப் பின்னர், ஏழு கோபக்கலசங்களின் நியாயத்தீர்ப்புகள் துரிதமாய் செயல்பட்டு, தேவனுடைய அரசாட்சி முன்குறித்த வேளையில் துவங்கவிருக்கிறது.

நிறைவேற இருக்கும் தேவரகசியம் என்ன? பாவத்தினால் அழிவுக்குட்பட்டிருக்கிற சிருஷ்டிப்பை மீட்கும் இரட்சிப்பின் நற்செய்தியை, தேவரகசியம் எனலாம். இம்மட்டும் மறைக்கப்பட்டிருந்ததும், நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவினாலும், அவருடைய அப்போஸ்தலராலும், ஊழியக்காரராலும், இப்பொழுது வெளியரங்கமாக்கப்பட்டதுமான இந்தத் தெய்வீக உண்மை, தேவரகசியமாயிருக்கிறது. இது கீழ்ப்படியாதோர்க்கு நியமிக்கப்பட்டிருக்கும் நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்தி எச்சரிக்கும் செய்தியையும் உள்ளடக்கியிருக்கிறது. இந்த இரகசியம், கடைசிக்காலங்களில், வெளிப்படுத்தின விசேஷத்தையும், தேவனுடைய தன்மைகளையும் அறிந்துகொள்ள உதவும் ஒரு முக்கியமான வெளிப்பாடாகவும் இருக்கிறது.

யோவான் பெற்ற கட்டளை!

நான் வானத்திலிருந்து பிறக்கக்கேட்ட சத்தம் மறுபடியும் என்னுடனே பேசி: சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கிற தூதனுடைய கையிலிருக்கும் திறக்கப்பட்ட சிறு புஸ்தகத்தை நீ போய்

வாங்கிக்கொள் என்று சொல்ல, நான் தூதனிடத்தில் போய்: அந்தச் சிறு புஸ்தகத்தை எனக்குத் தாரும் என்றேன். அதற்கு அவன்: நீ இதை வாங்கிப் புசி; இது உன் வயிற்றுக்குக் கசப்பாயிருக்கும், ஆகிலும் உன் வாய்க்கு இது தேனைப்போல மதுரமாயிருக்கும் என்றான். நான் அந்தச் சிறு புஸ்தகத்தைத் தூதனுடைய கையிலிருந்து வாங்கி, அதைப் புசித்தேன்; என் வாய்க்கு அது தேனைப்போல மதுரமாயிருந்தது; நான் அதைப் புசித்தவுடனே என் வயிறு கசப்பாயிற்று (வெளி. 10:8-10) என்று யோவான் எழுதியிருக்கிறார்.

அம்மட்டும் பார்வையாளனாக இருந்த அப்போஸ்தலன், இந்தக் காட்சியில், அந்தத் தரிசனத்தின் ஒரு அங்கமாக மாறுகிறார். வெளிப்படுத்தின விசேஷம் ஐந்தாம் அதிகாரத்தில், ஆட்டுக்குட்டியானவர் முத்திரிக்கப்பட்ட புஸ்தகத்தை சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார். இங்கு, வானத்திலிருந்து பிறக்கக்கேட்ட சத்தத்திற்குச் செவிகொடுத்து, அப்போஸ்தலனாகிய யோவான், அந்தச் சிறு புஸ்தகத்தை, தூதனிடத்திலிருந்து வாங்கினார். பலமுள்ள தூதன் கையில் இருந்த திறக்கப்பட்ட சிறு புஸ்தகம், இந்தத் தரிசனத்தின் முக்கியம் வாய்ந்ததாக உள்ளது. அந்தத் தூதன்: நீ இதை வாங்கிப் புசி; இது உன் வயிற்றுக்குக் கசப்பாயிருக்கும், ஆகிலும் உன் வாய்க்கு இது தேனைப்போல மதுரமாயிருக்கும் என்றான்.

புஸ்தகத்தைப் புசித்தல் என்பது, அதில் எழுதப்பட்டவைகளை அறிந்து, ஏற்றுக்கொள்ளுதல் என்பதைக் குறிக்கிறது. இதைப்போன்றே எசேக்கியேல் தீர்க்கதரிசிக்குக் கொடுக்கப்பட்ட புஸ்தகச் சுருளையும், அவர் வாயைத் திறந்து புசிக்கும்படியாக (எசேக்கியேல் 2:8,9) கட்டளைப்பெற்றார் என அறிந்திருக்கிறோம். யோவான் அந்தச் சிறு புஸ்தகத்தில் எழுதப்பட்ட யாவையும், அறிந்து ஏற்றுக்கொண்டு அவற்றை யாவருக்கும் தீர்க்கதரிசனமாக அறிவிக்கும் ஊழியத்தைப் பெறுகிறார்.

கர்த்தரால் வெளிப்படுத்தப்பட்ட அபிஷேகம் நிறைந்த வார்த்தைகளை, தேவஜனத்துக்கு அறிவிப்பதை தீர்க்கதரிசனம் என்கிறோம். தீர்க்கதரிசன வார்த்தைகளை நாம் நற்செய்தியாகப் பெற்றுக்கொள்ளும்போது, அவை நமக்கு இனிமையாக இருக்கிறது. நம்முடைய வாழ்வில் விடுதலையை, இரட்சிப்பைக் கூறி அறிவிக்கும் வெளிப்பாடுகள், நமக்கு சந்தோஷத்தை நிறைவாய்த் தருகிறது. கசப்பு என்பது இந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகள் நம்மில் நிறைவேற, நாம் கடந்துசெல்லவேண்டிய பாடுகளையும், நிந்தைகளையும், உபத்திரவங்களையும் குறிக்கிறது. இரட்சிப்பின் விடுதலையை முழுமையாய்

நாம் பெற்றுக்கொள்ள, விசுவாசத்தில் நிலைத்திருந்து, அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டியதாயிருக்கிறது.

நீ மறுபடியும் தீர்க்கதரிசனஞ்சொல்!

அப்பொழுது அவன் என்னை நோக்கி: நீ மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையுங்குறித்துத் தீர்க்கதரிசனஞ் சொல்லவேண்டும் என்றான் (வெளி. 10:11) என்று எழுதப்பட்டிருக்கிறது. மறுபடியும் தீர்க்கதரிசனஞ்சொல்லவேண்டும் என்ற வார்த்தைகள், கடைசிக்காலத்தின் இந்தக் கட்டத்திலும், கர்த்தர் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி, இரட்சிப்பையருள சித்தம்கொண்டுள்ளார் என்பதைத் தெளிவாக அறிவிக்கிறது.

இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்டவர்களும், உபத்திரவக்கால அழிவுக்கு உட்பட்டவர்களும் நீங்கலாக, அந்தக் காலக்கட்டத்தில் மீதம் இருப்பவர்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அநேகம் பேரைக்கொண்டாகிலும், கொஞ்சம் பேரைக்கொண்டாகிலும், ரட்சிக்கக் கர்த்தருக்குத் தடையில்லை (1சாமுவேல் 14:6) என்றும்; பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவிசெய்கிறது தேவனுக்கு லேசானகாரியம் (2 நாளாகமம் 14:11) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இந்த வார்த்தைகளின்படி, இரட்சிப்பின் நற்செய்தி, எஞ்சியுள்ள மக்களுக்கும் அறிவிக்கப்படுவது நிச்சயமாகத் தோன்றுகிறது.

இந்த வார்த்தைகள் யோவானுக்குச் சொல்லப்பட்டிருந்தாலும், யோவான் அந்தக் கடைசிக்காலமட்டும் உயிரோடிருந்து, இந்தக் கட்டளையை தனியொருவராய் நிறைவேற்றுவதென்பது, சிந்திக்க வேண்டியதொன்றாயிருக்கிறது. இன்னொரு பரிமாணத்தில், புஸ்தகத்தை வாங்கிப் புசித்து தரிசனமுரைக்க, ஒரு குறியீடாக யோவான் இங்கு குறிப்பிடப்படுகிறார் எனவும் எடுத்துக்கொள்ளலாம். அந்தப்பட்சத்தில், இப்பணிக்கென முன்குறித்தவர்கள்போலவே, நெற்றிகளில் முத்திரைபோடப்பட்டு ஆயத்தமாக உள்ள தேவனுடைய ஊழியக்காரர்கள் (வெளி. 7:3) இலட்சத்துநாற்பத்து நாலாயிரம்பேர் உண்டு என்பதை நினைவில்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

இவர்கள், தொடர்ந்து வரவிருந்த உபத்திரவங்களுக்கு நீங்கலாகும்படியாக, முத்திரைபோடப்பட்டவர்களாய், கடைசிக்காலத்தின் இரகசியமாகிய மேம்படுத்தப்பட்ட இரட்சிப்பின் நற்செய்தியைப்பெற்று, தீர்க்கதரிசனம் உரைத்து, எஞ்சியுள்ளோரை சத்தியத்துக்குள் நடத்த ஏற்படுத்தப்பட்டவர்களாயும் இருக்க வாய்ப்புண்டு என அறியலாம். எது எப்படியாக இருந்தாலும், அந்தக் காலக்கட்டத்தில், உபத்திரவக்காலத்தின் மத்தியில், பூமியில் கைவிடப்பட்ட எஞ்சியுள்ளோருக்கும், மேம்படுத்தப்பட்ட இரட்சிப்பின் நற்செய்தி அறிவிக்கப்பட்டு, அவர்களும் மீட்கப்பட வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இதுதான் ஏழாம் தூதன் எக்காளம் ஊதப்போகிறபோது, நிறைவேறும் தேவரகசியமோ என எண்ணத்தோன்றுகிறது. அல்லேலூயா!.

தேவனுடைய ஆலயத்தை அளந்துபார்!

பின்பு கைக்கோலுக்கு ஒப்பான ஒரு அளவுகோல் என்னிடத்தில் கொடுக்கப்பட்டது. அப்பொழுது தேவதூதன் நின்று, என்னை நோக்கி: நீ எழுந்து, தேவனுடைய ஆலயத்தையும், பலிபீடத்தையும் அதில் தொழுதுகொள்ளுகிறவர்களையும் அளந்துபார். ஆலயத்திற்குப் புறம்பே இருக்கிற பிரகாரம் புறஜாதியாருக்குக் கொடுக்கப்பட்டபடியால் அதை அளவாமல் புறம்பாக்கிப்போடு; பரிசுத்த நகரத்தை அவர்கள் நாற்பத்திரண்டு மாதமளவும் மிதிப்பார்கள் (வெளி. 11:1-2) என்று எழுதப்பட்டிருக்கிறது.

யோவான் தேவனுடைய ஆலயத்தை அளந்துபார்க்க கட்டளைபெறுகிறார். இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகை இன்னும் நடைபெறவில்லை என்றும்; கி.பி. 70 ஆம் ஆண்டில் இடிக்கப்பட்ட எருசலேம் தேவாலயம், மறுபடியுமாகக் கட்டப்படவில்லை என்றும், இந்நாட்களில் நாம் அறிந்திருக்கிறோம். இப்படியிருக்க, கடைசிக்காலத்தின் ஊழியங்களாக விவரிக்கப்பட்டிருக்கும் ஊழியங்களுக்கிடையே எழுதப்பட்டிருக்கும், இந்த இரு வசனங்கள் வெளிப்படுத்தும் இரகசியம் என்ன? தேவனுடைய ஆலயத்தை அளந்துபார்க்க, முதலாவதாக, அந்நாட்களுக்கு முன்பாக தேவனுடைய ஆலயம் கட்டப்பட்டிருக்கவேண்டும்.

எனவே, கடைசிக் கால சம்பவங்களில், தேவனுடைய ஆலயம் கட்டப்படுவது என்பது, ஒரு முக்கியமான நிகழ்வாக, இந்த வசனங்களினாலே உலகத்துக்கு வெளிப்படுத்தப்பட்டு, உறுதிச்செய்வதாய் இருக்கும் என

அறியலாம். எருசலேமிலே தேவாலயம் கட்டப்படவிருப்பதைக் கேள்விப்படுகிறவர்கள் யாராயிருந்தாலும் சரி, அவ்வேளையிலே, இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகை மிகவும் சமீபமாய் இருப்பதை உணர்ந்து, அவர்கள் கைவிடப்பட்ட நிலையில் உபத்திரவக்காலத்திற்குள் தள்ளப்படாமலிருக்க, மனந்திரும்பி சுவிசேஷத்தில் நம்பிக்கைவைத்து, கர்த்தரை உறுதியாய்ப்பற்றிக்கொள்ள அழைக்கப்படுகிறார்கள்.

தேவனுடைய ஆலயத்தையும், பலிபீடத்தையும் அதில் தொழுதுகொள்ளுகிறவர்களையும் அளந்துபார் என்கிற வார்த்தைகள், சொந்தம்பாராட்டி பாதுகாத்து பராமரிப்பதையும்; உண்மையாய் தேவனைத் தொழுதுகொள்ளுகிறவர்களை அடையாளங்கண்டுகொள்ளுதலையும் குறிக்கிறது. ஆலயத்திற்கு புறம்பே இருக்கிற பிரகாரம் புறஜாதியாருக்குக் கொடுக்கப்பட்டபடியால் அதை அளவாமல் புறம்பாக்கிப்போடு; பரிசுத்த நகரத்தை அவர்கள் நாற்பத்திரண்டு மாதமளவும் மிதிப்பார்கள் என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

முந்தின தேவாலயங்கள் அமைந்திருந்த எருசலேமின் மோரியா மலைப்பகுதியில், கடந்த 1300 ஆண்டுகளுக்கு மேலாக, புறஜாதியாரின் நினைவுச்சின்னமும், வழிப்பாட்டுஸ்தலமும் இருக்கின்றன. எனவே, அரசியல் ரீதியாகவும், மத உணர்வுகளின்படியும், இந்தப்பகுதி, ஒரு பிரச்சனைக்குரிய இடமாக உள்ளது. வசனத்தின்படி, புறஜாதியார் ஆளுகைக்குட்பட்டிருக்கிற இந்த இடத்தைத் தவிர்த்தே இந்த ஆலயம் கட்டப்படும் என அறியலாம். மேலும், தானியேல் புஸ்தகத்தில், ஒரு வாரம் என குறிப்பிடப்படுகிற உபத்திரவக்காலத்தின் ஏழு ஆண்டுகளிலே, அநேகருடனே உடன்படிக்கை உறுதிப்படுத்தப்படும் (தானியேல் 9:27) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வகையான சமாதான ஒப்பந்தங்களினால், புறஜாதியார் வழிப்பாட்டுஸ்தலங்களைச் சேதப்படுத்தாது, அந்த எல்லைகளை அளந்து தேவனுடைய ஆலயம் கட்ட அனுமதி அந்நாட்களிலே தரப்படும் என்பதாக சொல்லப்படுகிறது. அங்கீகாரம் பெற்ற ஒரு சில மாதங்களிலேயே, தேவனுடைய ஆலயத்தை வெகுத் துரிதமாய்க் கட்டிமுடிக்க அனைத்துப் பொருட்களும், சகலவிதமான பணிமூட்டுகளும் ஆயத்தமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்விதமாக ஒப்பந்தங்களுக்குட்பட்டு, பரிசுத்த நகரத்தை புறஜாதியார் நாற்பத்திரண்டு மாதமளவும் மிதிப்பார்கள் என அறிகிறோம். புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும் (லூக்கா 21:24) என்று எழுதப்பட்டிருக்கிறது.

கடைசிக்கால ஊழியங்களின் இரண்டு சாட்சிகள்!

என்னுடைய இரண்டு சாட்சிகளும் இரட்டு வஸ்திரமுடுத்திக் கொண்டிருக்கிறவர்களாய், ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் தீர்க்கதரிசனஞ்சொல்லும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பேன். பூலோகத்தின் ஆண்டவருக்கு முன்பாக நிற்கிற இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளும் இவர்களே. ஒருவன் அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருந்தால், அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, அவர்களுடைய சத்துருக்களைப் பட்சிக்கும்; அவர்களைச் சேதப்படுத்த மனதாயிருக்கிறவன் எவனோ அவன் அப்படியே கொல்லப்படவேண்டும் (வெளி. 11:3-5) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இரட்டுவஸ்திரம் உடுத்தின இரண்டு சாட்சிகளுக்கு, 1260 நாளளவும் தீர்க்கதரிசனம் சொல்லும்படி கர்த்தர் அதிகாரம் கொடுக்க இருக்கிறார். கொடிய வாதைகளுக்குட்பட்டும் மனந்திரும்பாத, கொல்லப்படாத மற்ற மனுஷர்கள்நிமித்தம் துக்கமடைந்த இந்த ஊழியர்கள், தங்கள் துக்கத்தையும், தாழ்மையையும், எளிமையான வாழ்வுமுறையையும் வெளிப்படுத்தும்வகையில், இரட்டுவஸ்திரம் உடுத்தியிருப்பார்கள். பூலோகத்தின் ஆண்டவருக்கு முன்பாக நிற்கிற இரண்டு ஒலிவமரங்களும், விளக்குத்தண்டுகளும் இவர்களே என்று எழுதப்பட்டிருக்கிறது.

இரண்டு பொற்குழாய்களின் வழியாய்த் தொங்கி, பொன்னிறமான எண்ணெயைத் தங்களிலிருந்து இறங்கப்பண்ணுகிறவைகளாகிய ஒலிவமரங்களின் கிளைகள் இரண்டும் சர்வலோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவரின் சமுகத்தில் நிற்கிற அபிஷேகம் பெற்றவர்கள் (சகரியா 4:12,14) என்பதாக சகரியாவும் இதைப்போன்றதொரு காட்சியை விவரித்துள்ளார். பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்ற இந்த சாட்சிகள், அபிஷேகத்தின் குறியீடாக எண்ணெயை உடையவர்களாய், இருள்சூழ்ந்த உலகில் நற்சாட்சியின், நற்செய்தியின் ஒளிவீச நியமிக்கப்பட்டவர்கள் ஆவார்கள்.

அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லிவருகிற நாட்களிலே மழைபெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அவர்களுக்கு அதிகாரமுண்டு; அவர்கள் தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தங்களுக்கு வேண்டும்போதெல்லாம் பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு (வெளி. 11:6) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த விவரங்களை வைத்து பார்க்கும்போது, இஸ்ரவேல் தேசத்தில், ஆகாப் யேசபேலின் நாட்களில், மழை பெய்யாதபடி வானத்தை

அடைத்த எலியா தீர்க்கதரிசி இவர்களில் ஒருவர் என அறியலாம். மற்ற சாட்சி, எகிப்தின் அடிமைத்தன நாட்களில், தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், பத்து வாதைகளின்மூலம் பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிக்கவும் அதிகாரம் பெற்றிருந்த தேவமனுஷனாகிய மோசே என்பதாகவும் அறியலாம்.

நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசன ஆகமங்களின் பிரதிநிதிகளான மோசேயும் எலியாவும், இயேசுகிறிஸ்துவின் பாடு மரணங்களுக்கு முன்னர் அவர் மறுரூபமானபோது, இயேசுவோடே பேசுகிறவர்களாகக் காணப்பட்டார்கள் (மத்தேயு 17:3). இவர்கள் இயற்கையின்மேல் முழு அதிகாரம் படைத்தவர்களாய்,கடைசிக்கால ஊழியத்தின் உக்கிராணத்துவத்தைப் பெற்றிருப்பார்கள். மற்றொரு கோணத்தில் இந்த வசனங்களைப் பார்ப்போமேயானால், இந்த சாட்சிகள், மோசே மற்றும் எலியாவின் ஆவியையும், வல்லமையையும், குணாதிசயங்களையும் உடையவர்களாக இருக்கவும் வாய்ப்பு உண்டு என அறியலாம்.

இரண்டு தீர்க்கதரிசிகளின் சாட்சியின் நிறைவு!

அவர்கள் தங்கள் சாட்சியைச்சொல்லி முடித்திருக்கும்போது, பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம் அவர்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்றுபோடும் (வெளி. 11:7) என்று எழுதப்பட்டிருக்கிறது. தேவன் முன்குறித்தபடி, அவர்கள் தங்கள் சாட்சியைச்சொல்லி முடிக்கும்போது, உபத்திரவக்காலத்திலும், பூமியின்மேல் மீதியானவர்கள் பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தினார்கள் (வெளி. 11:13) என்கிறபடி அநேகர் இரட்சிக்கப்பட இருக்கிறார்கள். அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பணி நிறைவுபெறும்வரை அவர்கள் செயல்பட்டு, கர்த்தர் முன்குறித்த நேரத்தில், அவர்களுடைய வாழ்வுநிறைவுபெற இருக்கிறது.

பிசாசினால் ஆட்கொள்ளப்பட்டு, அவனுடைய ஆளுகைக்குட்பட்ட உலகத்தலைவன், பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம் என்று அறியப்பட்டிருக்கிறான். இந்த மிருகத்தைப்போன்ற தன்மை உடையவர்களை அந்திக்கிறிஸ்து என்று யோவான் குறிப்பிடுகிறார். மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள்; இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக்கிறிஸ்துவுமாயிருக்கிறான் (2 யோவான் 1:7) என்று எழுதியிருக்கிறார்.

அந்திக்கிறிஸ்துவான பாதாளத்திலிருந்தேறுகிற மிருகம், அவர்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்றுபோடும்.

கர்த்தர் அந்த இரண்டு சாட்சிகளும் 1260 நாட்கள் (42 மாதங்கள் - மூன்றரை வருடங்கள்) ஊழியஞ்செய்யவேண்டுமென்று முன்குறித்திருந்தார். அப்படியாக, அவர்கள் தங்கள் சாட்சியைச்சொல்லி முடிக்கும்போது, வாழ்வைக்காட்டிலும், அவர்கள் மரணம் மேலான கனிகளைத் தரும் என்ற வேளையில், சத்துருவானவன் அவர்களை மேற்கொள்ள கர்த்தர் அனுமதிக்கிறார். தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாக, மரித்த அவர்கள் மீண்டும் உயிர்த்தெழுந்து, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போக நியமிக்கப்பட்டிருந்தார்கள். அல்லேலூயா!.

அவர்களுடைய உடல்கள் மகாநகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கும். அந்த நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும்; அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார். ஜனங்களிலும், கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலுமுள்ளவர்கள் அவர்களுடைய உடல்களை மூன்றரை நாள் வரைக்கும் பார்ப்பார்கள். அவர்களுடைய உடல்களைக் கல்லறைகளில் வைக்கவொட்டார்கள் (வெளி. 11:8-10) என்று எழுதப்பட்டிருக்கிறது.

கொல்லப்பட்ட இரு சாட்சிகளின் உடல்களும் கல்லறைகளில் வைக்கப்படாமல், வெளியரங்கமான அவமானத்திற்குட்பட்டு, மகாநகரத்தின் வீதியிலே மூன்றரைநாள் வரைக்கும் கிடக்கும். அந்த நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சோதோம், ஆவிக்குரிய விபச்சாரம் எனும் விக்கிரக ஆராதனையையும், அந்நிய தெய்வங்களை நாடித்தேடி சோரம்போவதையும் குறிக்கிறது. எருசலேம், எகிப்துதேச பாவத்தின் அடிமைத்தனத்திற்கும், ஒழுக்கக் கேடுகளோடும் ஒப்பிடப்பட்டுள்ளது. அந்த நகரம் எருசலேம் என்பதைக் குறிப்பிடும்படியாக, அதிலே நம்முடைய கர்த்தரும் சிலுவையிலே அறையப்பட்டார் என்று எழுதப்பட்டிருக்கிறது.

அவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட மீட்பின் பணியை நிறைவேற்ற, பூமியின் குடிகளை வேதனைப்படுத்தினபடியால், அவர்கள் கொல்லப்பட்டபோது, பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து, ஒருவருக்கொருவர் வெகுமதிகளை அனுப்புவார்கள் (வெளி. 11:10) என்று எழுதப்பட்டிருக்கிறது.

மேகத்தில் ஏறி வானத்திற்குப் போன சாட்சிகள்!

மூன்றரை நாளைக்குப்பின்பு தேவனிடத்திலிருந்து ஜீவஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது. அப்பொழுது அவர்கள் காலூன்றி நின்றார்கள். அவர்களைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று. இங்கே ஏறிவாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போனார்கள், அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைப் பார்த்தார்கள் (வெளி. 11:11,12) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டு, ஒருவருக்கொருவர் வெகுமதிகளை அனுப்புகிறபோது, விவரிக்கப்பட்டாலும் நம்பக்கூடாத ஒரு உன்னதான நிகழ்வைக் கர்த்தர் நடப்பிக்க இருக்கிறார். மூன்றரை நாளைக்குப்பின்பு தேவனிடத்திலிருந்து ஜீவஆவி அவர்களுடைய மரித்து, வீதியிலே வீசப்பட்டிருந்த உடல்களுக்குள் பிரவேசிக்க இருந்தது. அப்பொழுது அவர்கள் காலூன்றி நிற்பார்கள் என்றும்; அவர்களைப் பார்ப்பவர்களுக்கு மிகுந்த பயமுண்டாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும், அவர்கள் இங்கே ஏறிவாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போவார்கள், அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைப் பார்ப்பார்கள். இவ்வகையானக் காட்சிகளை, அவை நிகழும்போதே உலகெங்கிலும் காணும்படியான தொலைத்தொடர்பு வசதிகளும், தொழில்நுட்பமும், இந்நாட்களில் இருப்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

மீதியானவர்கள் தேவனை மகிமைப்படுத்தினார்கள்!

வேதாகமத்தில் பூமியதிர்ச்சி, பல இடங்களில் கொந்தளிப்பு மற்றும் குழப்பத்தின் குறியீடாக உபயோகிக்கப்பட்டுள்ளது. அந்நேரத்திலே பூமி மிகவும் அதிர்ந்தது, உடனே அந்த நகரத்தில் பத்திலொருபங்கு இடிந்து விழுந்தது; மனுஷரில் ஏழாயிரம்பேர் பூமியதிர்ச்சியினால் அழிந்தார்கள்; மீதியானவர்கள் பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தினார்கள் (வெளி. 11:13) என்று எழுதப்பட்டிருக்கிறது.

மாநகரத்தின் வீதியிலே வீசப்பட்டிருந்த உடல்களுக்குள், மூன்றரை நாளைக்குப்பின்பு, தேவனிடத்திலிருந்து ஜீவஆவி பிரவேசித்து, அவர்கள் காலூன்றி நிற்பதையும்; பின்னர் அவர்கள் இங்கே ஏறிவாருங்கள் என்று வானத்திலிருந்து உண்டான பெரிய சத்தத்தைக் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போனதையும்; அதைத் தொடர்ந்த பூமியதிர்ச்சியையும், பார்த்த மீதியானவர்கள், பயமடைந்து பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்த இருக்கிறார்கள். இவர்களில் பலர் இரட்சிக்கப்படுவார்கள் என அறியலாம்.

அவ்வேளையில், இரண்டாம் ஆபத்து கடந்துபோயிற்று; இதோ, மூன்றாம் ஆபத்து சீக்கிரமாய் வருகிறது (வெளி. 11:14) என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடைசி மூன்று தூதருடைய எக்காள சத்தங்களினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு ஐயோ என்பதைப்போன்ற ஆபத்துவரும் (வெளி. 8:13) எனப் பார்த்தோம். ஒன்பதாம் அதிகாரத்தில், ஐந்து மற்றும் ஆறாம் எக்காளத்தின் எச்சரிப்புகள் விவரிக்கப்பட்டுள்ளன. பத்தாம் அதிகாரம் துவங்கி பதினோராம் அதிகாரம் 13ஆம் வசனம் வரையிலான வேதப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கும் சம்பவங்கள், உபத்திரவக்காலத்தில் தேவனுடைய இரட்சிப்பின் திட்டங்களை, முழுமையாக அறிந்துக்கொள்ள உதவுகிறது. இந்நிலையில், ஏழாம் தூதன் எக்காளம் ஊத இருந்தான்.

ஏழாம் எக்காளம் – ராஜ்யங்கள் கர்த்தருடையதாயின!

ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின, அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின (வெளி. 11:15) என்று எழுதப்பட்டிருக்கிறது. ஏழாவது எக்காள தொனி, இயேசுகிறிஸ்துவின் வருகையையும், தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதையும், ராஜ்யங்களின்மேல் அவருடைய ஆளுகையையும், நியாயத்தீர்ப்பையும், பரிசுத்தவான்களுக்கு அருளப்படும் கிரியைகளுக்கேற்ற பலனையும் கூறி அறிவிக்கிறது. இவை யாவும் ஒரே நேரத்தில் நிகழவிருக்கிறது.

முன்னர், இனி காலம் செல்லாது; ஆனாலும் தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவரகசியம் நிறைவேறும் என்று (வெளி. 10:6) சொல்லப்பட்டது.

பாவத்தினால் அழிவுக்குட்பட்டிருக்கிற சிருஷ்டிப்பை மீட்கும் இரட்சிப்பின் திட்டங்கள் தீர்மானங்களடங்கிய நற்செய்தி, அப்பொழுது தேவரகசியமாக நிறைவேற இருக்கிறது.

மூன்றாம் ஆபத்து சீக்கிரமாய் வருகிறது என்கிற வார்த்தைகள், துரிதமாய் அடுத்தடுத்து நிகழவிருக்கும் சம்பவங்களைக் குறிக்கிறது. ஏழாம் எக்காளம் ஊதப்படுகையில், பூமியின்மேல் ஊற்றப்படவிருக்கும் ஏழு தேவனுடைய கோபகலசங்கள் விளைவிக்கும் கொடிய நியாயத்தீர்ப்புகளின் விவரங்கள், வேதாகமத்தில் 15 மற்றும் 16ஆம் அதிகாரங்களில் எழுதப்பட்டுள்ளன.

பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது!

சிங்காசனங்கள்மேல் உட்கார்ந்திருந்த இருபத்துநான்கு மூப்பர்களும் தேவனுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனை ஸ்தோத்திரித்துத் தொழுதுகொண்டார்கள். தேவனாகிய கர்த்தர் தாம் வாக்களித்ததை நிறைவேற்றும் காலம் வந்தது என்று அறிக்கையிட்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள் (வெளி. 11:16-18) என்று எழுதப்பட்டிருக்கிறது. மரித்தோர் யாவரும் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவரால் நியாயத்தீர்ப்படைகிறதற்கும்; பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கும், உபத்திரவக்காலத்துச் சாட்சிகளுக்கும் பலனளிக்கிறதற்கும், பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும், காலம் வந்தது என்று சொல்லி, அவர்கள் தேவனைத் தொழுதுகொண்டார்கள்.

அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது. அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது. அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடி முழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல்மழையும் உண்டாயின (வெளி. 11:19) என்று எழுதப்பட்டிருக்கிறது. அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம் (வெளி. 21:22) என்ற வார்த்தைகளோடு இவற்றை ஒப்பிட்டுப்பார்க்கும்போது, இவை குறியீடுகள் என நாம் அறியலாம்.

தேவனுடைய ஆலயம் என்பது, தேவனுடைய பிரசன்னத்தை குறிப்பதாகவும்; தேவனுடைய உடன்படிக்கையின் பெட்டி, உடன்படிக்கையை நிறைவேற்ற அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார் என்பதையும், இடிமுழக்கங்கள் பூமியதிர்ச்சிப்போன்றவைகள், தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தும் குறியீடுகளாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

உன் நம்பிக்கை வீண்போகாது!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார் (1 தீமோத்தேயு 2:4). அந்தப்படியே, கைவிடப்பட்ட நிலை என்றெண்ணப்படுகிற உபத்திரவக்காலத்தின் கொடூரமான நிலையிலேயும், பரிசுத்த பிதாவின் மனதுருக்கம், அழிவுக்குட்பட்டிருக்கும் ஆத்துமாக்களை மீட்கும்படியாக வெளிப்படுகிறதைத் தியானித்தோம்.

தேவனுடைய திட்டங்களும், தீர்மானங்களும் பல வேளைகளில், விளங்காப்புதிராக, தோல்வியைத் தழுவுவதைப்போன்று தோன்றினாலும்: நிச்சயமாகவே முடிவு உண்டு; நாம் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை. எதிராளிகள்மேலும் தேவனுடைய அன்பும், மனதுருக்கமும் வெளிப்படுகிறதனால், அவர் அவர்களை அழிவுக்குட்படுத்தாமல் தாமதிக்கிறார். மகா உபத்திரவக்காலத்தின் கடைசிவேளைகளிலுங்கூட, அவருடைய மனதுருக்கம் தெளிவாய் வெளிப்பட்டு, நிச்சயமாகஅழிவுக்குட்பட்டிருந்தோரும்மீட்கப்படவாய்ப்பைஅருளுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகை மிகவும் சமீபமாய் இருக்கிறது. அதற்குரிய அடையாளங்களும். முன்குறிக்கப்பட்ட சம்பவங்களும், துரிதமாய் அதனதன் வேளையில் நடந்தேறிவருகிறது. இரகசிய வருகையில் கைவிடப்பட்டோர், உபத்திரவத்தின் காலத்துக்குள் கடந்துச்சென்று, கொடூரமான வாதைகளுக்கும் நியாயத்தீர்ப்புகளுக்கும், பேரழிவுகளுக்கும் உட்பட இருக்கிறார்கள் என்கிற தெளிவான விவரங்களையும் அறிந்துக்கொண்டோம்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே, சகோதரியே, இன்னும் ஒருவேளை உன் வாழ்வில், பரிசுத்தப்பிதாவின் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும், இயேசுகிறிஸ்துவினால் அருளப்படும் இரட்சிப்பையும் விடுதலையையும் உதாசீனப்படுத்தி, அஜாக்கிரதையாய் இருப்பாயானால், இன்றே அவருடைய சத்தத்துக்குச் செவிகொடுத்து, அவருடைய சித்தம்செய்ய உன்னை ஒப்புக்கொடுப்பாயா? அர்ப்பணிக்கின்ற உன்னைக் கர்த்தர் ஆசீர்வதிப்பார்; உனக்கும் தேவனுடைய ஆலயம் திறக்கப்படும்; தேவனுடைய மகிமையுள்ள பிரசன்னம் உன்னை ஆட்கொள்ளும். இன்று அவர் உன்னோடு செய்யும் உடன்படிக்கையை நிறைவேற்ற அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். ஆமென். அல்லேலூயா!

அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி:
இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும்,
அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது.
இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு
முன்பாக நம்முடைய சகோதரர் மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு
அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான்.. ..
(வெளி. 12:10) என்று சொல்லக்கேட்டேன்.

7. வானத்தில் தோன்றும் அடையாளங்கள்!

யோவானுக்குத் தோன்றின அடையாளங்கள்!

ஏழு முத்திரைகள், ஏழு எக்காள சத்தங்களைத் தொடர்ந்து, யோவானுக்கு தரிசனத்திலே ஏழு அடையாளங்கள் காட்டப்பட்டன. அவை வெளிப்படுத்தின விசேஷம் 12,13 மற்றும் 14 ஆம் அதிகாரங்களிலே எழுதப்பட்டுள்ளன. சூரியனை அணிந்திருந்த ஸ்திரீ, சிவப்பான பெரிய வலுசர்ப்பம், இருப்புக்கோலால் ஆளுகைசெய்யும் ஆண்பிள்ளை, வானத்தில் உண்டான யுத்தம், என்பவை வானத்திலே தோன்றிய அடையாளங்களாகும். சமுத்திரத்திலிருந்து எழும்பிவரக் கண்ட மிருகம் (அந்திக்கிறிஸ்து), பூமியிலிருந்து எழும்பிவந்த மிருகம் (கள்ளத்தீர்க்கதரிசி) சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவருடன் நிற்கக் கண்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர், என்பவை பூமியிலே தோன்றியகாட்சிகளாகும்.

வெளிப்படுத்தின விசேஷம் 12ஆம் அதிகாரத்தின் தீர்க்கதரிசன வார்த்தைகள், அம்மட்டும் மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவை வரவிருந்த மேசியாவாக, தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாத இஸ்ரவேலருக்கெனப் பிரதானமாக எழுதப்பட்டிருக்கிறது. மிகுந்த உபத்திரவம் உண்டாயிருக்கும் எனக் குறப்பிடப்படுகிற ஏழு ஆண்டுகளின் கடைசிப் பகுதியில் இது நிறைவேறவிருக்கிறது. புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலரிலொரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார் என்றும் எழுதியிருக்கிறது (ரோமர் 11:25,26).

அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள், அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின்மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன (வெளி. 12:1) என்று எழுதப்பட்டிருக்கிறது. யோவான் கண்ட இந்த அடையாளம் வெளிப்படுத்துவதென்ன? முதலாவது இந்த அடையாளம் வானத்திலே தோன்றும்போது, நாம் கடைசிக் காலங்களிலே இருக்கிறோம் என்பதை இது உறுதிச்செய்யும்.

முந்நாட்களில் பரவலாகப் பேசப்பட்ட வானத்திலே தோன்றின பெரிய அடையாளத்தைக் குறித்து நம்மில் சிலர் அறிந்திருக்கிறோம். கடந்த யூபிலி ஆண்டு (2017) செப்டம்பர் 23ஆம் நாள், இந்த வசனம் விவரிக்கும் அடையாளம் வானத்தில் தோன்றியதாக வானியல் வல்லுனர்களும், வேதப்பண்டிதர்களும் குறிப்பிடுகிறார்கள். அந்நாளிலே, கன்னி (VIRGO) என்கிற நட்சத்திரக்கூட்டமும், சூரியனும்,சந்திரனும் இவ்விதமாக வானத்தில் காட்சியளித்ததாம். சிரசின்மேல் உள்ள 12 நட்சத்திர கிரீடமாக சிம்மம் (LEO) என்கிற நட்சத்திரக்கூட்டத்திலுள்ள 9 நட்சத்திரங்களுடன், 3 கிரகங்களும் அந்நாளிலே இணைந்து, அந்தக்காட்சியை நிறைவு செய்ததாம்.

எது எப்படியாக இருந்தாலும், நம்மைப் பொறுத்தவரையில் இது நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையை உறுதிச்செய்யும் மற்றுமொரு அடையாளமாக இருக்கும். ஆகையால் இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் நாம், வரவிருக்கும் மிகுந்த உபத்திரவத்தின் வேதனைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள, உண்மையாய் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிந்து தேவனிடத்தில் திரும்ப அழைக்கப்படுகிறோம்.

சரித்திரத்தின் ஏடுகளைப் புரட்டும்போது . . . .

வானத்தில் தோன்றின ஸ்திரீ மற்றும் வலுசர்ப்பத்தின் அடையாளங்கள், ஏதேன் தோட்டம் துவங்கி, உபத்திரவக்காலத்தில் அம்மட்டுமாக நடந்த, நடக்கவிருக்கும் நிகழ்வுகள் யாவற்றையும், துரிதமாக நினைப்பூட்டுவதாக அமைந்துள்ளது. ஏதேன் தோட்டத்தில் தந்திரமுள்ள சர்ப்பத்தின் செயலினால் ஸ்திரீ வஞ்சிக்கப்பட்டதை இது ஞாபகப்படுத்துகிறது. காலம் நிறைவேறும்போது, ஸ்திரீயின் வித்தான ஆண்பிள்ளை, சர்ப்பத்தின் தலையை நசுக்கப்போவதையும் முன்னறிவிக்கிறதாகவும் இருக்கிறது.

உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் (ஆதியாகமம் 3:15) என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஸ்திரீயின் வித்தான இயேசுகிறிஸ்துவை, சத்துருவானவன் பல வழிகளில், வேளைகளில் அழிக்க முற்பட்டதை வேதாகம சரித்திரத்தில் காண்கிறோம். அவருடைய இரட்சிப்பின் திட்டம் நிறைவேறாமல் தடைசெய்ய, தாமதத்தை ஏற்படுத்த அவன் விளைந்தான். இவை யாவும், பிசாசானவன் அவருடைய குதிங்காலை நசுக்குவதைப்போன்ற செயல்களாகும். ஆதிமுதல் இயேசுகிறிஸ்து தோன்றவிருந்த ஜனத்தையும், வம்சத்தையும் அழிப்பதே அவனுடைய நோக்கமாயிருந்தது.

இஸ்ரவேலர் எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்தபோது, எகிப்தின் ராஜாவான பார்வோன், எபிரெய மருத்துவச்சிகளோடே பேசி, எபிரெய ஸ்திரீகளுக்கு பிறக்கும் ஆண் பிள்ளைகளைக் கொன்றுபோடுங்கள் என்று கட்டளையிட்டிருந்தான். மருத்துவச்சிகளோ, தேவனுக்குப் பயந்ததினால், எகிப்தின் ராஜா தங்களுக்கு இட்ட கட்டளைப்படி செய்யாமல், ஆண்பிள்ளைகளையும் உயிரோட காப்பாற்றினார்கள் (யாத்திராகமம் 1:17). இதைப்போன்றே, எஸ்தர் புஸ்தகத்திலே, யூதக்குலத்தை அழிக்கும்படியாக வெளிப்பட்ட துஷ்ட ஆமானின் நயவஞ்சகத்திட்டங்கள் முறியடிக்கப்பட்டதை நாம் வாசிக்கிறோம்.

இயேசுகிறிஸ்துவின் பிறப்பின்போது, அவரைக் கொன்றுபோடும்படியான நோக்கத்தோடு, ஏரோது மன்னன் பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொலை செய்தான் (மத்தேயு 2:16) என்று எழுதப்பட்டிருக்கிறது. இயேசு வனாந்தரத்திலே பிசாசினால் சோதிக்கப்பட்டபோதும், வேதவசனங்களினாலே அவனது வஞ்சகத் திட்டங்களை மேற்கொண்டார். நிறைவில், நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, இவை யாவற்றின்மேலும் சிலுவையிலே வெற்றிசிறந்தார். ஆனாலும் அவர், துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் (கொலோசெயர் 2:15) என்று எழுதப்பட்டிருக்கிறது. அல்லேலூயா!

சூரியனை அணிந்திருந்த ஸ்திரீ!

வானத்திலே காணப்பட்ட பெரிய அடையாளத்தில் யோவான், சூரியனை அணிந்திருந்த ஒரு ஸ்திரீயைக் கண்டார். இவ்வகையான அடையாளங்கள், கர்த்தர் வெளிப்படுத்தவிருக்கும் சம்பவங்களின் குறியீடாக இருக்கின்றன. இந்த எச்சரிப்பின் அடையாளம், வானத்திலே தோன்றினாலும், இது வெளிப்படுத்தும் சம்பவங்கள் யாவும் பூமியிலே நடக்க முன்குறிக்கப்பட்டவைகளாகும். இந்த ஸ்திரீ, இயேசுகிறிஸ்து தோன்றிய இஸ்ரவேல் ஜனத்தைக் குறிக்கும் அடையாளமாகும்.

இதைப்போன்ற காட்சி, யோசேப்புக்குச் சொப்பனமாக வெளிப்பட்டதை வேதாகமத்தில் வாசிக்கிறோம். யோசேப்பு வேறொரு சொப்பனம் கண்டு, தன் சகோதரரை நோக்கி: சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் என்னை வணங்கினது என்றான் (ஆதியாகமம் 37:9). இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகையில், மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் - இஸ்ரவேலரில் - பிறந்தார் (ரோமர் 9:5) என்றும், எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார் (மீகா 5:2) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகையைத் தடைசெய்யும்படி தான் அறிந்திருந்த எல்லா வகைகளிலும் பிசாசானவன் முயற்சித்தான். மேலும் முதலாம் வருகையில், இஸ்ரவேலர் இயேசுவை, கிறிஸ்து என்னும் மேசியா என ஏற்றுக்கொள்ளாமல் தள்ளிவிட்டார்கள். ஆனால், கடைசிக்காலத்தில், இயேசுவின் இரகசிய வருகையையும், மிகுந்த உபத்திரவங்களையும் காணும்போது, அவர்கள் உணர்வடைந்து, அவரே கிறிஸ்து என அறிந்து அவரை ஏற்றுக்கொண்டு இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் (ரோமர் 11:26) என்று எழுதப்பட்டிருக்கிறது.

சிவப்பான பெரிய வலுசர்ப்பம்!

அப்பொழுது வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும், தன் தலைகளின்மேல் ஏழு

முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது (வெளி. 12:3) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த வலுசர்ப்பத்தை, உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும், சாத்தான் என்றும், சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் (வெளி. 12:9) என்று யோவான் குறிப்பிடுகிறார். முந்தின நாட்களில் தானியேல் பெற்ற தரிசனங்களையும், யோவானுக்குத் தோன்றிய காட்சிகளையும், சரித்திரத்தின் நிகழ்வுகளோடு இந்நாட்களில் ஒப்பிட்டுப் பார்த்து, வேத வல்லுனர்கள் இந்தக் குறியீடுகள் வெளிப்படுத்தும் காட்சியைத் தொகுத்து தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

ஏழு தலைகள், இஸ்ரவேல் தேசத்தை அடிமைத்தனத்திற்கும், நெருக்கங்களுக்கும் உட்படுத்தி ஆளுகைச்செய்த ஏழு ராஜ்யங்களைக் குறிக்கிறது. அதின் தலைகளின்மேலுள்ள ஏழு முடிகள் (கிரீடங்கள்), உலகத்தின் ராஜ்யங்களின்மேல் அதற்குள்ள ஆளுகையைக் காட்டுகிறது. பத்துக் கொம்புகள் பத்து நாடுகளின் கூட்டமைப்பான பத்து ராஜாக்களைக் குறிக்கிறது (தானியேல் 7:24). உலகத்தின் அதிபதியான மிருகம் என்றழைக்கப்படுகிற அந்திக்கிறிஸ்து (வெளி. 13:1), அவர்களோடு இணைந்து கடைசிக்காலங்களில் ஆளுகைச்செய்யவிருக்கிறான். வருங்காலத்தில் உயிர்ப்பிக்கப்படவிருக்கும் பத்து ராஜ்யங்களை உள்ளடக்கியதாக, இந்தக் கடைசிக்காலப் புதிய ரோம சாம்ராஜ்யம் இருக்கும் என்பதாகச் சொல்லப்படுகிறது.

இதைப்போலொத்த பிசாசின் செயல்பாடுகள், தானியேல் புஸ்தகத்திலும், எபேசியருக்கு எழுதின நிருபத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. தானியேல் உபவாசத்தோடு காத்திருந்தவேளையில், தரிசனத்தில் காணப்பட்ட புருஷன்: பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி இருபத்தொரு நாள்மட்டும் என்னோடே எதிர்த்து நின்றான்; ஆனாலும் பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல் எனக்கு உதவியாக வந்தான் (தானியேல் 10:13) என்றான். அப்போஸ்தலனாகிய பவுலும்: மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு (எபேசியர் 6:12) என்று எழுதியிருக்கிறார்.

தேவனுடைய சபையைத் துன்புறுத்தும் வலுசர்ப்பம்!

அதின் (அந்த வலுசர்ப்பத்தின்) வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கை இழுத்து, அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று;

பிரசவவேதனைப்படுகிற அந்த ஸ்திரீ பிள்ளைபெற்றவுடனே, அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது (வெளி. 12:4) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த வானத்தின் நட்சத்திரங்கள், தன்னைப் பின்பற்றும்படியாக, பிசாசினால் வஞ்சிக்கப்பட்ட மூன்றிலொருபங்கு தூதர்கள் என அறியலாம். பொய்ப்போதகம் பண்ணுகிற தீர்க்கதரிசியே வால் (ஏசாயா 9:15) என்று எழுதப்பட்டிருக்கிறது.

சாத்தானின் வாலால், பூமியில் தள்ளப்படவிருக்கிற இந்தப் பிசாசின் சேனை, கள்ளப்போதகர்கள் மற்றும் கள்ளத்தீர்க்கதரிசிகளின் ஆவிகளாக பூமியில் செயல்பட உள்ளது. பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிற பிசாசானவன், அவனுடைய பொய்யான வார்த்தைகளைப் பூமியிலே வஞ்சகமாய்ப் போதித்து மோசம்போக்க அவர்களை ஏற்படுத்தவிருக்கிறான். இவ்விதமாக, பிசாசானவன் கடைசிக்காலத்தில், பத்து நாடுகளின் கூட்டமைப்பான பத்து ராஜாக்களை, ராஜ்யங்களை வஞ்சித்து மோசம்போக்கவிருக்கிறான் என்று சொல்லப்படுகிறது.

அந்த ஸ்திரீ கர்ப்பவதியாயிருந்து, பிரசவ வேதனையடைந்து, பிள்ளைபெறும்படி வருத்தப்பட்டு அலறினாள். அவள் பிள்ளைபெற்றவுடனே, அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது. ஏதேன் தோட்டத்தில் சர்ப்பமாக வஞ்சித்த சாத்தான், 2000 வருடங்களுக்கு முன்னர் இயேசுவின் முதலாம் வருகையிலேயே, இயேசுவையும் அவருடைய மனுக்குல இரட்சிப்பின் திட்டத்தையும் சீர்க்குலைக்க முற்பட்டான். அதுவும் தோல்வியுற்றநிலையில், இந்தக் கடைசி நாட்களில், தேவனுடைய சபையைத் துன்புறுத்தி பட்சித்துப்போடும்படி செயல்படுகிறதாக அறிகிறோம்.

தேவனுடைய சபையை மிகவும் துன்பப்படுத்தி, அதைப் பாழாக்கின பவுல், தமஸ்குப் பாதையில், தன்னுடனே பேசுகிற சத்தத்தைக் கேட்டபோது: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே (அப்போஸ்தலர் 9:4,5) என்ற சம்பவத்தை நாம் அறிவோம். நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து தம்மை, தேவனுடைய சபையோடு இங்கு அடையாளப்படுத்திக்கொள்ளுகிறதைக் காண்கிறோம். பரிசுத்தவான்களின் கூட்டமைப்பான சபை மறுரூபப்பட்டு, இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படும்போது, கைவிடப்பட்டவர்களில் உபத்திரவத்தின் நாட்களில் இரட்சிக்கப்பட இருப்போரை, இவ்விதமாக அந்த வலுசர்ப்பம் எல்லாவிதத்திலும் துன்பப்படுத்த, பட்சித்துப்போட இருக்கிறதாக அறிகிறோம்.

இருப்புக்கோலால் ஆளுகைசெய்யும் ஆண்பிள்ளை!

சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகைசெய்யும் ஆண்பிள்ளையை பெற்றாள்; அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும், எடுத்துக்கொள்ளப்பட்டது. ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்; அங்கே ஆயிரத்து இருநூற்று அறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காகத் தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது (வெளி. 12:5,6) என்று எழுதப்பட்டிருக்கிறது.

சகல ஜாதிகளையும் ஆளுகைசெய்யும் ஆண்பிள்ளை என்பது, நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறது. இருப்புக்கோலால் அவர்களை நொறுக்கி, குயக்கலத்தைப்போல் அவர்களை உடைத்துப்போடுவீர் (சங்கீதம் 2:9) என்றும்; இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார் (வெளி. 19:15) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும், எடுத்துக்கொள்ளப்பட்டது என்பது இயேசுகிறிஸ்துவின் பாடு மரணம், உயிர்த்தெழுதலுக்குப் பின்னர், கர்த்தர் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்ததை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவானவர், அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார் (1 கொரிந்தியர் 15:3-5) என்றும்; தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார் (1தீமோத்தேயு 3:16) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டு வசனங்களுக்கிடையே (வெளி. 12:5,6), அதாவது அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதற்கும், ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள் என்கிற வார்த்தைகளுக்கும் இடையே, சபையின் காலம் அல்லது கிருபையின் நாட்கள் என்று சொல்லப்படுகிற சுமார் 2000 ஆண்டுகள் மறைந்துள்ளதை இந்நாட்களில் நாம் அறிய முடிகிறது. இதனிமித்தம் சில வேதபண்டிதர்கள், பிள்ளை தேவனிடத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்பது, பரிசுத்தவான்களின் கூட்டமைப்பான சபை, மறுரூபப்பட்டு இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவதைக் குறிப்பதாகவும் சொல்லுகிறார்கள். இந்தக் காட்சி, இயேசுகிறிஸ்துவின் பரமேறுதலை குறிப்பதாக எடுத்துக்கொண்டாலும், சபை மறுரூபப்பட்டு இரகசிய

வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்தாலும், இந்த அடையாளம் தோன்றியதின் நோக்கம், இயேசுவே கிறிஸ்து என்னும் மேசியா என்பதை தேவஜனமாகிய இஸ்ரவேலருக்குத் தெரியப்படுத்தி உறுதிச்செய்வதே ஆகும்.

ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்; அங்கே ஆயிரத்து இருநூற்று அறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காக தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது. மிகுந்த உபத்திரவத்தின் நாட்களில், தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிற, பாழாக்குகிற அருவருப்பு, பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது, யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள் (மத்தேயு 24:16) என்று இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார். இதைப்போல, எஞ்சியுள்ள இஸ்ரவேலரை மூன்றரை ஆண்டுகள் போஷிப்பதற்காகவும், காப்பாற்றுகிறதற்காகவும், தேவன் அவர்களுக்காக இடத்தை ஆயத்தப்படுத்த இருப்பதாக அறிகிறோம்.

வானத்தில் உண்டான யுத்தம் !

யோவானுக்கு வானத்தில் காணப்பட்ட நான்காவது அடையாளம், மிகாவேல் என்னும் பிரதான தூதனுக்கும், அவனைச் சேர்ந்த தூதர்களுக்கும், வலுசர்ப்பத்தோடே வானத்திலே ஏற்பட்ட யுத்தமாகும். வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று. உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது. அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது. அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள் (வெளி. 12:7-9) என்று எழுதப்பட்டிருக்கிறது.

தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்கள் (யூதா 1:6) என இவர்கள் குறிப்பிடப்படுகிறார்கள். இந்தப் பிசாசின் கூட்டத்தார், எழுதப்பட்டிருக்கிற இந்தவேளை துவங்கி, தேவனுடைய சன்னிதானத்திற்கு செல்லகூடாதப்படி பூமியிலே விழத்தள்ளப்படுவர் என அறிகிறோம். இங்கு பழைய பாம்பாகிய வலுசர்ப்பம், பிசாசு என்றும் சாத்தான் என்றும் அடையாளப்படுத்தப்படுகிறான். சாத்தான் என்கிற வார்த்தை, எதிராளி (Satan - Adversary) என்று பொருள்படுகிறது. பிசாசு என்பது, அவதூறு சொல்லுகிறவன் (Devil - Slanderer) என்னும்

அர்த்தமுள்ளது. அப்போஸ்தலனாகிய பவுல், அவதூறான வீண்பேச்சு பேசுகிறவர்களைக் குறிக்க, பிசாசு என்று பொருள்படும் இந்த மூல வார்த்தையையே உபயோகித்திருக்கிறார் (1 தீமோத்தேயு 3:11, 2 தீமோத்தேயு 3:3, தீத்து 2:3) என்று அறியும்போது, வீண்வார்த்தைகளைப் பேசாமலிருக்க, அதிகமாய் நாம் எச்சரிக்கப்படுகிறோம்.

அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி, இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது. இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான் (வெளி. 12;10) என்று எழுதியிருக்கிறது. நீதிமானாகிய யோபுவின்மேல் தேவசந்நிதானத்தில் குற்றம்சாட்டியதுபோல, இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகைக்கு முந்தைய நாட்களில் வாழும் நம்மேலும் பிசாசானவன், குற்றஞ்சுமத்துகிறவனாக இருக்கிறான். அவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான் என்றும், வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது என்றும் அறிவிக்கப்பட்ட வேளையிலேயே, வானத்திலே ஒரு பெரிய மகிழ்ச்சியின் ஆரவார சத்தமுண்டாகும் என அறிகிறோம்.

ஜெயங்கொடுக்கும் ஆட்டுக்குட்டியின் இரத்தம்!

மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள் (வெளி. 12:11) என்று எழுதப்பட்டிருக்கிறது. தங்களுடைய மூன்று போராயுதங்களினாலே பரிசுத்தவான்கள், உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பத்தை ஜெயிக்க இருக்கிறார்கள். முதலாவதாக, அவர்கள் தங்கள் ஜீவனை ஒரு பொருட்டாக எண்ணுகிறதில்லை. பிசாசின்மேல் ஜெயங்கொள்ள, தங்கள் ஜீவனையும் பாராமல், தேவனுடைய வாக்குத்தத்தங்களில் நம்பிக்கை உடையவர்களாய் இருப்பார்கள். மிகுந்த உபத்திரவங்களுக்கும், குறைவுகளுக்கும், வேதனைகளுக்கூடாகவும், இரத்த சாட்சிகளாக மரிக்கவும் அவர்கள் ஆயத்தமாயிருப்பார்கள்.

இரண்டாவதாக, ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் பாவங்களற சுத்திகரிக்கப்பட்டவர்களாய், அவனை மேற்கொள்ளுவார்கள். இயேசுகிறிஸ்து சிலுவையில் செய்துமுடித்த கிரியையின் நிமித்தம், அவருடைய இரத்தத்தினாலே அவர்கள் நீதிமான்களாக்கப்பட்டிருப்பார்கள். அவர்கள் மீட்கப்பட்டு, சத்துருவை மேற்கொள்ளும்படியாக, இயேசுகிறிஸ்துவின்மேல், விசுவாசமுள்ளவர்களாய் இருப்பார்கள். இயேசுகிறிஸ்து தம்முடைய இரத்தத்தால் பாவங்களுக்கான மீட்பின் கிரயத்தைச் செலுத்தி அவர்களை மீட்டுக்கொள்ளுகிறபடியால், தேவனுக்கு முன்பாக அவர்கள் குற்றமற்றவர்களாகக் காணப்படுவார்கள். அல்லேலூயா!

குமாரனாகிய அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது (கொலோசெயர் 1:14) என்றும், அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது (எபேசியர் 1:7) என்றும் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லியிருக்கிறார். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் (1 யோவான் 1:7); கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! (எபிரெயர் 9:14) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

மூன்றாவதாக அவர்கள், தங்கள் சாட்சியின் வசனத்தினால் அவனை ஜெயித்தார்கள். தங்களைச் சுற்றிலுமுள்ள பிசாசினால் வஞ்சிக்கப்பட்டோரும் மீட்கப்படும்படியாக, தேவனுடைய அன்பையும், கிறிஸ்துவின் நாமத்தினால் உண்டாகும் விடுதலையையும், தங்கள் சாட்சியின் வசனத்தினால் அவர்கள் வெளிப்படுத்துவார்கள். ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டு, சத்துருவின் வஞ்சகங்களிலிருந்து மீட்கப்பட்ட தேவஜனத்தின் அனுபவ சாட்சி, மிகவும் மேன்மையுள்ளதாயிருக்கிறது. அந்தச் சாட்சியின் வசனம், வஞ்சகங்களுக்குட்பட்டு செய்வதறியாது திகைத்து நிற்கும் அநேகரை இயேசுவினிடத்திற்கு, அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டு, கோபாக்கினைக்கு நீங்கலாக்கி அவராலே இரட்சிக்கப்படுவதற்கு வழிநடத்துகிறது. சாத்தானின் வஞ்சகங்களுக்கு முற்றிலும் மாறாக, பரிசுத்தவான்களின் சாட்சி, நற்செய்திக்கு அனல்மூட்டி, சத்தியத்தை வெளிப்படுத்துகிறது. சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் (யோவான் 8:32) என்று எழுதப்பட்டிருக்கிறது.

களிகூரும் பரலோகம், எச்சரிக்கப்படும் பூலோகம்!

ஆகையால் பரலோகங்களே! அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே! களிகூருங்கள். பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும் என்று சொல்லக்கேட்டேன். வலுசர்ப்பமானது தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து, அந்த ஆண்பிள்ளையைப்பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது (வெளி. 12:12,13) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இந்த வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கும் சம்பவம் உபத்திரவத்தின் நாட்களின் நடுவில் நடைப்பெற இருப்பதாக அறிகிறோம். தானியேலின் எழுபது வார தரிசனத்தின் அடிப்படையில், கடைசி வாரம் எனக் குறிப்பிடப்படும் ஏழு வருடங்களில் பாதி சென்றபோது, வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி, இந்த வார்த்தைகளை யோவானுக்கு வெளிப்படுத்தியது. ஒருபுறம், சாத்தானின் ஆளுகை நிறைவுக்குவர சொற்ப காலங்களே இருப்பதினால், பரலோகம் களிகூரவிருக்கிறது. மறுபுறம், பிசாசானவன் தான் செயல்படுவதற்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, எப்படியாவது எஞ்சியுள்ளவர்களை வஞ்சிக்கவேண்டும் என்று இறங்கியிருக்கிறான். இதனிமித்தம் அந்நாட்களில் ஆபத்துவரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மற்றுமொரு கோணத்திலே பார்ப்போமேயானால், பிசாசின் நாட்களும் எண்ணப்படுகிறதை இந்த வசனங்கள் தெரிவிக்கிறது. தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்த வலுசர்ப்பமானது, தன்னுடைய அழிவு நிச்சயிக்கப்பட்டிருப்பதை உணர்ந்து, அந்த ஆண்பிள்ளையைப்பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்த விரைந்தது. தேவன் செய்ய நினைத்ததைத் தடைசெய்யும்படியாக, பிசாசானவன் அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேல் ஜனங்களைத் துன்புறுத்தத் திட்டமிட்டான். தானியேலுக்கு வெளிப்படுத்தப்பட்ட கால அளவின்படி, அந்நாட்களிலிருந்து, மூன்றரை ஆண்டுகளில், பிசாசானவன் கட்டுண்டு பாதாளத்தில் தள்ளப்படவிருந்தான். பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை

மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான் (வெளி. 20:2) என்று எழுதப்பட்டிருக்கிறது.

வெள்ளம்போல் சத்துரு வரும்போது....

ஸ்திரீயானவள் அந்தப் பாம்பின் முகத்திற்கு விலகி, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்துபோகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது (வெளி. 12:14) என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆண்பிள்ளையைப் பெற்ற ஸ்திரீ என்று குறிப்பிடப்படுகிற, மீதமுள்ள இஸ்ரவேல் என்னும் விசுவாச சந்ததியாரை, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமுமாகத் துன்பப்படுத்த வலுசர்ப்பமானது முற்பட்டது. இந்தக் கால அளவு மூன்றரை வருடத்தைக் குறிக்கிறது. இதைப்போலொத்த தரிசன வார்த்தைகள் தானியேல் புஸ்தகத்திலும், உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும், பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் ஒருகாலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள் (தானியேல் 7:25) என்பதாக எழுதப்பட்டிருக்கிறது.

ஆனால், பாம்பின்முகத்திற்கு விலகி, அந்தக் காலங்களில் போஷிக்கப்படத்தக்கதாய் வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் பறந்துபோகும்படி பெருங்கழுகின் இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்பட்டது. கழுகின் சிறகுகள் என்பது கர்த்தருடைய வழிநடத்துதலையும், பராமரிப்பையும் குறிக்கிறது. இவ்வண்ணமாகவே, தேவஜனத்தை நாற்பது வருடங்களாக கர்த்தர் போஷித்து, பராமரித்து, பாதுகாத்ததை நாம் அறிவோம். கழுகு தன் கூட்டைக் கலைத்து, தன் குஞ்சுகளின்மேல் அசைவாடி, தன் செட்டைகளை விரித்து, அவைகளை எடுத்து, அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்துகொண்டு போகிறதுபோல, கர்த்தர் ஒருவரே அவனை வழி நடத்தினார் (உபாகமம் 32:11,12) என்று கர்த்தருடைய ஜனத்தை அவர் தப்புவித்து வழிநடத்தினதை மோசேயும் யோசுவாவும் ஜனங்கள் கேட்கத்தக்கதாகச் சொன்னார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது.

அப்பொழுது அந்த ஸ்திரீயை வெள்ளங்கொண்டுபோகும்படிக்குப் பாம்பானது தன் வாயிலிருந்து ஒரு நதிபோன்ற வெள்ளத்தை அவளுக்குப்

பின்னாக ஊற்றிவிட்டது. பூமியானது ஸ்திரீக்கு உதவியாகத் தன் வாயைத் திறந்து, வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து ஊற்றின வெள்ளத்தை விழுங்கினது (வெளி. 12:15,16). நதிபோன்ற வெள்ளம் என்பது, இஸ்ரவேலுக்கு விரோதமாக பிசாசும் அவனது சேனைகளும் ஏற்படுத்தவிருக்கிறத் தடைகளுக்கும், ஏவிவிட இருக்கிற எதிராளிகளின் படைகளுக்கும் குறியீடாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், பூமியே தன் வாயைத் திறந்து, அந்த வெள்ளத்தை விழுங்கினதாக எழுதப்பட்டுள்ளது. இது இந்நாட்களில் நாம் காண்கிறபடியான, பூமியதிர்ச்சி கல்மழைபோன்ற இயற்கையின் சீற்றங்களாக இருக்கலாம் எனச் சொல்லப்படுகிறது. இயற்கையின் சீற்றங்கள் சில வேளைகளில், இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவனுடைய சித்தத்தைச்செய்ய தேவனால் பயன்படுத்தப்படுகிறதை நாம் அறிந்திருக்கிறோம். இதையே, ஏசாயா தீர்க்கதரிசியும், வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார் (ஏசாயா 59:19) என்று எழுதிவைத்திருக்கிறார்.

சாட்சியின் சந்ததியைத் தொடரும் யுத்தம்!

அந்நாட்களில் எஞ்சியிருந்த இஸ்ரவேல் என்னும் விசுவாச சந்ததியாரைப் பின்தொடர்ந்து, துன்பப்படுத்த முற்பட்ட வலுசர்ப்பத்தின் வஞ்சகத் திட்டங்களும், சூழ்ச்சிகளும், செயல்களும் முறியடிக்கப்படும். இதனிமித்தம், வலுசர்ப்பமானது தனக்கிருந்த கடைசிக் காலங்களில், மீதமுள்ள அந்த ஸ்திரீயினுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று. அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக்குறித்துச் சாட்சியை உடையவர்களாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று (வெளி. 12:17) என்று எழுதப்பட்டிருக்கிறது.

யார் இந்த மீதமுள்ள ஸ்திரீயினுடைய சந்ததி? வேதவசனமே அவர்களை, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள் என்றும்; இயேசுகிறிஸ்துவைக்குறித்துச் சாட்சியை உடையவர்கள் என்றும் அடையாளங்காட்டிக்கொடுக்கிறது. இவர்கள் ஏழாம் அதிகாரத்தில்

முத்திரைபோடப்பட்ட, இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர் என்பதாக சொல்லப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலுமிருந்தும் இவர்கள் உபத்திரவக்காலத்தில் முத்திரைபோடப்பட்ட தேவனுடைய ஊழியக்காரர்கள் ஆவர். இவர்கள் கடைசிக்காலத்தில், பத்தாம் அதிகாரத்தில் யோவான் பெற்ற உக்கிராணத்துவத்தை நிறைவேற்றும் தீர்க்கதரிசிகள், ஊழியக்காரர்கள் என்பதாகப் பார்த்தோம். முக்கியமான காலக்கட்டத்தில், அவர்களுடைய தெளிவான சாட்சியின் நிமித்தம், வலுசர்ப்பமானது அவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று.

அடையாளங்கள் வெளிப்படுத்தும் எச்சரிப்பு!

இம்மட்டும் நாம் யோவானுக்கு வானத்திலே தோன்றின நான்கு அடையாளங்களைத் தியானித்தோம். இவை யாவும், இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில் கைவிடப்பட்டு, உபத்திரவக்காலத்தின் கடைசி பகுதியிலிருக்கும், இயேசுகிறிஸ்துவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளாத இஸ்ரவேலருக்கென, எழுதப்பட்டிருக்கிற தீர்க்கதரிசன வார்த்தைகள் என்பதாக அறிந்தோம். இந்நிலையில், இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையை எதிர்நோக்கி காத்திருக்கும் நாட்களில் நாம் இருக்கிறோம் என்பதை நினைவில்கொள்ள அழைக்கப்படுகிறோம். இந்த அடையாளங்கள், இந்நாட்களில் இன்னும் கர்த்தருடைய வருகையைக் குறித்து தெளிவற்ற நிலையிலிருக்கும் அனைவருக்கும் எச்சரிப்பாகவும் அமைந்துள்ளதை உணர முடிகிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து சீக்கிரமாய் வரவிருக்கிறார். அதற்குரிய அடையாளங்களாக விவரிக்கப்பட்டிருக்கிற சம்பவங்கள், துரிதமாய் அதனதன் வேளையில் நடந்தேறிவருகிறது. சென்னைப் பட்டணத்தில் 2015ஆம் ஆண்டில் ஏற்பட்ட வரலாறு கண்டிராத வெள்ளத்திற்கு நம்மில் அநேகர் சாட்சிகளாக இருக்கிறோம். மேலும், 2017 ஆம் ஆண்டில் வானத்திலே காணப்பட்ட அடையாளத்தைப்பற்றின செய்திகளை நாம் கேள்விப்பட்டோம். கடந்த நாட்களில் (ஆகஸ்ட் 2018), கேரள மாநிலத்தைச் சேதப்படுத்திய தொடர்மழைக்கும், வெள்ளத்திற்கும், பேரழிவுகளுக்கும் நாமே சாட்சிகள். தொடர்ச்சியாக வெளிப்படும் பேரழிவுகளும், அடையாளங்களும், கர்த்தருடைய அதிசீக்கிரமான வருகையை வெளிப்படுத்தி, நம்மை எச்சரிக்கிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே, சகோதரியே, நீ உன் வாழ்வில், இன்னும் ஒருவேளை பாவமன்னிப்பின் நிச்சயத்தோடும், நித்தியராஜ்யத்தின் உறுதியோடும் இல்லாதிருப்பாயானால், இன்றே மனந்திரும்பி, இயேசுவின் நாமத்தில் உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, இயேசுவின் இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட்டுப் பரிசுத்தமடைய உன்னை ஒப்புக்கொடுப்பாயா? அர்ப்பணிக்கின்ற உன்னைக் கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

மேலும், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதானக் கடைசிக்காலத்தில் நீ இருக்கிறாய் என்பதை நினைவில்கொள்ள அழைக்கப்படுகிறாய். பிசாசின் இவ்வகையான வஞ்சகங்களையும், தந்திர மந்திரங்களையும் மேற்கொள்ள, மூன்று போராயுதங்கள் பிரயோகிக்கப்பட்டதாகப் பார்த்தோம். அவர்கள் தங்கள் ஜீவனையும் பாராமல், விசுவாசத்தில் சற்றும் தளராது, தேவனுடைய வாக்குத்தத்தங்களில் நம்பிக்கை உடையவர்களாய், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்பட்டவர்களாய், அவனை மேற்கொண்டு, தங்கள் சாட்சியின் வசனத்தினால் அவனை ஜெயித்தார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தரால் மீட்டெடுக்கப்பட நீயும் அவ்விதமாக, தேவனுக்கு முன்பாக சாத்தானின் குற்றசாட்டுகளிலிருந்து தப்பி, முடிவுபரியந்தம் விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும், உண்மையிலும் மனத்தாழ்மையிலும் நிலைத்திருந்து இரட்சிக்கப்பட, பூரணக்கிருபையைக் கர்த்தர் தாமே தந்தருள்வாராக. ஆமென். அல்லேலூயா!

இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக:
ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.
கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி,
கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப்
பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.
இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்.
(மத்தேயு 24:4,24,25).

8. பூமியில் தோன்றும் அடையாளங்கள்!

வேஷம் தரித்த வஞ்சகக் கூட்டம்!

வானத்தில் தோன்றும் நான்கு அடையாளங்களைத் தொடர்ந்து, வெளிப்படுத்தின விசேஷம் 13ஆம் அதிகாரத்தில், பூமியிலே யோவான் கண்ட இரண்டு காட்சிகள் விவரிக்கப்பட்டுள்ளன. முதலாவதாக சமுத்திரத்திலிருந்து எழும்பிவரவிருந்த மிருகத்தையும் (வெளி. 13:1-10), அடுத்து பூமியிலிருந்து வெளிப்படவிருந்த மிருகத்தையும் (வெளி. 13:11-18) யோவான் கண்டார். வலுசர்ப்பமும், சமுத்திரத்திலிருந்து எழும்பி வரும் மிருகமும், பூமியிலிருந்து எழும்பும் மிருகமும், ஒரு வஞ்சகக் கூட்டணியாய்ச் செயல்படவிருக்கிறது.

வலுசர்ப்பம் எனப்படும் பிசாசானவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான். அவன் தெய்வீக திரித்துவத்தைப்போன்று வேஷம்தரித்து, ஒரு போலியான, வஞ்சகத் தோற்றத்தைத் தானும் ஏற்படுத்துவான். இந்த வேதப்பகுதி, இரகசிய வருகையில் கைவிடப்பட்டு, அந்நாள் வரை மனந்திரும்பாதோர், இந்த வஞ்சகக் கூட்டத்தால் ஏமாற்றப்பட்டு, அழிவிற்குட்படவிருப்பதை மறுபடியும் நினைப்பூட்டி எச்சரிக்கிறது.

அவர்கள் தேவனுடைய கோபாக்கினைக்குட்பட்டு, அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவார்கள்; அவர்களுக்கு இரவும் பகலும் இளைப்பாறுதலிராது என்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு முற்றிலும் மாறாக, தேவனுடைய கற்பனைகளையும், இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்கள், தங்கள் விசுவாசத்தினிமித்தம் கர்த்தருக்குள் மரிக்கநேரிட்டாலும், அவர்கள் பாக்கியவான்களாகத் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம் என்று எழுதப்பட்டிருக்கிறது. அல்லேலூயா!

சமுத்திரத்திலிருந்து எழும்பிவந்த மிருகம்!

வெளிப்படுத்தின விசேஷம் 13ஆம் அதிகாரத்தில், யோவான் கண்ட இரண்டு மிருகங்கள், பிசாசானவனின் ஆளுகைக்குட்பட்ட உலகத்தின் அரசியல் மற்றும் மதத்தலைவர்களைக் குறிக்கிறது. சமுத்திரத்திலிருந்து எழும்பி வரக் கண்ட முதலாம் மிருகம், வலுசர்ப்பத்தின் பிரதிபலிப்பாக இருக்கும். கிறிஸ்துவுக்கும், கிறிஸ்துவைச் சார்ந்தவர்களுக்கும் விரோதமான அரசியல் மற்றும் சமூகப் பொருளாதாரச் சக்திகளின் குறியீடாக இருப்பதனால், அந்த மிருகம் "அந்திக்கிறிஸ்து" என்று அறியப்படும். பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டதுமல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின் மேலும் பாஷைக்காரர்மேலும் ஜாதிகள்மேலும் அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது (வெளி. 13:7).

சமுத்திரம், திரளான தண்ணீர்கள் என்பவைகள், ஜனங்களும் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாம் (வெளி. 17:15) என்று எழுதப்பட்டிருக்கிறது. இப்படியாக, புறஜாதிகளிலிருந்து எழும்பவிருக்கும் அந்த மிருகத்திற்கு ஏழு தலைகளும் பத்துக்கொம்புகளும் இருந்தன; அதின் கொம்புகளின் மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன (வெளி. 13:1). வலுசர்ப்பத்தைப்போன்றே ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் உடையதாய் இருந்தாலும், அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன.

வலுசர்ப்பம் தன் தலைகளின்மேல் ஏழு முடிகளையுடையதாய் இருந்தது (வெளி. 12:3). அந்த ஏழு முடிகள் (கிரீடங்கள்), உலகத்தின் ராஜ்யங்களின்மேல் அதற்குள்ள ஆளுகையைக் காட்டுகிறது என முன்னர் பார்த்தோம். வலுசர்ப்பம் தீயசக்திகளின் உறைவிடமும், கோட்டையுமாக இருந்து ஆளுகைச்செய்ய இருக்கிறது. முதலாம் மிருகத்தின் கொம்புகளின் மேலிருக்கிற கிரீடங்கள், வலுசர்ப்பத்தினிடமிருந்து அது பெற்றுக்கொண்ட அரசியல் மற்றும் சமூகப் பொருளாதார ஆளுகையைக் குறிக்கிறது. அதின் தலைகளின்மேலிருந்த தூஷணமான நாமம், தேவனுக்கு விரோதமாக செயல்படும் சாத்தானின் குணாதிசயங்களைப் பெற்றுக்கொண்ட அந்திக்கிறிஸ்துவின் தன்மைகளை வெளிப்படுத்துகிறது.

இந்தத் தோற்றம், தானியேல் புஸ்தகம் ஏழாம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற தரிசனத்தைப்போன்றிருக்கிறது. கி.மு.550ஆம் ஆண்டில் தானியேல் கண்ட இந்தத் தரிசனம், பல காலக் கட்டங்களில் நிறைவேறினதாக அறிகிறோம். இன்னும் சில தரிசனப் பகுதிகள் வரும் நாட்களில் நிறைவேற நியமிக்கப்பட்டருக்கிறது. நிறைவில், வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்; அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்; சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் என்றான் (தானியேல் 7:27) என்று எழுதப்பட்டிருக்கிறது.

யோவான் கண்ட அடையாளங்கள், தானியேலின் தரிசனத்திற்கு 650 ஆண்டுகளுக்குப் பின்னர் கி.பி. 96ஆம் ஆண்டில் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது. தோற்றத்தில் இந்தத் தரிசனம் தானியேலின் சொப்பனத்தைப்போலிருந்தாலும், அண்மையானதும், மேம்பாடான காரியங்களை உள்ளடக்கியதுமான, யோவான் கண்ட தரிசனங்களை, கடைசிக்காலத்தில் நமக்கருளப்பட்டிருக்கும் தெளிவோடும், தகவல்களோடும் இணைத்து தியானிப்பது நமக்குப் பிரயோஜனமாயிருக்கும்.

சரித்திரத்தில் தோன்றி நாசமடைந்த ராஜ்யங்கள்!

அந்த ஏழு தலைகளும் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகளாம். அவர்கள் ஏழு ராஜாக்களாம்; இவர்களில் ஐந்துபேர் விழுந்தார்கள். ஒருவன் இருக்கிறான், மற்றவன் இன்னும் வரவில்லை, வரும்போது அவன் கொஞ்சக்காலம் தரித்திருக்கவேண்டும். இருந்ததும் இராததுமாகிய மிருகமே எட்டாவதானவனும், அவ்வேழிலிருந்து தோன்றுகிறவனும், நாசமடையப் போகிறவனுமாயிருக்கிறான் (வெளி. 17:9-11) என்று எழுதப்பட்டிருக்கிறது.

ரோமாபுரி நகரம் ஏழு மலைகளின்மேல் கட்டப்பட்டுள்ளது என்பது நாமறிந்த சரித்திர உண்மை. அந்த ஸ்திரீ, தேவனுடைய எதிர்பார்ப்புகளுக்கு மாறுபட்ட தன்மைகளையுடைய, பொய்யான மதவழிபாட்டுமுறையின் குறியீடாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஏழு தலைகள், ஏழு ராஜ்யங்களைக் குறிக்கிறது. சரித்திரத்திலே இந்த ராஜ்யங்கள், தேவஜனத்தை அம்மட்டும் அடிமைத்தனத்திற்கும், உபத்திரவங்களுக்கும், உட்படுத்தினவைகளாகும். இவைகள் சரித்திரத்தில் தோன்றி அழிந்து மறைந்ததைப்போல, அந்திக்கிறிஸ்துவின் ராஜ்யமும் கடைசிக்காலத்தில்

தோன்றி நாசமடையவிருக்கிறது. முடிவில், உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாகி, அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம்பண்ணுவார். உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் ராஜரீகத்தைப்பெற்று, என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ராஜ்யத்தைச்சுதந்தரித்துக்கொள்வார்கள் (தானியேல் 7:18). அல்லேலூயா!

யோவான் இந்தத் தரிசனத்தைப்பெற்ற நாட்களில் (கி.பி. 96), இதில் ஐந்து உலக ராஜ்யங்களின் காலங்கள் நிறைவுபெற்றிருந்தது. அவை எகிப்து, அசீரியா, பாபிலோன், மேதிய-பெர்சிய ராஜ்யம் மற்றும் கிரேக்க சாம்ராஜ்யம் என வேதவல்லுனர்கள் குறிப்பிடுகிறார்கள். ரோமப்பேரரசு ஆறாவது ராஜ்யம் எனவும், ஏழாவது ராஜ்யம் அக்காலத்தில் வரவில்லை என்றும் அறிகிறோம். இந்த ஏழாவது சாம்ராஜ்யம், கடைசிக்காலத்தில் வரவிருக்கிற புதிய ரோம சாம்ராஜ்யம் என்பதாக சொல்லப்படுகிறது. அந்திக்கிறிஸ்து என்று குறிப்பிடப்படுகிற மிருகம், இந்த ஏழாவது ராஜ்யத்தோடு சம்பந்தப்பட்ட எட்டாவது ராஜ்யத்தை ஸ்தாபித்து, நிறைவில் நாசமடையவிருக்கிறான்.

நீ கண்ட பத்துக் கொம்புகளும் பத்து ராஜாக்களாம்; இவர்கள் இன்னும் ராஜ்யம் பெறவில்லை, இவர்கள் மிருகத்துடனேகூட ஒருமணி நேரமளவும் ராஜாக்கள்போல அதிகாரம் பெற்றுக்கொள்ளுகிறார்கள் (வெளி. 17:12) என்று எழுதப்பட்டிருக்கிறது. பத்துக் கொம்புகள் பத்து நாடுகளின் கூட்டமைப்பான பத்து ராஜாக்களைக் குறிக்கிறது (தானியேல் 7:24). அவர்களோடு இணைந்து, உலகத்தின் அதிபதியான மிருகம் என்றழைக்கப்படுகிற அந்திக்கிறிஸ்து (வெளி. 13:1) கடைசிக்காலங்களில் ஆளுகைச் செய்யவிருக்கிறான். ஒரு மணிநேர அளவு என்பது, சரித்திரத்திலே திட்டவட்டமான குறுகிய காலத்தைக் குறிக்கிறது. இந்தக் கடைசிக்கால புதிய ரோம சாம்ராஜ்யம், வருங்காலத்தில் உயிர்ப்பிக்கப்படவிருக்கும் பத்து அரசாங்கங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

சாவுக்கேதுவாய்க் காயப்பட்ட மிருகம்!

நான் கண்ட மிருகம் சிறுத்தையைப்போலிருந்தது; அதின் கால்கள் கரடியின் கால்களைப்போலவும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப்போலவும் இருந்தன; வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது (வெளி. 13:2) என்று எழுதப்பட்டிருக்கிறது. தானியேலின் தீர்க்கதரிசனங்களோடு

ஒப்பிட்டுப்பார்க்கும்போது, சிங்கம், கரடி, சிறுத்தை என்பவை பாபிலோன், மேதிய-பெர்சிய ராஜ்யம் மற்றும் கிரேக்க சாம்ராஜ்யங்களைக் குறிக்கிறது. கடைசிக்காலங்களில் தோன்றவிருக்கும் மிருகம், இந்த ராஜ்யங்களின் ஒருங்கிணைந்தத் தன்மைகளை உடையதாக இருக்கும். அதாவது, அதிகாரமும், ஆளுகையும், வல்லமையும், துரிதமாக செயல்படும் திறன் உடையதாகவும் இருக்கும். இவைகளுக்கும் மேலாக, வலுசர்ப்பமானது, தன் பலத்தையும், மிகுந்த அதிகாரத்தையும், தன் சிங்காசனத்தையும் அதற்குக் கொடுக்கவிருந்தது.

அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன்; ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி, அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். அல்லாமலும்: மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்? என்று சொல்லி, மிருகத்தையும் வணங்கினார்கள் (வெளி. 13:3,4) என்றும், சாவுக்கேதுவாய்க் காயப்பட்டு, அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்ட மிருகமே, பட்டயத்தினாலே காயப்பட்டு பிழைத்த மிருகம் (வெளி. 13:14) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

தேவஜனத்தை அடிமைத்தனத்திற்கும், உபத்திரவங்களுக்கும் உட்படுத்திய ஆறாவது ரோம சாம்ராஜ்யம் சாவுக்கேதுவாய்க் காயப்பட்டு அழிவுக்குட்படுத்தப்பட்டது. அந்த ரோம சாம்ராஜ்யம், இந்நாட்களில் சிதைக்கப்பட்டு, முந்தின மேன்மையையும் பொலிவையும் இழந்து காணப்படுகிறது என்பது வரலாறு. ஆனாலும் சாவுக்கேதுவாய்க் காயப்பட்ட அந்த மிருகமே, காயம் சொஸ்தமாக்கப்பட்டு ஏழாவது சாம்ராஜ்யமாக, கடைசிக்காலத்தில், ராஜ்யங்களின் கூட்டமைப்பாகப் புதிய ரோம சாம்ராஜ்யமாக உருவாகும் என்று சொல்லப்படுகிறது.

மேலும் இதைக்குறித்து: நீ கண்ட மிருகம் முன்னே இருந்தது, இப்பொழுது இல்லை; அது பாதாளத்திலிருந்து ஏறிவந்து, நாசமடையப்போகிறது. உலகத்தோற்றமுதல் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள், இருந்ததும், இராமற்போனதும், இனி இருப்பதுமாயிருக்கிற மிருகத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள் (வெளி. 17:8) என்று எழுதப்பட்டிருக்கிறது. முன்னே இருந்தது, இப்பொழுது இல்லை என்பது, உபத்திரவத்தின் காலத்தில், புத்துயிர்பெற்று மறுபடியும் ஸ்தாபிக்கப்படவிருக்கும் ஏழாவதான கடைசிக்காலப் புதிய ரோம சாம்ராஜ்யத்தைக் குறிக்கிறது.

இந்தக் காட்சி, வரலாற்றில், ஆயிரக்கணக்கான வருஷங்களையும் ராஜ்யங்களையும் தாண்டிக் கடைசிக் காலத்திற்கு மாறுகிறது. புதிய ரோம சாம்ராஜ்யம் என்றழைக்கப்படுகிற பத்து ராஜ்யங்களின் கூட்டமைப்பிலிருந்து தோன்றவிருக்கிற அந்திக்கிறிஸ்துவைப் பூமியிலுள்ளோர் வணங்கவிருக்கிறார்கள். பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி, அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்குவார்கள். அல்லாமலும்: மிருகத்திற்கு ஒப்பானவர் யார்? அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்? என்று சொல்லி, மிருகத்தையும் வணங்குவார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது.

பெருமையானவைகளைப் பேசும் வாய்!

பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது. அல்லாமலும், நாற்பத்திரண்டு மாதம் யுத்தம்பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. அது தேவனைத் தூஷிக்கும்படி தன் வாயைத் திறந்து, அவருடைய நாமத்தையும், அவருடைய வாசஸ்தலத்தையும், பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷித்தது (வெளி. 13:5,6) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும் (வெளி. 12:12) என்று சொல்லப்பட்ட வார்த்தையை நினைவில்கொள்ளுவோம். மகா உபத்திரவத்தின் காலம் என்று குறிப்பிடப்படுகிற, கடைசி நாற்பத்திரண்டு மாதக்காலத்தில், பெருமையையும் தூஷணங்களையும் பேசி பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ண, அந்த மிருகம், வலுசர்ப்பத்தினிடத்திலிருந்து அதிகாரம் பெற்றிருக்கும். அது துணிகரமாகத் தேவனையும் அவருடைய நாமத்தையும், பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷிக்கும்.

இந்நாட்களிலும், தேவஜனத்துக்கு விரோதமாக எழும்பும் இவ்வகையான எதிர்வல்லமைகளை மேற்கொள்ள, கர்த்தரிலும் அவருடைய வல்லமையிலும் பலப்பட நமக்கு ஆலோசனை அருளப்பட்டிருக்கிறது. கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத்

திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள் (எபேசியர் 6:10,11) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பரிசுத்தவான்களை ஜெயிக்கும்படிக்கு அதிகாரம்!

மேலும், பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டதுமல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின்மேலும் பாஷைக்காரர்மேலும் ஜாதிகள்மேலும் அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது. உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள் (வெளி. 13:7,8) என்று எழுதப்பட்டிருக்கிறது. இரகசிய வருகையில் கைவிடப்பட்டு, உபத்திரவக்காலத்திற்குள் தள்ளப்படவிருக்கிற தேவஜனம், தங்கள் அபாத்திர நிலையை உணர்ந்து இரட்சிக்கப்படுவதற்கு, தேவன் கடைசிக்கால ஊழியங்களை ஏற்படுத்தியிருப்பதாக முன்னர் பார்த்தோம். இப்படியாக பரிசுத்தவான்களாக்கப்பட்டவரோடு யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு மிருகத்திற்கு அதிகாரங்கொடுக்கப்படவிருக்கிறது.

இந்த யுத்தம், இரண்டு வகையான விளைவுகளை ஏற்படுத்த வாய்ப்புண்டு. ஒன்று மீட்கப்பட்ட பரிசுத்தவான்கள், யுத்தத்திலிருந்து தப்பிப்பிழைக்க, கிறிஸ்துவின்பேரிலுள்ள விசுவாசத்தைவிட்டு, மிருகத்தை வணங்குவதற்கு தங்களை ஒப்புக்கொடுப்பதாகும். மற்றொன்று, விசுவாசத்தில் அம்மட்டும் நிலைத்திருப்பவர்களில் அநேகர், இயேசுவுக்கு சாட்சியாக இரத்தஞ்சிந்தி மரிப்பதாக இருக்கும் என்றுணர முடிகிறது. இதனிமித்தமே, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களின் தொகை நிறைவாகுமளவும், இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பதாக (வெளி. 6:9-11) அறிகிறோம்.

விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டு, அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவன் என்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்

(2 தெசலோனிக்கேயர் 2:3,4). மேலும், உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள் (வெளி. 13:8) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

காதுள்ளவன் கேட்கக்கடவன்!

காதுள்ளவனெவனோ அவன் கேட்கக்கடவன். சிறைப்படுத்திக்கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப்போவான்; பட்டயத்தினாலே கொல்லுகிறவன் பட்டயத்தினாலே கொல்லப்படவேண்டும். பரிசுத்தவான்களுடைய பொறுமையும் விசுவாசமும் இதிலே விளங்கும் (வெளி. 13:9,10) என்று எழுதப்பட்டிருக்கிறது. காதுள்ளவன் கேட்கக்கடவன் என்கிற சொற்றொடர் ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களில் இடம்பெற்றிருப்பதை அறிவோம். இது சொல்லப்பட்ட சத்தியத்தின் முக்கியத்துவத்தையும், நிச்சயத்தையும் வெளிப்படுத்துகிறது.

வரவிருக்கிற அந்நாட்களில், உலகமனைத்தும் தேவனுக்கு விரோதமாக கூடி நிற்கிறவேளையில், கர்த்தரைச் சார்ந்து, விசுவாசத்தில் நிலைத்திருந்து, துன்பங்களையும் உபத்திரவங்களையும் பொறுமையாக சகித்துச் சாட்சியாகச் செயல்படுவது மிகவும் கடினமே. இது எஞ்சியுள்ள உபத்திரவக்கால பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்படுகிற சவாலாகத் தோன்றும். இந்தச் சவாலை ஏற்றுச் செயல்படும் பரிசுத்தவான்கள், ஒருவேளை சிறைப்படுத்தப்பட்டு பட்டயத்தினாலே கொல்லப்படலாம். ஆனாலும், அவர்கள் விசுவாசிக்கிற, ஆராதிக்கிற தேவன் அவர்களை, அவர்களுடைய ஆத்துமாக்களைத் தப்புவிக்க வல்லவராயிருப்பார். தேவனுடைய பரிசுத்தவான்களை, சிறைப்படுத்திக்கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப்போவான்; பட்டயத்தினாலே கொல்லுகிறவன் பட்டயத்தினாலே கொல்லப்படுவான். அல்லேலூயா!

பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பாரென்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம். ஜீவனுள்ள தேவனுடைய கைகளிலே விழுகிறது பயங்கரமாயிருக்குமே (எபிரெயர் 10:30,31) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இவற்றைப் பார்க்கும்போது, உபத்திரவக்காலம் என்பது விசுவாசிகளுக்கும், பிசாசுக்கும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளுக்கும், பிசாசின் வஞ்சகங்களுக்குச் செவிகொடுத்து

விசுவாசத்தைவிட்டு விலகிப்போனவர்களுக்கும், விரோதமான போராட்டங்களின் உச்சக்கட்டமாக இருக்கும் என அறியலாம்.

பூமியிலிருந்து எழும்பக் கண்ட மிருகம்!

பின்பு, வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன்; அது ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாயிருந்து, வலுசர்ப்பத்தைப்போலப் பேசினது. அது முந்தின மிருகத்தின் அதிகாரம் முழுவதையும் அதின் முன்பாக நடப்பித்து, சாவுக்கேதுவான காயம் ஆறச்சொஸ்தமடைந்த முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படி செய்தது (வெளி. 13:11,12) என்று எழுதப்பட்டிருக்கிறது. முதலாம் மிருகம் சமுத்திரத்திலிருந்து எழும்பிவரக் கண்ட யோவான், பின்பு, வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டார். இந்த மிருகங்கள், பிசாசானவனின் ஆளுகைக்குட்பட்ட உலகத் தலைவர்கள் என்பதாகப் பார்த்தோம்.

இரண்டாம் மிருகம் ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக வேஷம்தரித்து இரண்டு கொம்புகளையுடையதாயிருந்தது. கொம்புகள் அதிகாரத்தைக் குறிக்கிறது. சாந்த குணமுள்ளதாக, சாதுவாக, தன்னை வெளிப்படுத்தும் இந்த மிருகம், தன்னுடைய தோற்றத்தினாலும், சுபாவத்தினாலும் அநேகரை வஞ்சிக்கும் என்பதாகச் சொல்லப்படுகிறது. மேலும் இந்த இரண்டாம் மிருகம், வலுசர்ப்பத்தைப்போலப் பேசும் ஆற்றலைப்பெற்றிருந்து, வஞ்சகமான பேச்சினால் பிசாசின் வல்லமைகளை, இந்த மிருகம் வெளிப்படுத்த உள்ளது.

இதுவே, முதலாம் மிருகத்திற்காகப் பேசும் கள்ளத்தீர்க்கதரிசியாகச் செயல்படவிருக்கிறது. ஆட்டுக்குட்டியைப்போல காணப்பட்டாலும், வலுசர்ப்பத்தைப்போல அது வஞ்சகமாய்ப் பேசும். உலகளவில் மதவழிபாட்டுமுறைகளில், இந்த இரண்டாம் மிருகம் முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் வணங்கும்படி செய்யும்.

பூமியின் குடிகளை மோசம்போக்கும் கள்ளத்தீர்க்கதரிசி!

அன்றியும், அது மனுஷருக்கு முன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப்பண்ணத்தக்கதாகப் பெரிய அற்புதங்களை நடப்பித்து, மிருகத்தின் முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்கி,

பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லிற்று (வெளி. 13:13,14).

கள்ளத்தீர்க்கதரிசியாக வஞ்சகமாகப் பேசும் ஆற்றலைப்பெற்றிருந்த மிருகம், பெரிய அற்புதங்களை நடப்பித்து, முதலாம் மிருகத்தை அனைவரும் வணங்கி ஆராதிக்கத் தூண்டும். மேலும், முதலாம் மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லும். இதையே, அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவன் என்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான் என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார்.

எஞ்சியிருப்போரையும் வஞ்சிக்கும்படியாக, அந்நாட்களில் சாத்தான், இந்த இரண்டாம் மிருகத்தினால் செய்யப்படவிருந்த அற்புதங்களையும் அடையாளங்களையும் வடிவமைத்து இருப்பான். அக்கிரமத்தின் இரகசியம் என்றும், கேட்டின் மகனாகிய பாவமனுஷன் என்றும் குறிப்பிடப்படுகிறவன், சாத்தானின் பொய்யான அற்புதங்களுக்கும், அடையாளங்களுக்கும், வல்லமைக்கும், வஞ்சகங்களுக்கும் இசைந்து வெளிப்பட இருக்கிறான்.

இதனிமித்தம் எல்லா அற்புதங்களும், அடையாளங்களும் தேவனால் உண்டாகிறவைகள் அல்ல என்பதை அறிந்து ஜாக்கிரதையாய் செயல்பட நாம் அழைக்கப்படுகிறோம். ஏனென்றால், இந்நாட்களிலும், இந்த இரண்டாம் மிருகத்தைப்போன்ற செயல்பாடுகள், பரவலாகக் காணப்பட்டு தெரிந்துகொள்ளப்பட்ட அநேகரையும் வஞ்சிக்கிறதை நாம் அறிந்திருக்கிறோம்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும், அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் (மத்தேயு 7:22,23) என்றார் என்பதை நாம் அறிவோம்.

பேசத்தக்கதான மிருகத்தின் சொரூபம்!

மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலைசெய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட்டது (வெளி. 13:15). என்னதொரு வினோதமான செயல்! முதலாம் மிருகத்திற்குச் செய்யப்படவிருக்கிற சொரூபம் பேசத்தக்கதாக மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட இருக்கிறது.

சொரூபம் பேசத்தக்கதாக, அதற்கு ஆவியைக் கொடுக்கும்படியான சத்துவம் என்பது, முந்தினக் காலங்களில் ஒரு விளங்கிக்கொள்ளக்கூடாததான புதிராக இருந்தது. இந்நாட்களில் அது அப்படியல்லவென்று நம்மில் சிலர் அறிந்திருக்கிறோம். சீர்த்திருத்த சபையின் தந்தை என்றழைக்கப்படும் மார்டின் லூத்தர் அவர்களின் சீர்த்திருத்த இயக்கத்தின் ஐந்தாம் நூற்றாண்டு நிறைவு, 2017ஆம் ஆண்டு உலகமெங்கும் நினைவுகூறப்பட்டது. லூத்தர் அவர்கள் தன்னுடைய சீர்த்திருத்த கொள்கைகளை முதலாவதாக ஜெர்மனி நாட்டின் விட்டென்பெர்க் நகர தேவாலயத்தின் சுவற்றில் தொங்கவிட்டு பிரகடனப்படுத்தினார் என்பது வரலாறு.

அதே விட்டென்பெர்க் நகரத்தில் ஒரு தேவாலயத்தின் உள்ளே, பேசத்தக்கதான ஒரு பெரிய சொரூபத்தை, சீர்த்திருத்த இயக்கத்தின் ஐந்தாம் நூற்றாண்டின் நினைவாக, 2017ஆம் ஆண்டு, ஒரு சபையார் நிறுவியிருக்கிறார்கள். இந்தச் சொரூபம் வரவிருக்கும் கடைசிக்கால நிகழ்வுக்கு முன்னோடிபோன்று தோன்றுகிறது. இயந்திரப் போதகர் (Robot Priest Blessu - 2) என்றழைக்கப்படும் இந்தச் சொரூபம், ஐந்து மொழிகளில் ஆசீர்வாத வார்த்தைகளை வெளிப்படுத்தி கைகளை உயர்த்தி, ஆசீர்வதிக்கும் ஆற்றலுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில், தேர்வு செய்யும் தலைப்புக்கேற்ற ஆசீர்வாத வார்த்தைகள், அச்சிடப்பட்டும் தரப்படுகிறதாம்.

முன்னோடியான இந்த இயந்திரப் போதகருக்கும் மேலாக, உபத்திரவக்காலத்தில் வெளிப்படவிருக்கும் சொரூபம், அதை வணங்காத யாவரையும் கொலைசெய்யத்தக்கதாக, சத்துவத்தைப் பெறவிருக்கிறது. இன்றைய நாட்களின் தொழில்நுட்பமே இவ்வித வளர்ச்சிகளுக்கு போதுமானதாகத் தோன்றுகிறது. இதற்கும் மேலாக, குறிப்பிட்டக் காலத்திற்குச்

செயல்படும்படியாக, அந்த மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியை கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட்டது என்று எழுதப்பட்டிருக்கிறது.

கடைசிக்கால மிருகத்தின் முத்திரை!

கடைசிக்காலம் என்று குறிப்பிடப்படுகிற உபத்திரவக்காலத்தின் நாட்களில், அந்த மிருகம் பூமியிலிருப்போர் யாவரும், தன் முத்திரையையாவது, நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளச் செய்யுமாம். அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும், அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது (வெளி. 13:16,17) என்று எழுதப்பட்டிருக்கிறது.

எல்லாருக்கும் வெளிப்படையாகத் தெரியும்வகையில், அதைத் தங்கள் நெற்றிகளில் தரித்துக்கொள்ளவோ, அல்லது சற்று மறைவாக தங்கள் வலதுகைகளில் அணிந்துகொள்ளவோ அந்நாட்களில் அவர்களுக்கு சுதந்தரம் கொடுக்கப்படும். ஆனால், அந்த முத்திரையை யாவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது, மறைமுகமாக நிர்ப்பந்திக்கப்படவிருப்பதாக அறிகிறோம். முத்திரையை அந்நாட்களில் தரித்துக்கொள்ளாதவன், எந்தவொரு பொருளையும் வாங்கவோ விற்கவோ கூடாதபடிக்கு அந்த மிருகம் செய்யும் என்பதாக எழுதப்பட்டிருக்கிறது.

இரகசிய வருகையில் இயேசுகிறிஸ்துவோடு எடுத்துக்கொள்ளப்படும் வாய்ப்பைத் தவறவிடுகிறவர்கள், உபத்திரவக்காலத்திற்கு உட்படுவார்கள் என அறிந்திருக்கிறோம். அந்த வாய்ப்பை இழந்தவர்கள், அவ்வேளையில், தங்கள் பாவங்களினிமித்தம் மனஸ்தாபப்பட்டு, அறிக்கையிட்டு, பாவமன்னிப்பைப்பெற்று, மறுபடியும் கர்த்தரோடு ஒப்புரவாகும்போது, தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ளுவது, அவர்களுக்கு ஒரு பெரிய சவாலாக இருக்கும். கடைசி நாட்களில், மிருகத்தின் முத்திரையைப் பெறாவிட்டால், உண்ண ஆகாரங்கூட கிடைக்காது என அறிகிறோம்.

இதைப்போன்றே, ஏதேன் தோட்டத்தில் ஏவாளும், வனாந்தரத்திலே நம்முடைய இரட்சகர் இயேசுகிறிஸ்துவும், உணவினாலே சோதிக்கப்பட்டதை அறிந்திருக்கிறோம்.

மனுஷக்குமாரனாகிய இயேசுகிறிஸ்து, சாட்சியின் வசனத்தினாலே சாத்தானின் சோதனையை மேற்கொண்டார். ஆனால், மனுக்குலம் அந்தச் சோதனையில் விழுந்தது. இயேசு: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார் (மத்தேயு 4:4). மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள் (வெளி. 12:11) என்கிற வசனத்தின்படி, உபத்திரவத்தின் காலத்தில், இந்த முத்திரையைப் பெறாமல், தேவனைச் சார்ந்து சாட்சியாக வாழ, இரத்தஞ்சிந்தி மரிக்கவேண்டியிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

உலகமயமாக்குதல் எனும் வஞ்சகம்!

இதிலே, அந்த மிருகத்தின் இலக்கத்தையும் அதன் தாக்கங்களையும் அறிந்து உணர்ந்துகொள்ளுவதிலே, ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப்பார்க்கக்கடவன்; அது மனுஷருடைய இலக்கமாயிருக்கிறது. அதினுடைய இலக்கம் அறுநூற்று அறுபத்தாறு (வெளி. 13:18) என்று எழுதப்பட்டிருக்கிறது. சபையின் சரித்திரத்திலே, இவற்றைச் சார்ந்து, அநேக வேத ஆராய்ச்சியாளர்களும் நிபுணர்களும், தங்களுக்குத் தோன்றின முறைகளின்படி, இந்த எண்ணை, பல உலக அரசியல் மற்றும் மதத்தலைவர்களின் பெயர்களோடு இணைத்து வெளிப்படுத்தியிருக்கும் கருத்துக்களை நம்மில் சிலர் அறிந்திருக்கிறோம்.

தேவன் தம்முடைய சாயலாக ஆறாம் நாளிலே மனுஷனைச் சிருஷ்டித்ததின் நிமித்தம், ஆறு என்கிற எண், மனுஷருடைய இலக்கம் எனப்படுகிறது. எனவே மனுஷன் சிருஷ்டிப்பின் சிகரமாக இருந்து, சிருஷ்டிப்பின் தேவனுடைய ஒத்தாசையில்லாமல், எல்லாவற்றையும் தானே பார்த்துக்கொள்ளுவான் எனும் தவறான போதகம், மற்றொருபுறம் முன்னிலைப்படுத்தப்படுகிறது. பிசாசினால் இயக்கப்படும் அந்திக்கிறிஸ்துவை, மனிதத்தலைவர்களை வழிபடும் வஞ்சகங்களுக்கு,

இந்தத் தவறான மதவழிபாட்டுமுறை, அடிப்படையும் காரணமுமாக அமையவிருக்கிறது.

தேவனுடைய ஒத்தாசையின்றி, மனிதக்குலம் சுயாதீனமாகச் செயல்பட பிசாசானவன் விரும்புகிறான். அதற்கென உலகமயமாக்குதலையும் மதவழிபாட்டுமுறைகளையும், உலகத்தின் பிரச்சனைகளின் தீர்வாக முன்னிறுத்தி யாவரையும் வஞ்சிக்கிறான். இவைகளுக்கு முன்னோடியாக, உலகமயமாக்கும் கொள்கை, வர்த்தகத்திலும் பொருளாதாரத்திலும், நாம் வாழும் இந்நாட்களிலேயே பிரதானப்படுத்தி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறதைக் காண்கிறோம். உபத்திரவத்தின் காலத்தில், உலகளவில் ஒரே அரசாங்கம் ஆளுகை, மதவழிபாட்டுமுறை, உலகப் பொருளாதாரக் கொள்கைபோன்றவை ஏற்படுத்தப்பட்டு, அதற்கு உடன்படாதோர் அழிவிற்குட்படும் சூழ்நிலை உருவாகவிருக்கிறது.

பூமியின் அடையாளங்கள் வெளிப்படுத்தும் எச்சரிப்பு!

யோவான் பூமியில் காணவிருக்கும் இரண்டு மிருகங்கள், பிசாசானவனின் ஆளுகைக்குட்பட்ட உலகத் தலைவர்கள் எனவும், அவர்கள் அந்திக்கிறிஸ்து மற்றும் கள்ளத்தீர்க்கதரிசி என்பதாகவும் பார்த்தோம். சாத்தானும், அந்திக்கிறிஸ்துவும், கள்ளத்தீர்க்கதரிசியுடன் கூட்டணிச்சேர்ந்து வஞ்சகமாய் செயல்படவிருப்பதாக அறிந்தோம். வலுசர்ப்பம் என்று குறிப்பிடப்படுகிற பிசாசானவன், இவ்விதமாகத் தெய்வீகத் திரித்துவத்தைப்போன்று வேஷம்தரித்து, ஒரு போலியான தோற்றத்தை ஏற்படுத்தி, அநேகரை வஞ்சிக்கவிருக்கிறான்.

இந்த வேதப்பகுதியில், கடைசிக்கால முத்திரைப்போன்ற கருத்துக்களை முழுமையாக விளங்கிக்கொள்ளத் தேவையான விவரங்களும் விளக்கங்களும் தெளிவும், முந்தினக் காலங்களில் இல்லாதிருந்தது. இந்நாட்களின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியும், தொகுக்கப்பட்ட தனி மனிதரைப்பற்றிய விவரங்களும், அவைகளைத் துரிதமாய் பகுத்தறியும் வசதிகளும் வாய்ப்புகளும், இந்த வேதப்பகுதியை இன்னும் சற்றுத் தெளிவாக அறிந்துணர உதவுகிறது. இதற்கு உதாரணமாக, மனிதருடைய கைரேகைகளை எடுத்துக்கொள்ளலாம். கைரேகைகள் தனித்தன்மை வாய்ந்தவை என்பதை அறிவோம்.

கைரேகையை வைத்து எந்த ஒரு தனி மனிதனையும் துல்லியமாக அடையாளம் காணமுடியும். நாட்டிலுள்ள எல்லா மனிதருடைய

கைரேகைபோன்ற தனித்தன்மை வாய்ந்த அனைத்து விவரங்களையும் பொதுவாகச் சேமித்துவைத்து, தேவையானபோது ஒப்பிட்டுப்பார்த்து அடையாளங்காணும் தொழில்நுட்பமும் வசதிகளும் இப்பொழுது நம்நாட்டிலும் பயன்பாட்டில் உள்ளது. சேகரிக்கப்பட்ட தனி மனிதரின் விவரங்களை, ஏமாற்றுவதற்கு வாய்ப்பின்றிப் பாதுகாக்க, இந்த விவரங்களை ஒரு அரிசி மணி அளவிலான நுண்ணிய மின் தகட்டில் பதிவுசெய்து, மனிதரின் வலது கையிலோ அல்லது நெற்றியிலோ பதிக்கும் பணி சில நாடுகளில் பழக்கத்தில் உள்ளது. இதுவே உபத்திரவக்காலத்தில் பொருட்களை வாங்கவும் விற்கவும் தேவையான முத்திரை என்பதாகத் தோன்றுகிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, பரந்த நம் தேசத்திலும், தேவையான அனைத்து விவரங்களையும் சேகரித்து, வசதிகளை ஏற்படுத்தி, தனி மனிதரின் அடையாளத் தகவல்கள், இப்பொழுது பல துறைகளில் உபயோகத்திலுள்ளன. தேவைப்படும்போது, முத்திரைகளைப் பதிக்கும் பணிகளையும் குறுகியக் காலத்திலே அமல்படுத்துவதும் இப்பொழுது சாத்தியமாக உள்ளது. உபத்திரவக்காலத்திலே நடைபெறவிருக்கும் நிகழ்வுக்கே, சகலமும் ஆயத்தமாக உள்ள நிலையில், அதற்கு முந்தைய நிகழ்வான இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகை மிக மிகச் சமீபமாக இருக்குமல்லவா?

காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்!

ஆகையால் இயேசு, இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார் (லூக்கா 21:36). தன்னுடைய வாழ்வின் கடைசி மணித்துளியில் இயேசுவைச் சிலுவையில் நோக்கிப்பார்த்து இரட்சிக்கப்பட்ட அந்தக் கள்ளனை நினைத்துக்கொள்ளுவோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் இந்தக் கடைசி நாட்களிலும், ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு இவ்விதமாக உதவிசெய்ய ஆயத்தமாயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நாம் எதைக் கேட்டாலும் அதைச் செய்வேன் என்று கர்த்தர் வாக்கருளியிருக்கிறார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரனே, சகோதரியே, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள

அழைப்பைப்பெற்றிருக்கிறாய். என் வசனத்தை நீ காத்துக் கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனைக்காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன் (வெளி. 3:10) என்று கர்த்தர் வாக்கருளியிருக்கிறார்.

இந்த அழைப்பை, சத்திய வசனங்களை, இம்மட்டும் நீ ஒரு பொருட்டாக எண்ணாமலும், இதைக் குறித்துச் சிந்தியாமலும் இருந்திருப்பாயானால், இந்நாளிலாவது இயேசுகிறிஸ்துவை நோக்கிப்பார்த்து, அவருடைய சத்தத்துக்குச் செவிகொடுப்பாயா? அவருடைய அழைப்பையேற்று அர்ப்பணிக்கின்ற உன்னைக் கர்த்தர் ஆசீர்வதிப்பார். வரப்போகிற சோதனைக்காலத்திற்குத் தப்புவிப்பார்; உபத்திரவக்காலத்தின் வேதனைகளிலிருந்து விடுவிப்பார். ஆமென். அல்லேலூயா!

இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்;
ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு,
நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி
உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்.
அவர் பாவஞ்செய்யவில்லை,
அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை.
(1 பேதுரு 2:21,22).

௯. சீயோன் மலையில் தேவனுடைய ஊழியக்காரர்!

இம்மட்டும் வெளிப்பட்டவைகளின் தொகுப்பு!

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பெரிதான கிருபையினாலே, வேதாகமத்தின் வெளிப்படுத்தின விசேஷத்தில் தொகுக்கப்பட்டுள்ள தரிசனங்களைத் தொடர்ச்சியாகத் தியானித்து வருகிறோம். இந்தத் தொடரில், நான்காம் அதிகாரம் துவங்கி பதின்மூன்றாம் அதிகாரம் வரையிலான வேதப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிற சத்தியவசனங்களையும், அதன் விளக்கங்களையும் அறிந்தோம். ஆயத்தமாயிருக்கும் பரிசுத்தவான்களின் கூட்டமைப்பான சபை மறுரூபப்பட்டு, ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருக்கும் என்கிற நிகழ்வின் விவரங்களை, இதன் துவக்கமாக அறிந்துகொண்டோம். இவ்விதமாக எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருக்கும்படியாக, சபை மறுரூபப்பட்டு, ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்வை "இரகசிய வருகை" என்கிறோம்.

பின்னர், மிகுந்த உபத்திரவம் உண்டாயிருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கும் காலங்களைப்பற்றியும், வெளிப்படவிருக்கும் நியாயத்தீர்ப்புகளையும், வாதைகளைப்பற்றியும் அறிந்தோம். இவற்றினிடையே விவரிக்கப்பட்டிருக்கும் சம்பவங்கள், கடைசிக்கால நிகழ்வுகளைத் தொடர்ச்சியாக நாம் அறிந்துகொள்ள உதவுகிறது எனப் பார்த்தோம். மேலும், கடைசிக்கால ஊழியங்களையும், அவைகள் தேவனுடைய அன்பை விளங்கச்செய்யவிருப்பதையும் அறிந்தோம்.

எஞ்சிய கடைசிக்கால நிகழ்வுகளான, ஏழு கோபக்கலச நியாயத் தீர்ப்புகளையும், பாபிலோனின் இரகசியம் என்று குறிப்பிடப்படுகிற மாறுபட்ட மதவழிபாட்டுமுறையின் அழிவையும், இதைத் தொடர்ந்து தியானிக்கவிருக்கிறோம். ஆட்டுக்குட்டியானவரின் திருமணத்தையும், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பரிசுத்தவான்களுடன் பூமியிலே ஆளுகைசெய்யும்படியாக வரவிருப்பதையும், ஆயிரங்கால அரசாட்சியையும், ஆயிரம் ஆண்டுகளுக்குச் சாத்தான் பாதாளத்தில் கட்டப்பட்டுப் பின்னர் நியாயந்தீர்க்கப்பட்டு அக்கினிக்கடலில் தள்ளுண்டு போகவிருப்பதையும் அறிந்துகொள்ள இருக்கிறோம். தங்கள் தங்கள் கிரியைகளின்படியே யாவரும் பின்னர் நியாயத்தீர்ப்படைய இருக்கிறார்கள். நிறைவில், தேவனுடைய அநாதித் தீர்மானத்தின்படி, வாக்கருளப்பட்ட புதிய வானம், புதிய பூமி, புதிய எருசலேம் யாவும் உண்டாக்கப்பட இருக்கின்றன. அல்லேலூயா!

தரிசனப் புஸ்தகத்தின் அடைப்புப் பகுதிகள்!

வெளிப்படுத்தின விசேஷப் புஸ்தகத்தில் தொகுக்கப்பட்டிருக்கும் கடைசிக்கால நிகழ்வுகளுக்கு இடையே, இவைகளைச் சார்ந்த சில சம்பவங்கள், இவற்றிற்கு விளக்கம் அளிக்கும்வகையில், மூன்று பிரதான பகுதிகளாக இணைக்கப்பட்டுள்ளன. இவைகள் கடைசிக்கால நிகழ்வுகளையும், தேவனுடைய திட்டங்களையும், நாம் தொடர்ச்சியாகவும் முழுமையாகவும் அறிந்துகொள்ள உதவுகிறது. இந்தச் சம்பவங்களை, அடைப்புப்பகுதிகள் (Parenthetical Passages) என சில வேத ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

முதலாவதாக, ஆறாம் முத்திரை உடைக்கப்படுவதற்கும் ஏழாம் முத்திரைக்கும் இடையே, ஏழாம் அதிகாரத்தில் இரண்டு சம்பவங்கள் இணைக்கப்பட்டுள்ளன. முதலாவது, இஸ்ரவேலரில் முத்திரிக்கப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் தேவனுடைய ஊழியக்காரரைப் பற்றியதாகும். அடுத்தது, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைகளிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான, ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலே மீட்கப்பட்ட திரளான கூட்டமாகிய ஜனங்களைக் குறித்ததாகும்.

இரண்டாவது பகுதி, ஆறாம் எக்காளம் ஊதப்படுவதற்கும், ஏழாம் எக்காளம் ஊதப்படுவதற்கும் இடையே, வெளி.10:1 முதல் 11:13 வசனங்களில்

இணைக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதி, கடைசிக்கால ஊழியங்களாக விவரிக்கப்பட்டிருக்கிற, திறக்கப்பட்ட சிறு புஸ்தகத்தையும், இரண்டு சாட்சிகளையும் உள்ளடக்கியிருக்கிறது. மூன்றாவதாக, 12ஆம் அதிகாரம் துவங்கி 14ஆம் அதிகாரம் வரையிலான வேதப்பகுதி இணைக்கப்பட்டுள்ளது. இவற்றில், வானத்தில் தோன்றும் நான்கு அடையாளங்களும், பூமியில் காணப்படும் மூன்று அடையாளங்களும் விவரிக்கப்பட்டுள்ளன.

வானத்தில் தோன்றும் அடையாளங்களையும், பூமியிலே காணப்படும் இரண்டு மிருகங்களின் காட்சிகளையும் தொடர்ந்து, யோவான், சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரையும், நிற்கக் காண்கிறார். இந்தக்காட்சியும் சம்பவங்களும், வெளிப்படுத்தின விசேஷம் பதினான்காம் அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளன. உபத்திரவக்காலத்தின் நிறைவில், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பரிசுத்தவான்களுடன் பூமியிலே ஆளுகைச்செய்யும்படியாக வரவிருப்பதையும், அதைத் தொடர்ந்து, பூமியின் அறுப்புக்காலம் நியமிக்கப்பட்டிருப்பதையும் இது முன்னறிவிக்கிறது. பதினான்காம் அதிகாரம், இந்தத் தரிசனப் புஸ்தகத்தின் எஞ்சிய அதிகாரங்கள் வெளிப்படுத்தும் கடைசிக்காலத்தின் உச்சக்கட்ட நிகழ்வுகளைப் புரிந்துகொள்ள உதவியாக எழுதப்பட்டுள்ளன.

பிதாவின் நாமம் தரித்த ஊழியக்காரர்!

பின்பு நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக்கண்டேன் (வெளி. 14:1) என்று யோவான் எழுதியிருக்கிறார். முன்னதாக, வெளிப்படுத்தின விசேஷம் ஏழாம் அதிகாரத்தில், இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரைபோடப்பட்ட தேவனுடைய ஊழியக்காரர் இவர்களே. இந்த இஸ்ரவேலர், இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது, அவரோடேகூட எடுத்துக்கொள்ளப்பட ஆயத்தமாயிராதவர்கள் என

அறிந்தோம். இவர்கள் இரகசிய வருகைக்குப் பின்னர், இயேசுவே மேசியா என்றும், கிறிஸ்து என்றும் அறிந்து, தொடர்ந்து வரவிருந்த உபத்திரவங்களுக்கு நீங்கலாகும்படியாக முத்திரிக்கப்பட இருந்தார்கள்.

பதினான்காம் அதிகாரத்தில், இவர்கள் மறுபடியும் யோவானுக்கு சீயோன் மலையில் காணப்படுகிறார்கள். இந்த வேதப்பகுதியில் இவர்களுடைய தன்மைகளும், குணாதிசயங்களும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ளன. இவர்கள் பூமியிலே, முன்னர் எருசலேம் தேவாலயம் அமைந்திருந்த, சீயோன் மலையில் தோன்ற இருக்கிறார்கள். கடைசிக்காலத்தில், மிகுந்த உபத்திரவத்தின் நாட்களில், இவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட இரட்சிப்பின் நற்செய்தியை அறிவிக்கும்பணி கொடுக்கப்பட இருப்பதை முன்னர் தியானித்தோம்.

மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையுங் குறித்துத் தீர்க்கதரிசனஞ் சொல்லவேண்டும் (வெளி. 10:11) என்ற கட்டளையை யோவான் ஒரு குறியீடாக பெற்றிருக்கலாம் என அறிந்தோம். அந்தப்பட்சத்தில், நெற்றிகளில் முத்திரைபோடப்பட்டு ஆயத்தமாக இருக்கிற தேவனுடைய ஊழியக்காரரே (வெளி. 7:3) இப்பணிக்கென முன்குறிக்கப்பட்டவர்கள் எனப் பார்த்தோம். தொடர்ந்து வரவிருந்த உபத்திரவங்களுக்கு நீங்கலாகும்படியாக, முத்திரைப்போடப்பட்டவர்களாய், கடைசிக்காலத்தின் இரகசியமாகிய மேம்படுத்தப்பட்ட இரட்சிப்பின் நற்செய்தியைப்பெற்று, தீர்க்கதரிசனம் உரைத்து, எஞ்சியுள்ளோரை சத்தியத்துக்குள்நடத்த இவர்கள் ஏற்படுத்தப்பட இருக்கிறார்கள்.

ஆட்டுக்குட்டியானவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த ஊழியக்காரர், தேவனாலே தமக்கெனப் பிரித்தெடுக்கப்பட்டவர்கள் ஆவர். ஆவிக்குரிய நிலையில் சத்தியவசனத்தைச் சார்ந்த உண்மை சபை என்று அறியப்பட்டிருக்கிற பிலதெல்பியா சபையின் தன்மைகளை இவர்கள் உடையவர்களாய் இருப்பார்கள். ஏனென்றால், பிலதெல்பியா சபையைக்குறித்து, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை, என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்து இறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன் (வெளி. 3:12) என்று ஆவியானவர் சொல்லியிருக்கிறார்.

பூமியிலிருந்து மீட்கப்பட்டோர் பாடின புதுப்பாட்டு!

பூலோகத்தில், சீயோன் மலையில் யோவான் கண்டகாட்சி, சடிதியாகப் பரலோகத்தின் சிங்காசனத்திற்கு முன்பாக இருப்பதாக மாறுகிறது. யோவான் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்கிறார். அது தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் நிற்பவர்கள் பாடினப் புதுப்பாட்டின் சத்தம் என அறிகிறோம். அந்தப் பாட்டின் சத்தம், பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப்போலும் இருந்ததாம்.

அல்லாமலும், பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன், நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப்போலிருந்தது. அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் புதுப்பாட்டைப் பாடினார்கள்; அந்தப் பாட்டு பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரேயல்லாமல் ஒருவரும் கற்றுக்கொள்ளக்கூடாதிருந்தது (வெளி. 14:2,3) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இவர்களே அல்லாமல், பூமியிலே அந்தப் பாட்டை, ஒருவரும் கற்றுக்கொள்ளக்கூடாதிருந்தது. அந்தக் காலக்கட்டத்தில் அவர்கள் பூமியிலே சீயோன் மலையில் காணப்பட்டாலும், ஆவியில் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கிறவர்களோடே அடையாளப்படுத்தப்பட்டு, அந்தப் பாடலைக் கற்றுக்கொண்டு, எப்பொழுதும் தேவனை மகிமைப்படுத்துகிறவர்களாக இருப்பார்கள் என அறிகிறோம்.

பூமியிலே ஒருவரும் கற்றுக்கொள்ளக்கூடாதிருந்த அந்தப் பாடல் என்ன? அது ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலே மீட்கப்பட்டவர்கள் மட்டுமே கற்றுக்கொண்டு தேவனைத் துதித்துப் பாடும் பாடல் என அறியலாம். இதைப்போலொத்த சூழ்நிலையில், சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கிற மீட்கப்பட்டவர்கள் தேவனைத் துதித்துப் பாடின பாடல், இந்த பாடலை நிதானித்தறிய உதவுகிறது.

ஆட்டுக்குட்டியானவர் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலிருந்த முத்திரிக்கப்பட்ட புஸ்தகத்தை வாங்கினபோது,

ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக அவர்கள் வணக்கமாய் விழுந்து: நீர் அடிக்கப்பட்ட, சகல பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்ற உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோமென்று புதிய பாட்டைப் பாடினார்கள் (வெளி. 5:9,10) என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள்!

ஆட்டுக்குட்டியானவரோடே கூட நிற்கக்கண்ட தேவனுடைய ஊழியக்காரரின் தன்மைகள் இங்கு விவரிக்கப்பட்டுள்ளன. ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே, கற்புள்ளவர்கள் இவர்களே (வெளி 14:4) என்று எழுதப்பட்டிருக்கிறது. இது, மாம்சீக இச்சைகளை வெறுத்து, திருமண வாழ்வைத் துறந்து, கர்த்தருக்குப் பிரியமானவைகளைச்செய்ய அர்ப்பணித்திருக்கிறவர்களைக் குறிக்கிறது. விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, கர்த்தருக்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான், விவாகம்பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாம் என்று, உலகத்திற்குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான் (1 கொரிந்தியர் 7:32,33) என்று பவுல் எழுதியிருக்கிறார்.

மற்றொரு கண்ணோட்டத்தில், இஸ்ரவேலரில் முத்திரிக்கப்பட்ட இந்த தேவனுடைய ஊழியக்காரர், திருமண உறவிற்குட்பட்டிருந்தாலும், அந்த உறவிற்குப் புறம்பான மாம்சீக இச்சைகளை வெறுத்து, பரிசுத்தமாகத் தங்களைக் காத்துக்கொண்டவர்களைக் குறிப்பதாகச் சொல்லப்படுகிறது. வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும் (1 கொரிந்தியர் 7:1,2) என்று அப்போஸ்தலனாகிய பவுல் ஆலோசனையாக எழுதியிருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தின் நாட்களிலும் சீர்திருத்த சபை வரலாற்றிலும், திருமண உறவு, தனிப்பட்ட ஊழியக்காரரின் விருப்பத்திற்குட்பட்டுள்ளதாக இருந்து வருகிறது. சத்தியவசனத்தின்படி, நீ பேதுருவாயிருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக்கட்டுவேன் என்று சொல்லப்பட்ட பேதுரு, திருமணமானவரே (1 கொரிந்தியர் 9:5). மேலும், பவுல் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய்

நடத்துகிறவனுமாய் இருக்கவேண்டும் (1 தீமோத்தேயு 3:2,4) என்று எழுதியிருக்கிறார். விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக, வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார் (எபிரெயர் 13:4). ஆனால், மாறுபட்ட பாபிலோனிய மதவழிபாட்டுமுறையிலே, ஊழியக்காரர் திருமண வாழ்வைத் துறந்து தனித்திருக்க, பதினோராம் நூற்றாண்டிலிருந்து நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறார்கள் என அறிகிறோம்.

ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றுகிறவர்கள்!

ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே, இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள் (வெளி. 14:4) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த தேவனுடைய ஊழியக்காரர், இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில் கைவிடப்பட்டு, பின்னர் உபத்திரவக்காலத்தின் துவக்கத்தில், இயேசுவே தாங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த மேசியா என்று அறிந்து அவரை ஏற்றுக்கொண்ட இஸ்ரவேலர் ஆவர். மேலும், இவர்கள் இஸ்ரவேலின் கோத்திரங்களிலிருந்து முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டு முத்திரிக்கப்பட்டவர்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும் இஸ்ரவேலரிலொரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப்பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார் என்றும்; நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது (ரோமர் 11:25-27).

இயேசுவே மேசியா என்று ஏற்றுக்கொண்டு, ஆயத்தமாயிருந்த இஸ்ரவேலரெல்லாரும், "கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள்" என்ற அடையாளத்தோடு, இரகசிய வருகையின்போது, மறுரூபமடைந்து கர்த்தரோடு எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பார்கள். ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும் (மத்தேயு 24:14) என்ற வார்த்தை இந்தக் காலக்கட்டத்தில் நிறைவேறியிருக்கும். இரகசிய வருகையில் மறுரூபமடைந்து சபை

எடுத்துக்கொள்ளப்படும்போது புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் என அறியலாம். இதற்குப் பின்னர், கடினமான மனதுடைய இஸ்ரவேலரிலொரு பங்கு முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்படுவார்கள். இந்த மீட்கப்பட்ட இஸ்ரவேலர், சிலுவையில் அறையுண்ட மேசியாவை அடையாளம் கண்டு, ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்களாய் இருப்பார்கள்.

சிங்காசனத்திற்கு முன்பாக மாசில்லாதவர்கள்!

தேவனால் முத்திரிக்கப்பட்ட ஊழியக்காரருடைய வாயிலே கபடம் காணப்படவில்லை, இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக மாசில்லாதவர்களாயிருக்கிறார்கள் (வெளி. 14:5) என்று எழுதப்பட்டிருக்கிறது. முத்திரிக்கப்பட்ட ஊழியக்காரர், தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக மாசில்லாதவர்களாய் இருப்பார்கள். இதற்கு முற்றிலும் மாறாக, பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் பரிசுத்த நகரத்திற்குப் புறம்பே இருப்பார்கள் (வெளி. 22:15) என்ற சொல்லப்பட்டிருக்கிறது.

கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள் (பிலிப்பியர் 2:15,16) என்று பவுல் ஆலோசனையாக எழுதியிருக்கிறார். பிசாசானவன், பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறான். ஆனால், தேவனுடைய ஊழியக்காரர், தேவனுடைய மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே, மாசற்றவர்களாய் நிறுத்தப்படுவார்கள்.

மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் (மத்தேயு 12:36,37) என்று இயேசு சொல்லியிருக்கிறார். நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை

(1 பேதுரு 2:21,22) என்று எழுதப்பட்டிருக்கிறது. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இந்த ஊழியக்காரர், வீணான வார்த்தைகளைப் பேசாமல், நீதிமான்களாய்த் தீர்க்கப்படுகிறதாக அறிகிறோம். அல்லேலூயா!

நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது!

பின்பு, வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்; அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து, மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுது கொள்ளுங்களென்று கூறினான் (வெளி. 14:6,7).

கடைசிக்காலம், நியாயந்தீர்க்குங்காலம் என்ற நிலைமாறி, இந்த வேதப்பகுதி, நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை, என்று சொல்லப்படுகிற கடைசி மணித்துளிகளுக்குள்ளாக இருப்பதைச் சுட்டிக்காட்டி அறிவிக்கத்தக்கதான நித்திய சுவிசேஷமாக குறிப்பிடப்பட்டுள்ளது. தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புகொடுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையேதொழுதுகொள்ளுங்கள்என்று அந்தத்தூதன்கூறினான்.

அந்தத் தூதன் சகல மனுஷருக்கும் நித்திய சுவிசேஷத்தை அறிவிப்பான். சகல மனுஷர் என்பது, அந்நாட்களில் முத்திரிக்கப்பட்ட தேவனுடைய ஊழியரையும்; கிறிஸ்துவைத் தள்ளி அந்திக்கிறிஸ்துவின் அடையாளத்தைத் தரித்துக்கொண்டவர்களையும்; அந்த அடையாளத்தைப் பெற்றுக்கொள்ளாமல் மீதமிருக்கும் மனுஷரையும் குறிப்பதாக எடுத்துக்கொள்ளலாம். தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவரைத் தொழுதுகொள்ளுங்கள் என்கிற செய்தி, இவர்களில், இன்னும் எந்த அடையாளத்தையும் பெற்றுக்கொள்ளாமல் இருப்போரை உற்சாகப்படுத்தும் வார்த்தைகளாகத் தோன்றுகின்றன.

பாபிலோன் மகா நகரம் விழுந்தது !

வேறொரு தூதன் பின்சென்று: பாபிலோன் மகா நகரம் விழுந்தது! விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக்கொடுத்தாளே! என்றான் (வெளி. 14:8). பாபிலோன், தேவனுடைய எண்ணங்களுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் புறம்பான மாறுபட்ட மதவழிபாட்டுமுறைக்கும், ஆளுகைக்கும் ஒரு குறியீடாக உள்ளது. பாபிலோன் என்கிற வார்த்தை, பாபேல் என்கிற எபிரெய வார்த்தையைத் தழுவினதாகும்.

பூமியெங்கும் ஒரே பாஷையும், ஒரேவிதமான பேச்சும் இருந்த காலத்தில், நமக்கு ஒரு கோபுரத்தைக் கட்டி, நமக்கு பேர் உண்டாகப்பண்ணுவோம் என்று ஜனங்கள் சொல்லிக்கொண்டதை ஆதியாகமம் பதினோராம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அப்பொழுது கர்த்தர் அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்கி, அவர்களை பூமியெங்கும் சிதறிப்போகப்பண்ணினார். அதனால் அதின் பேர் பாபேல் எனப்பட்டது. பாபேல், பாபிலோன் என்பவை தேவனுக்கு விரோதமான, தாறுமாறான குழப்ப நிலையைக் குறிக்கிறது.

மேலும், பாபிலோன், போலியான கிறிஸ்தவ வாழ்வுமுறையை, ஆளுகையை வெளிப்படுத்துகிறது. அது மனமேட்டிமையையும், தனிமனிதர் வழிபாட்டையும், விக்கிரக ஆராதனையையும், உலகத்தின் ஆசாபாசங்களையும் சார்ந்து சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆவிக்குரிய வேசித்தனத்தினாலும், கட்டுக்கடங்காத மாம்சீக உணர்வுகளினாலும், பாபிலோன், சகல ஜாதிகளையும் தேவனுக்குவிரோதமாகச் செயல்படும்படிவஞ்சித்துப்போடவிருக்கிறது.

இந்த வசனம், பொய்யும், வஞ்சகமும், மாயையுமான மதவழிபாட்டுமுறையின் அழிவை முன்னுரைக்கிறது. இங்கு பாபிலோன் நகரத்தின் அழிவு நிச்சயிக்கப்பட்டு, இந்தத் தூதனால் சொல்லப்பட்டாலும், வரவிருக்கும் பதினேழு மற்றும் பதினெட்டாம் அதிகாரங்களில், அதன் விவரங்களும் விளக்கங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு முறை 'விழுந்தது' என்று சொல்லப்பட்டிருப்பது, அழிவின் நிச்சயத்தை உறுதிச்செய்கிறது. மேலும், இது இரண்டு நிலைகளில் பாபிலோன் அழிவை வெளிப்படுத்துகிறது. மதவழிபாட்டுமுறையின் அழிவையும் (17ஆம் அதிகாரம்), அரசியல் பொருளாதார வர்த்தக அழிவையும் (18 ஆம் அதிகாரம்) இது குறிப்பதாக இருக்கலாம் எனவும் சொல்லப்படுகிறது.

சகல மனுஷரும் மிருகத்தின் அடையாளத்தைப்பெற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவார்கள். தேவனுடைய ஆலயத்தில் அந்திக்கிறிஸ்து தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்க இருக்கிறான். அம்மட்டும், இந்த வஞ்சக வழிபாட்டுமுறையையும், ஆளுகையையும், அந்திக்கிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசியும், தங்களுடைய ஆதாயத்திற்கென பயன்படுத்திக்கொள்வார்கள். அதற்கென அவர்கள் உலகமயமாக்குதலை, உலகத்தின் பிரச்சனைகளுக்குத் தீர்வாக முன்னிறுத்தி யாவரையும் வஞ்சிக்க இருக்கிறார்கள் என முன்னர் பார்த்தோம். இதனால், உபத்திரவத்தின் காலத்தில், உலகளவில் ஒரே அரசாங்கம் ஆளுகை, மதவழிபாட்டுமுறை, உலகப் பொருளாதார கொள்கை, வர்த்தகம், போன்றவை ஏற்படுத்தப்பட இருக்கிறது என்பதாக அறியலாம்.

முத்திரையைத் தரித்தவன்மேல் கோபாக்கினை !

மூன்றாம் தூதன், மிருகத்தையும் அதின் சொரூபத்தையும், வணங்குவதைக் குறித்து எச்சரிக்கிறான். உலகத்தின் அதிபதியின் முத்திரையைத் தங்கள் நெற்றிகளிலாவது கைகளிலாவது தரித்துக்கொள்ளுகிறதோ நிராகரிப்பதோ, அவர்களுடைய அழிவைத் தீர்மானிக்கும் முக்கியமான முடிவாயிருக்கும். இது அவர்கள் மிருகத்தை வணங்குவதையோ அல்லது புறக்கணிப்பதையோ வெளிப்படுத்தும். மிருகத்தை வணங்கி ஆராதிப்பவர்கள், தேவனுடைய கோபாக்கினையினால் பாதிக்கப்பட்டு, அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவார்கள். மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாதவர்கள்மேல் அந்திக்கிறிஸ்து, பொருளாதாரத் தடைகளை விதித்து, அந்நாட்களில் எஞ்சியிருப்போரை நிர்ப்பந்திப்பான் என அறிந்தோம்.

அவர்களுக்குப் பின்னே மூன்றாம் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான் (வெளி. 14:9,10) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இங்கு வெளிப்படும் நியாயத்தீர்ப்பு, நித்தியகாலத்திற்கும் செயல்படவிருக்கிறது. அநீதியுள்ள சபிக்கப்பட்டவர்கள் நித்திய ஆக்கினை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் (மத்தேயு 25:46) என்று இயேசு சொல்லியிருக்கிறார். அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது (வெளி. 14:11) என்று அந்தத் தூதன் கூறினான்.

உபத்திரவகாலத்தில் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு விசுவாசத்திற்குட்பட்டவர்கள், பொறுமையோடு சத்துருவினால் உண்டாகும் நெருக்கங்களையும் உபத்திரவங்களையும் சகித்துக்கொண்டு, விசுவாசத்தில் நிலைத்திருக்க வேண்டியுள்ளது. இந்தச் சவாலை ஏற்று செயல்படும் பரிசுத்தவான்கள், ஒருவேளை சிறைப்படுத்தப்பட்டு பட்டயத்தினாலே கொல்லப்படலாம் என முன்னர் அறிந்தோம். ஆனாலும், அவர்கள் விசுவாசிக்கிற, ஆராதிக்கிற தேவன் அவர்களைத் தப்புவிக்க வல்லவராயிருப்பார். இதனிமித்தமே, அந்தத் தூதன்: தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும் என்று கூறினான் (வெளி. 14:12).

பரலோகத்திலிருந்து உண்டாகக் கேட்ட சத்தம்!

யோவான் மூன்று தூதர்களைக் கண்டார். அவர்கள், நித்திய சுவிசேஷத்தையும், பாபிலோனின் அழிவையும், மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவன்மேல் வரவிருக்கும் தேவனுடைய கோபாக்கினையையும் கூறி அறிவித்தார்கள். இதற்குப்பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம்பற்றுகிறார் என்று சொல்லிற்று (வெளி. 14:13) என்று எழுதியிருக்கிறார்.

மூன்று தூதர்களின் செய்திகளைக்காட்டிலும், பரலோகத்திலிருந்து உண்டாகக் கேட்ட சத்தம், செய்தியாளர்களான தூதர்களால் உண்டாகாமல், தேவனாலேயே சொல்லப்பட்ட வார்த்தைகளைப்போன்று தோன்றுகிறது. இதனிமித்தம் இந்த வார்த்தைகள் தேவனாலே அருளப்பட்ட வாக்குத்தத்தமாக எடுத்துக்கொள்ளலாம். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருந்து, அதன் நிறைவேறுதலை நிச்சயிக்கிறது. ஆவியானவரும் ஆம் என்று திருவுளம்பற்றுகிறார் என்ற வார்த்தைகள், இந்த வாக்குத்தத்தத்தில் திரியேக தேவனின் பங்களிப்பை வெளிப்படுத்துகிறது.

உபத்திரவக்காலத்தில், கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது அவர்கள், தங்கள் நெருக்கங்கள், போராட்டங்களிலிருந்து விடுபட்டு, அப்போஸ்தலனாகிய பவுலைப்போன்று சாட்சிப்பகர ஏதுவாயிருக்கும். நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் (2 தீமோத்தேயு 4:7,8) என்று பவுல் சொல்லியிருக்கிறார்.

கர்த்தருக்குள் விசுவாசத்தில் மரிக்கும் கடைசிக்காலத்துப் பரிசுத்தவான்கள், தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள். இந்தப் பரிசுத்தவான்களின் மரணம், உபத்திரவக்காலத்தின் நெருக்கங்களிலிருந்து ஒரு விடுதலையைத் தருகிறதுமட்டுமல்லாமல், ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய், அவர்களுடைய நற்கிரியைகளுக்கேற்ற பலனையும் அவர்கள் அடையவிருக்கிறதை நிச்சயிக்கிறது. அல்லேலூயா!

பயிர் முதிர்ந்தது, அறுக்கிறதற்குக் காலம் வந்தது!

கடைசிக்கால சம்பவங்களின் முன்னோடியாக, யோவான் இந்தத் தரிசனத்தில் அறுக்கிறவர்களைக் காண்கிறார். பின்பு நான் பார்த்தபோது, இதோ, வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின்மேல் மனுஷகுமாரனுக்கொப்பானவராய்த் தமது சிரசின்மேல் பொற்கிரீடத்தையும் தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டேன் (வெளி. 14:14) என்று

எழுதியிருக்கிறார். யோவான் முதலாம் அதிகாரத்தில் கண்ட தரிசனத்தில் விவரிக்கப்பட்டிருப்பவர்போன்றே இவரும் காணப்படுகிறார்.

அந்தக் காட்சியில், நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்; மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் என்று அவர் தன்னை, அடையாளப்படுத்திக்கொண்டதை அறிவோம். இதனிமித்தம், இங்குத் தமது சிரசின்மேல் பொற்கிரீடம் தரித்து, கையில் கருக்குள்ள அரிவாளையுடையவர், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என அறிகிறோம். அவருடைய கையில் உள்ள கருக்கான அரிவாள் முழுமையையும், விரும்புகிறதைச் செய்துமுடிக்கும் அவருடைய ஆற்றலையும், பூரணத்தையும் வெளிப்படுத்துகிறது. இந்தக்காட்சி, உபத்திரவக்காலத்திற்குப் பின்னர், இரட்சிக்கப்பட்டவர்கள் கூட்டி சேர்க்கப்படுவதைக் குறிக்கிறது. மீட்கப்பட்டு, தங்களுடைய நெற்றிகளில் தேவனுடைய நாமம் எழுதப்பட்ட இவர்கள், ஜீவப்புஸ்தகத்தில் தங்கள் பேரெழுதப்பட்டவர்களாய் இருப்பார்கள். அல்லேலூயா!

அப்பொழுது வேறொரு தூதன் தேவாலயத்திலிருந்து புறப்பட்டு, மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி: பூமியின் பயிர் முதிர்ந்தது, அறுக்கிறதற்குக் காலம் வந்தது, ஆகையால் உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான் (வெளி. 14:15). தேவாலயத்திலிருந்து புறப்பட்ட இந்தத் தூதன், தேவனுடைய சந்நிதானத்திலிருந்து வெளிப்படும் கட்டளையை உடையவனாயிருப்பான். மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவர், மனுஷகுமாரனாகிய இயேசுகிறிஸ்து என்கிறபட்சத்தில், ஏன் அவர் தூதனிடத்திலிருந்து கட்டளை பெறவேண்டும்? என்கிற கேள்வி எழும்ப வாய்ப்பிருக்கிறது.

முன்னதாக, இயேசுகிறிஸ்துவின் வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்லவேண்டும் (மத்தேயு 24:3) என்று சீஷர்கள் அவரைக் கேட்டபோது, அந்த நாளையும் வேளையையும் பிதா ஒருவர் தவிர வேறொருவனும் அறியான் எனக் கர்த்தர் சொன்னதை அறிந்திருக்கிறோம். அந்த நாளையும் நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார் (மாற்கு 13:32) என்றும்; பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல (அப்போஸ்தலர் 1:7) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இதனிமித்தமே, மனுஷகுமாரனுக்கொப்பானவருக்கு அறுப்புக்காலம் வந்தது எனத் தேவனுடைய சந்நிதானத்திலிருந்த தூதன் அறிவிக்க வேண்டியதாயிருந்தது. பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார் (யோவான் 5:22) என்கிற வசனத்தின்படி, இது அவருக்கு அறிவிக்கப்படுகிறதாக அறியலாம்.

அப்பொழுது மேகத்தின்மேல் உட்கார்ந்தவர் தமது அரிவாளைப் பூமியின்மேல் நீட்டினார். பூமியின் விளைவு அறுப்புண்டது (வெளி. 14:16) என்று எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், நிறைவுப்பெறவிருக்கும், உபத்திரவக்காலத்தைத் தொடரும் கடைசி நியாயத்தீர்ப்புகள், பூமியின் விளைவு அறுப்புண்டது என்ற ஒரே வாக்கியத்தில் எழுதப்பட்டுள்ளது. இந்தக் காலக்கட்டத்தில், இந்த வசனம், நிறைவில், அதிவிரைவில் பெறவிருக்கும் வெற்றியை முன்னறிவிக்கிறது. இதன் விவரங்கள் யாவும் பின்வரும் அதிகாரங்களில் விளக்கப்படவுள்ளன.

கோபாக்கினை ஆலையில் பூமியின் திராட்சப்பழங்கள்!

பின்பு வேறொரு தூதனும் கருக்குள்ள அரிவாளைப் பிடித்துக்கொண்டு பரலோகத்திலுள்ள தேவாலயத்திலிருந்து புறப்பட்டு வந்தான். அக்கினியின்மேல் அதிகாரமுள்ள வேறொரு தூதனும் பலிபீடத்திலிருந்து புறப்பட்டுவந்து, கருக்குள்ள அரிவாளைப்பிடித்திருக்கிறவனை நோக்கி: பூமியின் திராட்சப்பழங்கள் பழுத்திருக்கிறது. கருக்குள்ள உமது அரிவாளை நீட்டி, அதின் குலைகளை அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தத்தோடே சொன்னான் (வெளி. 14:17-18).

திராட்சப்பழங்கள் பழுத்திருக்கிறது என்பது, பூமியில் அந்நாட்களில், அக்கிரமம் நிறைவாகவிருப்பதை, அவர்களின் பாதகம் பெரிதாகவுள்ளதைத் தெரியப்படுத்துகிறது. நோவாவின் நாட்களில், அக்கிரமம் பூமியிலே பெருகினதால், கர்த்தர் பூமியின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணினார். மனுஷர் முதல், பூமியின்மேல் இருந்த யாவும் மாண்டுபோயின. நோவாவும் அவனோடே பேழையிலிருந்த உயிர்களும் மாத்திரம் காக்கப்பட்டன.

இதைப்போன்றே, கர்த்தர் ஆபிராமோடு பேசினபோது, எமோரியருடைய அக்கிரமம் நிறைவாகும்போது, நாலாம் தலைமுறையிலே

இஸ்ரவேலர் அந்நிய தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து திரும்ப வருவார்கள் (ஆதியாகமம் 15:16) என்றார். பயிர் முதிர்ந்தது. அரிவாளை நீட்டி அறுங்கள், வந்து இறங்குங்கள், ஆலை நிரம்பியிருக்கிறது. ஆலையின் தொட்டிகள் வழிந்தோடுகிறது. அவர்களுடைய பாதகம் பெரியது (யோவேல் 3:13) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

அப்பொழுது அந்தத் தூதன் தன் அரிவாளைப் பூமியின் மேலே நீட்டி, பூமியின் திராட்சப்பழங்களை அறுத்து, தேவனுடைய கோபாக்கினையென்னும் பெரிய ஆலையிலே போட்டான். நகரத்திற்குப் புறம்பேயுள்ள அந்த ஆலையிலே அது மிதிக்கப்பட்டது. அந்த ஆலையிலிருந்து ஆயிரத்து அறுநூறு ஸ்தாதி தூரத்திற்கு இரத்தம் புறப்பட்டுக் குதிரைகளின் கடிவாளங்கள் மட்டும் பெருகிவந்தது (வெளி. 14:19-20) என்று விவரிக்கப்பட்டுள்ளது. அந்நாட்களில் திராட்சப்பழ ஆலைகளில், பழுத்திருக்கும் திராட்சப்பழங்கள் மிதிக்கப்பட்டுச் சாறு பிழிவார்கள். அதிலிருந்து பிரித்தெடுக்கப்படும் திராட்சரசத்தை ஜாடிகளில் சேமித்துவைப்பார்கள்.

இந்த வேதப்பகுதியில், பழுத்திருக்கிற திராட்சப்பழங்களும், பெரிய ஆலையும், அந்த ஆலையிலே மிதிக்கப்படவிருந்த அறுப்புண்ட திராட்சப்பழங்களும் குறியீடுகளாகச் சொல்லப்பட்டுள்ளன. இந்தத் திராட்சப்பழங்கள், மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தங்கள் நெற்றியிலாவது கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவர்கள் ஆவர். திராட்சப்பழங்கள் பழுத்திருப்பது, அவர்களின் அக்கிரமம் நிறைவானதை வெளிப்படுத்துகிறது. பெரிய ஆலை, தேவனுடைய கோபாக்கினையையும், ஆலையில் மிதிக்கப்படுதல், வெளிப்படவிருக்கும் நியாயத்தீர்ப்புகளையும் குறிக்கிறது.

திராட்சரசத்தைப்போன்று ஆலையிலிருந்து பெருமளவில் புறப்படும் இரத்தம், அம்மட்டும் உலகம் கண்டிராத பேரழிவுகளின் தாக்கங்களையும், உயிர் சேதங்களையும் விவரிக்கிறது. உபத்திரவக்காலத்தின் நிறைவில் நிகழவிருக்கும் இந்தச் சம்பவங்கள், இருபதாம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது (வெளி. 20:9) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் பேரழிவின் தாக்கத்தையும் சேதங்களையும்

வெளிப்படுத்தவே, அந்த ஆலையிலிருந்து ஆயிரத்து அறுநூறு ஸ்தாதி (சுமார் 200 மைல்) தூரத்திற்கு இரத்தம் புறப்பட்டுக் குதிரைகளின் கடிவாளங்கள்மட்டும் (நான்கு அடி உயரம்) பெருகிவந்தது என்று ஒரு குறியீடாக சொல்லப்பட்டிருப்பதாக அறியலாம்.

உனக்கு அறுப்புக்காலம் நியமிக்கப்பட்டிருக்கிறது!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நாம் தியானித்த இந்தக் காட்சியும் சம்பவங்களும், உபத்திரவக்காலத்தின் நிறைவில், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பரிசுத்தவான்களுடன் பூமியிலே ஆளுகைச்செய்யும்படியாக வரவிருப்பதையும், அதைத் தொடர்ந்து, பூமியின் அறுப்புக்காலம் நியமிக்கப்பட்டிருப்பதையும் முன்னறிவிக்கிறது.

யூதாவே, உனக்கு ஒரு அறுப்புக்காலம் நியமிக்கப்பட்டிருக்கிறது (ஓசியா 6:11) என்று எழுதப்பட்டிருக்கிறது. இங்கு அறுப்புக்காலம் என்பது வாழ்வின் முடிவைக் குறிக்கிறது. இது அதிசீக்கிரமாய் வரவிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையின் நாளையோ, நாழிகையையோ அல்லது அவருடைய வருகை தாமதிக்குமானால், ஒவ்வொருவருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிற மரண நாளையோ குறிக்கிறது. நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வரவிருக்கிறபடியால், ஆயத்தமாயிருக்க எச்சரிக்கப்படுகிறோம். மரண நாளின்மேலும் நமக்கு அதிகாரம் இல்லாதபடியால், விழித்திருக்க அழைக்கப்படுகிறோம்.

இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகைக்காக இந்நாட்களில் நாம் காத்திருக்கிறோம் என்பதையும், இரகசிய வருகையில் கைவிடப்படுவோர், உபத்திரவத்தின் காலங்களுக்கு உட்படுவர் என்பதையும், மனதில்கொள்ள அழைக்கப்படுகிறோம். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் (2 பேதுரு 3:9). ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள் (2 பேதுரு 3:14) என எச்சரிக்கப்படுகிறோம்.

இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக (1 தெசலோனிக்கேயர் 3:13) என்றும்; சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக, உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக (1 தெசலோனிக்கேயர் 5:23) என்றும் அப்போஸ்தலனாகிய பவுல் வாழ்த்துகிறார்.

நாம் தியானித்த சத்தியவசனங்களின்படியே, இஸ்ரவேலரில் முத்திரிக்கப்பட்ட தேவனுடைய ஊழியக்காரர்போன்று, அங்கீகரிக்கப்பட்ட உறவின் நிலைகளுக்குப் புறம்பான மாம்சீக இச்சைகளை வெறுத்து, பரிசுத்தமாக நம்மைக் காத்துக்கொள்ளுவோம். நமக்கு மாதிரியைப் பின்வைத்துப்போன இயேசுவின் அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி, அவரைப் பின்பற்றுகிறவர்களாயிருப்போம். வீணான வார்த்தைகளைத் தவிர்த்து, வாயிலே கபடமின்றிக் கர்த்தருக்குள் நீதிமான்களாக்கப்பட ஒப்புக்கொடுப்போம். வழுவாதபடி காக்கப்பட்டு, அவருடைய மகிமையுள்ள சந்நிதானத்திலே, தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக மாசில்லாதவர்களாய்க் காணப்பட அர்ப்பணிப்போம். கர்த்தர்தாமே அப்படிப்பட்ட கிருபைகளை நம் ஒவ்வொருவருக்கும் நிறைவாய் தந்தருள்வாராக. ஆமென். அல்லேலூயா!

சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே,
தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்,
பரிசுத்தவான்களின் ராஜாவே,
தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்.
கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும்,
உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும்
இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர்,
எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத்
தொழுதுகொள்வார்கள்; உம்முடைய நீதியான செயல்கள்
வெளியரங்கமாயின என்றார்கள்.
(வெளி. 15:3,4).

10. பூமியில் ஊற்றப்படும் ஏழு கோபகலசங்கள்!

தேவனுடைய ஏழு கோபகலசங்கள்!

வெளிப்படுத்தின விசேஷம் 15ஆம் அதிகாரம், கோபகலச நியாயத்தீர்ப்புகளை அறிமுகப்படுத்துகிறது. ஏழு முத்திரைகள் உடைக்கப்படும்போது வெளிப்படும் நியாயத்தீர்ப்புகள், ஏழு எக்காளங்கள் ஊதும்போது உண்டாகும் ஆபத்துகள், தொடரும் ஏழு கோபகலச வாதைகளுடன் தேவனுடைய கோபம் முடிகிறது. பின்பு, வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாளமாகிய கடைசியான ஏழு வாதைகளையுடைய ஏழு தூதரைக் கண்டேன், அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது (வெளி. 15:1) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பதினாறாம் அதிகாரம், தேவனுடைய கோபாக்கினை, கோபகலச நியாயத்தீர்ப்புகளாகப் பூமியில் கொட்டப்படவிருப்பதை விவரிக்கிறது. கோபகலச வாதைகளின் நிறைவு, உபத்திரகாலத்தின் ஒரு திருப்புமுனையாகக் காணப்படும். இதன் பின்னர், தேவன் தம்முடைய ராஜ்யத்தை பூமியில் ஏற்படுத்தவிருக்கிறார். இந்தச் சம்பவங்கள், தேவனுடைய கோபாக்கினையின் உச்சக்கட்ட நிகழ்வுகளை வெளிப்படுத்தவிருக்கிறது.

ஏனெனில், உலமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும். அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை, தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் நிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும் (மத்தேயு 24:21,22) என்று

கர்த்தர் எச்சரித்திருக்கிறார். பின்னர், உபத்திரவக்கால நிகழ்வுகள் துரிதமாய் முடிவுக்கு வரவிருக்கிறது.

உபத்திரவக்காலத்தில் மீட்கப்படும் பரிசுத்தவான்கள்!

அப்போஸ்தலனாகிய யோவான், அக்கினி கலந்த கண்ணாடிக் கடல்போன்ற ஒரு காட்சியைக் காண்கிறார். கடலைப்போன்று பரந்து விரிந்ததும், கண்ணாடியைப்போன்று திடமும் தெளிவுமானதும், அக்கினி கலந்த தோற்றத்தை உடையதும், விஸ்தாரமுமான தளத்தைக் காண்கிறார். ஜெயங்கொண்டவர்கள் தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு கடலருகே அல்ல, அந்தக் கண்ணாடிக் கடல்மேல் நின்றார்கள் என்பதாக ஆங்கில வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும், அக்கினி கலந்த கண்ணாடிக் கடல்போன்ற ஒரு கடலையும், மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் கண்டேன் (வெளி. 15:2) என்றார்.

பரந்து விரிந்த அக்கினி கலந்த தோற்றத்தை உடைய இந்தத் தளம், அநேகரைத் தேவனுடைய சந்நிதானத்தில் கூட்டிச்சேர்ப்பதற்கு ஏதுவான கட்டமைப்பாக இருக்கும். அக்கினி கலந்த இதன் தோற்றம், தேவஜனம் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் ஜெயங்கொள்வதையும், அக்கினியினால் புடமிடப்பட்டுச் சோதித்தறிந்த சாட்சியின் வசனத்தை வெளிப்படுத்துவதையும் தெரிவிக்கிறது. யார் இந்த ஜெயங்கொண்டவர்கள்?

இவர்கள், மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள் ஆவர். மிருகம், சொரூபம், அதின் முத்திரை என்றவுடனே, இவர்கள் உபத்திரவக்காலத்தில் கர்த்தரைப் பற்றிக்கொண்ட பரிசுத்தவான்கள் என அறியலாம். தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு கண்ணாடிக் கடலருகே நிற்பது, சாட்சியினிமித்தம் இரத்தம் சிந்தி மரித்து தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இவர்கள் காணப்படுவதைக் காட்டுகிறது. சுரமண்டலங்கள், அவர்கள் மகிழ்வுடன் தேவனைத் துதித்துப் போற்றுவதை வெளிப்படுத்துகிறது. அவர்கள் ஜெபங்கள் கேட்கப்பட்டு, அவர்களைத் துன்பப்படுத்தினவர்களுக்குக் கர்த்தர்

பதில் செய்யவிருந்தபடியால், ஆனந்தக்களிப்புடன் அவர்கள் பாடி தேவனை மகிமைப்படுத்தவிருந்தார்கள்.

ஜெயங்கொண்டுதேவனைத் தொழுதுகொண்டார்கள்!

உபத்திரவக்காலத்தில் மீட்கப்படும் பரிசுத்தவான்கள், முந்தின நாட்களில் தேவனுடைய கிரியைகளையும் மகத்துவங்களையும் அறிந்தவர்களே. இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு ஆயத்தமாக இல்லாததினிமித்தம், இவர்கள் இரகசிய வருகையில் கைவிடப்படுவார்கள். பின்னர், தேவனுடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாகும்போது, உபத்திரவகாலத்தில் அறிவிக்கப்பட்ட மேம்பாடான சுவிசேஷத்தையும், வெளிப்பட்ட இரண்டு சாட்சிகள் நடப்பித்தக் கிரியைகளையும் கண்டு மனந்திரும்பி இவர்கள் கர்த்தரை ஏற்றுக்கொள்ளுவார்கள். மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொள்ளுபவர்கள் இவர்களே.

இவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி: சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள். கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள்; உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின என்றார்கள் (வெளி. 15:3,4) என்று எழுதப்பட்டிருக்கிறது.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரர் மீட்கப்பட்டு, விசுவாசத்தினாலே அவர்கள் சிவந்தசமுத்திரத்தை உலர்ந்த தரையைக் கடந்துபோவதுபோலக் கடந்துபோனார்கள். இவ்விதமாக அவர்கள் பார்வோனின் சேனைகளினின்று காப்பாற்றப்பட்டபோது, மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரைப் புகழ்ந்துபாடின பாட்டு யாத்திராகமம் 15ஆம் அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளது. இதைப்போன்றே,

அந்திக்கிறிஸ்துவையும் அவனுடைய வஞ்சகத்திட்டங்களையும், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், தங்களுடைய சாட்சியின் வசனத்தினாலும் மேற்கொண்டவர்கள், வெற்றியின் பாடலாக, ஆட்டுக்குட்டியானவரைப் புகழ்ந்து பாடுவார்கள்.

உபத்திரவக்காலத்தில் மீட்கப்படும் பரிசுத்தவான்கள், தேவனுடைய சந்நிதானத்தில் நிற்கும்போது, தேவனுடைய மகத்துவங்களை நினைவுக்கூர்ந்து, துதி ஸ்தோத்திரங்களைச் செலுத்துவார்கள். தேவனுடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள் தேவனுடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள் என்று அறிந்து உணர்ந்து அறிக்கையிட்டு, தேவனுக்குப் பயந்து, அவர்கள் தேவனை மகிமைப்படுத்துவார்கள். அல்லேலூயா!

சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது!

இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது; அந்த ஆலயத்திலிருந்து ஏழு வாதைகளையுடைய அவ்வேழு தூதர்களும் சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரந்தரித்து, மார்பருகே பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டார்கள் (வெளி. 15:5,6). ஏழு வாதைகளையுடைய தூதர்கள் கடைசிக்கட்ட நியாயத்தீர்ப்புகளை நடப்பிக்க தேவனுடைய சந்நிதானத்திலிருந்து புறப்படவிருந்தார்கள்.

தேவன் எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட சித்தங்கொண்டவராய், சகலவிதமான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்தபோதும், அந்நாட்களில் எஞ்சியுள்ளோர் அவற்றைத் தள்ளிவிடுவார்கள். இதனிமித்தம் பூமியின்மேல் கடைசியான தேவநீதியை, தூதர்கள் நடப்பிக்க இருந்தார்கள். சுத்தமும் பிரகாசமுமான மெல்லியவஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே (வெளி. 19:8) என்று எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கு ஒப்பானவருடைய அதிகாரத்தைப் பெற்றவர்களாகச் செல்லுவார்கள்.

அப்பொழுது அந்த நான்கு ஜீவன்களில் ஒன்று, சதாகாலங்களிலும் உயிரோருக்கிற தேவனுடைய கோபாக்கினையால் நிறைந்த பொற்கலசங்கள் ஏழையும் அந்த ஏழு தூதர்களுக்குங் கொடுத்தது. அப்பொழுது, தேவனுடைய மகிமையினாலும் அவருடைய வல்லமையினாலும்

உண்டான புகையினாலே தேவாலயம் நிறைந்தது; ஏழு தூதர்களுடைய ஏழு வாதைகளும் முடியும்வரைக்கும் ஒருவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதிருந்தது (வெளி. 15:7,8). இதைப்போலொத்தக் காட்சி ஏசாயா ஆறாம் அதிகாரத்திலும்விவரிக்கப்பட்டிருக்கிறது.

ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்க ஏசாயா தீர்க்கதரிசி கண்டார். சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள். அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள். கூப்பிடுகிறவர்களின் சத்தத்தால் வாசல்களின் நிலைகள் அசைந்து, ஆலயம் புகையினால் நிறைந்தது (ஏசாயா 6:3,4). இந்தப்புகை வல்லமையும், மகிமையுமான தேவனுடைய பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறது. பரலோகத்திலே சாட்சியின் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டபோதும், தேவனுடைய மகிமையினாலும் அவருடைய வல்லமையினாலும் உண்டான புகையினாலே, தேவாலயம் நிறைந்தது. ஏழு தூதர்களுடைய ஏழு வாதைகளும் முடியும் வரைக்கும் ஒருவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதிருந்தது.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள், விசுவாசமுள்ள ஜெபத்தினால் தேவனுடைய மகிமையைக் காணும் சிலாக்கியத்தைப் பெறுகிறார்கள். நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். ஆனால், ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வரவிருக்கிறது. கோபகலச நியாயத்தீர்ப்பின் நாட்களில், விசுவாசித்தும் தேவனுடைய மகிமையைக் காணக்கூடாதிருக்கும்; மனந்திரும்பி ஜெபம்பண்ணவும் அந்தக் காலத்தில் கூடாததாக இருக்கும்.

முதலாம் கோபகலசம் - பொல்லாத கொடிய புண்!

வெளிப்படுத்தின விசேஷம் 16ஆம் அதிகாரம், தேவனுடைய கடைசி கோபாக்கினைகளான ஏழு வாதைகளை விவரிக்கிறது. அப்பொழுது தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தம் அந்த ஏழு தூதருடனே: நீங்கள் போய் தேவனுடைய கோபகலசங்களைப் பூமியின்மேல் ஊற்றுங்கள்

என்று சொல்லக்கேட்டேன் (வெளி. 16:1) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த உபத்திரவங்கள், தேவனுடைய சிட்சையின் உச்சக்கட்டமாக இருக்கும்.

கோபகலச நியாயத்தீர்ப்புகள், எக்காள நியாயத்தீர்ப்புகளைப்போன்றும், முன்னர் எகிப்தில் கர்த்தர் நடப்பித்த பத்து வாதைகளைப்போன்றும் இருக்கின்றன. அந்நாட்களில் இந்த நியாயத்தீர்ப்புகள், பூமியனைத்தையும் அதிலுள்ள குடிகளையும், முழுமையாகப் பாதிப்பதாக இருக்கும். இந்தக் கோபகலச நியாயத்தீர்ப்புகளின் காலத்தில், நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து சொல்லியிருப்பதுபோல, மிகுந்த உபத்திரவம் உண்டாயிருக்கும்.

அநேக எச்சரிப்புகளுக்குப் பின்னரும், இயேசுகிறிஸ்துவைத் தள்ளி, அந்திக்கிறிஸ்துவை வணங்கி அந்த மிருகத்தின் முத்திரையைப் பெற்றுக்கொள்ளும்போது, தேவன் மனுஷர்களை பொல்லாத கொடிய புண்களால் வாதிக்கப்பட ஒப்புக்கொடுக்கவிருக்கிறார். முதலாம் தூதன் போய், தன் கலசத்திலுள்ளதைப் பூமியின்மேல் ஊற்றினான்; உடனே மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும் அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர்களுக்குப் பொல்லாத கொடிய புண்ணுண்டாயிற்று (வெளி. 16:2).

இது எகிப்தில் தோன்றிய ஆறாவது வாதையைப்போல உள்ளது. மனிதர் மேலும் மிருகஜீவன்கள் மேலும் எரிபந்தமான கொப்புளங்கள் எழும்பிற்று (யாத்திராகமம் 9:10). எகிப்தில் தோன்றிய வாதை தேவஜனங்களைப் பாதிக்காததைப்போல, தேவனைப் பற்றிக்கொண்டவர்கள் இந்த வாதைகளிலிருந்து பாதுகாக்கப்படுவார்கள். இந்தக் கொடிய புண்கள் மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களையும், அதின் சொரூபத்தை வணங்குகிறவர்களையுமே பாதிக்கும்; உபத்திரவக்கால பரிசுத்தவான்கள் இவற்றிலிருந்து பாதுகாக்கப்படுவார்கள்.

இரண்டாம் கோபகலசம் - சமுத்திரம் இரத்தமாயிற்று!

இரண்டாம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சமுத்திரத்திலே ஊற்றினான், உடனே அது செத்தவனுடைய இரத்தம்போலாயிற்று; சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டுபோயின (வெளி. 16:3). இரண்டாம் எக்காளச்சத்தம் தொனிக்கும்போது பெரிய

மலைபோன்றதொன்று சமுத்திரத்திலே போடப்படவிருந்தது. இதனால் மூன்றிலொருபங்கு சமுத்திரம் இரத்தமாகும். சமுத்திரத்திலுள்ள ஜீவராசிகளில் மூன்றிலொரு பங்கு செத்துப்போகும்; கப்பல்களில் மூன்றிலொருபங்கு சேதமடையும் (வெளி. 8:8,9) என முன்னர் பார்த்தோம்.

அந்தச் சேதத்தைக்காட்டிலும், இரண்டாம் கோபகலசத்தின் பாதிப்புகள், சமுத்திரம் அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்கும்; சமுத்திரத்திலுள்ள ஜீவராசிகள் யாவும் மாண்டுபோகும். சமுத்திரம் செத்தவனுடைய இரத்தம்போலாவதால், இது விவரிக்கக்கூடாத சுகாதாரக்கேடுகளை ஏற்படுத்தும். தண்ணீர் நீராவியாகிப் பெய்யப்பண்ணும் மழையை இது பாதித்து, பூமியெங்கும் பஞ்சங்களும், கொள்ளைநோய்களும் தொடர்விளைவுகளாக உண்டாகும்.

இந்தக் கோபகலச வாதை, கப்பல் மூலம் நடைபெறும் கடல் கடந்த வர்த்தகத்தையும், மீன் பிடித்தலை வாழ்வாதாரமாகக்கொண்ட மனுஷருடைய வாழ்வையும் முற்றிலும் பாதிக்கும். சமுத்திரத்தின் வாதை, மனுஷரின் அடிப்படைத்தேவையான சரீர நலனைக் கெடுக்கும்; பஞ்சங்களினால் உணவு பற்றாக்குறை ஏற்படும்; மேலும் இது வர்த்தகத்தைச் சேதப்படுத்தும்.

மூன்றாம் கோபகலசம் - ஆறுகள் இரத்தமாயின!

மூன்றாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆறுகளிலும், நீரூற்றுகளிலும் ஊற்றினான்; உடனே அவைகள் இரத்தமாயின (வெளி. 16:4). இந்த நியாயத்தீர்ப்பு, எகிப்தில் கர்த்தர் நடப்பித்த முதலாம் வாதையைப்போன்ற தாக்கங்களை உண்டுபண்ணும். நதியிலுள்ள தண்ணீரெல்லாம் இரத்தமாய் மாறிப்போயிற்று (யாத்திராகமம் 7:20) என்று எழுதப்பட்டிருக்கிறது.

முன்னர், மூன்றாம் தூதன் எக்காளம் ஊதினபோது, ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப்போல எரிந்து, வானத்திலிருந்து விழுந்தது எனப் பார்த்தோம். அதினால் ஆறுகளில் மூன்றிலொருபங்கு எட்டியைப்போலக் கசப்பாயிற்று; இப்படிக் கசப்பான தண்ணீரினால் மனுஷரில் அநேகர் செத்தார்கள் (வெளி. 8:10,11).

எகிப்தின் வாதை அந்தப்பகுதியை மாத்திரம் பாதித்தது; மூன்றாம் எக்காளத்தின் தாக்கம், மூன்றிலொருபங்கு ஆறுகளையும்,

நீரூற்றுகளையும் கசப்பாக்கவிருந்தது. ஆனால் மூன்றாம் கலசத்திலுள்ளதை ஆறுகளிலும், நீரூற்றுகளிலும் தூதன் ஊற்றினபோது, உடனே அவைகள் யாவும் இரத்தமாகும். நீர்நிலைகளின் மேலான இந்த நியாயத்தீர்ப்பினால் விவரிக்கமுடியாத துன்பங்களுக்கு அந்நாளின் மனுஷர்கள் உட்படுவார்கள். அடிப்படை வாழ்வாதாரமான குடிதண்ணீர் இல்லாத நிலை உருவாகும்; சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் இல்லாததினால் சுகாதாரக் கேடுகளும், உணவு பற்றாக்குறைப் போன்றவைகளும் ஏற்படும்.

தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியம் நீதி !

மூன்றாம் எக்காள நியாயத்தீர்ப்பு, மூன்றிலொருபங்கு நீர்நிலைகளைக் கசப்பாக மாற்றி, ஒரு முன் எச்சரிப்பைப்போன்று வெளிப்படவிருந்தது. இதன் பின்னரும், மனந்திரும்பும்படியாக தேவன் தம்முடைய அன்பை வெளிப்படுத்திக் கடைசிக்கால ஊழியங்களை ஏற்படுத்தவிருந்தார். ஆனால், மூன்றாம் கோபகலசத்தின் விளைவு, நீர்நிலைகள் யாவற்றையும் இரத்தமாக்கும். இது தேவனுடைய இறுதியான நீதியுள்ள கோபாக்கினையை வெளிப்படுத்துகிறதாக இருக்கும்.

அப்பொழுது தண்ணீர்களின் தூதன்: இருக்கிறவரும் இருந்தவரும் பரிசுத்தருமாகிய தேவரீர் இப்படி நியாயந்தீர்க்க நீதியுள்ளவராயிருக்கிறீர். அவர்கள் பரிசுத்தவான்களுடைய இரத்தத்தையும் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும் சிந்தினபடியினால், இரத்தத்தையே அவர்களுக்குக் குடிக்கக்கொடுத்தீர்; அதற்கு பாத்திரராயிருக்கிறார்கள் என்று சொல்லக்கேட்டேன் (வெளி. 16:5,6). ஒருவராகிலும் கெட்டுப்போகிறது தேவனுடைய சித்தம் அல்லாததினாலே பூமியிலே பாவம் பெருகினபோதும், கர்த்தர் இரக்கமும் மனதுருக்கமும், நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையும் உள்ளவராய், இம்மட்டும் நியாயத்தீர்ப்புகளை நடப்பிக்காமல் தாமதித்து வருகிறார்.

கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும், தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார் (சங்கீதம் 145:17). ஒருபுறம் கிருபையினிமித்தம், தேவன் தம்முடைய நியாயத்தீர்ப்புகளைக் காலவரையின்றித் தாமதிக்கும்போது, மறுபுறம் அவரே தம்முடைய நீதியை நிறைவேற்றாமல் போகும் நிலை ஏற்படலாம். இதனிமித்தமே, பலிபீடத்திலிருந்து வேறொருவன்: ஆம், சர்வவல்லமையுள்ள தேவனாகிய

கர்த்தாவே, உம்முடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள் (வெளி. 16:7) என்று சொல்லுகிறான்.

நான்காம் கோபகலசம் - சூரியன் மனுஷரைத் தகித்தது!

நான்காம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சூரியன்மேல் ஊற்றினான்; தீயினால் மனுஷரைத் தகிக்கும்படி அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது (வெளி. 16:8). நீர்நிலைகளின் மேலான நியாயத்தீர்ப்பினால், ஏற்கனவே குடிதண்ணீர் இல்லாது தவிக்கும் மனுஷரைத் தீயினால் தகிக்கும்படி சூரியன்மேல் நான்காம் கோபகலசம் ஊற்றப்படவிருக்கிறது.

சூரியன் ஒளியையும், தேவையான அளவு வெப்பத்தையும் தருகிறது. மின்சக்தி உற்பத்திச்செய்ய உதவுகிறது. ஆனால், அளவுக்கதிகமான வெப்பம், மனுஷரைச் சுட்டெரிக்கும்; கட்டுக்கடங்காத கதிர்வீச்சுகளையும் ஏற்படுத்தி சரீரங்களை மிகவும் பாதிக்கும். மேலும், இந்த வெப்பம் பூமியின் துருவங்களிலுள்ள பனிப்பாறைகளை உருகச்செய்து, கடலின் நீர்மட்டத்தை உயர்த்தும். இதனிமித்தம் அநேக பட்டணங்கள் அமிழ்ந்து அழிந்துபோகும் நிலை ஏற்படும். அளவுக்கதிகமான வெப்பம், தாவரங்களையும் பயிரினங்களையும் சேதப்படுத்துவதால், பஞ்சமும் உணவுபற்றாக்குறையும் பெருமளவில் ஏற்படும் என்பதாக அறியலாம்.

அந்நாட்களில் எஞ்சியுள்ள மனுஷர்கள் இவ்விதமான தாக்கங்களுக்கு உட்பட்டாலும், தங்களுடைய பொல்லாத வழிகளைவிட்டு மனந்திரும்பாதப்படி அவர்கள் மனம் கடினப்பட்டிருக்கும். அப்பொழுது மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினாலே தகிக்கப்பட்டு, இந்த வாதைகளைச் செய்ய அதிகாரமுள்ள தேவனுடைய நாமத்தைத் தூஷித்தார்களேயல்லாமல், அவரை மகிமைப்படுத்த மனந்திரும்பவில்லை (வெளி. 16:9) என்று எழுதப்பட்டிருக்கிறது. இவ்வகையான கொடூரமான வாதைகளுக்கும் துன்பங்களுக்கும் உட்பட்டபின்னரும், தங்கள் முழங்கால்களை முடக்கி, தங்களைத் தாழ்த்தி, தேவனை மகிமைப்படுத்தக்கூடாதப்படி அவர்கள் இருதயம் இருளடைந்திருந்தது, கடினப்பட்டிருந்தது. அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள், உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது (ரோமர் 1:21) என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஐந்தாம் கோபகலசம்-மிருகத்தின் ராஜ்யம் இருளடைந்தது!

ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை மிருகத்தினுடைய சிங்காசனத்தின்மேல் ஊற்றினான்; அப்பொழுது அதின் ராஜ்யம் இருளடைந்தது (வெளி. 16:10). கர்த்தருடைய பெரியநாள் சமீபித்திருக்கிறது; அந்த நாள் உக்கிரத்தின் நாள்; அது இக்கட்டும் இடுக்கமுமான நாள்; அது அழிவும் பாழ்க்கடிப்புமான நாள்; அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள் (செப்பனியா 1:14,15) என்று எழுதப்பட்டிருக்கிறது.

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் மனுக்குலத்தின் பாவத்தைச் சுமந்து தீர்த்தபோதும், இவ்விதமாக மூன்று மணி நேரம் பூமியில் காரிருள் உண்டாயிற்று. அப்பொழுது ஏறக்குறைய ஆறாம்மணி நேரமாயிருந்தது; ஒன்பதாம்மணி நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரமுண்டாயிற்று (லூக்கா 23:44) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த நியாயத்தீர்ப்பு, எகிப்தில் கர்த்தர் நடப்பித்த ஒன்பதாம் வாதையைப்போன்றுள்ளது. எகிப்து தேசமெங்கும் மூன்றுநாள் காரிருள் உண்டாயிற்று. மூன்றுநாள் மட்டும் ஒருவரையொருவர் காணவுமில்லை, ஒருவரும் தம்மிடத்தைவிட்டு எழுந்திருக்கவும் இல்லை, இஸ்ரவேல் புத்திரர் யாவருக்குமோவெனில் அவர்கள் வாசஸ்தலங்களிலே வெளிச்சமிருந்தது (யாத்திராகமம் 10:22).

தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி, உன்னதமானவருடைய ஆலோசனையை அசட்டைபண்ணினவர்கள், அந்தகாரத்திலும் மரண இருளிலும் வைக்கப்பட்டிருந்து, ஒடுக்கத்திலும் இரும்பிலும் கட்டுண்டு கிடந்தார்கள் (சங்கீதம் 107:10,11) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் காரிருள் வெளிச்சமின்மையை மாத்திரம் குறிக்காமல், ஆவிக்குரிய குருட்டாட்ட நிலையையும், அதன் விளைவுகளான மனஅழுத்தம்போன்ற தாக்கங்களையும் ஏற்படுத்தும். இது நித்தியகால அந்தகாரத்தின் முன்னோடியைப்போன்று, மிருகத்தினுடைய அதிகாரத்திற்கும் ஆளுகைக்கும் உட்பட்ட ராஜ்யத்தை இருளடையச்செய்யும்.

அவர்கள் தேவனுடைய ஆளுகைக்கும், அதிகாரங்களுக்கும், வார்த்தைகளுக்கும் விரோதமாய்க் கலகம்பண்ணி, உன்னதமானவருடைய ஆலோசனையை அசட்டைபண்ணினார்கள்.

இதற்கும் மேலாக, மிகுந்த துன்பங்களுக்கு இடையேயும், தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பாமல், தேவனைத் தூஷித்தார்கள். அவர்கள் வருத்தத்தினாலே தங்கள் நாவுகளைக் கடித்துக்கொண்டு, தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும், பரலோகத்தின் தேவனைத் தூஷித்தார்களேயல்லாமல், தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பவில்லை (வெளி. 16:10,11).

அந்த மிருகத்தினால் வஞ்சிக்கப்பட்டு, அவர்களுடைய இருதயம் உணர்வற்று இருளடைந்திருக்கும். இது அவர்களுடைய மனக்கடினத்தை வெளிப்படுத்துதைக் காட்டிலும், எவ்வளவாக அவர்கள் அந்திக்கிறிஸ்துவின் வார்த்தையை நம்பி சோரம்போயிருப்பார்கள் என்பதையும், கள்ளத்தீர்க்கதரிசியின் போலியான அற்புதங்கள் அடையாளங்களைக் கண்டு வஞ்சிக்கப்பட்டிருப்பார்கள் என்பதையும் காட்டுகிறது. இதனிமித்தமே, நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து: கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் (மத்தேயு 24:24) என்று எச்சரித்துள்ளார்.

ஆறாம் கோபகலசம் – நதி வற்றிப்போயிற்று!

ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐப்பிராத்து என்னும் பெரிய நதியின்மேல் ஊற்றினான்; அப்பொழுது சூரியன் உதிக்குந் திசையிலிருந்து வரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று (வெளி. 16:12). தேவனாகிய கர்த்தர் சிருஷ்டிப்பில், ஏதேன் தோட்டத்துக்குத் தண்ணீர் பாயும்படி உண்டாக்கின நான்கு ஆறுகளில் ஐப்பிராத்து ஒன்றாகும். ஆபிராமுக்கு கர்த்தர் கொடுத்த தேசத்தின் கிழக்கு எல்லை ஐப்பிராத்து நதி (ஆதியாகமம் 15:18) என்று எழுதப்பட்டிருக்கிறது. இது ரோம சாம்ராஜ்யத்திற்கும் கிழக்கு எல்லையாக இருந்து வந்தது. 1800 மைல் நீளமுள்ள ஐப்பிராத்து நதி, உலகின் நாடுகளைக் கிழக்கு மேற்கு எனப் பிரிக்கும் வகையில் அமைந்திருக்கிறது.

ஆறாம் எக்காளம் ஊதப்படும்போது, ஐப்பிராத்தென்னும் பெரிய நதியண்டையிலே கட்டப்பட்டிருந்த நான்கு அசுத்த ஆவிகள் கட்டவிழ்க்கப்பட உள்ளன. அந்த அசுத்த ஆவிகளின் தலைமையில் செயல்படும்

இராணுவங்களின் தொகை இருபது கோடியாகும். இந்த யுத்தங்களில், நவீன போர் ஆயுதங்களைப் பிரயோகிப்பதினால், பேரழிவுகள் உண்டாகும். அந்த ஆயுதங்களினால் மனுஷரில் மூன்றுலொருபங்கு கொல்லப்படுவார்கள் என்று பார்த்தோம்.

ஐப்பிராத்து நதியின்மேல் ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஊற்றும்போது, அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போகும். இது கிழக்கு திசையிலிருந்து வரும் ராஜாக்களுக்கும், வெகு திரளான அவர்களுடைய சேனைகளுக்கும், தடைகளை நீக்கி அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்க்க வழியை ஆயத்தப்படுத்தும்.

தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள்!

மேலும், பூலோகமெங்குமுள்ள ராஜாக்களை, சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச்சேர்க்க, அசுத்த ஆவிகள் செயல்படவிருக்கிறது. அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டுவரக்கண்டேன். அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச்சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப்போகிறது (வெளி. 16:13,14) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பூமியின் ராஜாக்களைக் கூட்டிச்சேர்க்கும்படியாக அசுத்த ஆவிகள், திரித்துவத்தின் வேஷத்தைத் தரித்த வஞ்சகக் கூட்டணியான வலுசர்ப்பத்தின் வாயிலும், மிருகத்தின் (அந்திக்கிறிஸ்துவின்) வாயிலும், கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து புறப்பட்டுச்செல்ல இருக்கிறது. இவைகள், தேவஜனத்திற்கும், தேவனுடைய திட்டங்களுக்கும் தீர்மானங்களுக்கும் விரோதமாகச் செயல்படும். இந்த அசுத்த ஆவிகள், பொய்யான காரணங்களைச் சொல்லியும், இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களினாலும் பூமியின் ராஜாக்களை வஞ்சித்து, அவர்களை தேவஜனத்துக்குவிரோதமாக ஒருங்கிணைந்து எழும்பச்செய்யவிருக்கின்றன.

ஆனாலும், தேவனுடைய சித்தத்தை நிறைவுசெய்யும்படியே, அந்த ராஜாக்களும், அவர்களது சேனைகளும் ஒன்றுசேர்க்கப்பட்டு, முடிவில் அழிவிற்குட்பட இருக்கிறார்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் தீங்குக்குத்

துணைப்போகிறவர் அல்ல, என்றாலும், சாத்தானுடைய வஞ்சகத்தினால் உண்டாகும் தீங்கின் கிரியைகளைத் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றும்படியாக மாற்றி அமைக்க அவர் வல்லவராயிருக்கிறார். அல்லேலூயா!

இப்பேர்ப்பட்ட வஞ்சக ஆவிகளின் கிரியைகளைக்குறித்து நாம் எச்சரிக்கப்படுகிறோம். கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்; நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும் (2 தெச. 2:9,10) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இரட்சிப்பின் வஸ்திரம் தரித்துக்கொள்ளுங்கள்!

மிகுந்த உபத்திரவத்தின் நாட்களில், எஞ்சியிருக்கும் பரிசுத்தவான்கள், விழிப்போடு தங்களைக் காத்துக்கொள்ள அழைக்கப்படுகிறார்கள். இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான் (வெளி. 16:15) என்று எழுதப்பட்டிருக்கிறது.

நிர்வாணமாய் நடவாதபடிக்கு என்பது, இரட்சிப்பின் வஸ்திரத்தை உடுத்தினவர்களாய், பரிசுத்தத்திலும், உண்மையிலும், நீதியிலும், நிலைத்திருக்க வேண்டியதை உணர்த்துகிறது. அப்படியாகக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான் என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்தத் தரிசனப் புஸ்தகத்தில், மற்ற அடைப்புப்பகுதிகளைப்போன்றே இந்த வசனம், ஆறாம் கோபகலச நியாயத்தீர்ப்புக்கும், ஏழாவது கோபகலச நியாயத்தீர்ப்புக்கும் இடையே, ஒரே வசனத்தையுடைய அடைப்புப்பகுதியாக, கடைசிக்கால சம்பவங்களைத் தொடர்ச்சியாக அறிந்துகொள்ள உதவுகிறது.

சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கவிருக்கும் யுத்தம், அர்மகெதோன் எனப்படும் இடத்திலே நடக்கவிருக்கிறது.

அப்பொழுது எபிரெய பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான் (வெளி. 16:16) என்று எழுதப்பட்டிருக்கிறது. மெகிதோ மலைப்பகுதி எருசலேமுக்கு வடக்கே சுமார் 90 கிலோமீட்டர் தூரத்திலுள்ளது. எபிரெயு பாஷையிலே அர்மகெதோன் எனப்படும் இதனைச் சார்ந்த பரந்து விரிந்த சமவெளியில், அநேக யுத்தங்கள் முன்னர் நடைபெற்றுள்ளன. நெப்போலியன் எனும் பிரான்ஸ் நாட்டு படைத்தலைவன், உலகின் மிகவும் பெரிதான இயற்கை யுத்தக்களமாக இதைக் குறிப்பிடுகிறார். அர்மகெதோன் யுத்தத்திற்கான ஆயத்தங்கள் இந்தக் காலக்கட்டத்தில் செய்யப்பட்டிருந்தாலும், நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலேயே, இந்த யுத்தம் நடைப்பெற்று நிறைவுபெற இருக்கிறது (வெளி. 19:19,20).

ஏழாம் கோபகலசம் - பூமி மிகவும் அதிர்ந்தது !

ஏழாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆகாயத்தில் ஊற்றினான்; அப்பொழுது பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து; ஆயிற்று என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறந்தது. சத்தங்களும் இடிமுழக்கங்களும் மின்னல்களும் உண்டாயின; பூமி மிகவும் அதிர்ந்தது, பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள் முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சியுண்டானதில்லை (வெளி. 16:17,18). ஏழாவது கோபகலசம், ஏழாவது எக்காள வாதையையும் (வெளி. 11:15), ஏழாவது முத்திரை (வெளி. 8:1) நியாயத்தீர்ப்பையும் நிறைவுச்செய்கிறது.

ஏழாவது, கடைசி நியாயத்தீர்ப்பு, மிகவும் கொடியதும், முன் எப்பொழுதும் நடந்திராததுமான சேதங்களை ஏற்படுத்தவிருக்கிறது. இது ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய சாத்தானுக்கும், அவனுடைய அசுத்த ஆவிகளின் சேனைக்கும் விரோதமான நியாயத்தீர்ப்பு ஆகும். அப்பொழுது பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து: ஆயிற்று என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறக்கும். 'ஆயிற்று' என்பது, தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் முழுமையும், நிறைவானதாகவும் இருப்பதை வெளிப்படுத்துகிறது.

இந்நாட்களில், அனுதினமும் உலகின் ஏதோவொரு பகுதியில் பூமியதிர்ச்சி ஏற்படுவதாக அறிகிறோம். நாளுக்குநாள் அவைகளின் எண்ணிக்கையும், தாக்கங்களும் அதிகரிப்பதாகவும் சொல்லப்படுகிறது.

உபத்திரவத்தின் நாட்களின் துவக்கத்தில், பெரிதான பூமியதிர்ச்சி உண்டாக இருப்பதாக அறிந்தோம். நிறைவில் தோன்றவிருக்கும் இந்தப் பூமியதிர்ச்சி, அவைகள் எல்லாவற்றைக்காட்டிலும் மிகவும் அதிகமான பாதிப்பை உண்டாக்கவிருக்கிறது.

மகா நகரம் மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டது!

அப்பொழுது மகா நகரம் மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டது. புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன. மகா பாபிலோனுக்குத் தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்கு முன்பாக நினைப்பூட்டப்பட்டது (வெளி. 16:19). வேதாகமத்தில் மகா நகரம் என்பது எருசலேமைக் குறிக்கவும் (மத்தேயு 5:38; வெளி. 11:8), பாபிலோனைக் குறிக்கவும் (வெளி. 14:8; 18:18,21) உபயோகிக்கப்பட்டுள்ளது. பாபிலோன் மூன்று பங்காகப் பிரிக்கப்பட்டதாக வேதாகமத்தில் எங்கும் பிரத்தியேகமாகக் குறிப்பிடப்படவில்லை. மேலும், இந்த வசனத்தின் பிற்பகுதியில், பாபிலோன் தனியே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனிமித்தம், இந்த வசனத்தில் மகா நகரம் என்பது எருசலேம் என்பதாக அறியலாம்.

கர்த்தருடைய வருகையின் நாளிலே உண்டாகவிருக்கும் இந்தப் பூமியதிர்ச்சி, எருசலேம் மகா நகரத்தை மூன்று பங்காகப் பிரிக்கும் என்று சகரியா தீர்க்கதரிசி குறிப்பிடுகிறார். கர்த்தர் புறப்பட்டு, யுத்தநாளிலே போராடுவதுபோல, அந்த ஜாதிகளோடே போராடுவார். அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும்; அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம்; அதினாலே ஒரு பகுதி வடப்பக்கத்திலும் ஒரு பகுதி தென்பக்கத்திலும் சாயும். என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள் (சகரியா 14:3-5) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விளைவால், எருசலேம் மகா நகரத்தின் வரைபடமே மாற்றி அமைக்கப்படும். கூடுதலான தண்ணீர் ஊற்றுகள் தோன்றும் (சகரியா 14:8). இது எருசலேம் மகா நகரத்தைக், கர்த்தருடைய ஆயிரங்கால அரசாட்சிக்கு

ஆயத்தப்படுத்துவதைப்போன்று காணப்படும். ஒருபுறம் இந்தப் பூமியதிர்ச்சி, எருசலேமின் கட்டமைப்புகளைச் சீர்ப்படுத்தி, நகரத்தைக் கர்த்தரின் வருகைக்கு ஆயத்தப்படுத்தவிருக்கிறது; மறுபுறம் புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்துபோக காரணமாகிறது. மகா பாபிலோனுக்குத் தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரம் கொடுக்கப்படவிருக்கிறது.

ஏழாவது கோபகலசம் மகா பாபிலோனின் அழிவை உண்டுபண்ணும். பாபிலோன், தேவனுடைய எண்ணங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் புறம்பான, மாறுபட்ட மதவழிபாட்டுமுறைக்கும், ஆளுகைக்கும் ஒரு குறியீடாகும். பாபிலோன் வஞ்சிக்கப்பட்ட மாய்மாலமான சபையைக் குறிக்கிறது. மதுவுள்ள பாத்திரம், மகா பாபிலோனுக்கு விரோதமான தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையை வெளிப்படுத்துகிறது. இந்த அழிவின் முழு விவரங்களும், 17 மற்றும் 18ஆம் அதிகாரங்களில் தொகுக்கப்பட்டுள்ளன. ‘ ஆயிற்று’ என்று சொல்லிய பெருஞ்சத்தம், இந்தக் கோபகலசத்தோடும், இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையோடும், நியாயத்தீர்ப்புகள் நிறைவடைகிறதைக் குறிக்கிறது.

பெரிய கல்மழை வானத்திலிருந்து விழுந்தது!

தீவுகள் யாவும் அகன்றுபோயின, பர்வதங்கள் காணப்படாமற்போயின. தாலந்து நிறையான பெரிய கல்மழையும் வானத்திலிருந்து மனுஷர்மேல் விழுந்தது. அந்தக் கல்மழையினால் உண்டான வாதையினிமித்தம் மனுஷர்கள் தேவனைத் தூஷித்தார்கள்; அந்த வாதை மகா கொடியதாயிருந்தது (வெளி. 16:20,21). ஏழாம் கோபகலசத்தின் பூமியதிர்ச்சியும், பெரிய கல்மழையும் உலகத்தின் வரைபடங்களை மாற்றி அமைக்கும்படியான பலத்த சேதங்களைப் பூமியிலே உண்டாக்கும். தீவுகள் அகன்றுபோகும்; பர்வதங்கள் காணப்படாமற்போகும். பூமியதிர்ச்சியுடன்கூட பெரிய கல்மழையும் அக்காலத்தில் உண்டாகி மனுஷரை வாதிக்கும்.

தாலந்து நிறை என்பது 60 கிலோகிராம் எடையாகும். இதுப்போன்ற பனிப்பாறைகள் மனுஷர்மேலும், பூமியின்மேலும் வந்து விழும்போது, நினைத்துப்பார்க்கமுடியாத சேதங்களையும் மரணத்தையும் அவை

விளைவிக்கும். இதையே கர்த்தர்: உறைந்த மழையின் பண்டசாலைகளுக்குள் நீ பிரவேசித்தாயோ? கல்மழையிருக்கிற பண்டசாலைகளைப் பார்த்தாயோ? ஆபத்து வருங்காலத்திலும், கலகமும் யுத்தமும் வருங்காலத்திலும், பிரயோகிக்கும்படி நான் அவைகளை வைத்துவைத்திருக்கிறேன் (யோபு 38:22,23) என்று சொல்லியிருக்கிறார்.

கடைசிக்கால நிகழ்வுகளின் கால அட்டவணைப்படி, அந்நாட்களில் உலகமனைத்தும் நியாயந்தீர்க்கப்பட்டு, உபத்திரவத்தின் நாட்கள் நிறைவுக்கு வரும். சமுத்திரங்களும் தீவுகளும் மலைகளும் இல்லாது, பூமி மறுபடியும் புதுப்பித்துக் கட்டும்படி சீராக இருக்கும். ஆனாலும், இவ்வளவு மகா கொடியதாயிருந்த வாதைகளுக்குப் பின்னரும், மனுஷர்கள் மனந்திரும்பாது தேவனைத் தூஷிப்பார்கள். தேவனுடைய திட்டங்கள் தீர்மானங்களின்படி, இதைத் தொடரும் அடுத்த நிகழ்வு, இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையாக இருக்கும் (வெளி.19).

வஸ்திரத்தைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, உபத்திரவக்கால பரிசுத்தவான்கள் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாயிருக்க வேண்டியதைப்போல, இந்நாட்களில் நாம் இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகைக்கு ஆயத்தமாயிருப்பது அவசியமாகும். ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள் என்றும்; நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத்தேயு 24:42,44) என்றும் கர்த்தர் எச்சரித்திருக்கிறார்.

நாம் தியானித்த வார்த்தைகளின்படி, நியாயத்தீர்ப்புகளும் சிட்சைகளும் பலவேளைகளில் மனந்திரும்புதலை உண்டாக்குகிறதில்லை. மாறாக, தேவனுடைய அன்பும், மனதுருக்கமும் இரக்கமுமே மனந்திரும்புதலுக்கேதுவாக நடத்துகிறது. தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறது (ரோமர் 2:4) என்று எழுதப்பட்டுள்ளது. நியாயத்தீர்ப்புகளினால் மனுஷர் பெரும்பாலும் மனக்கடினமுள்ளவர்களாக, வைராக்கியமாய்த் தீங்கைத் தொடருகிறவர்களாக மாறுகிறார்கள். ஆனால்,

தேவனுடைய கிருபையும், இரக்கங்களும், ஆசீர்வாதங்களும், உபத்திரவத்தின் நாட்களிலும், மனுஷர்களை கிறிஸ்துவுக்கென வைராக்கியமாய்ச் செயல்பட நெருக்கி ஏவுகிறது.

உபத்திரவத்தின் நாட்கள், தேவனுடைய கோபாக்கினை, நியாயத்தீர்ப்புகளாக வெளிப்படும் நாட்களாகும். ஆகையால், நமக்கருளப்பட்டுள்ள கிருபையின் நாட்களைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள அழைக்கப்படுகிறோம். இரட்சிப்பின் வஸ்திரத்தை உடுத்தினவர்களாய், நீதியின் சால்வையைத் தரித்துக்கொண்டு, விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும், உண்மையிலும், அன்பிலும், நீதியிலும் நிலைத்திருக்க நம்மை அர்ப்பணிப்போம். இப்படியாக தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான். ஆமென். அல்லேலூயா!

இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம்பண்ணுவார்கள்,
ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால்
அவர்களை ஜெயிப்பார்; அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்றான்
(வெளி. 17:14).

11. மகா பாபிலோனின் இரகசியம்!

தொடரும் கோபகலச தரிசனம்.. ..!

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து அப்போஸ்தலனாகிய யோவானுக்குக் கடைசிக்காலச் சம்பவங்களைத் தரிசனங்கள்மூலம் வெளிப்படுத்தினார். வேதாகமத்தில் வெளிப்படுத்தின விசேஷத்தில், இந்தத் தரிசனங்கள் தொகுத்து எழுதப்பட்டுள்ளன. ஆறாம் அதிகாரம் துவங்கி பதினெட்டாம் அதிகாரம் வரையுள்ள வேதப்பகுதியில் விவரிக்கப்பட்டிருக்கும் கர்த்தர் எச்சரிக்கும் உபத்திரவக்காலத்தின் நிகழ்வுகளும், பல தரிசனங்களின் தொகுப்பேயாகும்.

பின்பு, வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாளமாகிய கடைசியான ஏழு வாதைகளையுடைய ஏழு தூதரைக் கண்டேன் (வெளி. 15:1) என்ற வார்த்தைகள், இப்படியான ஒரு புதிய தரிசனத்தின் துவக்கம் ஆகும். வெளிப்படுத்தின விசேஷம் 15 மற்றும் 16ஆம் அதிகாரங்கள், கோபகலச வாதைகளை விவரிப்பதாகப் பார்த்தோம். இந்த ஏழு கோபகலச வாதைகளுடன் தேவனுடைய கோபம் முடிவடைந்தாலும், 15ஆம் அதிகாரத்தில் துவங்கிய தரிசனம் முற்றுப் பெறாமல், 17ஆம் அதிகாரத்தையும் உள்ளடக்கியுள்ளதைக் காணமுடிகிறது.

ஏழாவது கோபகலச நியாயத்தீர்ப்பில், மகா பாபிலோனுக்குத் தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்கு முன்பாக நினைப்பூட்டப்பட்டது (வெளி. 16:19) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் குறிப்பிடப்படும் பாபிலோனுக்கு விரோதமான தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையின் விவரங்களே பதினேழாம் அதிகாரத்திலும், இதையடுத்து புதிய தரிசனமாகத் தொடரும் பதினெட்டாம் அதிகாரத்திலும், தொகுக்கப்பட்டுள்ளன.

காலவரிசைப்படி பார்ப்போமேயானால், கோபகலசங்களையடுத்து (16ஆம் அதிகாரம்), இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைச் சார்ந்த (19ஆம் அதிகாரம்) சம்பவங்களே தொடரவேண்டும். ஆனால், பாபிலோனின் அழிவை விவரிக்கும் 17 மற்றும் 18ஆம் அதிகாரங்கள் இடையில் தொகுக்கப்பட்டுள்ளன. இவை, பாபிலோன் மகா நகரம் விழுந்தது (வெளி. 14:8) என்றும்; மகா பாபிலோனுக்குத் தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையைக் கொடுக்கும்படி நினைப்பூட்டப்பட்டது (வெளி. 16:19) என்றும் சொல்லப்பட்ட சம்பவங்களின் விளக்கவுரையைப் போன்று அமைந்துள்ளது. 17 ஆம் அதிகாரம், தேவனுடைய எதிர்பார்ப்புகளுக்கு மாறுபட்ட தன்மைகளையுடைய மதவழிபாட்டு அமைப்பின் (Religious System) அழிவையும், 18ஆம் அதிகாரம், அரசியல் பொருளாதார கட்டமைப்பின் (Political and Economic System) அழிவையும் விவரிக்கிறது.

தண்ணீர்கள் மேலிருக்கிற வேசிக்கு வரும் ஆக்கினை!

ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் வந்து என்னோடே பேசி: நீ வா, திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிற மகா வேசியோடே பூமியின் ராஜாக்கள் வேசித்தனம்பண்ணினார்களே, அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகளும் வெறிகொண்டிருந்தார்களே, அவளுக்கு வருகிற ஆக்கினையை உனக்குக் காண்பிப்பேன் என்று சொல்லி; ஆவிக்குள் என்னை வனாந்தரத்திற்குக் கொண்டுபோனான் (வெளி. 17:1-3) என்று எழுதப்பட்டிருக்கிறது.

அங்கீகரிக்கப்பட்ட திருமண உறவுக்கப்பாற்பட்ட மாம்சீக உறவுகள், வேசித்தனம் எனப்படுகிறது. இவ்வகையான மாம்சீக உறவுகளைப்போன்று, தேவனோடுள்ள விசுவாச வாழ்வில் காணப்படும் உலகத்தோடு இசைந்த நிலை, ஆவிக்குரிய வேசித்தனமாகும். விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான் (யாக்கோபு 4:4) என்று எழுதப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் அடையாளத்தைத் தரித்துக்கொண்டு, உலகத்தின் இச்சைகளுக்கும், ஆசாபாசங்களுக்கும் உட்பட்டு, தேவனுடைய எதிர்பார்ப்புகளுக்கு மாறுபட்ட தன்மைகளை உடையதாய்ச் செயல்படும்அமைப்பே, இங்குமகாவேசிஎன்று குறிப்பிடப்படுகிறது.

திரளான தண்ணீர்கள் என்பது, திரளான ஜனங்களையும் கூட்டங்களையும் ஜாதிகளையும் பாஷைக்காரரையும் (வெளி. 17:15) குறிக்கிறது.மதவழிபாட்டு முறையில் உலகமனைத்தின் மேலும் அந்த மகா வேசி என்கிற அமைப்பு ஆளுகைச் செலுத்தவிருக்கிறது. அந்த வேசியோடே பூமியின் ராஜாக்கள் வேசித்தனம் பண்ணுவார்கள், அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகள் வெறிகொண்டிருப்பார்கள். பூமியின் ராஜாக்களும் குடிகளும், உலகம் அனைத்தையும் மோசம்போக்குகிற மதவழிபாட்டு அமைப்பினால் வஞ்சிக்கப்படவிருக்கிறார்கள்.

மதவழிபாட்டுமுறையில் உலகமயமாக்குதலுக்கு ஏதுவாக இந்த அமைப்பு, பூமியின் ராஜாக்களையும், குடிகளையும் வஞ்சித்து திசைத் திருப்பும். இவ்வகையான அமைப்பில், தேவனுடைய கற்பனைகள், கட்டளைகளைக் கைக்கொள்ளுதல் வலியுறுத்தப்படாது. ஆதலால், அநேகர் இதில் ஆர்வம் காட்டுவார்கள். இயேசுவே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார்; அவராலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்கிற உண்மைக்குப் புறம்பான கொள்கைகளும் கருத்துக்களும் தோன்றி, 'எம்மதமும் சம்மதம்' போன்ற ஆவிக்குரிய வேசித்தனம் வெளிப்படும். இவ்வகையான தவறான நம்பிக்கையினால், வேசித்தனமாகிய மதுவினால், பூமியின் குடிகள் வெறிகொண்டிருப்பார்கள்; ராஜாக்களும் தலைவர்களும், அந்தக் கொள்கைகளுக்கும் போதகங்களுக்கும் செவிகொடுத்து வஞ்சிக்கப்படுவார்கள்.

சிகப்பு மிருகத்தின்மேல் ஏறியிருந்த ஸ்திரீ!

அப்பொழுது ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையும் உடையதும் தூஷணமான நாமங்களால் நிறைந்ததுமான சிவப்புநிறமுள்ள மிருகத்தின்மேல் ஒரு ஸ்திரீ ஏறியிருக்கக் கண்டேன் (வெளி. 17:3) என்று எழுதியிருக்கிறார். யோவான் அந்தத் தூதனால் வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டுத் தெய்வீக வெளிப்பாட்டை ஆவியில் பெற்றுக்கொள்ளுகிறார்.

இந்தச் சிவப்புநிறமுள்ள மிருகம், சிவப்பான வலுசர்ப்பத்தைப்போன்றும் (வெளி. 12:3), சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்த மிருகத்தைப்போன்றும் (வெளி. 13:1), ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையும் உடையதாக இருக்கும். இந்த ஒருங்கிணைந்த மிருகம்,

வலுசர்ப்பத்தின் தன்மையையும், சமுத்திரத்திலிருந்து வந்த மிருகத்தின் தன்மையையும் உடையதாக இருக்கும்.

அந்த ஸ்திரீ சிவப்புநிறமுள்ள மிருகத்தின்மேல் ஏறியிருப்பது, உலகத்தைச் சார்ந்த மதவழிபாட்டு அமைப்பின் ஆளுகையும் அதிகாரமும், அந்த மிருகத்தின் வஞ்சகத் திட்டத்தோடு இணைந்து செயல்படவிருப்பதைக் காட்டுகிறது. மேலும், குறிப்பிட்ட காலத்திற்கு இந்த மதவழிபாட்டு அமைப்பு, அந்த மிருகத்தின் ஆளுகையைக்காட்டிலும் மேலோங்கி இருக்கும். ஆனாலும், மிருகத்தின்மேல் கண்ட பத்துக்கொம்புகளானவர்கள், நிறைவில், பூமியின் ராஜாக்கள்மேல் ராஜ்யபாரம்பண்ணுகிற ஸ்திரீயானவளை நெருப்பினால் சுட்டெரித்துப்போட இருக்கிறார்கள் (வெளி. 17:16).

பாபிலோன் வேசிகளுக்கும் அருவருப்புகளுக்கும் தாய்!

அந்த ஸ்திரீ இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையுந்தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டு, தன் வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள். மேலும், இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது (வெளி. 17:4,5).

இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையும், ராஜரீகத்தையும் செல்வத்தையும் குறிக்கிறது. பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டிருப்பது. அந்த ஸ்திரீயின் ஆடம்பர வாழ்வையும் செல்வச்செருக்கையும் வெளிப்படுத்துகிறது. அவள் தன் கையிலே பிடித்திருந்த பொற்பாத்திரம் தெய்வீக உறவின் சின்னம்போல் தோன்றினாலும், இங்கு அது அவளுடைய வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்திருக்கிறது. இது பொய்யான மதக்கோட்பாடுகளையும், ஆவிக்குரிய விபச்சாரம் எனப்படும் விக்கிரகாராதனையையும், சத்தியத்திற்குப் புறம்பான போதனைகளையும் குறிக்கிறது. இவைகளால் பூமியின் ராஜாக்களும் குடிகளும், மெய்த்தேவனை ஆராதிப்பதற்குப் பதிலாக, சிவப்பான மிருகத்தைப் பற்றிக்கொண்டு, அதை வணங்கும்படி அந்த ஸ்திரீ செய்யவிருக்கிறாள்.

இதனிமித்தமே அவள் வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் எனப்படுகிறாள்.

இந்த வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய், பூமியிலே இதுவரை கண்டிராத வஞ்சகத்தை வெளிப்படுத்தவிருக்கிறது. இது போலியான மதவழிபாட்டு அமைப்பின் தன்மைகளை வெளிப்படுத்தும் ஒரு குறியீடாகும். மகா வேசி என்று குறிப்பிடப்படுகிற இந்த மத அமைப்பு, முன்னர் தேவனோடு சரியான உறவிலிருந்து, பின்னர் தேவனைவிட்டு விலகி, உலகத்தால் வஞ்சிக்கப்பட்டு, இச்சைகளுக்கு உட்பட்டு, மோசம்போனதாக அறிகிறோம்.

எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை, அசட்டைபண்ணுவான். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது என்றார் (லூக்கா 16:13). கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளால் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும் (2 பேதுரு 2:20) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இரத்தத்தினால் வெறிகொண்டிருக்கும் ஸ்திரீ!

அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறிகொண்டிருக்கிறதைக் கண்டேன்; அவளைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். அப்பொழுது, தூதனானவன் என்னை நோக்கி: ஏன் ஆச்சரியப்படுகிறாய்? இந்த ஸ்திரீயினுடைய இரகசியத்தையும், ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையுமுடையதாய் இவளைச் சுமக்கிற மிருகத்தினுடைய இரகசியத்தையும் உனக்குச் சொல்லுகிறேன் (வெளி. 17:6,7) என்றான். இரத்தத்தினால் வெறிகொண்டிருக்கிற ஸ்திரீ என்பது இங்கு ஒரு அடையாளமாகக் குறிப்பிடப்படுகிறது. இந்த மகா வேசி, பரிசுத்தவான்களையும், இயேசுகிறிஸ்துவைப்பற்றி சாட்சி சொன்னவர்களையும் கொலைசெய்கிறதற்குக் காரணமாயிருப்பாள். யோவான் கண்ட இந்தக் காட்சி, அவரை அதிர்ச்சியடைய வைத்தது.

பாபிலோன் என்றும் மகா வேசி என்றும் அறியப்படவிருக்கிற அந்த ஸ்திரீ, உபத்திரவத்தின் நாட்களில், பூமியின் ராஜாக்களுக்குமேல் தன்னை உயர்த்திக்கொண்டு அவர்கள்மேல், உலகமனைத்திற்கும் ஒரே மதவழிபாட்டுமுறை என மதரீதியாக ஆளுகைச் செய்யவிருக்கிறாள். ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையுமுடையதாய் அவளைச் சுமக்கிற சிவப்புநிறமுள்ள மிருகம், உபத்திரவத்தின் காலத்தில் தோன்றி, ஏகசக்ரவர்த்தியாகச் செயல்படவிருக்கும் ராஜ்யத்தைக் குறிக்கிறது. இந்த ராஜ்யம் சில காலங்கள் அவளோடு இணைந்து, பூமியின் ராஜாக்களையும் குடிகளையும் மோசம்போக்கவிருக்கிறது.

கலசங்களையுடைய ஏழு தூதரில் ஒருவன் வந்து, யோவானுக்கு முதலாவது தரிசனத்தையும், பின்னர் எட்டாம் வசனம் துவங்கியுள்ள வேதப்பகுதியில் அதன் அர்த்தத்தையும் விளங்கப்பண்ணுகிறார். எட்டு முதல் பதினேழாம் வசனங்களில், மிருகத்தின் இரகசியம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வேதப்பகுதியை முன்னர், 13 ஆம் அதிகாரத்தின் சம்பவங்களை அறிந்துகொள்ள தியானித்ததை நினைவில்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

மிருகத்தின் இரகசியம்!

நீ, கண்ட மிருகம் முன்னே இருந்தது, இப்பொழுது இல்லை, அது பாதாளத்திலிருந்து ஏறிவந்து, நாசமடையப்போகிறது. உலகத்தோற்றமுதல் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள், இருந்ததும், இராமற்போனதும், இனி இருப்பதுமாயிருக்கிற மிருகத்தைப்பார்த்து ஆச்சரியப்படுவார்கள் (வெளி. 17:8) என்று எழுதப்பட்டிருக்கிறது. நான்கு நிலைகளிலே அந்த மிருகத்தின் காலங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. அது முன்னே இருந்தது, இப்பொழுது இல்லை, அது பாதாளத்திலிருந்து ஏறிவந்து, நாசமடையப்போகிறது. நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே அல்லாமல், அழிவிற்கு, மரணத்திற்குட்பட்ட ஒருவர் மறுபடியும் உயிர்ப்பிக்கப்படுவது என்பது கூடாத காரியம். ஆகவே, ஒருங்கிணைந்த இந்த சிவப்புநிற மிருகம் தனிநபரை அல்ல, ராஜ்யத்தைக் குறிக்கிறதாக அறியலாம்.

இது இன்னும் பிரத்யேகமாக, முதலாம் நூற்றாண்டில், யோவான் காலத்தில் மேன்மையின் உச்சக்கட்டத்திலிருந்த ரோம சாம்ராஜ்யத்தைக்

குறிக்கிறது. கி.பி. 476ஆம் ஆண்டிலே இந்த சாம்ராஜ்யம் சிதைந்து அழிவிற்குட்பட்டது என்று வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. உலக அரசியலிலே இந்நாள்வரை, சாம்ராஜ்யமாக இது கட்டப்படவில்லை, முந்தின மேன்மையை அடையவுமில்லை. ஆனாலும், தானியேலின் எழுபதாவது வாரம் என அறியப்பட்டிருக்கிற, உபத்திரவத்தின் காலத்தில், பாதாளத்திலிருந்து ஏறிவருவதுபோல, ரோம சாம்ராஜ்யம் அழிவிலிருந்து திரும்பக் கட்டப்படவிருக்கிறது.

அதன் பின்னர், குறுகிய காலத்திலே இந்த சாம்ராஜ்யமும் நாசமடையவிருக்கிறது. நேபுகாத்நேச்சார் ராஜா கண்ட சொப்பனங்களுக்கு, தானியேல் அர்த்தம் சொன்னபோது, இந்தச் சம்பவத்தைக் குறிப்பிடுகிறார். ரோம சாம்ராஜ்யம் நிறைவில் பத்து ராஜாக்களின் கூட்டமைப்பாக இருக்கும் நாட்களிலே, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வந்து, அதை அழிவிற்குட்படுத்துவார். அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை, ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும் (தானியேல் 2:44) என்றார்.

உலகத்தோற்றமுதல் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள், இருந்ததும் இராமற்போனதும், இனி இருப்பதுமாயிருக்கிற மிருகத்தைப்பார்த்து ஆச்சரியப்படுவார்கள். ஜீவபுஸ்தகம் கர்த்தருடைய புஸ்தகம் (யாத்திராகமம் 32:32); கர்த்தரால் மீட்கப்பட்டவர்களின் பெயர்கள் அதில் எழுதப்பட்டிருக்கும். ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் (வெளி. 13:8), கர்த்தரால் மீட்கப்படாதவர்கள், அந்த மிருகத்தைப்பார்த்து ஆச்சரியப்பட்டு, அதைப் பின்பற்றுவார்கள், வணங்குவார்கள். கர்த்தரால் மீட்கப்பட்டோருக்கு, அந்த மிருகத்தின் தன்மைகள் வெளியரங்கமாயிருக்கும். ஆதலால், அவர்கள் அதை வணங்கமாட்டார்கள்.

சரித்திரத்தில் தோன்றி மறைந்த ராஜ்யங்கள்!

ஞானமுள்ள மனம் இதிலே விளங்கும். அந்த ஏழு தலைகளும் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகளாம். அவர்கள் ஏழு ராஜாக்களாம்; இவர்களில் ஐந்துபேர் விழுந்தார்கள், ஒருவன் இருக்கிறான். மற்றவன் இன்னும் வரவில்லை, வரும்போது அவன் கொஞ்சக்காலம் தரித்திருக்கவேண்டும். இருந்ததும் இராததுமாகிய மிருகமே எட்டாவதானவனும், அவ்வேழிலிருந்து தோன்றுகிறவனும், நாசமடையப் போகிறவனுமாய் இருக்கிறான் (வெளி. 17:9-11) என்று எழுதப்பட்டிருக்கிறது.

அந்த ஸ்திரீ, தேவனுடைய தன்மைகளுக்கு மாறுபட்ட மதவழிபாட்டின் குறியீடென அறிந்தோம். அந்த ஏழு தலைகளும், ஏழு மலைகளின்மேல் கட்டப்பட்டுள்ள ரோமாபுரி நகரத்தைக் குறிக்கிறது. மேலும், அது ஏழு ராஜ்யங்களையும் குறிக்கிறது. சரித்திரத்திலே இந்த ராஜ்யங்கள், தேவஜனத்தை அம்மட்டும் அடிமைத்தனத்திற்கும், உபத்திரவங்களுக்கும் உட்படுத்தினவைகளாகும். இவைகள் சரித்திரத்தில் தோன்றி அழிந்து மறைந்ததைப்போல, மிருகத்தின் ராஜ்யமும் கடைசிக்காலத்தில் தோன்றி நாசமடையவிருக்கிறது. முடிவில், உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின. அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம்பண்ணுவார் (வெளி. 11:15). அல்லேலூயா!

யோவான் இந்தத் தரிசனத்தைப்பெற்ற நாட்களில் (கி.பி. 96), இதில் ஐந்து உலக ராஜ்யங்களின் காலங்கள் நிறைவுப்பெற்றிருந்தது. அவை எகிப்து, அசீரியா, பாபிலோன், மேதிய-பெர்சிய ராஜ்யம் மற்றும் கிரேக்க சாம்ராஜ்யம் ஆகும். ரோமப் பேரரசு ஆறாவது ராஜ்யம் எனவும், ஏழாவது ராஜ்யம் அக்காலத்தில் வரவில்லை என்றும் பார்த்தோம். இந்த ஏழாவது சாம்ராஜ்யம், கடைசிக்காலத்தில் வரவிருக்கிற புதிய ரோம சாம்ராஜ்யம் ஆகும். அந்திக்கிறிஸ்து என்று குறிப்பிடப்படுகிற மிருகம், இந்த ஏழாவது ராஜ்யத்தோடு சம்பந்தப்பட்ட எட்டாவது ராஜ்யத்தை உபத்திரவக்காலத்தில் ஸ்தாபித்து, நிறைவில் நாசமடையவிருக்கிறான்.

நீ கண்ட பத்துக் கொம்புகளும் பத்து ராஜாக்களாம்; இவர்கள் இன்னும் ராஜ்யம் பெறவில்லை, இவர்கள் மிருகத்துடனே கூட ஒருமணி நேரமளவும் ராஜாக்கள்போல அதிகாரம் பெற்றுக்கொள்ளுகிறார்கள் (வெளி. 17:12) என்று எழுதப்பட்டிருக்கிறது. பத்துக் கொம்புகள் பத்து நாடுகளின் கூட்டமைப்பான

பத்து ராஜாக்களைக் குறிக்கிறது (தானியேல் 7:24). அவர்களோடு இணைந்து, உலகத்தின் அதிபதியான மிருகம் என்றழைக்கப்படுகிற அந்திக்கிறிஸ்து (வெளி. 13:1) உபத்திரவக்காலத்தில் ஆளுகைசெய்யவிருக்கிறான்; சரித்திரத்திலே ஒரு மணிநேர அளவு என்பது, குறுகியக் காலத்தைக் குறிக்கிறது. இந்தக் கடைசிக்காலப் புதிய ரோம சாம்ராஜ்யம் வருங்காலத்தில் உயிர்ப்பிக்கப்படவிருக்கும் பத்து அரசாங்கங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

ஆட்டுக்குட்டியானவர் அவர்களை ஜெயிப்பார்!

இவர்கள் ஒரே யோசனையுள்ளவர்கள்; இவர்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள். இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம்பண்ணுவார்கள், ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார். அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்றான் (வெளி. 17:13,14).

இங்கு மிருகம் என்று அறியப்பட்டிருக்கிற அந்திக்கிறிஸ்து, பூமியின் ராஜ்யங்கள் அனைத்தையும் ஒருமுகப்படுத்தி, ஒரே ஆளுகைக்கு உட்படுத்துவான். பாபேல் கோபுரத்தின் காலம் துவங்கி, ஒருங்கிணைந்த உலக ராஜ்யம் என்பது மனுஷரின் நோக்கமாக இருந்து வருகிறது. இந்த யுத்தம் பத்தொன்பதாம் அதிகாரத்தில் (வெளி. 19:19-21) விவரிக்கப்பட்டுள்ளது. ஆட்டுக்குட்டியானவர் அவர்களை ஜெயிப்பார்.

கடைசிக்கால நிகழ்வுகளில் ஆட்டுக்குட்டியானவர் என்று அறியப்பட்டிருக்கிற நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, மீட்கப்பட்ட பரிசுத்தவான்களுடன் வருவார். இவர்கள், அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருப்பார்கள். மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது (மத்தேயு 25:31) என்றும்; அங்கே உம்முடைய பராக்கிரமசாலிகளை இறங்கப்பண்ணுவீராக (யோவேல் 3:11) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இதனால், மீட்கப்பட்ட பரிசுத்தவான்களோடே, பராக்கிரமசாலிகளான பரிசுத்த தூதர்களும் வருவார்கள் என அறியலாம்.

வேசி நெருப்பினால் சுட்டெரித்துப்போடப்படுவாள்!

பின்னும் அவன் என்னை நோக்கி: அந்த வேசி உட்கார்ந்திருக்கிற தண்ணீர்களைக் கண்டாயே, அவைகள் ஜனங்களும் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாம். நீ மிருகத்தின்மேல் கண்ட பத்துக்கொம்புகளானவர்கள் அந்த வேசியைப் பகைத்து, அவளைப் பாழும் நிர்வாணமுமாக்கி, அவளுடைய மாம்சத்தைப் பட்சித்து, அவளை நெருப்பினால் சுட்டெரித்துப்போடுவார்கள் (வெளி. 17:15,16) என்றான்.

திரளான ஜனங்கள் கூட்டங்கள் ஜாதிகள் பாஷைக்காரரை, வஞ்சித்து மோசம்போக்கின ஸ்திரீ அழிவிற்குட்படவிருக்கிறாள். அவள் சிவப்புநிறமுள்ள மிருகத்தின்மேல் ஏறியிருப்பது, உலகைச் சார்ந்த மத அமைப்பு, அந்த மிருகத்தின் வஞ்சகத் திட்டத்தோடு இணைந்து செயல்படவிருப்பதைக் குறிப்பதாகப் பார்த்தோம். நிறைவில், இங்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு காட்சியைக் காண்கிறோம். மிருகத்தின்மேல் கண்ட பத்துக்கொம்புகளானவர்களே ஒருங்கிணைந்து அந்த வேசியைப்பகைத்து, அவளை நெருப்பினால் சுட்டெரித்துப் போடவிருக்கிறார்கள்.

இவ்வுலகின் மேன்மையும் மகிமையும் நிலைவரமற்றதும், அழிந்துபோகக்கூடியதுமாய் இருக்கிறது. என் பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும் (மத்தேயு 15:13) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். தேவனாலே உண்டாக்கப்படாததெதுவும், மங்கி மறைந்து அழிந்துப்போகும். இதைப்போன்றே, பெருமையினாலும் அகங்காரத்தினாலும் நிறைந்த அந்த ஸ்திரீயும், ஐந்து நிலைகளில் அழிவிற்குட்படவிருப்பதைக் காண்கிறோம்.

அவளைப் பகைத்து, பாழாக்கி சேதப்படுத்துவார்கள்; அவளுடைய இரத்தாம்பரங்களையும் ஆடை அணிகலன்களையும் அகற்றி நிர்வாணமாக்கி, அவமானப்படுத்துவார்கள்; அவளுடைய மாம்சத்தைப் பட்சித்து, ராஜரீகத்தையும் செல்வத்தையும் அழித்துப்போடுவார்கள்; நிறைவில் நெருப்பினால் சுட்டெரித்துப் போடுவார்கள். ஆகையால் அவளுக்கு வரும் வாதைகளாகிய சாவும் துக்கமும் பஞ்சமும் ஒரே நாளிலே வரும் என்று எழுதப்பட்டிருக்கிறது.

தேவனுடைய வார்த்தைகள் நிறைவேறும்!

தேவன் தம்முடைய வார்த்தைகள் நிறைவேறுமளவும், அவர்கள் தமது யோசனையை நிறைவேற்றுகிறதற்கும், ஒரே

யோசனையுள்ளவர்களாயிருந்து, தங்கள் ராஜ்யத்தை மிருகத்திற்குக் கொடுக்கிறதற்கும் அவர்களுடைய இருதயங்களை ஏவினார். நீ கண்ட ஸ்திரீயானவள் பூமியின் ராஜாக்கள்மேல் ராஜ்யபாரம்பண்ணுகிற மகா நகரமேயாம் என்றான் (வெளி. 17:17,18).

ஆச்சரியம் ஆனால் உண்மை! அந்த ராஜாக்கள் மற்றும் மிருகத்தின் செயல்களுங்கூட, தேவனுடைய திட்டங்களையும், யோசனையையும் நிறைவேற்றுகிறதற்கே செயல்பட இருக்கின்றன. தேவனுடைய நியாயத்தீர்ப்புகளை, அவர்கள் தேவனுக்கென்று அந்த ஸ்திரீயின்மேல் நடப்பிக்கவிருக்கிறார்கள். ஆட்டுக்குட்டியானவர்மேல் ஜெயங்கொள்ள அந்த ராஜாக்கள் தங்கள் ராஜ்யத்தை மிருகத்திற்குக் கொடுக்கவிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய இருதயங்களை ஏவினபடியால், தேவனுடைய பரிபூரண சித்தம் அப்பொழுது நிறைவேறும்.

மேலும் அந்தத் தூதன், நீ கண்ட ஸ்திரீயானவள் பூமியின் ராஜாக்கள்மேல் ராஜ்யபாரம்பண்ணுகிற மகா நகரமேயாம் என்றான். இது மாறுபட்ட மத அமைப்பான பாபிலோன், வழிபாட்டுமுறையில் உலகமயமாக்குதலின் காரணமும் முடிவுமாக இருக்கப்போவதைக் குறிக்கிறது.

பாபிலோனின் அரசியல் வர்த்தக அழிவு!

பாபிலோன் ஒரு மகா வேசியாக மாறுபட்ட மதவழிபாட்டின் அடையாளமாகப் பதினேழாம் அதிகாரத்திலும்; ஒரு மகா நகரமாக, தேவனுக்கு விரோதமான அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பாக பதினெட்டாம் அதிகாரத்திலும் விவரிக்கப்பட்டிருக்கிறது. உபத்திரவக்காலத்தில் அம்மட்டும் அந்த ஸ்திரீ, மிருகத்தின்மேல் அமர்ந்திருந்ததுபோல, மாறுபட்ட மதவழிபாட்டு அமைப்பு அரசியல் பொருளாதார ஆளுகைக்கு மேலாகச் செயல்படும். அந்த மகா வேசியை, பத்துக்கொம்புகளான ராஜாக்கள் பகைத்து நெருப்பினால் சுட்டெரித்துப் போடுவார்கள். அந்த ஸ்திரீயைச் சுட்டெரித்தப் பின்பு, அந்த மிருகம், அனைத்து மதவழிபாட்டு முறைகளையும் தன்னுடைய ஆளுகைக்குட்படுத்தி, எல்லாவற்றிற்கும் மேலாக தன்னை உயர்த்திச் செயல்படவிருக்கிறது.

அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவன் என்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை

உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான் (2 தெசலோனிக்கேயர் 2:4) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பதினெட்டாம் அதிகாரம் பாபிலோனின் மற்றொரு பரிமாணமான அரசியல் பொருளாதார அழிவை விவரிக்கிறது. இந்த அரசியல் பாபிலோனை, தேவனாகிய கர்த்தரே, ஒரு நாழிகையிலே நியாயந்தீர்க்கவிருக்கிறார். இதனிமித்தம், பூமியின் ராஜாக்களும், வர்த்தகர்களும் அழுது புலம்புவார்கள். பாபிலோன் மகா நகர அழிவின் இந்தப் பரிமாணம், அதனைச்சார்ந்த பூமியின் ராஜ்யங்கள் தலைவர்கள் ஆளுகையின்மேலும், உலகளவிலான வர்த்தகம் மற்றும் பொருளாதாரத்தின் மேலும் வரவிருக்கும் பாதிப்புகளை வெளிப்படுத்துகிறது.

மகா பாபிலோன் விழுந்தது!

இவைகளுக்குப்பின்பு, வேறொரு தூதன் மிகுந்த அதிகாரமுடையவனாய், வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன்; இவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று. அவன் பலத்த சத்தமிட்டு: மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! அது பேய்களுடைய குடியிருப்பும், அசுத்த ஆவிகளுடைய காவல்வீடும், அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று (வெளி. 18:1,2) என்று எழுதப்பட்டிருக்கிறது.

யோவான் வானத்திலிருந்து இறங்கிவரக்கண்ட அந்தத் தூதன் தேவசந்நிதானத்தில் நிற்கும் கேரூபீன்களில் ஒருவன்போன்று மிகுந்த அதிகாரமுடையவனாய்க் காணப்படுகிறான். அவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாயிற்று. மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! என்ற தேவனால் நிச்சயிக்கப்பட்ட செய்தியை அந்தத் தூதன் அறிவிக்கிறான். பதினான்காம் அதிகாரம் எட்டாம் வசனத்தில் முன்னறிவிக்கப்பட்ட இந்தச் செய்தி, இங்கு விவரிக்கப்படுகிறது.

பேய்களுடைய குடியிருப்பு, அசுத்த ஆவிகளுடைய காவல்வீடு என்பவை, இங்குச் சபைக்குப் புறம்பான மக்களிடையே காணப்படும் அருவருப்புகளைக் குறிக்கவில்லை. இவை முன்னர் ஜீவனுள்ள தேவனோடு தங்களை அடையாளப்படுத்தி, பின்னர் பிசாசு உலகம் பாவத்தினால் வஞ்சிக்கப்பட்டுச் சீரழிந்த சபைகளைக் குறிக்கிறது.

உண்மையாய் தேவனை ஆராதிக்கும் சபைகள், தேவனுடைய பிரசன்னத்தினால் நிரப்பப்பட்டு, ஆவியானவரின் பலத்தக் கிரியைகளை வெளிப்படுத்தும் இடங்களாக இருக்கும். இதற்கு மாறாக, இந்தச் சீரழிந்த சபைகள், கேளிக்கை களியாட்டு வர்த்தக மையங்கள்போன்று அருவருப்பான செயல்களை நடப்பித்து, அசுத்த ஆவிகளின் உறைவிடமாகச் செயல்படும்.

மேலும் அந்தத் தூதன்: அவளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்தார்கள்; பூமியின் ராஜாக்கள் அவளோடே வேசித்தனம் பண்ணினார்கள்; பூமியின் வர்த்தகர் அவளுடைய செல்வச்செருக்கின் மிகுதியினால் ஐசுவரியவான்களானார்கள் என்று விளம்பினான் (வெளி. 18:3). வேசித்தனத்தின் உக்கிரமான மது என்பது, பாபிலோன் எல்லா ஜாதிகளையும், நிலையில்லாத உலகப்பொருளுக்கும் இச்சைகளுக்கும் அடிமைப்படுத்தி மதிமயங்கச் செய்யவிருப்பதைக் குறிக்கிறது. பூமியின் ராஜாக்கள், இந்த அமைப்போடு இணைந்து, நேர்மையற்ற செயல்களினால் ஜனங்களை வஞ்சிக்கவிருக்கிறார்கள். பூமியின் வர்த்தகர், பாபிலோனின் சுகபோக வாழ்விற்கான பொருட்களை விநியோகிப்பதன்மூலம் அதிகமான பொருள் ஈட்டவிருக்கிறார்கள். தேவனுக்கு மேலான முக்கியத்துவத்தைப் பாபிலோன் பெரும்படியாக, அதன் செல்வச்செருக்கும் சுகபோகமும், பூமியின் குடிகளை வஞ்சிக்கவிருக்கிறது.

பாபிலோனுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது!

பின்பு, வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது: என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள். அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, தேவன் அவளுடைய அநியாயங்களை நினைவுகூர்ந்தார் (வெளி. 18:4,5) என்றது. தேவனிடத்திலிருந்து இரக்கத்தையும் கிருபையையும் பெற்றுக்கொள்ள விரும்புகிற யாவரும், பாபிலோனைவிட்டு வெளியே வரக் கட்டளைப்பெறுகிறார்கள்.

இதற்குச் செவிகொடாதபட்சத்தில், அவளுடைய பாவங்களுக்கு உடன்பட்டு, அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படுவார்கள்.

அவளுடைய வேசித்தனத்தின் பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்க, அந்த அமைப்புகளைவிட்டு விலகி, அழிவிற்கு முன்னர் வெளியேறுவது அவசியமாகும். இவ்வகையான அமைப்புகளிலோ அல்லது சபைகளிலோ அவர்களோடு ஐக்கியப்பட்டிருப்பது, பாவத்திற்குட்பட வாய்ப்புகளை உண்டாக்கும். நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானவைகளைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (2 கொரி. 6:17).

கிருபையின் காலம் நிறைவுப்பெற்ற வேளையில், உபத்திரவத்தின் நாட்களிலும் மனந்திரும்ப மனதில்லாத பாபிலோனுக்கு, நியாயத்தீர்ப்பே கொடுக்கப்படவிருந்தது. உபத்திரவக்காலத்தின் கடைசி நேரத்திலும், பாபிலோனைவிட்டு, பாழான சபைகளையும் அமைப்புகளையும்விட்டு, வெளியேறும்படி கர்த்தர் கட்டளையிடுகிறார்.

கிரியைகளுக்குத்தக்கதாகக் கொடுத்துத் தீருங்கள்!

அவள் உங்களுக்குப் பலனளித்ததுபோல நீங்களும் அவளுக்குப் பலனளியுங்கள்; அவளுடைய கிரியைகளுக்குத்தக்கதாக அவளுக்கு இரட்டிப்பாகக் கொடுத்துத் தீருங்கள்; அவள் உங்களுக்குக் கலந்துகொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாக அவளுக்குக் கலந்துகொடுங்கள். அவள் தன்னை மகிமைப்படுத்தி, செல்வச்செருக்காய் வாழ்ந்ததெவ்வளவோ அவ்வளவாய் வாதையையும் துக்கத்தையும் அவளுக்குக் கொடுங்கள். நான் ராஜஸ்திரீயாய் வீற்றிருக்கிறேன்; நான் கைம்பெண்ணல்ல, நான் துக்கத்தைக் காண்பதில்லையென்று அவள் தன் இருதயத்திலே எண்ணினாள் (வெளி. 18:6,7) என்றான்.

பாபிலோனுடைய கிரியைகளினால் பாதிக்கப்பட்ட யாவரும், அவளுக்கு இரட்டிப்பாகக் கொடுத்துத் தீர்க்க ஆலோசனைப்பெறுகிறார்கள். பரிசுத்தவான்களுக்கு அவள் செய்ததைப்போல, அவளுக்காகக் கோபாக்கினையின் பாத்திரம் இருபங்கு நிரப்பப்படும். அவள் பெருமையுள்ளவளாய் தன்னையே மகிமைப்படுத்திக் கொண்டாள். தன் மனநிறைவை நாடி அவள் சுகபோகத்தில் வாழ்ந்துவந்தாள். இறுமாப்பும் அகங்காரமும் உடையவளாய் நான் ராஜஸ்திரீ, நான் துக்கத்தைக் காண்பதில்லையென்று அவள் தன் இருதயத்திலே எண்ணினாள். தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார் என்று எழுதப்பட்டிருக்கிறது.

தேவனுடைய கோபாக்கினைகள் அநேகமாகத் தேவதூதர்களாலேயே நியாயத்தீர்ப்புகளாக வெளிப்படுகிறதைக் காண்கிறோம். ஆனால், இங்கு வானத்திலிருந்து உண்டான சத்தம், வல்லமையுள்ள தேவனே நியாயத்தீர்ப்புக் கொடுக்கவிருப்பதைத் தெரிவிக்கிறது. ஆகையால் அவளுக்கு வரும் வாதைகளாகிய சாவும் துக்கமும் பஞ்சமும் ஒரே நாளிலே வரும்; அவள் அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவாள்; அவளுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் தேவனாகிய கர்த்தர் வல்லமையுள்ளவர் (வெளி. 18:8) என்றது. பாபிலோனின் வர்த்தகமும் பொருளாதாரமும் ஒரே நாளில் முற்றிலும் அழிவிற்குட்படவிருக்கிறது.

பூமியின் ராஜாக்கள் அழுது புலம்புவார்கள்!

அவளுடனே வேசித்தனஞ்செய்து செல்வச்செருக்காய் வாழ்ந்த பூமியின் ராஜாக்களும் அவள் வேகிறதினால் உண்டான புகையைக் காணும்போது அவளுக்காக அழுது புலம்பி, அவளுக்கு உண்டான வாதையினால் பயந்து, தூரத்திலே நின்று: ஐயையோ! பாபிலோன், மகாநகரமே! பலமான பட்டணமே! ஒரே நாழிகையில் உனக்கு ஆக்கினை வந்ததே! என்பார்கள் (வெளி.18:9,10) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பாபிலோனின் அரசியல் பொருளாதார கட்டமைப்புகள் சிதைக்கப்பட்டு, அழிவிற்குட்படும்போது, பாபிலோனின் அழிவைக்காட்டிலும், பூமியின் ராஜாக்களாகிய தங்களுக்கு அதினால் உண்டாகும் பாதிப்புகளை நினைத்தே அவர்கள் அழுது புலம்புவார்கள். உலகமயமான வர்த்தகப்போட்டியில், பாபிலோன் என்கிற உலகளாவிய வர்த்தக அமைப்போடு இணைந்து, நேர்மையற்ற நடைமுறைகளினால் அவர்கள் செய்துவரும் வர்த்தகம் பாதிக்கப்படும்.

உலகளாவிய அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் இதனால் பெரும் தாக்கங்கள் ஏற்படும். அந்த கட்டமைப்புகள் கண்ணெதிரே எரிந்து நாசமாகிறதினால் உண்டான புகையைக் காணும்போது, அரசியல் தலைவர்கள் அவளுக்காக துக்கித்து அழுது, அவளுக்கு உண்டான வாதையினால் பயந்து புலம்புவார்கள். நினைத்தும் பார்க்கக்கூடாத அளவில் இந்த பாபிலோன் என்னும் கட்டமைப்புக்கு, ஒரே நாழிகையில் வந்த

ஆக்கினையினால், அவர்களுக்கு உண்டாகும் தாக்கங்களை நினைத்து அவர்கள் திகைத்து அலறுவதைப்போன்று இது காணப்படுகிறது.

வர்த்தகர் பாபிலோனுக்காக அழுது புலம்புவார்கள்!

பூமியின் வர்த்தகர்களும் தங்கள் தங்கள் சரக்குகளை இனிக் கொள்வாரில்லாதபடியால், அவளுக்காக அழுது புலம்புவார்கள் (வெளி. 18:11-13). பாபிலோனின் அழிவைக்கண்டு பூமியின் வர்த்தகர்கள் அழுது புலம்புவது, அந்த வர்த்தக கட்டமைப்போடு அவர்கள் கொண்டிருந்த அன்பினாலோ அல்லது கரிசனையினாலோ அல்லாமல், தங்களுடைய வர்த்தகம் பாதிக்கப்பட்டதினாலும், அது ஏற்படுத்தவிருக்கும் பொருளாதாரத் தொடர் விளைவுகளினாலுமேயாகும்.

பாபிலோனின் வர்த்தகப் பரிமாணம் இங்கு விவரிக்கப்பட்டுள்ளது. இங்கு பட்டியலிடப்பட்டிருக்கும் பொருட்களை ஏழு பகுதிகளாக பிரித்துப் பார்க்கமுடிகிறது. இவைகளில் பெரும்பாலானவை ஆடம்பர வாழ்விற்கானவைகளாகவே இருக்கிறது. பொன், வெள்ளி, இரத்தினம், முத்துக்கள் போன்ற விலையுயர்ந்த ஆபரணங்கள் முதல் பகுதியாகும். அடுத்து, சல்லா (மெல்லிய துணி), இரத்தாம்பரம், பட்டாடைகள், சிவப்பாடைகள் போன்ற சிறப்பாடைகள் உள்ளன.

மூன்றாவதாக, வாசனைக் கட்டைகள், தந்தம், விலையுயர்ந்த மரங்கள், வெண்கலம், இரும்பு வெள்ளைக்கல் போன்றவற்றால் செய்யப்படும் சகலவித உபயோகப் பொருட்கள் பட்டியலிடப்பட்டுள்ளது. இலவங்கப்பட்டை, தூபவர்க்கம், தைலங்கள், சாம்பிராணி போன்ற சுகந்த வாசனைப்பொருட்கள் அடுத்துள்ளது. ஐந்தாவதாக வளமான வாழ்வை வெளிப்படுத்தும் திராட்சரசம், எண்ணெய், மெல்லிய மாவு, கோதுமை, மாடுகள், ஆடுகள் போன்றவை உள்ளன. அடுத்து, யுத்த தளவாடங்களான குதிரைகளும் இரதங்களும், ஏழாவதாக அடிமைகளும், மனுஷருடைய ஆத்துமாக்களும் தொகுத்து எழுதப்பட்டிருக்கிறது.

ஒரு நாழிகையில் ஐசுவரியம் அழிந்துபோயிற்று!

உன் ஆத்துமா இச்சித்த பழவர்க்கங்கள் உன்னைவிட்டு நீங்கிப்போயின, கொழுமையானவைகளும் சம்பிரமமானவைகளும் உன்னைவிட்டு நீங்கிப்போயின, நீ அவைகளை இனிக் காண்பதில்லை.

இப்படிப்பட்டவைகளைக் கொண்டு வர்த்தகம்பண்ணி அவளால் ஐசுவரியவான்களானவர்கள் அவளுக்கு உண்டான வாதையினால் பயந்து, தூரத்திலே் நின்று; ஐயையோ! சல்லாவும் இரத்தாம்பரமும் சிவப்பாடையும் தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டிருந்த மகா நகரமே! ஒரு நாழிகையிலே இவ்வளவு ஐசுவரியமும் அழிந்துபோயிற்றே! என்று சொல்லி, அழுது துக்கிப்பார்கள் (வெளி. 18:14-16).

உலகப் பொருட்களினாலே தங்களைத் திருப்திப்படுத்திக் கொண்டிருந்தவர்கள், ஏமாற்றம் அடைவார்கள். அவர்கள் இச்சித்தவைகள் அவர்களைவிட்டு நீங்கி, காணப்படாமல் போகும் நாட்கள்வரும். உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளினிமித்தம் ஐசுவரியவான்களான வர்த்தகர்கள், பாபிலோனின் வாதையைக் கண்டு பயந்து, அழுது துக்கிப்பார்கள். தேவனுக்கு விரோதமான கொள்கைகளையுடைய மத அமைப்பு, அவர்கள் வர்த்தகத்திற்கு உதவியாக இருந்தது. இந்த மத அமைப்பையும், அரசியல் பொருளாதார கட்டமைப்பையும் உள்ளடக்கிய பாபிலோன் அழிவிற்குட்பட்டபின்னர், அவர்களுடைய வர்த்தகம் முற்றிலும் சிதைக்கப்படும்.

அந்நாட்களில், திரளான ஆஸ்தியும் செல்வமும் இருந்தாலும், வாழ்வாதாரத்திற்கான அடிப்படைத் தேவைகள் குறைவுபட்டிருக்கும். செல்வந்தர்கள் பயன்படுத்தும் ஆடம்பரப் பொருட்கள் முற்றிலும் இல்லாமற்போகும். இவைகளினால் அதிகமான ஆதாயத்தைத் தகாத வழிகளிலே சம்பாதித்த வர்த்தகர், எதிர்பாராத இந்த மாற்றங்களினாலேபாதிப்புகளுக்குட்பட்டு, அதனால் ஏற்படவிருக்கும் விளைவுகளை நினைத்து பயந்து அழுது துக்கிப்பார்கள்.

மாலுமிகள் கப்பலாட்கள் ஓலமிடுவார்கள்!

மாலுமிகள் யாவரும், கப்பல்களில் யாத்திரை பண்ணுகிறவர்கள் யாவரும், கப்பலாட்களும், சமுத்திரத்திலே தொழில்செய்கிற யாவரும் தூரத்திலே நின்று, அவள் வேகிறதினால் உண்டான புகையைப் பார்த்து: இந்த மகா நகரத்திற்கொப்பான நகரம் உண்டோ என்று சத்தமிட்டு, தங்கள் தலைகள்மேல் புழுதியைப்போட்டுக்கொண்டு: ஐயையோ, மகா நகரமே! சமுத்திரத்திலே கப்பல்களையுடைய அனைவரும் இவளுடைய

உச்சிதமான சம்பூரணத்தினால் ஐசுவரியவான்களானார்களே! ஒரு நாழிகையில் இவள் பாழாய்ப்போனாளே! என்று அழுது துக்கித்து ஓலமிடுவார்கள் (வெளி. 18:17-19).

உலகமயமாக்கப்பட்ட வர்த்தகப் பொருளாதாரக் கொள்கை, வர்த்தகர்களை மிகவும் செல்வந்தர்களாக்க வழி வகுக்கும். இந்த வர்த்தகர்களின் உச்சிதமான சம்பூரணத்தினால் சமுத்திரத்திலே கப்பல்களையுடைய அனைவரும் ஐசுவரியவான்களாக இருக்கிறார்கள். இந்தத் தரிசனம் வெளிப்படுத்தப்பட்ட நாட்களில், அந்தப் பகுதிகளில் பெரும்பாலான தொலைதூர வர்த்தகம், சமுத்திரத்திலே கப்பல்கள், மாலுமிகள், கப்பலாட்களைச் சார்ந்தே நடைபெற்றன.

இங்கு மாலுமிகள், கப்பல்களையுடைய அனைவரும் என்பது, இந்நாட்களில், சகலவிதமான வர்த்தகப் பொருட்களின் சேமிப்பு, விநியோகம், தரை கடல் ஆகாயப் போக்குவரத்துக்களையும், அதனைச் சார்ந்த தொழில்செய்கிற யாவரையும் குறிப்பதாக எடுத்துக்கொள்ளலாம். இந்த ஒருங்கிணைந்த பொருட்கள் சேமிப்பு மற்றும் விநியோகத் துறை, மிகப்பெரிய அளவில் முன்னேறி வருகிறது. உலகின் பொருளாதாரம் ஒரே நாழிகையில் சீர்குலைந்துப்போகவிருப்பதால், இந்தத் தொழில் செய்கிற அனைவருங்கூட பாதிக்கப்படுவார்கள். இதனால் அவர்கள் அழுது துக்கித்து புலம்புவார்கள்; தங்கள் தலைகள்மேல் புழுதியைப்போட்டுக்கொண்டு ஓலமிடுவார்கள். உலகளாவிய பொருளாதாரக் கட்டமைப்பான பாபிலோன் எரிந்து வேகிறதினால் உண்டான புகையைப் பார்த்து, அழிவைக்குறித்து அவர்கள் துக்கிக்காமல், தங்களுக்கு ஏற்படவிருக்கும் இழப்பை நினைத்தே கலங்கித் தவிப்பதாக அறியலாம்.

தேவன் பாபிலோனை நியாயந்தீர்த்தார்!

பரலோகமே! பரிசுத்தவான்களாகிய அப்போஸ்தலர்களே! தீர்க்கதரிசிகளே! அவளைக்குறித்துக் களிகூருங்கள். உங்கள் நிமித்தம் தேவன் அவளை நியாயந்தீர்த்தாரே! என்று தூதன் சொன்னான். அப்பொழுது, பலமுள்ள தூதனொருவன் பெரிய எந்திரக்கல்லையொத்த ஒரு கல்லை எடுத்துச் சமுத்திரத்திலே எறிந்து: இப்படியே பாபிலோன் மகாநகரம் வேகமாய்த் தள்ளுண்டு, இனி ஒருபோதும் காணப்படாமற்போகும் (வெளி. 18:20,21) என்றான்.

தேவனுடைய நியாயத்தீர்ப்புகளினிமித்தம், ராஜாக்களும், வர்த்தகர்களும் அழுது புலம்பி துக்கிப்பார்கள்; மறுபுறம், பரலோகவாசிகளும் அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளுமாகிய உபத்திரவக்கால பரிசுத்தவான்கள் அதே காரணத்திற்காக, மகிழ்ந்து களிகூரும்படியாகத் தூதன் அறிவிக்கிறான். மேலும் பலமுள்ள தூதனொருவன், பாபிலோன் துரிதமாய்த் தள்ளுண்டு, இனி ஒருபோதும் தோன்றாதப்படி காணப்படாமற்போகவிருப்பதைத் தெரிவித்தான்.

சுரமண்டலக்காரரும், கீதவாத்தியக்காரரும், நாகசுரக்காரரும், எக்காளக்காரருமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை, எந்தத் தொழிலாளியும் இனி உன்னிடத்தில் காணப்படுவதுமில்லை, ஏந்திரசத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை. விளக்குவெளிச்சம் இனி உன்னிடத்தில் பிரகாசிப்பதுமில்லை, மணவாளனும் மணவாட்டியுமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்தில் கேட்கப்படுவதுமில்லை. உன் வர்த்தகர் பூமியில் பெரியோர்களாயிருந்தார்களே, உன் சூனியத்தால் எல்லா ஜாதிகளும் மோசம்போனார்களே (வெளி. 18:22,23) என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஒட்டுமொத்தமான பேரழிவைத் தெரிவிக்கும்வகையில், பாபிலோன் மகா நகர வாழ்வில் ஏற்படவிருக்கிற தாக்கங்கள், ஏழு குறியீடுகளாக இங்கு விவரிக்கப்பட்டுள்ளன. இசைக்கலைஞர்களுக்கு பிரசித்திப்பெற்ற பாபிலோன் தள்ளுண்டுபோனபின், இசையின் ஒலி அங்கு ஒருபோதும் கேட்கப்படாமல்போகும். அடுத்து, எந்தத் தொழிலாளியும் இனி அங்குக் காணப்படுவதுமில்லை; மூன்றாவதாக, இயல்பு வாழ்வை வெளிப்படுத்தும், தானியங்களை அரைக்கும் ஏந்திரசத்தமும் அதில் இனி கேட்கப்படுவதுமில்லை. நகரத்தில் குடிகள் வாசம்பண்ணுகிறதைக் காட்டும் விளக்கு வெளிச்சம் அங்கு இனி பிரகாசிப்பதில்லை; ஐந்தாவதாக, மணவாளனும் மணவாட்டியுமானவர்களுடைய சத்தம் இனி பாபிலோனில் கேட்கப்படுவதுமில்லை. உபத்திரவகாலத்தில் பூமியில் பெரியோர்களாயிருந்த வர்த்தகரின் செல்வாக்கு இல்லாமற்போகும். ஏழாவதாக, சூனியத்தால், பேய்த்தனத்துக்கடுத்த மாந்திரீகத்தினால், ஜாதிகளை மோசம்போக்கின வர்த்தகரின் வஞ்சகமும் அழியும். அம்மட்டும் முழுமையான வாழ்வை விளங்கப்பண்ணின பாபிலோனின் அனைத்து நடவடிக்கைகளும், ஒரே நாழிகையில் காணப்படாமற்போகும்.

தீர்க்கதரிசிகளுடைய இரத்தமும் பரிசுத்தவான்களுடைய இரத்தமும் பூமியில் கொல்லப்பட்ட அனைவருடைய இரத்தமும் அவளிடத்தில் காணப்பட்டது என்று விளம்பினான் (வெளி. 18:24). பாபிலோனின் மதவழிபாட்டு அமைப்பும், அரசியல் பொருளாதார கட்டமைப்பும், தேவனால் நியாயந்தீர்க்கப்பட்டதற்குக் காரணம், அவள் எல்லா ஜாதிகளையும் மோசம்போக்கி, தீர்க்கதரிசிகளையும் பரிசுத்தவான்களையும் கொன்றுபோட்டதே, என அறிய முடிகிறது.

பாபிலோனைவிட்டு வெளியே வாருங்கள்!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இந்த வேதப்பகுதியில், பாபிலோனின் இரகசியத்தையும், அதன் வீழ்ச்சியையும் தியானித்தோம். தேவனுடைய எதிர்பார்ப்புகளுக்கு மாறுபட்ட இந்த மதவழிபாட்டு அமைப்பின் அழிவும், அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பின் சடிதியான சீர்குலைவும் நமக்குப் போதிப்பது என்ன?

கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தைத் தொடராமல், மனமேட்டிமையுடன் தற்புகழை நாடி சோரம்போன சபைகளையும், மதரீதியான அமைப்புகளையும் குறித்து இது நம்மை எச்சரிக்கிறது. ஆடம்பரமான உல்லாச வாழ்வை இச்சித்து, சபைகளையும் ஊழியங்களையும் வர்த்தக வாய்ப்புகளாக எண்ணி வஞ்சிக்கப்படாமல் இருக்க வழிநடத்துகிறது. மத நல்லிணக்கம் என்ற பெயரிலே, தேவன் அருவருக்கிற ஆவிக்குரிய வேசித்தனத்துக்கும், பாவச் செயல்களுக்கும் உட்படாமலிருக்க அறிவுறுத்துகிறது. பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள் (1தீமோத்தேயு 6:10). ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள் (கொலோசெயர் 3:5) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகைக்காகக் காத்திருக்கிற நாம், கிருபையின் காலத்தில் இருக்கிறோம். கர்த்தர் நமக்கு எச்சரிப்பையும், மனந்திரும்புகிறதற்கு கால அவகாசத்தையும் கொடுத்திருக்கிறார். இந்தக்

கடைசி நாட்களில், ஞானமாய் நடந்து காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள அழைக்கப்படுகிறோம். பாபிலோனைவிட்டுப் பாழாய்ப்போன சபைகளையும் அமைப்புகளையும் கர்த்தருடைய ஒத்தாசையுடன் அடையாளங்கண்டு, அவைகளைவிட்டு வெளியே வரும்படி எச்சரிப்பைப் பெற்றிருக்கிறோம். பாபிலோனின் கொள்கை விபரீதங்களுக்கு விலகி, அதன் போதகத்தை ஏற்றுக்கொள்ளாமல் நமக்குள்ளதை கர்த்தர் வருமளவும் பற்றிக்கொண்டிருப்போம். ஆமென். அல்லேலூயா!

பின்பு, பரலோகம் திறந்திருக்கக்கண்டேன்; இதோ,
ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது,
அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும்
சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்;
அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்.
இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்;
அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே.
(வெளி. 19:11,13).

12.கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகை!

தரிசனப் புஸ்தகத்தின் நிறைவு சம்பவங்கள்!

தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இயேசு தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு தரிசனங்களாக வெளிப்படுத்தினதுமான விசேஷங்கள், வேதாகமத்தின் கடைசிப் புஸ்தகத்தில் தொகுக்கப்பட்டுள்ளன. இம்மட்டும் தியானித்த இந்தத் தரிசனப் புஸ்தகத்தின் விசேஷங்கள், ஐந்து பிரிவுகளாக அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

முதலாம் பிரிவில், தரிசனம் தந்த மனுஷக்குமாரனுக்கு ஒப்பானவரையும், தரிசனம் பெற்ற யோவானையும், கட்டளையாக அவருக்கு கொடுக்கப்பட்ட பணியையும், முதலாம் அதிகாரம் முன்னுரையாக விவரிக்கிறது. இரண்டு மற்றும் மூன்றாம் அதிகாரங்களில், ஏழு சபைகளுக்கான தரிசனம் இரண்டாம் பிரிவாக, விவரிக்கப்பட்டுள்ளது.

பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கும் சிங்காசனத்தின் காட்சியையும், சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பவரையும், அவரைச் சூழ்ந்து இருப்பவர்களையும், அங்கு நடைபெறவிருக்கும் சம்பவங்களையும், மூன்றாம் பிரிவில் காண்கிறோம். இவைகளை, வெளிப்படுத்தின விசேஷம் நான்கு மற்றும் ஐந்தாம் அதிகாரங்களில் யோவான் விவரித்து எழுதியுள்ளார்.

இதைத் தொடர்ந்து, இந்தத் தரிசனப் புஸ்தகத்தின் நான்காம் பிரிவில், கர்த்தர் எச்சரிக்கும் உபத்திரவகால நியாயத்தீர்ப்புகளின் விளக்கங்களும், பாபிலோனின் அழிவும் இடம்பெற்றுள்ளன. ஆறாம் அதிகாரம் துவங்கி பதினெட்டாம் அதிகாரம் வரையிலுள்ள வேதப்பகுதியில் இவைகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

பத்தொன்பதாம் அதிகாரம் துவங்கியுள்ள நிறைவு பகுதியில், இந்தத் தரிசனப் புஸ்தகத்தின்உச்சக்கட்ட நிகழ்வுகள்தொகுத்துஎழுதப்பட்டுள்ளன.

சர்வலோகமும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற, ஆட்டுக்குட்டியானவரின் கலியாணமும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையும்; ஆயிரங்கால அரசாட்சியும், வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பும், ஐந்தாம் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளன. மேலும் தொடர்ந்து இந்தப் பிரிவு, புதிய வானம், புதிய பூமி, புதிய எருசலேமை விளங்கச்செய்கிறது. தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்; என்கிற அழைப்போடு இந்தத் தரிசன வார்த்தைகள் நிறைவுபெறுகின்றன.

நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள்!

வெளிப்படுத்தின விசேஷத்தின் பத்தொன்பதாம் அதிகாரம், இந்தத் தரிசனப் புஸ்தகத்தின் உச்சக்கட்ட நிகழ்வான கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையுள்ள இரண்டாம் வருகையையும், அதனைச் சார்ந்த சம்பவங்களையும் விவரிக்கிறது. வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டில் முதல் முறையாக "அல்லேலூயா" என்கிற வார்த்தை இந்தப் பகுதியிலே உபயோகிக்கப்பட்டுள்ளது.

அல்லேலூயா என்கிற சொல், சடிதியான துதியின் முழக்கமாகவும், உணர்வுபூர்வமான எழுச்சியை வெளிப்படுத்தும் ஒரு ஆர்ப்பரிப்பின் சத்தமாகவும், இங்கு வெளிப்படுகிறது. அல்லேலூயா என்கிற எபிரெய வார்த்தைக்கு, கர்த்தரைத் துதியுங்கள் என்பது அர்த்தமாகும். வேதாகமத்தில் அல்லேலூயா என்கிற பதம், சங்கீதங்களில் 22 இடங்களிலும், வெளிப்படுத்தின விசேஷத்தில் நான்கு வசனங்களிலும் இடம்பெற்றுள்ளது.

பரலோகமும், அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளுமாகிய உபத்திரவக்கால பரிசுத்தவான்களும், தேவனாகிய கர்த்தர் பாபிலோனை நியாயந்தீர்த்ததினால் களிகூரும்படியாக, ஒரு தூதன் அவர்களுக்கு அறிவிக்கவிருப்பதை (வெளி. 18:20) முன்னர் பார்த்தோம். பாபிலோனின் நியாயத்தீர்ப்பு என்பது, தேவனுடைய தன்மைகளுக்கு மாறுபட்ட மதவழிபாட்டு அமைப்பின் அழிவையும், அரசியல் பொருளாதாரக்

கட்டமைப்பின் சடிதியான வீழ்ச்சியையும் குறிக்கிறது. அதாவது, இது மதவழிபாட்டிலும், அரசியல் பொருளாதாரத்திலும் உலகமயமாக்குதலின் முயற்சிகள் தகர்த்தெறியப்படவிருப்பதைக் காட்டுகிறது.

தேவனைத் துதித்துத் தொழுத கூட்டத்தார்!

தூதனால் வெளிப்பட்ட தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, மூன்று பிரிவினரான கூட்டத்தார், தேவனுடைய சத்தியமும் நீதியுமான நியாயத்தீர்ப்புகளினிமித்தம் அவரைத் துதித்துத் தொழுதுகொள்வார்கள். முதலாவதாக, பரலோகவாசிகள் இடுகிற ஆரவார சத்தம் எழும்பவிருக்கிறது. அவர்கள் இரண்டு முறை, அல்லேலூயா என்று சொல்லி தேவனைத் துதிப்பார்கள். இவைகளுக்குப்பின்பு, பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன். அவர்கள்: அல்லேலூயா, இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது; அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள். தன் வேசித்தனத்தினால் பூமியைக்கெடுத்த மகா வேசிக்கு அவர் நியாயத்தீர்ப்புக் கொடுத்து, தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே என்றார்கள் (வெளி. 19:1,2).

மறுபடியும் அவர்கள்: அல்லேலூயா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். அவளுடைய புகை என்றென்றைக்கும் எழும்புகிறது என்றார்கள் (வெளி. 19:3). இந்த வசனத்தில் என்றென்றைக்கும் புகை எழும்புகிறது என்பது, என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் ஜீவித்து அரசாளுகிற தேவனிடத்திலிருந்து இந்த நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டதை உறுதிச்செய்கிறது. இரண்டாவது கூட்டத்தினராக, தேவனுடைய சந்நிதானத்தில் காணப்படும் இருபத்துநான்கு மூப்பர்களும், நான்கு ஜீவன்களும் வணக்கமாய் விழுந்து: ஆமென், அல்லேலூயா, என்று சொல்லி, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் தேவனைத் தொழுதுகொண்டார்கள் (வெளி. 19:4).

மூன்றாவதாக, தேவனாகிய கர்த்தருடைய சிங்காசனத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, தேவனுடைய ஊழியக்காரரையும், தேவனுக்கு பயப்படுகிற யாவரையும், பாபிலோனை அழிவிற்குட்படுத்திய தேவனுடைய

சத்தியமும் நீதியுமான நியாயத்தீர்ப்புகளினிமித்தம் தேவனைத் துதிக்க கட்டளையிட்டது. மேலும், நமது தேவனுடைய ஊழியக்காரரே, அவருக்குப் பயப்படுகிற சிறியோரும் பெரியோருமானவர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள் என்று ஒரு சத்தம் சிங்காசனத்திலிருந்து பிறந்தது (வெளி. 19:5) என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஆட்டுக்குட்டியானவருடைய கல்யாணம்!

இந்தத் தரிசனப் புஸ்தகத்தின் மிகப்பெரிய முக்கியமான நிகழ்வுகளிலொன்று, ஆட்டுக்குட்டியானவரின் கலியாணமாகும். கடைசிக்கால சம்பவங்கள் நிகழவிருக்கும் கால வரிசையின்படி பார்ப்போமேயானால், ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம், பாபிலோனின் அழிவைத் தொடர்ந்து நடைபெற நியமிக்கப்பட்டிருப்பதாக அறியலாம். உபத்திரவக்காலத்தின் நிறைவுக்கட்டத்தில் சம்பவிக்கும் பாபிலோனின் அழிவு, கடைசி நியாயத்தீர்ப்பான ஏழாவது கோபக்கலச நியாயத்தீர்ப்பின் காலத்தில் நடைபெறவிருக்கிறது.

வஞ்சகமான எதிர்ப்பின் அடையாளமாயிருக்கிற பாபிலோனின் அழிவினிமித்தம், சந்தோஷப்பட்டு மகிழ்ந்து களிகூரப் பரலோகமும் பரிசுத்தவான்களும் முன்னர் கட்டளைப்பெற்றார்கள். இப்பொழுது, சர்வலோகத்தின் எதிர்பார்ப்பின் நிறைவேறுதலாக, ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் வரவிருந்ததால், சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து தேவனுக்குத் துதி செலுத்த, தேவனுடைய சந்நிதானத்திலிருந்து கட்டளைபிறக்கவிருக்கிறது.

அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம்போலவும், பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், ஒரு சத்தமுண்டாகி, அல்லேலூயா, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார். நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன் (வெளி. 19:6,7) என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வெளிப்படுத்தும் உண்மை என்ன?

ஆட்டுக்குட்டியானவர் என குறிப்பிடப்படும் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், மீட்கப்பட்ட பரிசுத்தவான்களின் கூட்டமைப்பான சபைக்கும்

உள்ள உறவின் நிறைவை, இது வெளிப்படுத்துகிறது. கிருபையின் நாட்களில், இயேசுகிறிஸ்துவில் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொள்ளும்போது இந்த உறவு ஸ்தாபிக்கப்படுகிறது. இந்த உறவில், முடிவுபரியந்தம் நிலைத்திருப்போர், இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில், அவருடன் சபையாக எடுத்துக்கொள்ளப்படுவார்கள். இப்படியாக, மறுரூபப்படவிருக்கும் சபை, சதாகாலமும் அவரைச் சார்ந்து செயல்படும் வாழ்வின் துவக்கம், ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணமாகும்.

கர்த்தர் சபையைப் போஷித்துக்காப்பாற்றுகிறார்!

ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் என்பது ஆவிக்குரிய உறவின் நிலையை வெளிப்படுத்தும் குறியீடு ஆகும். இது சபையாம் மணவாட்டியை, ஆட்டுக்குட்டியானவர் சொந்தம் பாராட்டி, அன்புகூர்ந்து, போஷித்துக்காப்பாற்றும் மேலான உறவை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் (எபேசியர் 5:25-27) என்று எழுதப்பட்டிருக்கிறது.

உயிர்த்தெழுதலில், கொள்வனையும் கொடுப்பனையும் இல்லை; அவர்கள் பரலோகத்திலே தேவதூதரைப்போல் இருப்பார்கள் (மத்தேயு 22:30) என்று பரலோகத்தில் திருமண உறவைக் குறித்து கர்த்தர் சொல்லியிருக்கிறார். இந்த உறவில், மணவாட்டி என்பது, தனிப்பட்ட எந்தப் பெண்ணையும் குறிக்காமல், மீட்கப்பட்ட சபையைக் குறிக்கிறது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது; அந்த மெல்லியவஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே (வெளி. 19:8) என்று எழுதப்பட்டிருக்கிறது. சபை தரித்துக்கொள்ளும்படி, சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம், கர்த்தரால் அளிக்கப்படவிருக்கிறது.

இரட்சிப்பும் நீதியும், கர்த்தரால் அருளப்படுகிறது. இவை நம்மால் உண்டானவை அல்ல, இவை தேவனுடைய ஈவு. கர்த்தர் இரட்சிப்பின்

வஸ்திரங்களை உடுத்தி, நீதியின் சால்வையைத் தரித்தார் (ஏசாயா 61:10) என்றும்; இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள் (ரோமர் 3:24) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இரட்சிக்கப்படாத எவரும், இரகசிய வருகையில் மறுரூபப்படும் மணவாட்டி சபையிலொருவராக இருக்கமுடியாது என்பது இங்கு வெளிப்படும் யதார்த்தமாயிருக்கிறது.

யூதகுலத்துக் கலியாண முறைமைகளின் உருவகம்!

ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் என்பது, இரட்சகருக்கும் இரட்சிக்கப்பட்ட தேவஜனத்துக்கும் இடையே ஏற்படவிருக்கும் ஆவிக்குரிய உறவின் நிறைவை வெளிப்படுத்தும் உருவகமாகும். இதன் வளர்ச்சிப்பரிணாமம், யூதகுலத்துக் கலியாண சம்பிரதாயங்களைப்போன்றே அமைந்துள்ளதை அறியமுடிகிறது. நம்முடைய புரிந்துகொள்ளுதலுக்காக, இந்த நிகழ்வை நான்கு நிலைகளாகப் பிரித்துப் பார்க்கலாம்.

முதலாவதாக, மணமகனின் பெற்றோர், மணமகளைத் தெரிந்தெடுத்து, அதற்குரிய கிரயத்தைப் பணமாகவோ அல்லது பரிசுப் பொருட்களாகவோ (வரதட்சணை) கொடுத்து துவங்கிவைப்பார்கள். இதையே, தமக்குமுன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டார் (எபேசியர் 1:4) என்று பவுல் குறிப்பிடுகிறார். தேவனாகிய கர்த்தர், நம்மைத் தெரிந்துகொண்டு, அதற்குக் கிரயமாக தம்முடைய குமாரனுடைய இரத்தத்தைச் செலுத்தி, நம்மை இரட்சித்திருக்கிறார். தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபை (அப்போஸ்தலர் 20:28) என்றும், நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள் (1 கொரிந்தியர் 6:20; 7:23) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

இவ்விதமாக நியமிக்கப்பட்ட மணமகனும் மணமகளும், கணவன் மனைவி என்று அறியப்பட்டிருந்தாலும், குடும்பமாகச் சேர்ந்து வாழாமல், தங்கள் பெற்றோருடனேயே ஒரு வருட காலத்திற்கு பிரிந்து இருப்பார்கள். இது அவர்கள் தங்கள் அர்ப்பணிப்பில் உறுதியாய் இருப்பதை நிரூபிக்க

நியமிக்கப்பட்டிருக்கிற காலமாகும். மேலும், மணப்பெண்ணின் பரிசுத்த நிலையைச் சாட்சியாக இது வெளிப்படுத்தும். கிறிஸ்துவுக்கும் சபைக்குமான உறவில், இந்தக் காத்திருப்பின் காலத்தில், விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும் உண்மையிலும், முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான் (மத்தேயு 24:13) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காகத் தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன் (2 கொரிந்தியர் 11:2) என்று பவுல் எழுதியிருக்கிறார்.

மூன்றாவது நிலையில் மணமகன் மணமகளைத் தன்னுடைய பெற்றோருடைய வீட்டிற்கு கூட்டிச் செல்வார். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன் (யோவான் 14:3) என்றும்; என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான் அவனை எழுப்புவேன் (யோவான் 6:44) என்றும் கர்த்தர் சொல்லியிருக்கிறார். தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள், முடிவுபரியந்தம் நிலைத்திருக்கும்போது இரட்சிக்கப்படுவார்கள்; அவர்கள் சபையாக மறுரூபப்பட்டு எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருக்க எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

நான்காவது நிலையில், கலியாண நிகழ்வும் விருந்தும் கொண்டாட்டங்களும் இடம்பெறும். இவ்விதமாக, தேவனுடைய அழைப்பைப்பெற்ற தேவஜனம், பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு, விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும், உண்மையிலும், ஜெபம்பண்ணுதலிலும், ஜீவவசனத்தை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு தரித்திருப்பார்கள். அவர்கள், இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளர்ந்து, அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே அவரைத் தரிசிக்கவிருப்பதினால், அவருக்கு ஒப்பாயிருக்கும்படியாக, மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாவார்கள். அல்லேலூயா!

கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் யார்?

ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகைக்கும், இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்டக்காலத்தில், பாபிலோனின் அழிவைத் தொடர்ந்து, தேவனால் நியமிக்கப்பட்டவேளையில் நடைபெறவிருக்கிறது. பின்னும், அவன் என்னை நோக்கி: ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது என்றான். மேலும் இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று என்னுடனே சொன்னான் (வெளி. 19:9). யாரெல்லாம் அழைக்கப்பட்டார்களோ அவர்கள் எல்லாம் பாக்கியவான்கள் என்றெழுதப்பட்டிருக்கிறது. யார் இந்த அழைக்கப்பட்டவர்கள்?

ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து, பரலோகவாசிகளும் மீட்கப்பட்ட பரிசுத்தவான்களும் பங்குபெறும் ஒரு மகிழ்ச்சியின் கொண்டாட்டமாக இருக்கும். பழைய ஏற்பாட்டுக் கடைசித் தீர்க்கதரிசிகளில் ஒருவராக அறியப்பட்டிருக்கும் யோவான்ஸ்நானன், மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய், மணவாளனுடைய சத்தத்தைக் குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று (யோவான் 3:29) என்றார். இந்த உருவகத்தை ஆட்டுக்குட்டியானவரின் கலியாணத்தோடு இணைத்துப்பார்க்கும்போது, யோவான்ஸ்நானனும், அவரைப்போல் இரத்தசாட்சியாய் மரித்த பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும், விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களாயிருப்பார்கள் என அறியலாம்.

ஐந்தாவது முத்திரை உடைக்கப்பட்டபோது, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் இரத்தசாட்சிகளாய் மரித்தவர்களின் ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே யோவான் கண்டார் (வெளி. 6:9), ஆபேல் துவங்கி, ஆதியிலிருந்து இரத்தசாட்சியாய் மரித்த அனைவரும் அங்கு இருப்பார்கள். அவர்கள் தங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று தேவனை நோக்கிக் கூப்பிட்டார்கள். அம்மட்டும் நிறைவடையாமலிருந்த கொல்லப்பட்டவர்களின் தொகை,

அதற்குப் பின்னர் மிகுந்த உபத்திரவத்தின் காலத்திலே அநேகர் இரத்தசாட்சியாய் மரிக்கவிருப்பதினால், நிறைவாகவிருக்கிறது. இப்படியாக இரத்தசாட்சிகளாய் மரித்த பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும், உபத்திரவக்காலப் பரிசுத்தவான்களும், மற்ற பரலோகவாசிகளுடன் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களாயிருப்பார்கள் என அறியலாம்.

மேலும், அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள் (மத்தேயு 8:11) என்று இயேசு சொல்லியிருக்கிறார். இதனிமித்தம், அனைத்துப் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும், தேவனுடைய சந்நிதானத்தில் காணப்பட்டுக் கலியாண விருந்துக்கு அழைக்கப்படுவார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

தொடர்ந்து நடக்க நியமிக்கப்பட்டிருந்த சம்பவங்களைக் கேட்ட யோவான், ஆர்வத்தின் மிகுதியால், அவருக்கு அந்தச் செய்திகளைத் தெரிவித்த தூதனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தார். இதனால் பதறிப்போன தூதன், யோவானை நோக்கி: இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் இயேசுவைக்குறித்துச் சாட்சியிட்ட உன் சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள். இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்றான் (வெளி. 19:10). இதனிமித்தம் தேவஜனம், இயேசுவைப்பற்றின சாட்சி, யார் மூலமாக வெளிப்பட்டாலும், மகிமைக்கும், துதிக்கும், தொழுதுகொள்ளுதலுக்கும் பாத்திரமானவர் தேவனாகிய கர்த்தரும், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து மட்டுமே என அறிந்து செயல்பட எச்சரிக்கப்படுகிறார்கள். அல்லேலூயா!

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை!

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை, மனுக்குல சரித்திரத்திலேயே மிகவும் ஆச்சரியப்பட்டு பிரமிக்கத்தக்கதான மிகப்பெரிய நிகழ்வாயிருக்கும். அப்பொழுது பூமியிலுள்ள அனைவரும் அவரைக் காண்பார்கள். இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்;

பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்து புலம்புவார்கள். அப்படியே ஆகும் ஆமென் (வெளி. 1:7) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகையில் அவர் சமாதானத்தை உண்டுபண்ண வந்தார். நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது (ஏசாயா 53:5) என்றும்; அவர் நாமம் சமாதானப்பிரபு என்னப்படும் (ஏசாயா 9:6) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், இயேசுவின் பிறப்பை மேய்ப்பருக்கு அறிவித்த தூதர்களும், உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள் (லூக்கா 2:14). இரண்டாம் வருகையில் அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ண வரவிருக்கிறார். பின்பு, பரலோகம் திறந்திருக்கக்கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார் (வெளி. 19:11) என்று எழுதப்பட்டிருக்கிறது.

முதலாம் வருகையில் இயேசு பட்டணங்கள்தோறும் கிராமங்கள்தோறும் பிரயாணம்பண்ணி, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைப் பிரசங்கித்துவந்தார். அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். தம்முடைய பாடுமரணத்திற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர், அவர் கழுதையின்மேல் ஏறி எருசலேமுக்குள் பவனியாகச் சென்றார். இந்த நிகழ்வைத் தவிர, மற்ற எல்லா இடங்களுக்கும் அவர் கால்நடையாகவே சென்றிருப்பார் என அறியலாம். ஆனால் இரண்டாம் வருகையில் அவர் வெள்ளைக்குதிரையின்மேல் ஏறிவரவிருக்கிறார். யுத்தத்திலிருந்து வெற்றியோடு திரும்பும் ரோமப்படைத்தலைவர்கள் வெள்ளைக்குதிரையின் மேல் ஏறிவருவார்களாம். இதற்கு மேலாக இயேசுகிறிஸ்து தாம் நிச்சயமாக பெறவிருக்கும் வெற்றியை வெளிப்படுத்தும்வகையில் வெள்ளைக்குதிரையின்மேல் ஏறிவரவிருக்கிறார்.

திறந்திருக்கிற பரலோகத்திலிருந்து வெள்ளைக்குதிரையின்மேல் ஏறிவரவிருக்கிறவரை, யோவான் மூன்று பெயர்களினாலே அறிமுகப்படுத்துகிறார். அவர் உண்மையும் சத்தியமுமுள்ளவர் எனப்பட்டார்; இது அவருடைய குணாதிசயங்களைத் தெரிவிக்கிறது. அடுத்து அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதாகும். இது அவருடைய

வல்லமையின், தெய்வீகத் தன்மையின், வெளிப்பாடாக இருக்கிறது. மூன்றாவதாக அவர், ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமத்தையுடையவராய் இருக்கிறார் (வெளி. 19:16). இந்தப் பெயர் அவருடைய பொறுப்புகளை விளக்குகிறது; அவர் சகல ராஜ்யங்கள்மேலும் ராஜாக்களின்மேலும் ஆளுகைச் செய்யவிருக்கிறதைக் காட்டுகிறது.

இயேசுகிறிஸ்து நீதியுள்ள நியாயாதிபதி!

முதலாம் வருகையில் இயேசுகிறிஸ்து இரட்சகராக வெளிப்பட்டார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார் (யோவான் 3:17). இரண்டாம் வருகையில் அவர் நீதியுள்ள நியாயாதிபதியாக வரவிருக்கிறார். இயேசு இவ்விதமாக வரும்போது, நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுவார். பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார் (யோவான் 5:22). குதிரையின்மேல் ஏறியிருக்கிறவரும் அவருடைய சேனைகளும் பின்பு, மிருகத்தோடும் பூமியின் ராஜாக்களோடும் அவர்களுடைய சேனைகளோடும் யுத்தம்பண்ணும்படி கூடிவருவார்கள் (வெளி. 19:19).

அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப்போலிருந்தன, அவருடைய சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருந்தன; அவருக்கேயன்றி வேறொருவருக்குந் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது (வெளி. 19:12). அக்கினிஜுவாலையைப்போலிருந்த கண்கள், நீதியுள்ள நியாயாதிபதியாகக் கர்த்தர் ஜனங்களின் உள்ளிந்திரியங்களையும் இருதயத்தையும் சோதித்தறிந்து (எரேமியா 11:20), ஒவ்வொருவனுக்கும் கிரியைகளின்படியே பலனளிக்கும் (வெளி. 2:23) தன்மையை வெளிப்படுத்துகிறது. கிரீடங்கள் அதிகாரங்களையும் ஆளுகையையும் குறிக்கிறது. கர்த்தர் மூன்று பெயர்களால் அறியப்பட்டிருப்பதாகப் பார்த்தோம். நான்காவதாக, அவருக்கேயன்றி வேறொருவருக்கும் தெரியாத ஒரு நாமமும் எழுதப்பட்டிருக்கும். அது அவருடைய மேன்மை மகிமை மகத்துவங்களை, அவராலேயன்றி வேறொருவராலும், சொற்களால் வெளிப்படுத்தியோ அல்லது விவரித்தோ, அறிந்துகொள்ள முடியாததைக் காட்டுகிறதாயிருக்கும்.

இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே (வெளி. 19:13). கிருபையையும் இரட்சிப்பையும் அல்ல, நியாயத்தீர்ப்பை இலக்காகக் கொண்டு செயல்படும் குதிரைவீரரின் வஸ்திரம் எதிராளிகளின் இரத்தத்தால் தோய்க்கப்பட்டிருக்கும். நான் என் கோபத்திலே அவர்களை மிதித்து, என் உக்கிரத்திலே அவர்களை நசுக்கிப்போட்டேன்; அதினால் அவர்கள் இரத்தம் என் வஸ்திரங்களின்மேல் தெறித்தது, என் உடுப்பையெல்லாம் கறைப்படுத்திக்கொண்டேன் (ஏசாயா 63:3) என்று எழுதப்பட்டிருக்கிறது. அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பது, தேவனுடைய எதிர்பார்ப்பின் வெளிப்பாடும், தெய்வீக சித்தத்தின் செயல்வடிவுமாகும். தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாக இருக்கிறது.

வெள்ளைக்குதிரையின்மேல் ராஜாதி ராஜா!

பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந்தரித்தவர்களாய், வெள்ளைக்குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின்சென்றார்கள் (வெளி. 19:14). யார் இந்த பரலோகத்திலுள்ள சேனைகள்? அவர் தம்முடைய தூதரை அனுப்பி, தாம் தெரிந்துகொண்டவர்களைப் பூமியின் கடைமுனை முதற்கொண்டு வானத்தின் கடைமுனைமட்டுமுள்ள நாலுதிசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார் (மாற்கு 13:27) என்றும்; நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள் (கொலோசெயர் 3:3,4) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. எனவே, மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின்மேல் வரும்போது, தேவதூதர்களும் மீட்கப்பட்ட பரிசுத்தவான்களும், வெண்வஸ்திரம் தரித்தவர்களாய் வெள்ளைக்குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின்செல்வார்கள் என அறியலாம்.

பரலோகத்தின் சேனைகள் வெண்வஸ்திரந்தரித்து வெள்ளைக் குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின்சென்றாலும், தேவனுடைய வார்த்தை என்று அறியப்பட்டிருக்கிற கர்த்தர் ஒருவரே, தம்முடைய

வாயிலிருந்து புறப்படுகிற கூர்மையான பட்டயமாகிய வார்த்தையினால் நியாயத்தீர்ப்பைச் செயல்படுத்தவிருக்கிறார். புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார் (வெளி.19:15) என்று எழுதப்பட்டிருக்கிறது. தேவனுடைய வார்த்தை அவருடைய சித்தத்தை வெற்றிகரமாக செய்துமுடிக்கவிருக்கிறது. அவர் தேசங்களை, புறஜாதிகளை வெட்டிப்போடுவார்; அவர் தம்முடைய வார்த்தையை வெளிப்படுத்தும்போதே பேரழிவு ஏற்படும்.

இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார் என்பது வரவிருக்கிற ஆயிரங்கால அரசாட்சியில் அவருடைய ஆளுகையின் தன்மையை வெளிப்படுத்துகிறது. இயேசுகிறிஸ்துவினுடைய ஆளுகை நல்ல மேய்ப்பன் தன் மந்தையைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீரண்டை நடத்துவதைப்போல் இருக்கும். அதேவேளையில், எதற்கும் இணங்காத இருதயத்தில் கடினமுள்ளவர்களை, இருப்புக்கோலால் தண்டிப்பார். அவர் வரும்போது, சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபாக்கினையை வெளிப்படுத்துவார். மிகவும் கொடூரமான அந்த நியாயத்தீர்ப்பு, திராட்சைப்பழங்களை ஆலையில்போட்டு காலால் மிதித்து திராட்சைரசம் பிழிவதற்கு ஒப்பாயிருக்கும்.

வெள்ளைக்குதிரையின்மேல் ஏறி, சிரசின்மேல் அநேக கிரீடங்களுடன் வரவிருக்கிற கர்த்தர், அவருடைய தன்மைகளையும் குணாதிசயங்களையும் பொறுப்புகளையும் வெளிப்படுத்தும்படியாக, அநேக பெயர்களினால் அறியப்பட்டிருப்பார். ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலும் அவருடைய தொடையின்மேலும் எழுதப்பட்டிருந்தது (வெளி. 19:16). ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் பெயர், நிறைவில் அவர் பெறவிருக்கும் வெற்றியை முன் கணித்து சூட்டப்பட்டதைப்போலத் தோன்றுகிறது.

முன்னர், ஏழாம் தூதன் எக்காளம் ஊதினபோது, உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின, அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின (வெளி. 11:15) எனப் பார்த்தோம். ராஜாக்கள்போல அதிகாரம் பெறவிருக்கிறவர்கள், ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம்பண்ணுவார்கள். ஆட்டுக்குட்டியானவர்

கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார்; அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்றான் (வெளி. 17:14).

மகா தேவன் கொடுக்கும் விருந்து!

பின்பு ஒரு தூதன் சூரியனில் நிற்கக்கண்டேன்; அவன் வானத்தின் மத்தியில் பறக்கிற சகல பறவைகளையும் பார்த்து நீங்கள் ராஜாக்களின் மாம்சத்தையும் சேனைத்தலைவர்களின் மாம்சத்தையும், பலவான்களின் மாம்சத்தையும், குதிரைகளின் மாம்சத்தையும், அவைகளின்மேல் ஏறியிருக்கிறவர்களின் மாம்சத்தையும், சுயாதீனர் அடிமைகள், சிறியோர் பெரியோர், இவர்களெல்லாருடைய மாம்சத்தையும் பட்சிக்கும்படிக்கு, மகாதேவன் கொடுக்கும் விருந்துக்குக் கூடி வாருங்கள் என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான் (வெளி. 19:17,18).

பின்பு என்று துவங்குகிற இந்த வசனங்கள் புதியதொரு தரிசனத்தின் துவக்கமாயிருக்கிறது. சூரியனில் நிற்கக்கண்ட தூதன், வானத்திற்கும் பூமிக்கும் மேலாக வியாபித்திருந்து, எல்லாவற்றின் மேலாக ஆளுகைச் செலுத்தும் பலமுள்ள தூதன் என அறியலாம். அவன் வானத்தின் மத்தியில் பறக்கிற சகல பறவைகளையும் பார்த்து மகாதேவன் கொடுக்கும் விருந்துக்குக் கூடிவாருங்கள் என்று சொல்லுகிறதாக எழுதப்பட்டுள்ள வார்த்தைகள், உலக இராணுவங்களின் சர்வ சங்காரத்தை வெளிப்படுத்தும் ஒரு குறியீடாகும்.

இது உலகின் இராணுவங்களெல்லாம் கூட்டிச்சேர்க்கப்பட்டு பேரழிவுக்கு உட்படவிருப்பதை விவரிக்கிறது. அர்மகெதோன் யுத்தம் என குறிப்பிடப்படுகிற இந்த நிகழ்வு, இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைத் தொடர்ந்து, நடக்கவிருக்கிறது. பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் இந்த யுத்தத்திற்குக் கூட்டிச்சேர்க்க ஆயத்தங்கள் யாவும் செய்யப்பட்டிருந்தாலும், இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போதே, இந்த யுத்தம் நடைபெற்று நிறைவுபெற இருக்கிறது (வெளி. 19:19,20).

ராஜாக்கள், சேனைத்தலைவர்கள், பலவான்கள், குதிரைகள், குதிரை வீரர்கள், சுயாதீனர் அடிமைகள், சிறியோர் பெரியோர் என இந்த

வசனங்களில் தொகுக்கப்பட்டிருக்கும் பட்டியல், சமுதாயத்தின் எல்லாப் பிரிவினரையும் உள்ளடக்கியுள்ளது. தேவனுடைய வார்த்தை என்று அறியப்பட்டிருக்கிற சேனைகளின் அதிபதியாகிய கர்த்தர் ஒருவரே, தம்முடைய வாயிலிருந்து புறப்படுகிற கூர்மையான பட்டயமாகிய வார்த்தையினால் இவர்கள்மேல் நியாயத்தீர்ப்பைச் செயல்படுத்தவிருக்கிறார். அவர் தம்முடைய வார்த்தையை வெளிப்படுத்தும்போதே பேரழிவு ஏற்படும்; கூட்டிச்சேர்க்கப்படவிருக்கிற யாவரையும் அவர் வெட்டிப்போடுவார். யுத்தக்களத்தில் எல்லாப் பிரிவினரும் இருந்தாலும், பூலோகத்தின் அனைத்து ஜனங்களும் அங்குக் கூட்டப்படவில்லை என்பது தெளிவாகயிருக்கிறது. எனவே, இந்த அழிவிற்குட்படாத எஞ்சிய ஜனங்கள் ஆயிரங்கால அரசாட்சிக்கு உட்படுவார்கள் என்பதாக அறியலாம்.

அர்மகெதோன் யுத்தம்!

பின்பு, மிருகமும் பூமியின் ராஜாக்களும் அவர்களுடைய சேனைகளும், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவரோடும் அவருடைய சேனையோடும் யுத்தம்பண்ணும்படிக்குக் கூடிவரக்கண்டேன் (வெளி. 19:19) என்றும்; எபிரெயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச்சேர்த்தான் (வெளி. 16:16) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. மெகிதோ மலைப்பகுதி எருசலேமுக்கு வடக்கே சுமார் 90 கிலோமீட்டர் தூரத்திலுள்ளது. எபிரெயு பாஷையிலே அர்மகெதோன் எனப்படும் இதனைச் சார்ந்த சமவெளியில், அநேக யுத்தங்கள் முன்னர் நடைபெற்றுள்ளன. சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கவிருக்கும் யுத்தம், அர்மகெதோனிலே நடக்கவிருக்கிறது.

இந்தக்காட்சி, அம்மட்டும் உலகம் கண்டிராத அளவில், பூமியின் ராஜாக்கள் மற்றும் அவர்களது சேனைகளின் மிகப்பெரிய கூட்டமைப்பாக இருக்கும். இந்த மாபெரும் இயக்கத்திற்குப் பின், வலுசர்ப்பம் என்றும் சாத்தான் என்றும் அழைக்கப்படுகிற பிசாசானவன் இருந்து, மிருகத்தைக் குதிரையின்மேல் ஏறியிருக்கிறவரோடும் அவருடைய சேனையோடும் யுத்தம்பண்ணும்படிக்கு முன்னிறுத்தவிருக்கிறது. குதிரையின்மேல் ஏறியிருக்கிறவருக்கும் அவருடைய சேனைக்கும் விரோதமாகப் பெரும் எதிர்ப்பும் கசப்பும் வெளிப்படவிருக்கிறது.

இங்கு மிருகம் என்பது அந்திக்கிறிஸ்துவைக் குறிக்கிறது. அந்திக்கிறிஸ்து, எதிர்த்து நிற்கிறவனாயும் தேவன் என்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான் (2 தெசலோனிக்கேயர் 2:4) எனப் பவுல் குறிப்பிடுகிறார்.

இந்த வசனத்தில் குறிப்பிடப்படும் பூமியின் ராஜாக்கள், பாபிலோன் அழிவிற்குட்படும்போது, அதினால் உண்டாகும் பாதிப்புகளை நினைத்து அழுது புலம்புவார்கள் (வெளி. 18:9,10). இவர்கள் ஒரே யோசனையுள்ளவர்கள்; இவர்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள். இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம்பண்ணுவார்கள். ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார்; அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்றான் (வெளி. 17:13,14). அவர்களுடைய சேனைகள் என்பது, மிருகத்தினுடையதும் ராஜாக்களுடையதுமான சேனைகளாகும்.

மிருகம் கள்ளத்தீர்க்கதரிசிக்கு அக்கினிக்கடல்!

நியாயத்தீர்ப்பைப் பற்றியதான செம்மறியாடுகள் வெள்ளாடுகள் உவமானத்தில், இடதுப் பக்கத்தில் நிறுத்தப்பட்டிருந்த வெள்ளாடுகளை நித்திய அக்கினிக்கு ஒப்புக்கொடுத்ததாக மத்தேயு 25ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்கிறவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் (மத்தேயு 25:41) என்பார் என்று எழுதப்பட்டிருக்கிறது. அந்திக்கிறிஸ்து என்று அறியப்பட்டிருக்கிற மிருகமும், கள்ளத்தீர்க்கதரிசியும் பிடிக்கப்பட இருக்கிறார்கள். இந்த மிருகங்கள், கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்படுவார்கள்.

அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது; மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தை வணங்கினவர்களையும் மோசம்போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான்; இருவரும் கந்தகம் எரிகிற

அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள் (வெளி. 19:20) என்று எழுதப்பட்டிருக்கிறது. அக்கினிக்கடலிலே தள்ளப்படுபவர்கள், நித்தியக் காலமாக அங்கே இருப்பார்கள். அவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு, மரணத்திற்குட்படாமல் உயிரோடே அக்கினிக்கடலிலேத் தள்ளப்பட்டுத் தண்டிக்கப்பட்டதினால், அவர்கள் மரித்தோர் உயிர்த்தெழுதலில் பங்கடையமாட்டார்கள்.

மற்றவர்கள் குதிரையின்மேல் ஏறினவருடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தால் கொல்லப்பட்டார்கள்; அவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடைந்தன (வெளி. 19:21). இப்படியாக, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது, மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் அக்கினிக்கடலிலே தள்ளப்படுவார்கள். கர்த்தருக்கு விரோதமாக கூட்டிச்சேர்க்கப்பட்ட ராஜாக்களும் அவர்களது சேனைகளும், அவருடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தால் கொல்லப்பட்டு, அவர்களுடைய மாம்சத்தினால் பறவைகள் யாவும் திருப்தியடையும். உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாகும்; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார், அல்லேலூயா!

நித்திய விவாகத்துக்கு நியமித்துக்கொள்ளுவேன்!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே! நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்குத் தேவன் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டிருக்கிறார். இந்தக் கிருபையின் நாட்களில், இயேசுகிறிஸ்துவில் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொள்ளும்போது, அவரோடு நமக்கு நெருங்கிய உறவு ஏற்படுகிறது. நம்முடைய இரட்சகருக்கும் நமக்குமுள்ள உறவில், முடிவுபரியந்தம் நிலைத்திருக்கும்போது, இரகசிய வருகையில் மறுரூபப்பட்டு அவரோடு எடுத்துக்கொள்ளப்பட்டு எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். மற்றொருக் கண்ணோட்டத்தில் பார்ப்போமேயானால், இது இயேசுகிறிஸ்துவின் மணவாட்டியாகும்படி நாம் நியமிக்கப்பட்டிருப்பதைக் குறிக்கிறது.

யூதகுலக் கலியாண வழக்கங்களைப்போன்றே, இயேசுவுக்கென மணவாட்டியாக, நியமிக்கப்பட்டிருக்கிற நாம், பிதாவாகிய தேவனால்

கிரயத்துக்குக் கொள்ளப்பட்டிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நமக்கான கிரயமாகச் செலுத்தப்பட்டுள்ளது. எனவே, நாம் மணவாளனாம் இயேசுகிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தமாயிருக்க அழைக்கப்படுகிறோம். நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்; நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன். உண்மையாய் உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன்; நீ கர்த்தரை அறிந்து கொள்ளுவாய் (ஓசியா 2:20,21) என்று கர்த்தர் சொல்லுகிறார். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்தக் கிருபையின் காலம், கர்த்தரை அறிந்தவர்களாய், ஆயத்தத்தோடு இயேசுகிறிஸ்துவின் வருகைக்குக் காத்திருக்கும் நாட்களாகும்.

இந்தக் காத்திருப்பின் காலம், கிறிஸ்துவோடுள்ள உறவில், அர்ப்பணிப்பில், உறுதியாய் நாம் இருப்பதை நிரூபிக்க நியமிக்கப்பட்டிருக்கிற காலமாகும். மேலும் இது நம்முடைய பரிசுத்த நிலையைச் சாட்சியாக வெளிப்படுத்தும் நாட்களாகும். ஆகவே, நாம் ஜாக்கிரதையாய் விழித்திருந்து, விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும் உண்மையிலும், அன்பிலும் முடிவுபரியந்தம் நிலைநிற்க ஆலோசனைப் பெற்றிருக்கிறோம். இவ்விதமாக மீட்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள், மணவாட்டி என அறியப்பட்டிருக்கும் சபையாக நம்மை ஆயத்தம்பண்ணிக்கொள்ள அழைக்கப்பட்டிருக்கிறோம். சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் சபைக்குக் கர்த்தரால் அளிக்கப்படவிருக்கிறது. அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே. கர்த்தர் இரட்சிப்பின் வஸ்திரங்களை உடுத்தி, நீதியின் சால்வையை நமக்குத் தரிப்பார்.

இயேசுகிறிஸ்துவை இன்னும் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள், இரகசிய வருகையில் மறுரூபப்படும் மணவாட்டி சபையிலொருவராக இருக்கமுடியாது என்பது இங்கு யதார்த்தமாயிருக்கிறது. குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ்செய்யுங்கள்; கொஞ்சக்காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும் (சங்கீதம் 2:12) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்; மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார். இரட்சிக்கப்பட்டு ஆயத்தமாயுள்ள தேவனுடைய பிள்ளைகள்: ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும், எனப் பதிலளிப்போம். ஆமென், அல்லேலூயா

அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன்,
அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள், நியாயத்தீர்ப்புக்
கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.
இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய
வசனத்தினிமித்தமும் சிரச்சேதம்பண்ணப்பட்டவர்களுடைய
ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின்
சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும்
தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும்
இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்து
கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்
(வெளி. 20:4).

13. இயேசுகிறிஸ்துவின் ஆயிரம் வருஷ ஆளுகை!

தேவனுடைய ராஜ்யம் சமீபித்திருக்கிறது!

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெள்ளைக் குதிரையின்மேல் ஏறினவராக, பரலோகத்திலுள்ள சேனைகள் பின்தொடர வரவிருக்கிறார். பூமியின் ராஜாக்களோடும் அவர்களுடைய சேனைகளோடும் அவர் யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயிப்பார். கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாக அவர் இதனையடுத்து ஆயிரம் வருஷம் அரசாளவிருக்கிறார். வெளிப்படுத்தின விசேஷம் பத்தொன்பதாம் அதிகாரத்தில் தொகுக்கப்பட்டுள்ள ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் மற்றும் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைத் தொடரும் கிறிஸ்துவின் ஆயிரங்கால அரசாட்சியும், வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பும், இருபதாம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் ஊழிய நாட்களில், அவருடைய போதனைகள் தேவனுடைய ராஜ்யத்தையும் ஆளுகையையும் சார்ந்து இருந்ததாக அறிகிறோம். அவர் தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார் (மாற்கு 1:15). அவர் பட்டணங்கள்தோறும் கிராமங்கள் தோறும் பிரயாணம்பண்ணி, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்துவந்தார். பன்னிருவரும் அவருடனேகூட இருந்தார்கள் (லூக்கா 8:1). அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும்

வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து, தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார் (லூக்கா 9:1-2).

வேதாகமத்தின் சரித்திரத்தில், தேவ மனிதர்களின் எண்ணம், ஏக்கம், எதிர்பார்ப்புகள், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தே இருக்கிறதைக் காணமுடிகிறது. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நம்மில் அநேகர், கர்த்தர் கற்பித்த ஜெபத்தை ஏறெடுக்கும்போது; உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக (மத்தேயு 6:10) என்று ஜெபம்பண்ணுகிறோம். இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் நிறைவிலும், தரிசனங்களைப் பெற்ற யோவான்: ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும் (வெளி. 22:20) என்று விண்ணப்பிக்கிறார். தேவனுடைய ராஜ்யத்தையும், இயேசுகிறிஸ்துவின் வருகையையும் பற்றியதுமான போதனைகள், தேவனுடைய பிள்ளைகள் வாழ்வை மாற்றி அமைக்க வல்லமையுடையதாயிருக்கிறது.

தேவஜனத்தைத் திசைத்திருப்பும் பிசாசின் வஞ்சகம்!

வெளிப்படுத்தின விசேஷத்தின் இருபதாம் அதிகாரம், பிசாசானவன் ஆயிரம் வருஷமளவும் செயல்படக்கூடாமல் கட்டப்படவிருப்பதையும், பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலையும், கிறிஸ்துவுடனேகூட அவர்களின் ஆயிரம் வருஷ அரசாட்சியையும் விவரிக்கிறது. மேலும் இந்த வேதப்பகுதி, அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாக்கப்படவிருப்பதையும், கிறிஸ்துவுக்கு விரோதமாகப் பூமியில் எழும்பும் சாத்தானின் கிளர்ச்சியையும் முன் அறிவிக்கிறது. இதைத் தொடர்ந்து, சாத்தானால் மோசம்போன மணலத்தனையானவர்களின் அழிவையும், மரணமடைந்த எஞ்சியுள்ளோர்களின் உயிர்த்தெழுதலையும், பெரிய வெள்ளைச் சிங்காசன கடைசி நியாயத்தீர்ப்பையும் விளக்குகிறது.

பிசாசானவன் ஆயிரம் வருடங்கள் செயல்படக்கூடாமல் கட்டப்பட்டு, நிறைவில், அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டு, இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படவிருப்பதை இந்த வசனங்கள் தெளிவாக எடுத்துரைக்கிறது. இந்த உண்மையை தேவஜனம் அறியாமலிருக்க,

பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிற பிசாசானவன், அநேக கல்விமான்களையும் வஞ்சித்துத் திசைத்திருப்பியிருப்பதைப்போலத் தோன்றுகிறது. இந்த வசனத்தின் விளக்கமாக, அவர்கள் தங்களுடைய கொள்கைகளுக்கு ஏற்றவாறு, சர்ச்சைக்குரிய பல கருத்துக்களை வெளியிடுகிறார்கள். இதனிமித்தம், இயேசுகிறிஸ்துவின் ஆயிரம் வருஷ ஆளுகையைப் பற்றியதான இந்த வேதப்பகுதி, அதிகமான விவாதத்திற்குரிய பகுதியாகக் காணப்படுகிறது.

இந்த வேதப்பகுதியைத் தொடர்ந்து தியானிக்கும் முன்பாக, இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகைக்காக இந்நாட்களில் நாம் காத்திருக்கிறோம் என்பதையும், இரகசிய வருகையில் கைவிடப்படுவோர், உபத்திரவத்தின் நாட்களுக்குட்படுவர் என்பதையும், நினைவில்கொள்ள அழைக்கப்படுகிறோம். எனவே, சாத்தான் மற்றும் அவனைச் சார்ந்த தீய சக்திகளின் நிச்சயமான அழிவை இந்நாட்களில் அறிந்துணர்ந்து, அவனுடைய வஞ்சகத் திட்டங்களுக்கும், பேரழிவுக்கும் தப்பிப் பிழைக்க எச்சரிக்கப்படுகிறோம். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்களாய், பரிசுத்தத்தோடும், உண்மையோடும் தேவனை உறுதியாய்ப் பற்றிக்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

ஆயிரம் வருஷம் கட்டப்படவிருக்கும் சாத்தான்!

தேவனிடத்திலிருந்து வல்லமையையும் அதிகாரத்தையும் பெற்ற ஒரு தூதன் வானத்திலிருந்து இறங்கிவருவதை யோவான் கண்டார். அந்தத் தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக்கொண்டிருந்தான் (வெளி. 20:1). பாதாளத்தின் திறவுகோல் என்பது அந்தத் தூதன் பாதாளத்தைத் திறக்கவும் அடைக்கவும் கர்த்தரால் பெற்றிருந்த அதிகாரத்தைக் காட்டுகிறது. பெரிய சங்கிலி, சாத்தான் மற்றும் பிசாசுகளின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்த அவனுக்களிக்கப்பட்டிருக்கும் ஆற்றலை வெளிப்படுத்துகிறது. சாத்தான் இங்கு, பழைய பாம்பு என்றும், வலுசர்ப்பம் எனவும், பிசாசென்றும் சாத்தானென்றும் நான்கு பெயர்களினால் குறிப்பிடப்படுகிறான்.

உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும்

தள்ளப்பட்டார்கள் (வெளி. 12:9). தள்ளப்படும் அக்காலத்தில் அவன் பூமியின் குடிகளையும் ராஜாக்களையும் வஞ்சிப்பான். பின்னர் ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு, அதன் வஞ்சகத்தைக் கட்டுப்படுத்தும்வகையில், பூமியிலிருந்து அது பாதாளத்திலே தள்ளியடைக்கப்படவிருக்கிறது. அந்தத் தூதன் சாத்தானை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான் (வெளி. 20:2). இறுதியாக, அக்கினியும் கந்தகமுமான கடலிலே பிசாசானவன் தள்ளப்பட்டு, இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படவிருக்கிறான் (வெளி. 20:10).

அர்மகெதான் யுத்தத்திற்கு பின்னர் மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் பிடிக்கப்பட்டு கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டு சதாகாலங்களிலும் வாதிக்கப்படவிருக்கிறார்கள் (வெளி. 19:20) எனப் பார்த்தோம். ஆனால் சாத்தான் அப்பொழுது அவர்களோடு நித்திய வாதைக்கு உட்படுத்தப்படாமல், ஆயிரம் வருஷமளவுங் கட்டப்பட்டு, பாதாளத்தில் தள்ளியடைக்கப்படவிருக்கிறான். அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாகவேண்டும் (வெளி. 20:3) என்பது, தேவன் அவனைக்குறித்து இன்னும் திட்டங்களை வைத்திருப்பதை வெளிப்படுத்துகிறது.

ஆயிரம் வருஷ ஆளுகையிலும் பாவ இச்சை!

இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில் கைவிடப்படுபவர்கள், உபத்திரவத்தின் நாட்களுக்கு உட்படுவார்கள். அவர்களில், கடைசிக்கால ஊழியங்களினால் உணர்வடைந்து கர்த்தரை ஏற்றுக்கொள்ளுபவர்களில் பலர், இரத்தம் சிந்தி சாட்சிகளாய் மரிக்க வேண்டியிருக்கும். ஏற்றுக்கொள்ளாதவர்கள் உபத்திரவக்காலத்தின் நியாயத்தீர்ப்புகளுக்குட்பட்டு தங்கள் ஜீவனை இழக்கவேண்டியிருக்கும். அந்நாட்களில், இரட்சிக்கப்பட்ட பரிசுத்தவான்கள் பரலோகத்திலிருப்பார்கள். சாத்தான் கட்டப்பட்டிருக்கும் அந்தக் காலக்கட்டத்தில், அவன் ஒருவரையும் சோதனைக்குட்படுத்தவோ மோசம்போக்கவோ கூடாதிருக்கும்.

அழிவிற்குட்படாத உபத்திரவக்கால விசுவாசிகள் ஆயிரங்கால அரசாட்சிக்குட்படுவார்கள். முதலாம் உயிர்த்தெழுதலில்

உயிர்ப்பிக்கப்படுபவர்கள் உட்பட, ஆயிரம் வருஷ ஆளுகையின் துவக்கத்தில் அனைவரும் பரிசுத்தவான்களாக இருப்பார்கள். சாத்தான் அந்தக் காலக் கட்டத்தில் கட்டப்பட்டு பாதாளத்தில் அடைக்கப்பட்டிருந்தாலும், பின்வரும் சந்ததியினர், சுய இச்சையினாலே இழுக்கப்பட்டுச் சோதிக்கப்பட வாய்ப்பிருக்கிறது. பாவ சுபாவத்தினிமித்தம் அவர்கள் பின்னர் பாவத்திற்குட்பட்டு, பாவம் பூரணமாகும்போது, மரணத்திற்குட்படுவார்கள். அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும் (யாக்கோபு 1:14,15) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இந்நாட்களில், நம்முடைய தவறுதல்களுக்கும் இடறுதல்களுக்கும் அநேக வேளைகளில் நாம் சாத்தானைக் காரணங்காட்டி அவன்மேல் பழி சுமத்துகிறோம். சாத்தான் ஆயிரம் வருஷங்கள் கட்டப்பட்டிருக்கும்போது, அவ்விதமாக சொல்லமுடியாதிருக்கும். சாத்தான் கட்டப்பட்டிருக்கும் நாட்களில் பூமியில் வசிப்போர், பூரண வாழ்விற்கேற்ற சூழலில் இருந்தாலும், அவர்கள் பாவத்திற்குட்பட வாய்ப்புகளுண்டு. எனவே, ஆயிரம் வருஷ ஆளுகையின் சாதகமான சுற்றுச்சூழலிலும், வரவிருக்கும் சந்ததியார் தேவனைவிட்டு விலகிச் செயல்பட வாய்ப்புள்ளது என அறியலாம்.

ஆனால், இரட்சகர் இயேசுகிறிஸ்துவின்மேலும், அவர் சிலுவையில் செய்துமுடித்த கிரியைகளின்மேலும் உள்ள நம்பிக்கை, பாவம் செய்யாதிருக்க தனிமனிதரின் இருதயத்தைப் பாதுகாக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது. ஆகையால், நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களாய், இந்நாட்களில் பாவ சுபாவத்தைக் களைந்து, பிசாசுக்கு எதிர்த்து நிற்க ஆலோசனைபெற்றிருக்கிறோம். அப்பொழுது அவன் நம்மைவிட்டு ஓடிப்போவான். அல்லேலூயா!

இயேசுகிறிஸ்துவின் ஆயிரம் வருஷ அரசாட்சி!

அன்றியும், நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது என்று வெளி. 20:4ஆம் வசனத்தின் முற்பகுதியில் யோவான் எழுதியிருக்கிறார். சிங்காசனங்களின்மேல் உட்கார்ந்து நியாயத்தீர்ப்புக்

கொடுக்கும்படி அதிகாரம் பெற்றவர்கள் யார் என அவர் குறிப்பிடவில்லை. ஆனால், அப்போஸ்தலனாகிய பவுல்: பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? (1 கொரிந்தியர் 6:2) என்று குறிப்பிடுகிறார். யார் இந்தப் பரிசுத்தவான்கள்?

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டு, இரகசிய வருகையில் மறுரூபப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்டவர்கள், இந்தப் பரிசுத்தவான்களின் எண்ணிக்கையில் உட்பட்டிருப்பார்கள். இவர்களும் சிங்காசனங்களின்மேல் உட்கார்ந்து நியாயத்தீர்ப்புக் கொடுப்பார்கள். கிறிஸ்து இயேசுவோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம் (2தீமோத்தேயு 2:12) என்று பவுல் எழுதியிருக்கிறார்.

தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கும் நான்கு ஜீவன்களும், இருபத்துநான்கு மூப்பர்களும், தாங்கள் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டு, பூமியிலே அரசாளுவோம் என்று அறிக்கைச்செய்யவிருக்கிறார்கள். அவர்கள் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து: நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்குமுன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோமென்று புதிய பாட்டைப் பாடினார்கள் (வெளி. 5:9,10) என்று எழுதப்பட்டிருக்கிறது.

சிங்காசனத்தில் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள்!

நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத்தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம். ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் (2கொரி. 5:8,10) என்றும்; தேகத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும் (பிலிப்பியர் 1:23) என்றும் பவுல் எழுதியிருக்கிறார்.

பரிசுத்தவான்கள் தங்கள் மரணத்தின்போது, தேகத்தைவிட்டுப் பிரிந்து, கர்த்தரோடுகூட இருக்கும்படியாக எடுத்துக்கொள்ளப்பட்டு, நியாயாசனத்திற்கு முன்பாக நிற்பார்கள் என அறிகிறோம். நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே. ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான் (ரோமர் 14:10,12) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவினுடைய இந்த நியாயாசனம் தேவனுடைய ராஜ்யத்தில் பெறவிருக்கும் பலனைத் தீர்மானிக்கும்.

மரணத்திற்குப் பின்னர், விசுவாசிகளும் விசுவாசத்திற்குப் புறம்பானவர்களும் சென்றடையும் இடங்களில் வித்தியாசம் உண்டு. அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (எபிரெயர் 9:27). இயேசுவுடன் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் (லூக்கா 23:43). பழைய ஏற்பாட்டின் காலத்தைச் சேர்ந்த பரிசுத்தவான்களும், இவ்விதமாக கர்த்தரோடுகூட இருக்கும்படியாக எடுத்துக்கொள்ளப்பட்டு, நியாத்தீர்ப்புக் கொடுக்கும்படி அதிகாரம்பெற்ற பரிசுத்தவான்களின் எண்ணிக்கையில் உட்பட்டிருப்பார்கள் என அறியலாம்.

கீழான பாதாளத்தை விட்டு விலகும்படி, விவேகிக்கு ஜீவவழியானது உன்னதத்தை நோக்கும் வழியாம் (நீதிமொழிகள் 15:24) என்றும்; நீர் எனக்குப் பாராட்டின உமது கிருபை பெரியது; என் ஆத்துமாவைத் தாழ்ந்த பாதாளத்திற்குத் தப்புவித்தீர் (சங்கீதம் 86:13) என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இதனால், விசுவாசத்திற்குப் புறம்பானவர்கள், மரிக்கும்போது பாதாளத்திற்குச் செல்வார்கள் என அறியலாம். பரதீசும் பாதாளமும், இயேசுகிறிஸ்துவின் நியாயத்தீர்ப்புவரை செயல்படும் தற்காலிகமான இடங்களாகும். பரதீசு என்ற சொல்லுக்குப் பெர்சிய மொழியில், தோட்டம் என்பது அர்த்தமாகும். தேவனுடைய பரதீசு என்றும் (வெளி. 2:7) குறிப்பிடப்படும் இது, ஏதேன் தோட்டத்தையும், பாவத்தினால் மனிதக்குலம் வீழ்ச்சியடைவதற்கு முன்னர், தேவனுக்கும் மனிதனுக்கும் இருந்த உறவின் நிறைவையும் நினைப்பூட்டுகிறது.

வசனத்தினிமித்தம் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்கள்!

இயேசுவைப்பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன் என்று வெளி. 20:4ஆம் வசனத்தின் அடுத்த பகுதியில் யோவான் எழுதியிருக்கிறார்.

முன்னர், தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே யோவான் கண்டார் (வெளி. 6:9) எனப் பார்த்தோம். அவர்கள் தங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று தேவனை நோக்கி மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

இந்த எண்ணிக்கை ஆதியில் ஆபேல் துவங்கி யோவான்ஸ்நானன் வரையில், தங்கள் சாட்சியினிமித்தம் கொல்லப்பட்ட அனைவரையும் உள்ளடக்கியுள்ளதைப்போலத் தோன்றுகிறது. உபத்திரவத்தின் காலத்தில், இதற்குப் பின்னர் அநேகர் இரத்தம்சிந்தி மரிக்கவிருப்பதினால் இந்தத் தொகை நிறைவாகவிருக்கிறது. இந்த உபத்திரவக்காலப் பரிசுத்தவான்களே, மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருப்பவர்கள் என அறிந்திருக்கிறோம்.

அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள் என்று வெளி. 20:4ஆம் வசனத்தின் நிறைவுப் பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. இப்படியாக உலகத்தோற்ற முதற்கொண்டு இரத்தம் சிந்தி மரித்த, பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களும், உபத்திரவக்கால பரிசுத்தவான்களுங்கூட உயிர்த்து கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாளவிருக்கிறார்கள்.

கர்த்தர் பூமியின்மீதெங்கும் ஆளுகைசெய்வார்!

இயேசுகிறிஸ்துவின் ஆயிரம் வருஷ ஆளுகை, தேவஜனம் கைக்கொள்ளும்படி கர்த்தர் நியமித்த ஓய்வுநாளைப்போன்றிருக்கிறது. கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார் (யாத்திராகமம் 20:11) என்று எழுதப்பட்டிருக்கிறது. பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள்போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்கவேண்டாம் (2 பேதுரு 3:8) என்று பேதுரு எழுதியிருக்கிறார்.

இதன் அடிப்படையில் ஆறு நாள் வேலை என்பது, சிருஷ்டிப்பின் நாள் துவங்கி இம்மட்டுமான ஆறாயிரம் ஆண்டுகளைப்போல் இருக்கிறது. இதனைத் தொடரும் ஆயிரம் ஆண்டுகள், ஏழாம் நாளைப்போன்று, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஆளுகைக்குட்பட்ட இளைப்பாறுதலின் காலம்போல அமைந்துள்ளது. இந்தப் பூமியானது, ஆறாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர், ஆயிரம் வருடங்கள் இளைப்பாறுதலுக்குட்படும் என்பது யூதர்களின் எதிர்பார்ப்பாகும். இயேசுகிறிஸ்துவின் ஆளுகைக்குட்படவிருக்கும் இந்தச் சமாதானத்தின் காலத்தில், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். இது முழுமையான அமைதியும் இளைப்பாறுதலுமுடைய ஒரு புது சிருஷ்டிப்பின் குறியீடாக இருக்கும்.

அப்பொழுது ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும், ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். பசுவும் கரடியும் கூடிமேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப்படுத்துக்கொள்ளும்; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும். பால் குடிக்குங்குழந்தை விரியன்பாம்பு வளையின்மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும், என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை, சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும் (ஏசாயா 11:6-9) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளும், கர்த்தர் பூமியின்மீதெங்கும் ராஜாவாயிருந்து ஆளுகைசெய்வார் என்பதை

உறுதிச்செய்கிறது. இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம்பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார் (எரேமியா 23:5). அப்பொழுது கர்த்தர் பூமியின்மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும் (சகரியா 14:9) என்று எழுதப்பட்டிருக்கிறது.

முதலாம் உயிர்த்தெழுதல்!

அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள். மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை. இதுவே முதலாம் உயிர்த்தெழுதல் (வெளி. 20:5) என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆயிரம் வருஷ அரசாட்சியின் துவக்கத்தில் நியமிக்கப்பட்டிருக்கும் இந்த உயிர்த்தெழுதலை, அதன் முடிவில் நியமிக்கப்பட்டிருக்கும் உயிர்த்தெழுதலிலிருந்து வேறுபிரித்துக்காட்டும் வகையில், முந்தின இந்த நிகழ்வை, முதலாம் உயிர்த்தெழுதல் என வேதாகமம் குறிப்பிடுகிறது.

வேதாகமத்தின் காலவரிசைப்படி, இது முதலாம் உயிர்த்தெழுதலல்ல என அறியலாம். ஏனெனில், கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் (1 கொரிந்தியர் 15:20,23) என்று பவுல் எழுதியிருக்கிறார். மரித்த பரிசுத்தவான்கள் முன்னர் உயிர்த்தெழவும், ஆயிரம் வருஷம் முடிவில், மரணமடைந்த மற்றவர்கள் அனைவரும் உயிர்ப்பிக்கப்படவும் நியமிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு உயிர்த்தெழுதல்களுக்கும் இடைப்பட்ட காலம் ஆயிரம் வருஷங்கள் ஆகும்.

முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக, ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள் (வெளி. 20:6). முதல் உயிர்த்தெழுதலில் பங்குபெறுகிற

பாக்கியவான்களும், பரிசுத்தவான்களும், ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள் என்பது, இவர்களுக்கருளப்படும் ஆசீர்வாதமாகும். இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை. இரண்டாம் மரணம் நித்திய பிரிவினையை, அழிவை ஏற்படுத்தும். மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்படுவது, இரண்டாம் மரணம் (வெளி. 20:14) ஆகும்.

ஆயிரம் வருஷம் முடிவில் சாத்தானின் விடுதலை!

அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி, பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம்போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும்படிக்கும் புறப்படுவான்; அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும் (வெளி. 20:7,8).

ஆயிரம் வருஷ அரசாட்சி நிறைவுபெறும்போது, கர்த்தர் சாத்தானைக் கொஞ்சக்காலம் விடுதலையாக்குவார். கட்டவிழ்க்கப்படும் சாத்தான், மறுபடியும் ராஜ்யங்களை வஞ்சிப்பான். கடற்கரை மணலத்தனையாயிருக்கும் சேனைகளையுடைய அந்த ராஜ்யங்கள், இன்னொரு முறையும் யுத்தத்திற்கெனக் கூட்டிச்சேர்க்கப்படும். இதுவே சாத்தானின் முழு மூச்சினாலான கடைசி முயற்சியாயிருக்கும். இந்த கூட்டமைப்பு கோகு என்றும் மாகோகு என்றும் குறிப்பிடப்படுகிறது.

இஸ்ரவேலுக்கு வடக்குப் பகுதியில் உள்ள தேசங்களில், மாகோகு தேசத்தின் அதிபதி கோகு என்பதாக எசேக்கியேல் 38:2இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மாகோகு என்கிற பெயர் நோவாவின் குமாரன் யாப்பேத்தின் சந்ததியில் இடம்பெற்றுள்ளது (ஆதியாகமம் 10:2). சோதோம் கொமோரா தீய பழக்கங்களின் அடையாளமாகக் குறிப்பிடப்படுவதுபோல, கோகு, மாகோகு தேவனுக்கு விரோதமான கிளர்ச்சியின் செயல்களைக் குறிக்கிறது. இருபதாம் அதிகாரத்தின் யுத்தம், எசேக்கியேல் 38,39 ஆம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வடக்கிலிருந்து வரும் கோகு மற்றும் மாகோகு யுத்தத்திலிருந்து வேறுபட்டதாகத் தோன்றுகிறது. எசேக்கியேல் புஸ்தகத்தின் யுத்தம் ஒரு சில தேசங்களைமட்டும் ஈடுபடுத்தும். ஆனால், இந்த வேதப்பகுதியின் யுத்தம் பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள அனைத்து ஜாதிகளையும் கூட்டிச்சேர்க்கும்.

உபத்திரவத்தின் நாட்களுக்குத் தப்பினவர்கள், ஆயிரம் வருஷ ஆளுகைக்குள் தங்களுடைய இயல்பான சரீரத்தில், பரிசுத்தத்தோடு பிரவேசிப்பார்கள். ஆயிரம் வருஷ ஆளுகையின் நிறைவில், அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும். இத்தனைத் திரளானவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? பத்தொன்பதாம் அதிகாரத்தின் கடைசிப்பகுதியில், பூமியின் ராஜ்யங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டதாகச் சொல்லப்படவில்லை. ஆயிரம் வருட ஆளுகையின்போது, இயல்பான சரீரத்தோடு அந்தக் காலத்திற்குட்படுவோர், குழந்தைகள் பெறுவதனிமித்தம் திரளான மக்கள்தொகைப் பெருக்கம் உண்டாகும். எழுபதுபேராய் எகிப்திற்குச் சென்ற தேவஜனம், 430 ஆண்டுகளுக்குப்பின், புருஷர்கள் மட்டும் ஆறுலட்சம் பேர் இருந்தார்கள் என்பதை நினைவுகூருவோம்.

விசுவாசிகளான அவர்கள் பரிசுத்தத்தோடு இருந்தாலும், பாவ சுபாவத்தினிமித்தம், அவர்களின் சந்ததி பாவத்திற்குட்பட வாய்ப்பிருக்கும். மனிதரின் இந்த அபாத்திரநிலையை வெளிப்படுத்தி, தேவனை எல்லா நிலையிலும் சார்ந்து செயல்படவேண்டியதன் அவசியத்தை உணர்த்தவே, சாத்தான் கட்டவிழ்க்கப்பட்டதைப்போன்று தோன்றுகிறது. கட்டவிழ்க்கப்பட்ட உடனே இருப்புக்கோலால் தேசங்களை ஆளுகைசெய்யும் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகச் செயல்பட, கடற்கரை மணலத்தனையாய் இருப்பவர்களை சாத்தான் வஞ்சிக்க முற்படுவான். இந்த அவிசுவாசக்கூட்டத்தார், சாத்தானால் வஞ்சிக்கப்பட்டுக் கிறிஸ்துவுக்கு விரோதமாக எழும்புவார்கள்.

தேவனால் வானத்திலிருந்து இறங்கும் அக்கினி!

அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது. மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள் (வெளி. 20:9,10).

பூமியின் நான்கு திசைகளிலிருந்தும் கூட்டிச்சேர்க்கப்பட்ட யுத்தமனிதர், பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும்

வளைந்துகொள்வார்கள். தேவனுடைய சேனை, பிரியமான நகரம் எனக் குறிப்பிடப்படும் எருசலேம் நகரத்தில் பாளையமிறங்கியிருப்பார்கள். அவர்கள் ஒன்றுக்கூடி இருக்கும் வேளையில், சடிதியாகத் தேவன் வானத்திலிருந்து அக்கினியை இறங்கப்பண்ணுவார்; அக்கினி அவர்களைப் பட்சித்துப்போடும். இதுவே சாத்தானுடைய சர்வ சேனையின் இறுதியான அழிவாகவிருக்கும்.

சாத்தானின் சேனைகள் அக்கினியால் அழிக்கப்பட்டப்பின், தேவன் சாத்தானை அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளவிருக்கிறார். கிறிஸ்துவின் ஆயிரம் வருஷ ஆளுகையின் போது சாத்தான், தேசங்களையும், பூமியின் குடிகளையும் வஞ்சிக்கக்கூடாதிருக்கும். கட்டவிழ்க்கப்பட்ட சில காலம் அவன் வஞ்சகமாய்ச் செயல்பட்டாலும், அது அலைப்பாயும் நிலையில் உள்ளவர்களை அடையாளங்கண்டு, கூட்டிச்சேர்த்து, அக்கினியினால் அழிக்கப்படவே ஏதுவாயிருக்கும்.

பிசாசானவனுக்கும் மிருகத்திற்கும் கள்ளத்தீர்க்கதரிசிக்குமான இந்தத் தண்டனை, சதாகாலங்களிலும் அக்கினியும் கந்தகமுமான கடலிலே அவர்களை வாதிக்கும். அச்சுறுத்தும் இந்தக் காட்சி, நினைத்தும் பார்க்கக்கூடாத அளவிற்குக் கொடூரமாகவிருக்கும். இந்த வேதப்பகுதி பிசாசானவனின் அழிவைத் தெளிவாக முன்னறிவிப்பதாக இருக்கிறது. எனவே, தேவனுடைய பிள்ளைகள் இந்த உண்மையை அறிந்து எச்சரிக்கப்படுவதைத் தடைசெய்ய பிசாசானவன் விரும்புகிறான். இதனால், வெளிப்படுத்தின விசேஷத்தை ஒருவரும் புரிந்துக்கொள்ளமுடியாது என்பதைப்போன்ற பொய்யான கருத்துக்களை அவன் துணிந்து பரவவிடுகிறான்.

விசுவாச வாழ்வில் மேலோட்டமாகப் பார்ப்போமேயானால், நம்மைச் சுற்றிலும் நடைபெறும் சம்பவங்கள், சாத்தான் நம்மை மேற்கொண்டு வெற்றிசிறந்ததைப் போன்ற தோற்றத்தை அளிக்கும். ஆனால், இந்த வசனங்கள், நிறைவில் நியமிக்கப்பட்டிருக்கிற சாத்தானின் சடிதியான வீழ்ச்சியைப் பதிவுசெய்து, கிறிஸ்துவுக்குள் வெற்றிசிறந்தவர்களாக நம்மை வெளிப்படுத்துகிறது. இன்னும் சற்றுக் கூர்ந்து கவனிப்போமேயானால், வாழ்வில் நம்பிக்கை இழந்தவர்களுக்கு நம்பிக்கையளித்து, உற்சாகப்படுத்தும் வேதப்பகுதியாக இது அமைந்திருப்பதைக் காணமுடியும்.

பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு!

ஆயிரம் வருஷ ஆளுகைக்குப் பின்னர், சிறிதுகாலம் கட்டவிழ்க்கப்பட்ட சாத்தானின் வஞ்சகத்தினால், தேவனுக்கு விரோதமாகக் கூட்டிச்சேர்க்கப்பட்ட அனைவரையும் தேவனால் வானத்திலிருந்து இறங்கவிருக்கும் அக்கினி பட்சித்துப்போடவிருக்கிறது. பூமியிலிருக்கும் அனைத்து அவிசுவாசிகளும் துன்மார்க்கரும் அப்பொழுது அழிவிற்குட்படுவார்கள். தொடர்ந்து, அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்படவிருக்கிறான். இந்தச் சம்பவத்தைத் தொடரும் நியாயத்தீர்ப்பு, தேவனுடைய நித்திய ராஜ்யம் ஏற்படுத்துவதற்கு முன்னான கடைசி நிகழ்வாகும். இதில் தேவன் அனைத்து அவிசுவாசிகளையும் துன்மார்க்கரையும் நியாயந்தீர்க்கவிருக்கிறார்.

பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்; அவருடைய சமூகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்றுபோயின, அவைகளுக்கு இடங்காணப்படவில்லை (வெளி. 20:11) என்று எழுதப்பட்டிருக்கிறது. யோவான் கண்ட வெள்ளைச் சிங்காசனக் காட்சியில், தேவனுடைய மகிமையைக் காணக்கூடாதப்படி, அவருடைய சமூகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்றுபோயின, அவைகளுக்கு இடங்காணப்படவில்லை. இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேனென்று இப்பொழுது வாக்குத்தத்தஞ்செய்திருக்கிறார் (எபிரெயர் 12:26). இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது. அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதிவாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம் (2 பேதுரு 3:7,13) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இந்த வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பில், நியாயாசனத்தில் உட்கார்ந்திருப்பவர் யார் எனக் குறிப்பிடப்படவில்லை. ஆனாலும், பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார் (யோவான் 5:22) என்கிற வசனத்தின்படி, அவர் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என அறியலாம்.

ஆவியில் மரித்தோருக்கு இரண்டாம் மரணம்!

மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன, ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள் (வெளி. 20:12,13).

மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன் என்பது, ஆயிரம் வருஷ ஆளுகைக்கு முன்னரான முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குப்பெறாத அனைவரும் உயிர்த்தெழுந்து தேவனுக்கு முன்பாக நிற்கவிருப்பதைக் குறிக்கிறது. மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை (வெளி. 20:5) என்று எழுதப்பட்டிருக்கிறது. சமுத்திரம் ஒப்புவித்த மரித்தோரும், மரணமும் பாதாளமும் ஒப்புவித்த மரித்தோரும், தேவனுக்கு முன்பாக நிற்கவிருக்கிறார்கள்.

மரித்தோர் தேவனுக்கு முன்பாக நிற்பார்கள் என்பது, ஆவியிலே மரித்த நிலையிலுள்ள துன்மார்க்கருக்கும் அவிசுவாசிகளுக்குமே இந்த நியாயத்தீர்ப்பு என்பதை உறுதிச்செய்கிறது. தேவனுடைய இந்தக் கடைசி நியாயத்தீர்ப்பு, பதிவுசெய்யப்பட்ட ஆதாரங்களைச் சார்ந்தேயிருக்கும். இது அவிசுவாசிகளுக்கும் துன்மார்க்கருக்குமான தண்டனையின் அளவை தீர்மானிப்பதாகவிருக்கும்.

அப்பொழுது புஸ்தகங்களும், ஜீவபுஸ்தகமும் திறக்கப்படவிருக்கிறது. அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைவார்கள். புஸ்தகங்கள் என்பது மரித்தோர் தங்கள் வாழ்நாளில் செய்த அனைத்து கிரியைகளின் குறிப்பேடுகளைப்போன்ற பதிவாகும். ஜீவபுஸ்தகம் கர்த்தருடைய புஸ்தகம்; கர்த்தரால் மீட்கப்பட்டவர்களின் பெயர்கள் அதில் எழுதப்பட்டிருக்கும். ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள், கர்த்தரால் மீட்கப்படாதவர்கள், இந்த நியாயத்தீர்ப்பிற்கு உட்பட்டிருப்பார்கள்.

ஆயிரம் வருஷ அரசாட்சியின் இறுதிவரை வாழும் பரிசுத்தவான்கள் நித்தியஜீவனை அடைவதைப்பற்றியும், இந்த ஆளுகையின் காலத்தில் மரிக்கும் பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலைக் குறித்தும் வேதாகமத்தில் வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை. இந்தக் காலத்தில் மறுமைக்குட்படும் விசுவாசிகளான நீதிமான்கள், கடைசி நியாயத்தீர்ப்பிற்கு முன்னரே, தேவனுடைய சந்நிதானத்தில் தங்களுடைய பிரயாசங்களுக்கேற்ற பலனை அடைந்திருப்பார்கள் என எடுத்துக்கொள்ளலாம். இதைப்போன்றே, ஜீவபுஸ்தகத்தில் தங்கள் பெயர்கள் எழுதப்பட்டவர்களாய் இறுதிவரை உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களும், மறுரூபமடைந்து தேவனோடு நித்தியகாலமும் வாழும் சிலாக்கியத்தைப் பெறுவார்கள் எனவும் அறியலாம்.

அக்கினிக்கடலில் மரணமும் பாதாளமும்!

அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான் (வெளி. 20:14,15). மரணமும் பாதாளமும் தேவனுடைய கரத்தில் நியாயத்தீர்ப்பின் கருவிகளாகச் செயல்பட்டபின், அக்கினிக்கடலிலே தள்ளப்படவிருக்கிறது. இரண்டாம் மரணம் என்பது, நித்திய காலமும் தேவனைவிட்டு பிரிக்கப்பட்டு வேதனையில் வாடும் நிலையாகும்.

இந்த வேதனையும் தண்டனையும் ஆக்கினைக்குட்பட்ட அனைவருக்கும் ஒரே அளவு என்பதாக இல்லாமல்; ஒரே இடத்திற்குச் சென்றாலும், தண்டனைகளில் வித்தியாசங்கள் இருப்பதாக அறியலாம். தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான். அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ சில அடிகள் அடிக்கப்படுவான் (லூக்கா 12:47,48) என்று எழுதப்பட்டிருக்கிறது.

மிருகத்தையும், கள்ளத்தீர்க்கதரிசியையும், பிசாசானவனையும்போன்றே, ஜீவபுஸ்தகத்திலே பெயர் எழுதப்படாதவர்கள் அனைவரும் அக்கினிக்கடலிலே தள்ளப்படவிருக்கிறார்கள். இந்தக் கடைசிக்காலச் சம்பவங்கள், விரிவாக இங்கு விளக்கப்பட்டிருப்பதின்

நோக்கம், இதை வாசித்து அறிகிற ஒவ்வொருவரும், நிச்சயமாக வெளிப்படவிருக்கும் இந்த வேதனைகளிலிருந்து தப்பி நித்தியஜீவனை அடையவேண்டும் என்பதேயாகும். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்ட எந்தவொரு விசுவாசியும், தேவனுடைய பெரிய வெள்ளைச் சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கமாட்டான். அந்த இடம், இயேசுகிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல், துன்மார்க்கமாய் ஜீவிக்கும் அவிசுவாசிகளுக்கென ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது.

இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகைக்காக காத்திருக்கும் நாம், கிருபையாய் நமக்கு அருளப்பட்டிருக்கும் இந்தக் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள அழைக்கப்படுகிறோம். ஆகையால் இனி சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் (லூக்கா 21:36) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்.

இதற்குப் பாத்திரவான்களாக இல்லாதவர்கள், தங்கள் இருதயங்களில் பொல்லாப்பை வைத்திருக்கிற துன்மார்க்கரோடும் அக்கிரமக்காரரோடும் வாரிக்கொள்ளப்பட்டு, தங்கள் பெயர் ஜீவபுஸ்தகத்திலே எழுதப்படாதவர்களாக அக்கினிக்கடலிலே தள்ளப்படுவார்கள். இயேசுகிறிஸ்துவை, இரட்சிப்பின் அதிபதியாகவும், கர்த்தராகிய ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ளுபவர்கள், தங்களுடைய பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்களாய், நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.

இயேசுவைப்பற்றிக்கொள் - வஞ்சகன் அழிவு நிச்சயம்!

இயேசுகிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்களில் சிலர், வெளிப்படுத்தின விசேஷத்தை வாசிக்கும்போது தடுமாறுகிறதையும், இந்த வசனங்களைத் தியானிக்கத் தயங்குகிறதையும் அறிவோம். பிசாசானவன், தன்னுடைய நிச்சயமான அழிவை முன்னறிவிக்கும் இந்தச் சத்தியத்தை, தேவஜனம் அறிந்து

எச்சரிக்கப்படுவதைத் தடைசெய்ய இவ்விதமாக முற்படுகிறான். இது கடினமான வேதப்பகுதி என்பதைப்போன்ற தவறான எண்ணங்களை விதைக்கிறான்; பொய்யான செய்திகளைத் தன்னுடைய ஊழியர்கள்மூலம் பரப்புகிறான்.

இப்படியாக, இந்தச் சத்திய வார்த்தைகள் வெளிப்படுத்தும் உண்மையை அறிந்து உணர்ந்துகொள்ளாமல், இவ்வுலகத்தின் உபத்திரவங்களுக்கும் நெருக்கங்களுக்கும் ஊடாகக் கடந்து செல்லும்போது, வாழ்வின் துன்பங்களுக்கு எதிர்த்து நிற்க திராணியற்றவர்களாய்ச் சிலர் சோர்ந்து மடிந்துபோகிறார்கள். வஞ்சகனின் பொய்யை நம்பி, துன்பங்களும் வேதனைகளுமே வாழ்வு என அவற்றைப் பொறுமையாய்ச் சகித்துக்கொள்ளப் பழகி, அறியாமல் வாழ்நாள் முழுவதும் பாடுகளுக்குட்படுவோரும் உண்டு. வேதவாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, கோரச் சிலுவையிலே பாடுபட்டு இரத்தம் சிந்தி, தன்னையே ஜீவபலியாக ஈந்து, நமக்கு இரட்சிப்பை அருளியிருக்கிறார். மேலும், இலக்காக நியமிக்கப்பட்டிருக்கும் பூரண இரட்சிப்பையடைந்து, நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ள, முடிவுபரியந்தம் விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும் உண்மையிலும் நிலைநிற்க நம்மைக் கர்த்தர் வழிநடத்தி உற்சாகப்படுத்துகிறார். ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்றும்; கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் (மத்தேயு 24:4,24) என்றும் கர்த்தர் எச்சரித்திருக்கிறார்.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருப்போம். பிசாசானவனுக்கும் அவனுடைய சர்வ சேனைக்கும் நியமிக்கப்பட்டிருக்கிற நிச்சயமான அழிவை அறிந்து உணர்வடைவோம். அவனுடைய வஞ்சகத் திட்டங்களையும், அழிவையும் அறிந்த நிலையில், பேரழிவுக்குத் தப்பிப் பிழைக்க, இயேசுகிறிஸ்துவை அண்டிக்கொள்ளுவோம். தனக்குக் கொஞ்சக்கால மாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, பிசாசானவன் இறங்கினபடியால் ஆபத்துவரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுவோம். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்டவர்களாய், அவருடைய நாமத்தை உறுதியாய்ப்பற்றிக்கொண்டு, பரிசுத்தத்தோடும், உண்மையோடும் கர்த்தருக்கென்று சாட்சியாக முடிவுபரியந்தம் வாழ, நம்மை அர்ப்பணிப்போம். கர்த்தர்தாமே எப்பொழுதும் சகலவிதத்திலும் அதற்கேற்ற கிருபைகளையும் சமாதானத்தையும் நமக்குத் தந்தருளுவாராக. ஆமென். அல்லேலூயா!

மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு
பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது இதோ,
மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது,
அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்.
அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள்.
தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய
தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும்
தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை,
அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்து
போயின என்று விளம்பினது
(வெளி. 21:3,4).

14. இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்!

பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின!

வேதாகமத்தின் உச்சக்கட்ட நிகழ்வுகளான ஆட்டுக்குட்டியானவரின் கலியாணமும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையும், வெளிப்படுத்தின விசேஷத்தின் பத்தொன்பதாம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடரும் இருபதாம் அதிகாரத்தில், பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலையும், கிறிஸ்துவுடனேகூட அவர்களின் ஆயிரம் வருஷ அரசாட்சியையும், நிறைவில் மரணமடைந்த எஞ்சியுள்ளோர்களின் உயிர்த்தெழுதலையும், பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பையும் தியானித்தோம்.

மீட்கப்பட்ட தேவஜனம் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும், தேவனுடைய ராஜ்யத்தின் விவரங்களும் விளக்கங்களும், இந்தத் தரிசனப் புஸ்தகத்தின் கடைசி இரண்டு அதிகாரங்களில் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றின் சிகரமாக, தேவனாகிய கர்த்தர் மனுஷர்களிடத்தில் வாசமாயிருக்கவிருப்பதையும், தேவனுடைய பிள்ளைகள் அதனால் அடையவிருக்கும் அளவற்ற ஆறுதலையும், சமாதானத்தையும் இந்த வசனங்கள் வெளிப்படுத்துகின்றன. ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின என்கிற வாக்கிற்கேற்ப, புதுச்சிருஷ்டிப்பின் நிறைவான ஆசீர்வாதநிலை, புதிய வானம் புதிய பூமி புதிய எருசலேம் என்பதாக, இங்கு விவரிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றில் பிரதானமாக, நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான் எனச் சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பவரே வெளிப்படுத்துகிறார். மரணமும், துக்கமும், அலறுதலும், வருத்தமுமில்லாத தேவனுடைய மகிமையுள்ள பிரசன்னத்தையும், எதிர்ப்புகளின் குறியீடான சமுத்திரமும், ஒளிதரும் சூரியன் சந்திரன் போன்றவைகளும் இல்லாத வாழ்விடத்தையும், இவை வெளிப்படுத்துகின்றன.

வரும் நாட்களில் கண்டு அனுபவிக்கவிருக்கும் பரலோக மேன்மைகளின், ஒரு சில துளிகளே இந்த வேதப்பகுதியில் சொல்லப்பட்டிருப்பதாக அறிகிறோம். தொகுக்கப்பட்டிருக்கும் விவரங்கள், இந்நாட்களில் அறிந்துணர்ந்து புரிந்துகொள்ளுவதற்கு அப்பாற்பட்டதாகத் தோன்றுகிறது. வியக்கத்தகும் அஸ்திபாரங்கள் அளவீடுகள் துவங்கி, மதிலும் வாசல்களும், பரிசுத்த நகரத்திற்குள் கொண்டுவரப்படும் மகிமையும் கனமும் வரை, ஒவ்வொன்றும் பிரமாண்டமான கட்டமைப்புகளை, வசதிகளை மேன்மைகளை வெகுசிறந்த நெறிமுறைகளை விவரிக்கிறது.

தேவன் அவைகளை ஆவியினாலே வெளிப்படுத்தினார்!

இங்குப் பட்டியலிடப்பட்டிருக்கும் தகவல்களும் விவரங்களும் மிகவும் சொற்பமானவைகள் என்று அறியும்போது, இவைகளின் முழுமை, யூகித்தும் பார்க்கக்கூடாததாய்த் தோன்றுகிறது. எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை. அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார் (1 கொரிந்தியர் 2:9,10). நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கும் நித்திய குடியிருப்பை விவரித்துச் சொல்ல, நாமறிந்த மொழிகளில் வார்த்தைகளைக் காண்பதறிது என்பது இங்கு யதார்த்தமாகிறது. அந்த நித்திய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க, இந்நாட்களில் வெளிப்படும் எச்சரிப்புகளுக்குச் செவிகொடுத்து ஆயத்தமாயிருக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

அண்டசராசரங்களையும் சிருஷ்டித்துப் பராமரிக்கும் தேவனுடைய வாசஸ்தலங்களைச் சின்னதொரு திறப்பின் ஊடாக, அறிந்துணர முற்படுவதின் சவால்களை அறிய முடிகிறது. பின்னர் இதற்குத் தீர்வு தான் என்ன? நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன் என்கிற அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தையின்படி, எழுதப்பட்டிருக்கிற சத்தியங்களை, பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையுடன் அறிந்து, அவை வெளிப்படும் நாளுக்கெனப் பொறுமையாய் விசுவாசத்துடன் காத்திருப்பதே அதன் தீர்வு ஆகும்.

இந்த வேதப்பகுதியைத் தொடர்ந்து தியானிக்கும் முன்பாக, இந்நாட்களில் நாம் இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகைக்காகக் காத்திருக்கிறோம் என்பதையும், இரகசிய வருகையில் கைவிடப்படுவோர், உபத்திரவத்தின் நாட்களுக்குட்படுவர் என்பதையும், நினைவில்கொள்ள அழைக்கப்படுகிறோம். இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனை நாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள் (சங்கீதம் 95:8) என்று எழுதப்பட்டிருக்கிறது. வணங்காக்கழுத்துள்ளவர்களாய், இருதயத்தைக் கடினப்படுத்தும்போது, தேவனுடைய ஆசீர்வாத நன்மைகளை இழந்துபோவோம். இழந்துபோவது மட்டுமல்லாமல், நித்திய ஆக்கினையையும் அடைவோம் என்பதும் உண்மையாயிருக்கிறது.

இந்தக் கடைசி இரண்டு அதிகாரங்கள், ஏழு தரிசனங்களின் தொகுப்பாகத் தோன்றுகிறது. தரிசனங்கள் வெளிப்பட்ட வரிசையில் இவை எழுதப்பட்டுள்ளன. இதனால், ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட நிகழ்வுகள் மறுபடியும் குறிப்பிடப்பட்டு, முன்னர் வெளிப்படுத்தப்பட்டச் சம்பவங்கள் மறுபடியுமாக நிகழவிருப்பதைப்போன்ற தோற்றத்தை அளிக்கலாம். இதை மனதில்கொண்டு இந்த வேதப்பகுதியை, தூய ஆவியானவரின் ஒத்தாசையுடன் விளங்கிக்கொள்ள முற்படுவோம். மேலும், ஏசாயா தீர்க்கதரிசி, இந்தத் தரிசனங்கள் தொகுக்கப்படுவதற்கு சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னரே, புதிய வானம் புதிய பூமியைப்பற்றியும், புதிய எருசலேமைக் குறித்தும் (ஏசாயா 65:17,18) எழுதி வைத்திருக்கிறதை வேதாகமத்தில் பார்க்கிறோம்.

புதிய வானம் புதிய பூமி!

தலைமுறை தலைமுறையாக நிற்கும் தேவனுடைய ராஜ்யமும், அவருடைய நித்திய ஆளுகையும், நிறைவு தரிசனங்களாக இங்கு இடம்பெற்றுள்ளன. நித்திய ராஜ்யம், இந்நாட்களின் உலகுக்கும், உபத்திரவத்தின் நாட்களின் ஆளுகைக்கும், ஆயிரங்கால ராஜ்யத்திற்கும், முற்றிலும் மாறுபட்டதாக, மிகவும் மேன்மையுள்ளதாக இருக்கும். பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று (வெளி. 21:1). இந்தப் புதிய வானமும் பூமியும், பரலோகவாசிகள் தங்கி தாபரிக்கும், பரிசுத்தமும் பிரகாசமுமான வாசஸ்தலங்களுக்கு ஒப்பானவைகளாக இருக்கும்.

கர்த்தர் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கவிருக்கிறார். பிசாசினாலும் பாவத்தினாலும் கறைப்படிந்த இப்போதைய வானமும், பூமியும் ஒழிந்துபோகும். இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டிருக்கின்றன. அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம் (2 பேதுரு 3:10). இவைகளை விவரிக்க வார்த்தைகள் இல்லாததினிமித்தம் இங்கு யோவான் இவற்றைக் குறித்து அதிகமாக எழுதவில்லையோ என நினைக்கத் தோன்றுகிறது. இயேசு செய்த காரியங்களை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன் என யோவான் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தப் புதிய சூழலில், சமுத்திரமும், சூரியனும், சந்திரனும் இல்லாமற்போகும். சமுத்திரம் என்பது வேதாகமத்தில் இங்கு, எதிர்ப்புகளைக் குறிக்கிறது. சமுத்திரங்களின் மும்முரத்தையும் அவைகளுடைய அலைகளின் இரைச்சலையும், ஜனங்களின் அமளியையும் அமர்த்துகிறீர் (சங்கீதம் 65:7) என்றும்; சமுத்திரம் புரண்டுவந்தபோது, இம்மட்டும் வா, மிஞ்சி வராதே, உன் அலைகளின் பெருமை, இங்கே அடங்கக்கடவது (யோபு 38:11) என்றும், வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார் (ஏசாயா 59:19) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

சமுத்திரம் இல்லாமற்போயிற்று என்பது, தேவனுக்கு விரோதமான கிரியைகள் முற்றும் சங்கரிக்கப்பட்ட நிலையைக் காட்டுவதாக எடுத்துக்கொள்ளலாம். சமுத்திரம் இல்லாமல்போகும் எனினும், அங்கு ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி இருக்குமென (வெளி. 22:1,2) வாசிக்கிறோம். தேவனாகிய கர்த்தர் விசுவாசிகளுக்கென்று, சாபமில்லாத புதிய பூமியைத் தரவிருக்கிறார்.

பரலோகத்தைவிட்டு இறங்கிவரும் புதிய எருசலேம்!

இதைத் தொடர்ந்து யோவான், புதிய எருசலேம் எனப்படும் பரிசுத்த நகரம் தேவனுடைய சந்நிதானத்திலிருந்து இறங்கிவரக் காண்கிறார். யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கிவரக்கண்டேன். அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப்போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது (வெளி. 21:2) என்று எழுதப்பட்டிருக்கிறது. இதையே, நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது (யாக்கோபு 1:17) என்று அப்போஸ்தலன் குறிப்பிடுவதைப்போலத் தோன்றுகிறது.

புதிய எருசலேம் தேவனிடத்தினின்று இறங்கிவரக்கண்டேன் என்பது, ஏற்கனவே அது பரலோகத்திலிருந்து, புதிய பூமிக்கு இறங்கிவருகிறதாக அறிகிறோம். புதிய எருசலேமின் அலங்காரம், புருஷனுக்காக ஆயத்தமாக்கப்பட்ட மணவாட்டிக்கு ஒப்பிட்டு எழுதப்பட்டிருக்கிறது. மணவாளனாம் இயேசுகிறிஸ்துவின் மகிமைக்கு உகந்ததாக அது வடிவமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும். இந்தக் காட்சியின் விவரங்கள், இதனைத் தொடரும் தரிசனத்தில் (வெளி. 21:10) பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இங்கு அது, புதிய எருசலேமைப்பற்றின விரிவான வர்ணனையின் அறிமுக வார்த்தைகளாக இடம்பெற்றுள்ளன.

நித்திய ராஜ்யத்தில், புதிய எருசலேம் இரட்சிக்கப்பட்ட பரிசுத்தவான்களின் வாழ்விடமாகவிருக்கும், ஆபிரகாம், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு காத்திருந்தான் (எபிரெயர் 11:10) என்று எழுதப்பட்டிருக்கிறது. என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச்

சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன் (யோவான் 14:2) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். பிதாவாகிய தேவன், மீட்கப்பட்ட பரிசுத்தவான்களுக்கு, ஆயத்தம்பண்ணியிருக்கிற வாசஸ்தலம் பரலோகத்தைவிட்டு இறங்கி வரவிருக்கிறது.

தேவன் மனுஷர்களிடத்திலே வாசமாயிருப்பார்!

மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது (வெளி. 21:3,4).

ஏதேன் தோட்டத்தில் இழந்த தேவனோடுள்ள உறவு, இங்குப் பூரணப்படவிருக்கிறது. தேவன் மனுஷர்களிடத்திலே வாசமாயிருப்பார்; தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் நோக்கம் அப்பொழுது நிறைவுபெறும். இந்த நித்திய வாழ்விலே மரணமும், துக்கமும், அலறுதலும், வருத்தமும் இராது. இந்த உன்னத வாழ்வின் நிலை, ஏதேன் தோட்டத்தில் பகலில் குளிர்ச்சியான வேளையிலே, தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தரோடிருந்த உறவின் நிலையைப்போன்றதாகவிருக்கும்.

இந்த நிச்சயத்தை விசுவாசத்தில் பெற்றிருந்த பவுல்: நாம் தைரியமாகவேயிருந்து, இந்த தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம் (2 கொரிந்தியர் 5:8) என்கிறார். வாக்களிக்கப்பட்டிருக்கும் இந்தப் புதிய சூழலில், தேவனோடுள்ள நெருக்கமான உறவில், இந்நாட்களைப்போல பாவம் ஒரு தடையாக இருக்காது; கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவரால் பாவம் நிவிர்த்தியாகி, முற்றிலுமாக நீக்கப்பட்டிருக்கும்.

தாகமாயிருக்கிறவனுக்கு ஜீவத்தண்ணீர்!

சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர் இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், அவர் இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார். அன்றியும், அவர் என்னை நோக்கி ஆயிற்று, நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான் (வெளி. 21:5-7) என்றார்.

சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர், தான் சொல்லவிருந்த வசனங்கள், சத்தியமும் உண்மையுமானவைகள் என்று அதன் முக்கியத்துவத்தைச் சொல்லி, அவற்றை எழுதும்படியாக கட்டளையிடுகிறார். ஆயிற்று என இரட்சிப்பின் வரலாறு நிறைவுப்பெறவிருப்பதை விளங்கச்செய்து; கடைசிக்கால அழைப்பை, அவருடைய தன்மைகளை வெளிப்படுத்தி உறுதிச்செய்கிறார். நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்கிற வார்த்தைகள், முழுமையான அவருடையஆளுகையையும், அதிகாரத்தையும், வல்லமையையும் விளங்கச்செய்கிறது.

தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன் என்கிற வார்த்தைகள், வாஞ்சையாய் தேவனை நாடித் தேடுகிறவர்களுக்கு அவர் அளிக்கவிருக்கும் நித்திய ஜீவனைக் குறிக்கிறது. ஜெயங்கொள்ளுகிறவன் தேவனிடத்திலிருந்து எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொண்டு அவருக்கு குமாரனாயிருப்பான். நம்முடைய புத்திக்கெட்டாத இந்த வாக்குத்தத்தம், நிந்தை இகழ்ச்சி பரிகாச நிலையிலிருந்து, அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப்பெற்றுத் தருகிறது. அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்; எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார். அவனைப் பிரபுக்களோடும், தமது ஜனத்தின் அதிபதிகளோடும் உட்காரப்பண்ணுகிறார் (சங்கீதம் 113:7,8). வாக்களிக்கப்பட்ட நல்வாழ்வு, வளர்ந்தோங்கும் பரிசுத்தத்தின் ஊடாய், மகிமையில் நிறைவடையவிருக்கிறது.

பயப்படுகிறவர்களுக்கு இரண்டாம் மரணம்!

ஜெயங்கொள்ளுகிறவன் தேவனிடத்திலிருந்து எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொண்டு அவருக்குக் குமாரனாயிருப்பான். இதற்கு மாறாக, விசுவாசப் பரீட்சையில் வீழ்ந்துபோகிறவர்கள் அனைவரும், இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்பதாக சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் வெளிப்படுத்துகிறார். பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார் (வெளி. 21:8).

இந்த வார்த்தைகள், இன்றும் மனந்திரும்பி கர்த்தரைப்பற்றிக்கொள்ள காலத்தையும், வாய்ப்புகளையும் பெற்றிருக்கிற நமக்கே சொல்லப்பட்டிருக்கிறது. பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது (யோவான் 9:4) என்று கர்த்தர் எச்சரித்திருக்கிறார். பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும் இந்தப் பட்டியலில் முதலாவதாக இடம் பெற்றுள்ளனர்.

உண்மையாய் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரில் அன்புகூருகிறவர்களிடத்தில் பயமிருக்காது. கிறிஸ்துவைக் குறித்து அவர்கள் தைரியமாய் சாட்சி பகருவதைக் காணமுடியும். பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்றும் அறிந்துகொண்டார்கள் (அப்போஸ்தலர் 4:13) என்று எழுதப்பட்டிருக்கிறது. அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல (1 யோவான் 4:18).

இதனிமித்தமே பேதுரு, விசுவாசிகளின் முதல் வளர்ச்சிப் பரிமாணம். தைரியம் எனக் குறிப்பிடுகிறார். இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும் (2 பேதுரு 1:5) என்று பூரணராகும்படியான

அடிச்சுவடுகளைப் பட்டியலிட்டிருக்கிறார். கிரியையில்லாத விசுவாசம் செத்தது; விசுவாச வாழ்வின் முதல் நிலையில், பயம் நீங்கி கிறிஸ்துவைச் சார்ந்து சாட்சியாகச் செயல்படுவது அவசியமாகும். இதனிமித்தமே யாக்கோபும், பயப்படுகிற விசுவாசிகளை, பிசாசுகளுக்கு ஒப்பிட்டு: தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன (யாக்கோபு 2:19) என்று எச்சரிக்கிறார்.

ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டி!

கடைசியான ஏழு வாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன், யோவானிடத்தில் வந்து, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் என்று சொல்லி, பெரிதும் உயரமுமான ஒரு பர்வதத்தின்மேல் அவரை ஆவியில் கொண்டுபோய், அவன் தேவனுடைய மகிமையை அடைந்த எருசலேமாகிய பரிசுத்தநகரம் பரலோகத்தைவிட்டு தேவனிடத்திலிருந்து இறங்கிவருகிறதைக் காண்பித்தான் (வெளி. 21:9,10). யோவான் அந்தப் பர்வதத்தின்மேல் ஆவியில் எடுத்துச் செல்லப்பட்டபோது, புதிய எருசலேமைப்பற்றிய அனைத்து விவரங்களும் அவருக்கு வெளிப்பட்டிருக்கும். இவற்றை, வெளிப்படுத்தின விசேஷம் 21:9 துவங்கி 22:5ஆம் வசனம் வரையிலான வேதப்பகுதியில் அவர் எழுதிவைத்திருக்கிறார். எருசலேமாகிய பரிசுத்தநகரத்தின் வெளிப்புற மதிலும் அஸ்திபாரங்களும் வாசல்களும், பாதுகாவலும், உட்புற மேன்மைகளும் மகிமையும் இங்கு விவரிக்கப்பட்டுள்ளன.

ஆட்டுக்குட்டியானவருடைய மணவாட்டியைக் காண்பிக்கிறேன் என்று சொல்லி, அந்தத் தூதன் பரிசுத்த நகரத்தைக் காட்டுகிறான். பரம எருசலேமை மணவாட்டி எனக் குறிப்பிடும்போது, அது மீட்கப்பட்டவர்களின் பண்புகளோடு அடையாளப்படுத்தப்பட்டு, ஆளுமைப் பெறுகிறது. இதனால், புதிய எருசலேம், சபையாம் மணவாட்டியின் நித்திய குடியிருப்பென அறிகிறோம். பூர்வகாலமுதல் உள்ள பரிசுத்தவான்கள், நகரத்தின் குடிகளாக, மணவாட்டிச் சபையின் அங்கங்களாயிருப்பார்கள்.

அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப்போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப்போலவும் இருந்தது (வெளி. 21:11) என்று யோவான் குறிப்பிடுகிறார். பரிசுத்த நகரமாகிய எருசலேமின் பிரகாசம், வெளியரங்கமான தேவனுடைய ஷெகினா மகிமையைப் பிரதிபலிக்கிறதாயிருக்கும். இரத்தினக்கல்லும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லும், சுயஒளியுடையதாக இல்லாமல், அவற்றில் படரும் ஒளியைப் பிரதிபலிப்பதைப்போன்று, எருசலேம் நகரமும் அதன் குடிகளும் தேவனுடைய மகிமையைப்பெற்று, ஒளிவீசிப் பிரகாசிப்பார்கள்.

புதியஎருசலேமில், மீட்கப்பட்ட நாமும் இயேசுவைத்தரிசிக்கவிருக்கிறோம். அப்பொழுது நாம் அவருக்கு ஒப்பாயிருப்போம். பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம் (1 யோவான 3:2) என எழுதப்பட்டிருக்கிறது.

வாசல்களில் கோத்திரம், அஸ்திபாரத்தில் அப்போஸ்தலர்!

அதற்குப் பெரிதும் உயரமுமான மதிலும், கிழக்கே மூன்று வாசல்கள், வடக்கே மூன்று வாசல்கள், தெற்கே மூன்று வாசல்கள், மேற்கே மூன்று வாசல்கள் ஆகப் பன்னிரண்டு வாசல்களும் இருந்தன. வாசல்களின் அருகே பன்னிரண்டு தூதர்களிருந்தார்கள்; அந்த வாசல்களின்மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரத்தாருடைய நாமங்களும் எழுதப்பட்டிருந்தன. நகரத்தின் மதிலுக்குப் பன்னிரண்டு அஸ்திபாரக் கற்களிருந்தன; அவைகள்மேல் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலரின் பன்னிரண்டு நாமங்களும் பதிந்திருந்தன (வெளி 21:12-14).

யோவான் பிரம்மாண்டமான பரிசுத்த நகரத்தையும், பன்னிரண்டு வாசல்களையுடைய பெரிதும் உயரமுமான மதிலையும், வாசல்களின் அருகே பன்னிரண்டு தூதர்களையும் கண்டார். நகர மதிலின் நான்கு பக்கங்கள் ஒவ்வொன்றிலும் மூன்று வாசல்களிருக்கும். தேவஜனமாகிய

இஸ்ரவேலரின் நாமங்கள் வாசல்களிலும், மீட்கப்பட்ட அப்போஸ்தலரின் நாமங்கள், மதிலின் அஸ்திபாரக் கற்களிலும் எழுதப்பட்டிருக்கும். நீர் பூர்வகாலத்தில் சம்பாதித்த உமது சபையையும், நீர் மீட்டுக்கொண்ட உமது சுதந்தரமான கோத்திரத்தையும், நீர் வாசமாயிருந்த சீயோன் பர்வதத்தையும் நினைத்தருளும் (சங்கீதம் 74:2) என்று எழுதப்பட்டிருக்கிறது.

அப்போஸ்தலரின் நற்செய்தி உபதேசங்கள், சபையின் அஸ்திபாரங்களாக இருப்பதை வெளிப்படுத்தி அவர்களைக் கனப்படுத்தும்படியாக, அவர்களின் நாமங்கள் எழுதப்பட்டிருப்பதைப்போன்று காணப்படுகிறது. இந்தப் பரிசுத்த நகரத்துக்கும், சபைக்கும், உபதேசங்களுக்கும் கிறிஸ்துவே மூலைக்கல்லாயிருக்கிறார். அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகளென்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார் (எபேசியர் 2:20) என பவுல் எழுதி வைத்திருக்கிறார்.

பரிசுத்த நகரத்தின் தெய்வீக அளவீடுகள்!

எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தைவிட்டு தேவனிடத்திலிருந்து இறங்கி வருகிறதை யோவானுக்குக் காண்பித்த தூதன், நகரத்தையும் அதின் வாசல்களையும் அதின் மதிலையும் அளக்கிறதற்கு ஒரு பொற்கோலைப் பிடித்திருந்தான். அவன் அந்தக் கோலினால் நகரத்தை அளந்தான்; அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது; அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தது. அதின் மதிலை அளந்தபோது, அது நூற்றுநாற்பத்துநான்கு முழமாயிருந்தது என்பதாக 21 ஆம் அதிகாரம் 15 முதல் 17 வசனங்களில் எழுதப்பட்டுள்ளது.

பரிசுத்த நகரத்தின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருக்கும். சமச்சீர் பரிமாணமான அதன் கன சதுர அளவு, பன்னீராயிரம் ஸ்தாதி ஆகும். அதன் நீளம் அகலம் உயரம் 3000 பர்லாங் (375 மைல் அல்லது 600 கிலோ மீட்டர்) ஆகும். நம்முடைய புரிந்துக்கொள்ளுதலுக்கு இது ஒரு மிகப்பெரிய அளவு என்பதே போதுமானதாக இருக்கும். பூலோகத்தில் நம்முடைய குடியிருப்பு பூமியைத் தழுவியே உள்ளது. பரிசுத்த நகரத்தின் நீளம் அகலம் போன்றே அதன் உயரமும் 600 கிலோமீட்டர் என்பதால், பரலோகத்தின் வாசஸ்தலங்கள், மூன்றாவது பரிமாணத்தில்,

ஆகாயமண்டலத்திலும் வியாபித்து நிலைக்கொண்டிருக்குமோ எனவும் எண்ணத்தோன்றுகிறது. நகரத்தின் மதிலின் அளவு இருநூற்று பதினாறு அடியாயிருக்கும்.

நித்தியராஜ்யத்தின் தன்மைகளும் விவரங்களும் இங்கு அதிகமாகக் குறிப்பிடப்படவில்லை. சொல்லப்பட்டிருக்கிற தகவல்களையே முழுமையாகப் புரிந்துகொள்ளமுடியாத நிலையில், கூடுதலான விளக்கங்கள் வீண் முயற்சியாக இருக்கும். இதனையே நம்முடைய கர்த்தரும், பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? (யோவான் 3:12) என்றார். நித்தியத்திற்கு அடுத்த விவரங்களையும், தேவனுடைய ராஜ்யத்திற்கும், ஆளுகைக்கும் உட்பட்ட ஆழ்ந்த சத்தியங்களையும் புரிந்துக் கொள்ளமுடியாத நிலை, இந்தக் காலக்கட்டத்தில் நம்முடைய இயலாமை ஆற்றாமையை வெளிப்படுத்துகிறதாயிருக்கிறது.

சகலவித இரத்தினங்களினால் அலங்கரிக்கப்பட்ட அஸ்திபாரங்கள், ஒரே முத்திலான வாசல்கள், நகரத்தின் அளவீடுகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்புகளின் வெளித்தோற்றத்தையே நம்மால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. இந்நிலையில், இதற்கும் மேலான பரிசுத்த நகரத்தின் உள்ளமைப்புகளையும் செயல்பாடுகளையும் அறிந்துகொள்ளுவது, நம்முடைய அறிவாற்றலுக்கு அப்பாற்பட்டதாகத் தோன்றுகிறது. இந்த மேன்மைகளை அறிந்தால்தான், நாம் நித்திய ராஜ்யத்தை அடையமுடியும் என்பதில்லை என அறிவோம். எனவே, இவற்றிற்கும் மேலான வசதிகளும் மேன்மைகளும் அங்கு ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கும் என்று விசுவாசித்துக் காத்திருப்பதே போதுமானதாயிருக்கும்.

தேவனுடைய ராஜ்யத்தின் சிறப்புகள் பிரதானமாக விளக்கப்பட்டுள்ள இந்தக் கடைசி அதிகாரங்களில், அவைகளுக்கிடையே வெளிப்படும் எச்சரிப்புகள், மிகவும் முக்கியமானவைகளாகத் தோன்றுகிறது. அந்த வார்த்தைகள் அனைத்தும் நம்மைத் தெளிவாக எச்சரிக்கிறதைக் காண்கிறோம். எனவே, தேவனுடைய ராஜ்யத்தின் மேன்மைகள், அதை நாடித்தேட உற்சாகப்படுத்துவதைக்காட்டிலும், வாய்ப்பை இழந்துவிட்டால் அடையவிருக்கும் நித்திய அக்கினியின் ஆக்கினை, தேவனை நோக்கிப் பார்த்து இரட்சிக்கப்பட ஊக்குவிக்கிறதாயிருக்கும்.

இரத்தினங்களினால் அலங்கரிக்கப்பட்ட அஸ்திபாரம்!

அதின் மதில் வச்சிரக்கல்லால் கட்டப்பட்டிருந்தது; நகரம் தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப்பொன்னாயிருந்தது. நகரத்து மதிலின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன, முதலாம் அஸ்திபாரம் வச்சிரக்கல், இரண்டாவது இந்திரநீலம், மூன்றாவது சந்திரகாந்தம், நான்காவது மரகதம், ஐந்தாவது கோமேதகம், ஆறாவது பதுமராகம், ஏழாவது சுவர்ணரத்தினம், எட்டாவது படிகப்பச்சை, ஒன்பதாவது புஷ்பராகம், பத்தாவது வைடூரியம், பதினோராவது சுநீரம், பன்னிரண்டாவது சுகந்தி இவைகளே. பன்னிரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன, ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது. நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்குபோலச் சுத்தப்பொன்னாயிருந்தது (வெளி. 21:18-21).

புதிய எருசலேமின் மதில், இரத்தினக்கல் என்று அறியப்பட்டிருக்கிற வச்சிரக்கல்லால் கட்டப்பட்டிருக்கும். அது கடினமும் உறுதியும் பிரகாசமுமான கல் ஆகும். நகரம் தெளிந்த பளிங்குக்கு ஒப்பான சுத்தப்பொன்னாயிருக்கும். மதில் தேவனுடைய மகிமையைப் பிரதிபலிக்கும். நகரம் தெளிவான அவருடைய மகிமையை ஊடுருவச்செய்து பொன்னிறமான ஒளியைப் பிரகாசிப்பிக்கும். பன்னிரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துக்களாயிருக்கும். இவைகள் செழிப்பையும் ஆடம்பரத்தையும் வெளிப்படுத்தாமல், தூய்மையையும் பரிசுத்தத்தையும் தேவனுடைய பிரசன்னத்தின் ராஜரீகத்தையும் குறிப்பதாகவிருக்கும்.

நகரத்து மதிலின் அஸ்திபாரங்கள் பன்னிரண்டுவிதமான இரத்தினங்களினால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். முதலாம் அஸ்திபாரம் வச்சிரக்கல்லில் துவங்கி, இந்திரநீலம், சந்திரகாந்தம், மரகதம், கோமேதகம், பதுமராகம், சுவர்ணரத்தினம், படிகப்பச்சை, புஷ்பராகம், வைடூரியம், சுநீரம், சுகந்தி வரையிலான பன்னிரண்டு வகையான மிகச்சிறந்த அரிய கற்கள் அதின் அஸ்திபாரங்களில் பதிக்கப்பட்டிருக்கும். இந்த இரத்தினக்கற்களினாலான தளவரிசை, பரிசுத்த நகரத்துக்கு வர்ணமயமான மெருகூட்டி, தேவனுடைய மேன்மையைப் பிரதிபலிக்கும்.

நியாயப்பிரமாணத்தின் காலத்தில் பிரதான ஆசாரியன் மார்பில் அணியும் நியாயவிதி மார்ப்பதக்கத்தை விசித்திர வேலையாய்ச் செய்து,

அதிலே பன்னிரண்டு இரத்தினக் கற்களைப் பதிப்பதற்கு (யாத்திராகமம் 28:15-20) இது ஒத்திருக்கிறது. நிழலாட்டமாய்ச் செய்யப்பட்ட பழைய ஏற்பாட்டு குறியீடு, இங்கு புதியப் பொலிவைப்பெற்று நிஜமாகிறதைப்போன்றுள்ளது. கிறிஸ்துவே நம்முடைய பிரதான ஆசாரியர்; புதிய எருசலேம் அவரது மணவாட்டியாக, அவருடைய இருதயத்திற்கு ஏற்றதாக வெளிப்படவிருக்கிறது.

புதிய எருசலேமில் தேவனுடைய மகிமை!

யோவான் தரிசனங்களைப் பதிவுச் செய்வதில் சில வித்தியாசங்களை இங்குக் காண்கிறோம். பரிசுத்த நகரத்தில் தான் காணாத காரியங்களை அவர் இங்கு குறிப்பிடுகிறார். முன்னர் அவர் அங்கு, மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின எனக் குறிப்பிட்டிருந்தார். மேலும், தான் காணாத நான்கு காரியங்களை இங்கு அவர் குறிப்பிடுகிறார். முதலாவதாக, அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை; சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம் (வெளி. 21:22) என்கிறார். அவர்களுடைய மகிமையின் பிரகாசம் நகரத்தை நிரப்பும்; பரிசுத்த நகரம் முழுமையும் மகா பரிசுத்த ஸ்தலமாக நித்திய ராஜ்யத்தில் அறியப்பட்டிருக்கும்.

அடுத்ததாக, நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும், சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை, தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு (வெளி. 21:23) என்கிறார். நகரத்திற்குச் சதாகாலங்களிலும் முழுமையாக வெளிச்சங்கொடுக்க தேவனுடைய மகிமையே போதுமானதாயிருக்கும். நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்ற ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்காக இருப்பார். இதனால் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை.

இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள்.பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள் (வெளி. 21:24). மறுபடியுமாக இந்த வசனம், இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் மட்டுமே, அந்த நகரத்திற்குள் பிரவேசிப்பார்கள்;

அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள் என்பதை உறுதிச் செய்கிறது. இங்குப் பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள் என்பதும் 26ஆம் வசனத்தில், உலகத்தாருடைய மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள் என்பதும், மற்றதொரு பரிமாணத்தை வெளிப்படுத்துகிறது.

பூமியின் ராஜாக்கள், புறம்பேயிருந்து நகரத்திற்குள், உலகத்தாருடைய மகிமையையும், கனத்தையும், தங்களுடையதையும் கொண்டுவருவார்கள் என்கிறதினால், அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் என்பதாகவும், புதிய எருசலேமுக்கு புறம்பாகவும், புதிய பூமியிலே, மீட்கப்பட்ட ராஜாக்களும் குடிகளும் இருப்பார்கள் என்பதாகவும் அறிகிறோம். யார் நகரத்திற்குள் வாசமாயிருப்பார்கள் என்றும், யார் புதிய பூமியின் மற்றப் பகுதிகளில் இருப்பார்கள் எனவும் வேதாகமத்தில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை. எனினும், இயேசுகிறிஸ்து தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட சபை, அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தது உண்டானால், அவர்கள் அவரோடேகூடப் பரிசுத்த நகரத்தில் ஆளுகையும் செய்வார்கள் என அறியலாம்.

மூன்றாவதாக, அங்கே இராக்காலம் இராது. அங்கே இராக்காலம் இல்லாதபடியால், அதின் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதே இல்லை (வெளி. 21:25). இருளின் அதிகாரமும், அந்தகாரத்தின் கிரியைகளும் அங்கு இராதபடியாலும், இரட்சிக்கப்பட்டவர்கள் மட்டுமே அந்நாட்களில் புதிய பூமியை சுதந்தரிக்கப்போவதினாலும், அதின் வாசல்கள் எப்பொழுதுமே அடைக்கப்படாதிருக்கும்.

நான்காவதாக, தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை, ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள் (வெளி. 21:27) என்று மறுபடியும் குறிப்பிடுகிறார். புதிய எருசலேம், கறையற்றதும், தூய்மையானதும், பரிசுத்தமானதுமான நகரமாயிருப்பதினால், ஜீவபுஸ்தகத்தில் தங்கள் பெயர்கள் எழுதப்பட்டவர்கள் மட்டுமே அதில் பிரவேசிப்பார்கள்.

கால வரிசைப்படி பார்ப்போமேயானால், இங்கு இந்த வசனம் இடம்பெற்றுள்ளது, ஒரு கேள்வியை எழுப்ப வாய்ப்பு உண்டு. தீமையும்

தீங்கும் நியாயந்தீர்க்கப்பட்டு அக்கினிக்கடலில் தள்ளப்பட்டப் பின்னர், ஏன் இந்த வார்த்தைகள் இங்கு மறுபடியும் எழுதப்பட்டிருக்கிறது? இவை, இந்த வசனங்களை இந்நாட்களில் வாசிப்பவர்கள் எச்சரிக்கப்பட்டு, உணர்வடைந்து வரவிருக்கும் நிச்சயமான பேரழிவிற்குத் தப்பிப் பிழைக்கவே எழுதப்பட்டுள்ளது. இதைப்போன்ற எச்சரிப்புகள் தொடரும் 22ஆம் அதிகாரம் 11 முதல் 15ஆம் வசனங்களிலும் இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.

ஜீவத்தண்ணீர் நதிக் கரையில் ஜீவவிருட்சம்!

வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி அதிகாரத்தின் முதல் ஐந்து வசனங்களிலும் தொடர்ந்து புதிய எருசலேமின் மேன்மைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இவை எழுதப்பட்ட காலத்தில், வேதாகமம், தனித்தனிப் புஸ்தகங்களாக, அதிகாரங்கள் ஏதும் பிரிக்கப்படாமல் இருந்தது. எளிதாக அறிந்துகொள்ளும் வகையில், பிற்காலத்தில் அவை அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டன. அந்தப்படி, இந்த ஐந்து வசனங்களை பரிசுத்த நகரத்தைப் பற்றியக் கடைத்தொகை எனவும், முந்தைய 21ஆம் அதிகாரத்தின் தொடர்ச்சியாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதியும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சமும் புத்துணர்ச்சியூட்டி, செழிப்பையும், நித்திய ஜீவனையும் அருளவிருக்கிறது. இவை புதிய எருசலேமின் ஆரோக்கியமான சூழ்நிலையைப் பறைச்சாற்றும். பின்பு, பளிங்கைப்போல தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான் (வெளி. 22:1). நித்திய ராஜ்யத்தில் தேவனுடைய சிங்காசனமே எல்லாவற்றிற்கும் நிறைவும் காரணமும், ஆதாரமும் பூரணமுமாயிருக்கும். வருங்கால வெளிப்பாட்டின் நிறைவு காட்சிகளில் யோவான் காணும், ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி, தேவனிடத்திலிருந்து வெளிப்படுகின்ற நித்திய வாழ்வை அருளும் ஆதாரமாயிருக்கும். இது தேவனுடைய சிங்காசனத்திலிருந்து நித்திய ஜீவனை அருளி பரலோகவாசிகளைப் போஷிக்கும். சமாரிய கிணற்றினருகே இயேசு நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும்

தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்தியஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார் (யோவான் 4:14). இயேசு தரும் ஜீவத்தண்ணீர் ஜீவனைத் தர வல்லமையுள்ளதாக இருக்கிறது. புதிய எருசலேமில் காணப்படும் தண்ணீருங்கூட பளிங்கைப்போல தெளிவும் சுத்தமாகவும் காணப்படும்.

ஜீவவிருட்சம் மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள் (வெளி. 22:2) என்று எழுதப்பட்டிருக்கிறது. பரதீசு என அறியப்பட்டிருக்கிற ஏதேன் தோட்டத்தில் இழந்த மேன்மைகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுவதைப்போன்று இது இருக்கும். ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் (வெளி. 2:7) என வாக்களிக்கப்பட்டிருக்கும் ஆசீர்வாத நிலையைப்போன்றும் இது இருக்கும்.

அடுத்த இரு வசனங்களும், பரிசுத்த நகரத்தின் குடிகள் பெறவிருக்கும் நிறைவான ஆசீர்வாதங்களை விவரிக்கிறது. இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும் (வெளி. 22:3). சாபங்கள் பாவத்தினால் உண்டாகி, தேவனுடைய பிள்ளைகளைச் சீர்ப்படுத்தும்படியான சிட்சையாக வெளிப்படுகிறது. ஏதேன் தோட்டத்தின் சாபங்கள் உட்பட அனைத்தும், நித்தியத்திலே இல்லாமல்போகும். இயேசுகிறிஸ்து சிலுவையில் நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை மீட்டுக்கொண்டார் (கலாத்தியர் 3:13). பாவமில்லாத சூழலில், சாபமிராது; தேவனுடைய சிட்சையும் தேவைப்படாது. இப்படியாக, தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது (ரோமர் 8:19). புதிய சிருஷ்டிப்பில், இதுவே மீட்கப்பட்டோரின் அனுபவமாகவிருக்கும்.

அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமூகத்தைத் தரிசிப்பார்கள். அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும் (வெளி. 22:4). மீட்கப்பட்ட ஊழியக்காரர் கர்த்தரை, அவருடைய சமுகத்தில் சேவிக்கும் சிலாக்கியத்தைப் பெறுவார்கள்; கர்த்தரை முகமுகமாகத் தரிசிப்பார்கள். அவர்கள் கர்த்தருடையவர்கள் என்பதை விளங்கப்பண்ணும்படியாக, அவருடைய நாமம் அவர்களுடைய

நெற்றிகளில் இருக்கும். இந்நாட்களில் நாம் மீட்கப்படும் நாளுக்கென முத்திரையாகப் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறோம் (எபேசியர் 4:30). நித்தியத்தில் நெற்றிகளில் பெறவிருக்கும் அவருடைய நாமம், அனைவரும் காணும்படியாக இருக்கும்.

அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை, தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள் (வெளி 22:5) என்கிற வார்த்தைகள் மறுபடியும் எழுதப்பட்டு அதன் நிச்சயத்தை உறுதிச்செய்கிறது. உன்னதமான ஆசீர்வாதநிலை, இந்த வேதப்பகுதியில் தொகுக்கப்பட்டு, ஜீவத்தண்ணீர், ஜீவவிருட்சம், தேவபிரசன்னம், தேவனுடைய நாமத்தின் முத்திரை என்பதாக, தேவனுடைய பிரகாசத்தில் நித்திய ஆளுகையில் நிறைவுபெறுகிறது.

உண்மையும் சத்தியமுமான வசனங்கள்!

வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில், அது தனித்தனிப் புஸ்தகங்களாக, அதிகாரங்கள் ஏதும் பிரிக்கப்படாமல் இருந்ததாக அறிந்தோம். பிற்காலத்தில் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டுப் புஸ்தகங்கள் தொகுக்கப்பட்டு, முழுமையான வேதாகமம் வெளியிடப்பட்டது. அந்த வகையில், 22ஆம் அதிகாரத்தின் 6 முதல் 21 வசனங்கள், இந்த தரிசனப் புஸ்தகத்தின் நோக்கம் நிறைவுபெறவிருப்பதைத் தொகுத்தளிக்கும் முடிவுரையாக அமைந்துள்ளது. வெளிப்படுத்தப்பட்ட இந்த சத்தியமும் உண்மையுமுள்ள வசனங்களின் நம்பகத்தன்மையை மேலும் உறுதிப்படுத்த, ஏழு சாட்சிகள் இந்த நிறைவுபகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

முதலாவதாக, தம்முடைய தூதன் மூலமாக வெளிப்பட்ட, கர்த்தராகிய தேவனானவரின் சாட்சி இடம்பெற்றுள்ளது. பின்பு, அவர் என்னை நோக்கி: இந்த வசனங்கள் உண்மையும் சத்தியமுமானவைகள். சீக்கிரமாய்ச் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவனானவர் தம்முடைய தூதனை அனுப்பினார் (வெளி. 22:6) என்றார்.

வசனங்கள் என்பவை இங்கு, இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற அனைத்துத் தரிசனங்களையும் குறிக்கிறது. முன்னுரையாக, சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்தது (வெளி. 1:1) என்று எழுதப்பட்டுள்ள வார்த்தையின் நிறைவேறுதல் இங்கு உறுதிச்செய்யப்படுகிறது.

இரண்டாவதாக, திவ்ய வாசகனாகிய யோவான், தன்னுடைய வாக்குமூலமாகப் பதிவுசெய்த வார்த்தைகள் இங்கு இடம்பெற்றுள்ளன. யோவானாகிய நானே இவைகளைக் கண்டும் கேட்டும் இருந்தேன் (வெளி. 22:8) என்று அறிக்கையிடுகிறார். முதலாம் அதிகாரத்தில், நீ கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குப் பின்பு சம்பவிப்பவைகளையும் எழுது (வெளி. 1:19) என்ற கட்டளையைப்பெற்ற யோவான், தான் கண்டு கேட்டவைகளை எல்லாம் தெரியப்படுத்தினப்பின், அதைக்குறித்த சாட்சியையும் எழுதிவைத்திருக்கிறார்.

மூன்றாவதாக, இவைகளை யோவானுக்கு அறிவித்த தேவனுடைய தூதனானவரின் சாட்சி எழுதப்பட்டிருக்கிறது. கடைசிக்கால நிகழ்வுகளிலே, ஏழு கலசங்களையுடைய தூதரில் ஒருவன், பாபிலோனுக்கு வரவிருக்கிற ஆக்கினையை யோவானுக்கு காண்பிக்கவிருக்கிறான் (வெளி. 17:1). ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை யோவானுக்கு காண்பிக்கவிருப்பவனும் அந்த ஏழுதூதரில் ஒருவன் (வெளி. 21:9) ஆவான். இங்குத் தீர்க்கதரிசன வசனங்களை முத்திரைபோடவேண்டாம் (வெளி. 22:10) எனச் சொல்பவனும், அவ்வேழு தூதரில் ஒருவன் என அறியலாம். கடைசிக்காலங்களில், நித்திய பிரவேசத்திற்கான சம்பவங்களில் பங்கேற்கும் இந்தத் தூதனின் சாட்சியும், அந்த வார்த்தைகளை உறுதிச்செய்கிறது. முன்னறிவிக்கப்பட்ட வசனங்களை ஆமோதிப்பவர்போன்று அவர், இந்தப் புஸ்தகத்திலுள்ள, தீர்க்கதரிசன வசனங்களை முத்திரைபோட வேண்டாம்; காலம் சமீபமாயிருக்கிறது என்கிறார்.

நான்காவதாக, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன் (வெளி. 22:13) என்றும்; சபைகளில் இவைகளை உங்களுக்குச்சாட்சியாக அறிவிக்கும்படிக்கு இயேசுவாகிய நான் என் தூதனை

அனுப்பினேன் (வெளி. 22:16) என்றும் சொல்லியிருக்கிறார். யோவான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல விழுந்தார். அப்பொழுது கர்த்தர்: நான் முந்தினவரும் பிந்தினவருமாயிருமாயிருக்கிறேன் என தம்முடைய தன்மைகளை வெளிப்படுத்தி முன்னர் (வெளி. 1:7-19) அருளின வாக்கை நிறைவுசெய்வதைப் போல இது அமைந்துள்ளது.

ஐந்து, ஆறு மற்றும் ஏழாவது சாட்சிகள், ஆவியும், மணவாட்டியும், இந்த வசனங்களைக் கேட்கிறவனும், என்பதாகக் குறிப்பிடப்படுகிறது. ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும், வா என்பானாக, தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன் (வெளி. 22:17) என்று எழுதப்பட்டிருக்கிறது. வெளிப்படுத்தின விசேஷத்தின் நோக்கம் நிறைவுப்பெறுவது இங்குச் சாட்சியாக அறிவிக்கப்படுகிறது. தொடர்ந்து நற்செய்திக்குச் செவிகொடுக்க அழைப்பும் கொடுக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியானவரும், மணவாட்டியாம் மீட்கப்பட்ட தேவஜனமும், தாகமாயிருக்கிறவன் வரக்கடவன் என்பார்களாம். வசனங்களைக் கேட்கிறவர்களும், விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன் என இந்த அழைப்பை எதிரொலிக்க ஆலோசனைப்பெறுகிறார்கள்.

விருப்பமுள்ளவனுக்கு இலவசமாக ஜீவத்தண்ணீர்!

இந்தத் தரிசனங்கள், சத்தியமும் உண்மையுமுள்ள வசனங்கள் என்பதாக இந்த நிறைவுப்பகுதி உறுதிப்படுத்துகிறது எனப் பார்த்தோம். எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் சித்தமுள்ளவராக, பிதாவாகிய தேவன், ஏற்கனவே சொன்ன எச்சரிப்புகளை மறுபடியும் இங்கு ஞாபகப்படுத்தி, அழைப்பையும் புதுப்பிக்கிறார். ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தமல்ல, என்கிற வார்த்தையில் வெளிப்படும் பிதாவாகிய தேவனின் அன்பு, வேதாகமத்தின் இந்தக் கடைசிப்பக்கத்திலும், அவருடைய ஏக்கமும் வேட்கையுமாக வெளிப்படுகிறது. தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன் என்கிறார்.

வேதாகமத்தின் இந்தக் கடைசி சில வசனங்களில், தேவனுடைய அளவற்ற அன்பு நினைப்பூட்டப்படுகிறது. இயேசுகிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையின் எச்சரிப்புகள், ஆவிக்குரிய தொழுகையின் நெறிமுறைகள், நித்திய ராஜ்யத்திற்குப் புறம்பே இருப்பவர்களின் பட்டியல், இந்தத் தரிசன புஸ்தகத்தின் பதிப்புரிமைப்போன்ற விவரங்கள் யாவும் இங்குத் தொகுக்கப்பட்டுள்ளன. இந்தத் தரிசனங்களைப் பதிவு செய்த யோவானின் அழைப்போடும், வாழ்த்துதலோடும் இந்த அத்தியாயம் நிறைவுபெறுகிறது.

இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது (வெளி. 1:3) என்கிற வாக்குத்தத்தத்தின் மறுபதிப்பாக நிறைவில் இங்கு, வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும் நீக்கப்பட்டு, இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் (வெளி. 22:7) என்கிறார். மேலும், ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் (22:14); இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது (வெளி. 22:12) என்கிற வசனங்கள், இயேசுகிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையை மறுபடியும் தெரிவித்து எச்சரிக்கிறது. வேதாகமத்தின் நிறைவான வாக்குத்தத்தமாக இதையே கர்த்தர், மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் (வெளி. 22:20) என வெளிப்படுத்துகிறார்.

ஆவிக்குரிய தொழுகையின் நெறிமுறைகளாக, தேவனையேத் தொழுதுக்கொள்ள மறுபடியுமாக இங்கு எச்சரிப்பு விடுவிக்கப்படுகிறது. இவைகளை யோவான் கேட்டுக் கண்டபோது, இவைகளை அவருக்குக் காண்பித்த தூதனை வணங்கும்படி அவன் பாதத்தில் விழுந்தார். இதனால் பதறிப்போன தூதன், யோவானை நோக்கி: நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கதரிசிகளோடும், இந்தப் புஸ்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்களோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள் என்றான் (வெளி. 22:9). முன்னர், ஆட்டுக்குட்டியானவரின் கலியாணத்தை விவரிக்கும் தூதன் பாதத்திலும் யோவான் விழுந்தார் (வெளி. 19:10). இதனிமித்தம்,

இயேசுவைப்பற்றின சாட்சி, யார் மூலமாக வெளிப்பட்டாலும், மகிமைக்கும், துதிக்கும், ஸ்தோத்திரத்திற்கும் பாத்திரமானவர் கர்த்தர் ஒருவரே என மறுபடியும் அறிவிக்கப்பட்டு உறுதிச்செய்யப்படுகிறது.

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருந்து, நித்திய ஜீவனை அடைய, ராஜ்யத்திற்குப் புறம்பே இருப்பவர்களின் பட்டியல் மீண்டும் இங்கு விளம்பரப்படுத்தப்படுகிறது. நாய்களும், சூனியக்காரரும், விபச்சாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள் (வெளி. 22:15) என்றும், அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் (வெளி. 22:11) என்றும் எழுதப்பட்டுள்ளது.

இந்தத் தரிசன புஸ்தகத்தின் பதிப்புரிமைப்போன்ற விவரங்கள் மிகத்துல்லியமாக இங்கு இணைக்கப்பட்டுள்ளன. இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும் இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார் (வெளி. 22:18,19) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்தத் தரிசனத் தொகுப்பு எல்லா நிலையிலும் ஒரு முழுமையான தேவனின் படைப்பு என்பதை, இந்த வார்த்தைகள் வெளிப்படுத்துகிறது. தேவன் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார். அல்லேலூயா!

கர்த்தராகிய இயேசுவே வாரும்!

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நிறைவு வாக்குத்தத்தத்தோடும், இந்தத் தரிசனங்களைப் பதிவுச் செய்த யோவானின் மறுமொழியோடும், வாழ்த்துதலோடும் இந்த அத்தியாயம் நிறைவுப்பெறுகிறது. இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய்

வருகிறேன் என்கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென் (வெளி. 22:20-21) என்று எழுதப்பட்டிருக்கிறது.

வேதாகமத்தில், இயேசுகிறிஸ்துவின் கடைசி வார்த்தைகளாக பதிவுசெய்யப்பட்டவைகள், மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்பவைகளாகும். அதற்கு மறுமொழியாக, தரிசனங்களைப் பெற்ற யோவான், ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும், என்கிறார். ஆமென் என்கிற கிரேக்க சொல்லுக்கு, அப்படியே ஆகக்கடவது என்பது அர்த்தமாகும். இதுவே வேதாகமத்தின் கடைசி விண்ணப்பமாகும்.

மாரநா-தா என்கிற அரமேக்கிய சொல்லுக்குக் கர்த்தர் வருகிறார் (1 கொரிந்தியர் 16:22) என்று அர்த்தமாம். கர்த்தராகிய இயேசுவே, வாரும், என்கிற விண்ணப்பத்தை மாரநா-தா என்கிற சொல்லோடு இணைத்து, வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்போர், உபயோகிக்கிறார்கள். இந்தக் கால வழக்கில், மாரநா-தா என்கிற வார்த்தை, சடிதியான எழுச்சியின் வெளிப்பாடாகவும், உள்ளான எதிர்பார்ப்பின் ஆரவாரம் போன்றும், நிறைவான வெற்றியின் ஆர்ப்பரிப்பாகவும், பிரயோகிக்கப்படுகிறது. மாரநா-தா; கர்த்தராகிய இயேசுவே, வாரும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக
உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்வார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூட இருப்பதாக. ஆமென்.
(1 தெசலோனிக்கேயர் 5:23,24,28).

15. நினையாத நாழிகையில் இயேசுகிறிஸ்து!

வாசற்படியிலே நின்று தட்டும் இயேசுகிறிஸ்து!

நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து நம்மைப்போலொத்த மனிதராக இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில், தம்முடைய சீஷருடனே எருசலேம் தேவாலயத்திற்கு எதிரான ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருந்தார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்களில் பேதுருவும் யாக்கோபும் யோவானும் அந்திரேயாவும், அப்பொழுது தனித்துவந்து: உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பரலோகராஜ்யத்தைக்குறித்து உவமைகள் மூலமாகவும், தம்முடைய வருகையைக்குறித்து விளக்கமாகவும் சொன்னார்.

உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் ஆயத்தத்துடன் விழித்திருங்கள் என்று தம்முடைய சீஷர்களுக்கு இயேசு போதித்தார். இதோ, சீக்கிரமாய் வருகிறேன் என்கிற இயேசு, இந்தக் கடைசி நாட்களில், வாசற்படியிலே நின்று தட்டுகிறார். இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு விழிப்புடன் ஆயத்தமாயிருக்கும் பரிசுத்தவான்களின் கூட்டமைப்பாகிய சபையை, உலகத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைக்காலத்திற்குத் தப்பும்படி காப்பேன் என்று அவர் வாக்கருளியிருக்கிறார்.

இம்மட்டும் நாம் தியானித்த இந்தத் தரிசனங்கள், நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவினுடைய நிச்சயமான வருகையையும், நியாயத்தீர்ப்புகளையும் வெளிப்படுத்தி, உறுதிச்செய்கிறது. மேலும், ஊழியக்காரரும், சபைகளும், விசுவாசிகளும் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, மாசில்லாத சுத்தமான பக்தியுள்ளவர்களாய், தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருக்க ஊக்குவிக்கிறது. ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள் (2 பேதுரு 3:14) என்று எழுதப்பட்டிருக்கிறது.

மீட்கப்பட்ட பரிசுத்தவான்களின் சபை, மறுரூபமடைந்து மேகங்கள்மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருக்க நியமிக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம். மீட்கப்பட்டவர்களின் இந்த எண்ணிக்கை நிறைவடைந்து இரட்சிப்பின் நற்பலனை அடைய, பின்மாரியைப்போன்று பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படவிருக்கும் கடைசிக்காலங்களில் நாம் இருக்கிறோம்.

ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்கிற எச்சரிப்பின்படி, கர்த்தர் தந்தருளின ஆலோசனைகளையும், தெளிவான எச்சரிப்புகளையும் தியானித்த நாம், அவைகளை அறிந்துணர்ந்து துரிதமாய்ச் செயல்பட அழைக்கப்படுகிறோம். மேலும், வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கும் தரிசன வார்த்தைகள், நம்மை சுற்றிலுமெங்கும் நடந்தேறுகிறதைக் காணும்போது தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறிகிறோம். அல்லேலூயா!

நீங்களும் ஆயத்தமாயிருங்கள்!

வேதாகமத்தில் வெளிப்படுத்தின விசேஷத்தில் தொகுக்கப்பட்டுள்ள இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைச் சார்ந்த நிகழ்வுகளைத் தியானித்தோம். இவற்றைக் குறித்ததான இயேசுகிறிஸ்துவின் உபதேசங்கள், மத்தேயு 24 மற்றும் 25ஆம் அதிகாரங்களிலும், மாற்கு 13ஆம் அதிகாரத்திலும், தொகுத்து எழுதப்பட்டிருக்கிறது. தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்

வஞ்சிக்கப்படாமல், இயேசுகிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கி ஆயத்தத்துடன் விழித்திருக்க வேண்டும் என்பது அவர் இந்த வசனங்களில், நமக்கு வெளிப்படுத்தும் எச்சரிப்பின் செய்தியாகும்.

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு உபதேசிக்கையில்: அவர்களுக்குப் பிரதியுத்தரமாக ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள் (மத்தேயு 24:4,24). உங்கள் ஆண்டவர் இன்ன நாழிகையிலே வருவாரென்று நீங்கள் அறியாதிருக்கிறபடியினால் விழித்திருங்கள். நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத்தேயு 24:42,44) என்றார்.

நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்கிற வார்த்தைகள், அந்நாட்களில் சீஷர்களுக்கும், இந்நாட்களில் தெரிந்துகொள்ளப்பட்ட ஊழியர்களுக்கும், சபைத்தலைவர்களுக்கும், விசுவாசிகளுக்கும், இதை வாசிக்கிற நமக்கும் எச்சரிப்பாக எழுதப்பட்டிருக்கிறது. இந்த எச்சரிப்பு சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வெளிப்பட்டது. இயேசுகிறிஸ்துவின் வருகை தாமதிப்பதினால், இந்த எச்சரிப்பின் உண்மையை உணராது நிர்விசாரமாகச் செயல்படுவோருக்குப் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுப் பேதுரு அப்போஸ்தலனும் இதை எழுதிவைத்திருப்பதை வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

முதலாவது நீங்கள் அறியவேண்டியது என்னவெனில்: கடைசிநாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுயஇச்சைகளின்படியே நடந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் (2 பேதுரு 3:3,4,9) என்று எழுதப்பட்டிருக்கிறது.

மணவாளன் வருகிறார்!

இயேசுகிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாக அவரை ஏற்றுக்கொண்டு தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, இயேசுவின் திரு இரத்தத்தால் சுத்திகரிப்பையும் மீட்பையுமடைந்த தேவஜனத்தின் எண்ணம் ஏக்கம் எதிர்பார்ப்புகள் யாவும், நித்தியஜீவனை அடைகிறதைச் சார்ந்தே இருக்கின்றன. பரலோகராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு ஆயத்தத்துடன் விழித்திருக்கவேண்டியதன் அவசியத்தை இயேசுகிறிஸ்து ஒரு உவமையின் மூலம் விளக்கியிருக்கிறார்.

பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும் என்று இயேசு சொன்னார். அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்கள்; அவர்கள் தங்கள் தீவட்டிகளுடன் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள். புத்தியில்லாத ஐந்துபேர் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள், எண்ணெயையோ கூடக் கொண்டுபோகவில்லை. மணவாளன் வரத் தாமதித்தப்போது அவர்கள் பத்துபேரும் நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்.

நடுராத்திரியிலே, இதோ மணவாளன் வருகிறார்; அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று. புத்தியில்லாத ஐந்துபேரின் தீவட்டிகள் அணைந்துபோகிறதினால், விற்கிறவர்களிடத்தில் அவர்கள் எண்ணெய் வாங்கப்போனபோது, மணவாளன் வந்துவிட்டார். ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது. ஆகையால், மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள் (மத்தேயு 25:13) என்றார்.

நம்மில் அநேகர் ஆவலோடு எதிர்நோக்கி காத்திருக்கும் இயேசுகிறிஸ்துவின் வருகையுங்கூட இவ்விதமாகவே இருக்குமாம்.

மணவாளனாகிய இயேசுகிறிஸ்துவின் வருகை தாமதிக்கும்போது, அதைக்குறித்து நினையாது இருக்கும் நாட்களில், வேளையில், இயேசு வரவிருக்கிறார். ஆயத்தமாயிருக்கிறவர்கள் மட்டுமே அவரோடேகூட எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் முன்னுரைக்கப்பட்டு, பேதுரு அப்போஸ்தலனால் தெளிவுப்படுத்தப்பட்ட எச்சரிப்பை நாம் பெற்றிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் வருகையில் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய் நாம் சமாதானத்தோடே அவர் சன்னிதானத்தில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருப்போம்; ஆயத்தமாய் விழித்திருப்போம்.

காலங்களைக் கடந்து சீர்ப்படுத்தும் நிருபங்கள்!

யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில் இடம்பெற்றுள்ள கடிதங்கள், அந்நாட்களில் ரோமசாம்ராஜ்யத்தின் ஆசியப் பகுதியிலிருந்த ஏழு சபைகளுக்கு இயேசுகிறிஸ்துவினால் சொல்லப்பட்ட வார்த்தைகளின் தொகுப்பு என அறிந்திருக்கிறோம். இயேசுகிறிஸ்துவின் இந்த வார்த்தைகள், காலங்களைக் கடந்து, மீட்கப்பட்ட தேவஜனம் தங்களுடைய வாழ்வை இந்நாட்களிலும் இவ்வார்த்தைகளோடு ஒப்பிட்டுப்பார்த்து சீர்ப்படுத்திக்கொள்ள உதவுகிறது.

ஆதித்திருச்சபையின் நாட்கள் துவங்கி இயேசுகிறிஸ்துவின் வருகை வரையிலான காலம், கிருபையின் நாட்கள் என்றும், சபையின் காலம் என்றும் அறியப்பட்டிருக்கிறது. மற்றொரு கண்ணோட்டத்தில், இந்தச் சபையின் காலம், சபைச் சரித்திரத்தின் ஏழு காலக்கட்டங்களாக, ஏழு சபைகளின் தன்மைகளையும், ஆவிக்குரிய நிலைகளையும், அதே வரிசையில் ஒத்திருப்பதைக் காணமுடிகிறது.

இந்தப் பரிமாணத்தின் அடித்தளமாக, முதலாம் நூற்றாண்டில் பெந்தெகொஸ்தே நாளில் தோன்றிய, ஆதித்திருச்சபையின் ஆவிக்குரிய தன்மைகளும் கிரியைகளும் அமைந்துள்ளன. அக்காலத்தில், விசுவாசிகள்

அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம்பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார் (அப்போஸ்தலர் 2:42,46,47) என்று எழுதப்பட்டிருக்கிறது.

ஏழு சபைகளின் காலங்கள்!

ஆதித்திருச்சபையின் காலத்தைத் தொடர்ந்து கி.பி. 170ஆம் ஆண்டுவரையிலான நாட்களை, எபேசு சபையின் அன்பு தணிந்த காலமாக அறியலாம். இந்நாட்களில் ஆதி அப்போஸ்தலர் ஐக்கியமும் அந்நியோந்நியமும் அன்பும் சபையில் குறைவுபடத் துவங்கியது. அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு சபைக்கு எழுதும்போது; ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார் (எபேசியர் 5:14).

இதையடுத்து, பத்து ரோமப்பேரசர்களின் ஆட்சிக்காலங்களில், மூன்றாம் நூற்றாண்டின் இறுதிவரை, சபை நெருக்கங்களுக்குட்பட்டு ஒடுக்கப்பட்டது. கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள் பெரும்பாடுகளுக்குட்படுத்தப்பட்டார்கள். இந்த நாட்கள் (கி.பி. 170-312) துன்புறுத்தப்பட்ட சிமிர்னா சபையின் காலம் என்று சொல்லப்படுகிறது.

இதன் பின்னர், கான்ஸ்டன்டைன் என்கிற ரோமப்பேரரசர் (கி.பி. 306-337) கிறிஸ்தவத்தைத் தழுவி, கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுவதைத் தடுத்து நிறுத்தினார். அந்நாட்களில் ரோமசாம்ராஜ்யத்தில் கிறிஸ்தவம் முதன்மைப்படுத்தப்பட்டது. அந்தக் காலத்தில், ரோமசாம்ராஜ்யத்தின் பிறவழிபாட்டுமுறைகளும், பண்டிகை நாட்களும், சடங்காச்சாரங்களும், சம்பிரதாயங்களும் சபைக்குள் புகுந்து பெரிய தாக்கங்களை ஏற்படுத்தியது. இந்தக் காலம் (கி.பி. 312 - 606)

கிறிஸ்தவ வாழ்வு முறையின் நற்பண்புகளைக் கடைபிடிப்பதில் உறுதியற்ற (Doctrinally Compromising Church) பெர்கமு சபையின் காலம் என்று அறியப்பட்டிருக்கிறது.

கி.பி. 606 முதல் 1520 ஆண்டுவரையிலான நீண்ட காலத்தை, சபையின் இருண்ட காலம் எனவும், சாத்தானின் ஆழங்கள் (ஆயிரம் வருடங்கள்) என்றும் குறிப்பிடுகிறார்கள். இது ஒழுக்கநெறிகளைக் கடைபிடிப்பதில் உறுதியற்ற (Morally Compromising Church) தியத்தீரா சபையின் காலமாகும். சபையில் பாவம் பெருகி, சபை கள்ளப்போதகத்தைச் சகித்துக்கொண்டு, ஒழுக்கக்கேட்டிற்கும் விக்கிரகாராதனைக்கும் வழிவிலகிச் சென்றது. தியத்தீரா சபைக்காலத்தில், மதத்தலைவர்கள், தங்களை மிகவும் உயர்த்திக்கொண்டு, அரசர்களுக்கும் அரசாங்கங்களுக்கும் மேலாக ஆளுகை செலுத்தினர். இந்தக் காலத்தின் பிந்தைய நாட்களில், சபைகளில் சீர்திருத்தங்கள் வெளிப்படத் துவங்கின.

இதனைத்தொடரும் கி.பி. 1520 முதல் 1750 ஆண்டுவரையிலான நாட்கள் சர்தை சபையின் காலம் என்று அழைக்கப்படுகிறது. சர்தை, செத்த சபை எனப் பெயர் பெற்றிருந்தாலும், தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையில் இருந்தார்கள். வேதாகமத்தை அடித்தளமாகக்கொண்டு, விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்கிற வாக்கைச் சார்ந்து செயல்பட்ட மார்ட்டின் லூத்தர் போன்ற சீர்திருத்தவாதிகள் தோன்றி சபையில் இருளின் கிரியைகளுக்கு எதிர்த்து நின்று, சபை சரித்திரத்தில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தினார்கள். இந்நாட்கள் சீர்திருத்த காலம் என அழைக்கப்படுகிறது.

கி.பி. 1750 முதல் 1906 வரையிலான நாட்கள், சபையின் மறுமலர்ச்சியின் காலம் என்றும், உண்மையுள்ள பிலதெல்பியா சபையின் காலம் எனவும் அறியப்பட்டிருக்கிறது. மெதடிஸ்ட் நற்செய்தி இயக்கத்தின்முலம் ஜான் வெஸ்லி போன்றோர்கள் சபைகளில் மறுமலர்ச்சி உண்டாக்கினார்கள். பின்னர், பெந்தெகொஸ்தே இயக்கத்தின் எழுப்புதல் அக்கினியும், இந்தக் காலக்கட்டத்தில் சபைகளைப் பற்றிப்பிடித்தது.

கி.பி. 1906ஆம் ஆண்டிலிருந்து இயேசுகிறிஸ்துவின் வருகை வரையிலான காலம், பெருமையும் அகங்காரமும் கொண்ட லவோதிக்கேயா சபையின் காலம் எனக் குறிப்பிடப்படுகிறது. இந்தச்

சபையின் ஆவிக்குரிய நிலை, பரவலாக நாம் வாழும் இக்காலச் சபைகளின் தன்மைகளோடும் கிரியைகளோடும் பொருந்துவதாக வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

கர்த்தரின் வருகை அதிசீக்கிரமாய் இருக்கிறது!

சபையின் காலங்களைப்பற்றிய இந்த நீண்ட விளக்கங்களின் பிரதான நோக்கம், முதலாவதாக நாம் சபைகளின் காலத்தின் கடைசியில் இருக்கிறோம் என்பதை உணரச்செய்வதாகும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அதிசீக்கிரமாய் வரவிருக்கிறார். அடுத்து, சபைகளுக்கான இந்த நிருபங்களில், இருண்ட காலம் என்று அறியப்பட்டிருக்கிற தியத்தீரா சபைக் காலத்தையடுத்துள்ள, கடைசி மூன்று சபைகளுக்கான நிருபங்களிலும், இயேசுகிறிஸ்து தம்முடைய வருகையைப்பற்றித் தெளிவாக எச்சரிக்கிறதைப் பார்க்கிறோம்.

முதலாவதாக, சர்தை சபைக்கு எழுதும்போது: நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய் (வெளி. 3:3) என்கிறார். அடுத்து, பிலதெல்பியா சபைக்கு எழுதும்போது: இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு (வெளி. 3:11) என்று எச்சரிக்கிறார். நிறைவாக, லவோதிக்கேயா சபைக்கு எழுதும்போது: இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன் (வெளி. 3:20) என்கிறார்.

காலம் சமீபித்து வருகையில், இந்த வார்த்தைகள், ஒன்றுக்கொன்று முந்தின வார்த்தைகளைக் காட்டிலும், கர்த்தரின் வருகை சீக்கிரமாய் இருப்பதை அதிக தெளிவாகவும் வலுவாகவும் வெளிப்படுத்தித் தீவிரமாய்ச் செயல்பட எச்சரிக்கிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இந்தக் கடைசி நாட்கள், பிலதெல்பியா சபையின் ஆவிக்குரிய தன்மைகள் குறைவுபட்டு, லவோதிக்கேயா சபையின் தன்மைகள் பரவலாகத்தோன்றி வெளிப்படும்

நாட்களாக இருக்கிறது. நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன் என்கிற எச்சரிப்பு முன்னர் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தின் நாட்களில் வெளிப்பட்டது (மத்தேயு 24:42,43). பின்னர் இதுவே, சர்தை சபைக்கு எச்சரிப்பாகவும், சபை சரித்திரத்தில் சீர்திருத்த சபை காலத்தில், அதன் எதிரொலியாகவும் வெளிப்பட்டது.

இதோ, சீக்கிரமாய் வருகிறேன் என்கிற வார்த்தைகள், பிலதெல்பியா சபையை உற்சாகப்படுத்தித் தனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிருக்க எழுதப்பட்டது. இதுவே, சபை சரித்திரத்தில் மறுமலர்ச்சி சபை காலத்தின் எதிர்பார்ப்பாகவும் இருந்தது. இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் என்கிற வார்த்தைகள், லவோதிக்கேயா சபைக்கு கடைசி எச்சரிப்பின் சத்தமாகவும், சபை சரித்திரத்தின் கடைசிக்காலக்கட்டத்தில் வாழும் நமக்கு, மனந்திரும்பி பரிசுத்தமாய் ஜீவிக்க தந்தருளப்படும் இறுதி வாய்ப்பாகவும், எச்சரிப்பாகவும் இருக்கிறது.

கர்த்தரின் வருகை மிகவும் சமீபமாயிருக்கிறது. இதோ, நியாயாதிபதி இயேசு வாசற்படியில் நிற்கிறார்; நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். இதிலே ஞானம் விளங்கும்; புத்தியுடையவன் ஆராய்ந்தறியக்கடவன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று எழுதப்பட்டிருக்கிறது.

சோதனை காலத்திற்குத் தப்புவிப்பார்!

வாசற்படியிலே நின்று தட்டும் இயேசுகிறிஸ்துவின் சத்தம் கேட்டு, வாழ்வைச் சீர்ப்படுத்தி இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாயிருப்பவர்களைக் கர்த்தர் பூமியெங்கும் வரவிருக்கும் சோதனைக்காலத்திற்குத் தப்புவித்துக் காப்பார். என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக் கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைக்காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன் (வெளி. 3:10) என்று கர்த்தர் பிலதெல்பியா சபைக்கு வாக்கருளியிருக்கிறார்.

சோதனைக்காலம் என்பது கர்த்தர் எச்சரிக்கும் மிகுந்த உபத்திரவத்தின் காலமாகும். ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும் (மத்தேயு 24:21) என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார்.

இந்த உபத்திரவத்தின் நாட்களுக்கு முன்னர், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாயிருக்கும் பரிசுத்தவான்களின் கூட்டமைப்பாகிய சபை மறுரூபமாக்கப்பட்டு, எப்பொழுதும் இயேசுவோடிருக்கும்படியாக எடுத்துக்கொள்ளப்படும். கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தோர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம் (1 தெசலோனிக்கேயர் 4:16,17). அல்லேலூயா!

இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம் (1 கொரிந்தியர் 15:51) என்றும் அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியிருக்கிறார்.

சபை மறுரூபமாக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்படும்போது, சபையின் காலம் முடிவுக்கு வரும்; தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரின் கிருபையின் நாட்களும் நிறைவுபெறும். அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது. ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார் (2 தெசலோனிக்கேயர் 2:7,8) என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியிருக்கிறார். இங்கு பவுல் அந்திக்கிறிஸ்துவை அக்கிரமக்காரன் என்றும்; பரிசுத்த ஆவியானவரை, அக்கிரமக்காரனைத் தடைசெய்கிறவராகவும் குறிப்பிடுகிறார்.

காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்!

பிள்ளைகளே, இது கடைசிக்காலமாயிருக்கிறது; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக்காலமென்று அறிகிறோம் (1 யோவான் 2:18) என்று எழுதப்பட்டிருக்கிறது. சபையின் காலத்தின், இந்தக் கிருபையின் நாட்களின் சிறப்பு, இந்நாட்களில் அந்திக்கிறிஸ்துகள் தேவனுடைய பிள்ளைகளின் சாட்சியின் வாழ்வுக்கு விரோதமாக எழும்பாதபடிக்கு, பரிசுத்த ஆவியானவர் அவர்களைத் தடைசெய்கிறார். வெள்ளம்போல சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார். அல்லேலூயா!

சபையின் காலத்தில், கிருபையின் நாட்களில், பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயமாயிருக்கிறது. ஆவியானவர்தாமே இந்நாட்களில் நம்முடைய பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். சபை மறுரூபமாக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்படும்போது, பரிசுத்த ஆவியானவரின் கிருபையின் நாட்களும் நிறைவுபெறும். அப்பொழுது பூமியெங்கும் உபத்திரவம் உண்டாயிருக்கும். மணவாட்டி சபை மறுரூபமடைந்து எடுத்துக்கொள்ளப்படும்போது, கர்த்தரின் வருகைக்கு ஆயத்தமாயுள்ளவர்கள் சபையோடு எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

அந்நாளில் உயிரோடிருந்து, அஜாக்கிரதையாய் அந்தத் தருணத்தை நழுவவிடுபவர்கள், கைவிடப்பட்டு உபத்திரவத்தின் நாட்களுக்குள்ளாகவும், அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்கும் வஞ்சகங்களுக்கும் உட்படுவார்கள். அந்நாட்களில், பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையின்றி, இயேசுகிறிஸ்துவுக்குள்ளான அவர்களுடைய சாட்சியைக் காத்துக்கொண்டு, முடிவுபரியந்தம் விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும் உண்மையிலும் நிலைத்திருந்து இரட்சிக்கப்படுவது மிகவும் கடினமாக இருக்கும்.

இதனிமித்தம் இந்தக் கிருபையின் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ள அழைக்கப்படுகிறோம். கிருபையாய் நமக்கருளப்பட்டிருக்கும் இந்த நாட்களில் வாசற்படியிலே நின்று தட்டும் இயேசுவின் சத்தம் கேட்டு, இன்றே பரிசுத்தத்திற்கும், உண்மைக்கும்

அர்ப்பணிப்போம். அதிசீக்கிரமாய் வரவிருக்கும் இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு விழித்திருந்து ஆயத்தமாயிருப்போம்.

பின்மாரியின் காலத்திற்காக வேண்டிக்கொள்ளுங்கள்!

வேதாகமத்தில் பின்மாரி என்கிற வார்த்தை, கர்த்தர் தேவனுடைய பிள்ளைகளுக்கு ஏற்றகாலத்தில் தரவிருக்கும் ஆசீர்வாதங்களையும், கர்த்தரின் வருகைக்கு முன்னர், மாம்சமான யாவர்மேலும் ஊற்றப்படவிருக்கும் கர்த்தருடைய ஆவியையும் குறிக்கிறது. இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே (யாக்கோபு 5:7,8) என்று எழுதப்பட்டிருக்கிறது.

பயிரிடுகிறவனைப்போன்றே, கர்த்தரின் வருகைக்கு காத்திருக்கிறவர்களும், விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும் உண்மையிலும், நீடிய பொறுமையோடு நிலைத்திருக்க அழைக்கப்படுகிறார்கள். முன்மாரி பெந்தெகொஸ்தே நாளில் தந்தருளப்பட்ட பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும்; பின்மாரி, கர்த்தருடைய வருகைக்கு முன்னர் மாம்சமான யாவர் மீதும் ஊற்றப்படவிருக்கும் கர்த்தருடைய ஆவியையும் குறிக்கிறது. அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.

கர்த்தர்: நீ உன் தானியத்தையும் உன் திராட்சரசத்தையும் உன் எண்ணெயையும் சேர்க்கும்படிக்கு, நான் ஏற்றகாலத்தில் உங்கள் தேசத்தில் முன்மாரியையும் பின்மாரியையும் பெய்யப்பண்ணி, மிருக ஜீவன்களுக்காக உன் வெளிகளிலே புல் முளைக்கும்படி செய்வேன். நீ சாப்பிட்டுத் திருப்தியடைவாய் என்கிறார் (உபாகமம் 11:14,15). மேலும்: தேசமே, பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். சீயோன் குமாரரே, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்; அவர் தக்கபடி உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து,

உங்களுக்கு முன்மாரியையும், பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப்பண்ணுவார். களங்கள் தானியத்தினால் நிரம்பும்; ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும் (யோவேல் 2:21,23,24) என்றும், பின்மாரிகாலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்ளுங்கள் (சகரியா 10:1) என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

இந்த வசனங்களை யாக்கோபு 5:7,8 வசனங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது, களங்கள் தானியத்தினால் நிரம்ப, ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோட, பின்மாரி அவசியமாயிருப்பதை அறியலாம். இதைப்போன்றே, இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு முன்னர், மீட்கப்பட்டோரின் எண்ணிக்கை நிறைவுபெற, கர்த்தர் மாம்சமான யாவர்மீதும் கர்த்தருடைய ஆவியை ஊற்றவிருக்கிறார். அல்லேலூயா!

களங்கள் தானியத்தால் நிரம்பும்!

உயர்பதவி வகிக்கும் அதிகாரி ஒருவர், தன்னுடைய ஓய்வு நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும் இயேசுகிறிஸ்துவின் அன்பை, விரும்பி அழைப்போருக்கு நற்செய்தியாக அறிவித்துவந்தார். அந்த அதிகாரி இதைத் தவிர்க்கும்படியாகவும், அவருடைய செயல்களுக்கு விளக்கங்கோரியும், அவருடைய மேலதிகாரிகள் ஆணையிட்டார்கள். இச்செய்தி பொதுமக்களின் கவனத்திற்கு வந்தது; ஊடகங்களிலும் தொலைக்காட்சியிலும், செய்தித்தாள்களிலும், இது பிரசுரிக்கப்பட்டு, விவாத மேடைகளில் அலசி ஆராயப்பட்டது. இதனால், இயேசுகிறிஸ்துவை அறியாத பல லட்சம் மக்கள், இயேசுவின் அன்பையும் ஆற்றலையும் ஒரே நாளில் அறிந்துகொண்டார்கள்.

இயேசுவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாத நிலையிலும், தன்னுடைய வாழ்வின் நெருக்கத்தில், இயேசு தன்னை விடுவித்ததைத் தெளிவாக அந்த அதிகாரி தொலைக்காட்சிப் பேட்டிகளில் எடுத்துரைத்தார். இயேசுவை முன்னறியாத, நன்கு படித்துப் பொறுப்பான உயர்பதவி வகித்த இவரது சாட்சி; வாழ்வின் சோதனையில், செய்வதறியாது வேதனையில் கலங்கித் தவிக்கும் அநேகரைச் சிந்திக்க வைத்தது. இவ்விதமான நெருக்கங்களில் சிக்கித் தவித்த அநேகர், இயேசுவை நோக்கிப்பார்த்து விடுவிக்கப்பட இது வழிநடத்தினது. அல்லேலூயா!

இதைப் போன்ற ஆவியானவரின் கிரியைகளைத் தேவமனிதர் ஒருவர் பல வருடங்களுக்கு முன்னர் பகிர்ந்துகொண்டார். வடமாநில நற்செய்திப் பணித்தளம் ஒன்றிற்கு அவரை அழைத்துச் சென்றனராம். அந்தக் கிராமம் சாலை வசதி இல்லாத ஒரு மலையின்மேல் இருந்தது. அந்தக் கிராமத்தில் அனைவரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களாக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டு அவர்களை அவர் விசாரித்தபோது, கர்த்தர் அவர்களுக்குச்செய்த பலத்த கிரியைகளை அவர்கள் விவரித்துச் சொன்னார்கள்.

ஊழியர் ஒருவர் தன் மனைவி மகனுடன் அங்கு ஊழியம் செய்து வந்தாராம். அந்த ஊழியரும் மகனும் திடீரென ஒரு விஷக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, மரித்துப்போனார்கள். அவர்களுடைய உடல்களைச் சொந்த ஊருக்கு எடுத்துச்செல்லக்கூடாமல், அங்கேயே புதைத்துவிட்டார்கள். வைராக்கிய வாஞ்சையுள்ள கர்த்தருடைய ஆவியானவர், பின்னர் ஒருநாள் இரவில், அந்தக் கிராமத்து மக்கள் அனைவருக்கும் சொப்பனத்திலே தோன்றி, கர்த்தரே தெய்வம் என வெளிப்படுத்தினாராம். பின்மாரியின் செயல்பாடுகளைப்போன்று, ஒரே நாளில் அந்தக் கிராமம், இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டது; களங்கள் தானியத்தால் நிரம்பின!

இனி காலம் செல்லாது. களங்கள் தானியத்தால் நிரம்புகிறது. இப்படியான பின்மாரியின் தாக்கங்கள், கிராமம், பட்டணம், தேச அளவில் துரிதமாக வெளிப்படும் நாட்களில் நாம் இருக்கிறோம். இதைப்போலொத்த சம்பவங்கள் எத்தனை நடந்துகொண்டிருக்கிறதோ, நடைபெறவிருக்கிறதோ, நாம் அறியோம். ஆனால், இவைகளையெல்லாம் காணும்போது, கேட்கும்போது, இயேசுகிறிஸ்து மிகவும் சமீபமாய் வாசலருகே நிற்கிறார் என அறியலாம்.

சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டிய நிகழ்வுகள்!

இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு முன்னோடியாக, யோவேல் தீர்க்கதரிசியின் வாக்குப்படி, கர்த்தர் மாம்சமான யாவர்மேலும், பின்மாரியாக தம்முடைய ஆவியை ஊற்றவிருக்கிறார். மேலும், உபத்திரவக்காலத்தில் நடைபெறவிருக்கும் சம்பவங்களையும், முன்

தீர்மானிக்கப்பட்ட காலங்களில் நடந்தேறச் செய்யப்படும் ஆயத்தங்களையும், இப்பொழுதே நாம் கண்டுணர முடிகிறது. நம்மைச் சுற்றிலும் அதனதன் வேளையில் நடந்தேறுகிற நிகழ்வுகளைக் கவனித்தறிகிறது மட்டுமல்லாமல், பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு அவைகளை ஆவியில் உணர்ந்து, விழிப்புடன் ஜாக்கிரதையாய்ச் செயல்பட அழைக்கப்படுகிறோம்.

சபை மறுரூபமாக்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர், கைவிடப்பட்டவர்கள் உபத்திரவத்தின் காலத்திற்குட்படுவர் என அறிந்திருக்கிறோம். இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும், அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங்கூடாதபடிக்கும் செய்தது (வெளி. 13:16,17) என்று எழுதப்பட்டிருக்கிறது.

முந்தின காலங்களில், இந்த வசனங்களை நாம் முழுமையாக விளங்கிக்கொள்ளத் தேவையான விவரங்களும், தெளிவும் இல்லாதிருந்தது. ஆனால், இந்நாட்களில், தொழில்நுட்ப வளர்ச்சியும், தொகுக்கப்பட்ட தனிமனிதரின் விவரங்களும், அவற்றைப் பகுத்தறியும் வசதிகளும், இந்த வசனங்களை இன்னும் சற்றுத் தெளிவாக அறிந்துணர உதவுகிறது.

உபத்திரவக்கால முத்திரை!

மனிதருடைய கைரேகைகள் தனித்தன்மை வாய்ந்தவை. கைரேகையை வைத்து எந்த ஒரு மனிதனையும் துல்லியமாக அடையாளம் காணமுடியும். தேசத்தில் எல்லா மனிதருடைய கைரேகைபோன்ற விவரங்களையும் பொதுவாகச் சேகரித்துவைத்து, தேவையானபோது ஒப்பிட்டுப்பார்த்து அடையாளங்காணும் தொழில்நுட்பமும் வசதிகளும் இப்பொழுது பயன்பாட்டில் உள்ளன. ரேஷன்கார்டுப்போன்ற அடையாள அட்டைகளும், சிறிய அட்டை வடிவத்தில் (Smart Card) வழங்கப்படுகின்றன.

சேகரிக்கப்பட்ட தனிமனிதரின் விவரங்களை ஏமாற்றுவதற்கு வாய்ப்பின்றிப் பாதுகாக்கப் பலநாடுகளில் இந்த விவரங்களை ஒரு அரிசி மணி அளவிலான நுண்ணிய மின்னணுத் தகட்டில் பதிவுசெய்து, மனிதரின் வலது கையிலோ அல்லது நெற்றியிலோ பதிக்கும் பணிகளுங்கூட சில இடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இதுவே உபத்திரவத்தின் நாட்களில் பொருட்களை வாங்கவும் விற்கவும் தேவையான முத்திரை என்பதாக அறியலாம்.

பரந்த நம் தேசத்தில், வேண்டிய விவரங்களைச் சேகரித்து, இம்முறையைச் செயல்படுத்துவது மிகவும் கடினம் என்கிற நிலை, இப்பொழுது மாறி உள்ளது. தேவையான அனைத்துத் தகவல்களும் சேகரிக்கப்பட்டுச் சரிபார்க்கப்பட்டு, அவற்றை உபயோகிக்கும் வசதிகளும், தேவையான எல்லா இடங்களிலும் செய்யப்பட்டுள்ளன. இன்னும் சில காலத்திலேயே, மின்னணுத் தகட்டில் இவற்றைப் பதிவுசெய்து, தனிமனிதரின் உடலில் பதிக்கும் வசதிகளும் செய்யப்படுவது அதிக நிச்சயமாகத் தோன்றுகிறது.

உபத்திரவத்தின் நாட்களில் நடைபெறவிருக்கும் நிகழ்வுக்கே, சகலமும் ஆயத்தமாக உள்ள நிலையில், அதற்கு முந்தைய நிகழ்வான நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகை மிகவும் சமீபமாக இருக்குமல்லவா? ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார் (லூக்கா 21:36).

நினையாத நாழிகையில் இயேசு!

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, இயேசுகிறிஸ்து வாசற்படியிலே நின்று தட்டுகிறார்; அதிசீக்கிரமாய் வரவிருக்கிறார். நினையாத நாழிகையிலே வரவிருக்கும் மனுஷகுமாரனாம் இயேசுகிறிஸ்துவைச் சந்திக்க நாம் விழிப்புடன் ஆயத்தமாயிருப்போம். ஆயத்தமாயிருக்கும் நம்மைக் கர்த்தர் உபத்திரவத்தின் நாட்களுக்குத் தப்புவிப்பார்.

கடைசிநாட்களில் கொடியகாலங்கள் வருமென்று அறிந்திருக்கிறோம். சபைகளிலும், சமுதாயத்திலும் வஞ்சகங்கள் ஒருபுறம் பெருகித் திரளாய் நிற்கிறது. கள்ளர்கள் பரவி எங்கும் கர்த்தரின் வார்த்தையைப் புரட்டுகின்றார்கள். மறுபுறம் நம்மைச் சுற்றிலும், பூமியின் எல்லையெங்கும் இயேசுகிறிஸ்துவின் வருகைக்கான அடையாளங்கள் தோன்றி, அதிசீக்கிரமான இயேசுவின் வருகையை வெளிப்படுத்தி நிச்சயிக்கின்றன.

உத்ரகாண்ட், தமிழகம், கேரளா, ஒரிசா எனத் தவறாது ஏதோவொரு மாநிலத்தில் தொடரும் இயற்கையின் சீற்றத்தினால் ஏற்படும் பேரழிவுகளும், இந்த எச்சரிப்பை உறுதிச்செய்கின்றன. ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது என்பதாக அறிந்தோம். நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுவோம்.

மீட்கப்பட்ட பரிசுத்தவான்களின் எண்ணிக்கை நிறைவுபெற, தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி, பின்மாரியைக் கட்டளையிடுகிறார். மாம்சமான யாவர்மேலும் கர்த்தர் தம் ஆவியை ஊற்றுவார். தேவ எக்காளம் வானில் முழங்க, பரிசுத்தர்கள் யாவரும் சேர்ந்து, தேவாதி தேவனைச் சந்திக்கும் அந்த நாள் மிகவும் சமீபமாயிருக்கிறது.

ஆயத்தமாயிருக்கும் நாம், கண்ணிமை நேரத்தில் மாறிடுவோம். மேகங்கள்மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, விண்ணிலே இயேசுவைச் சேர்ந்திடுவோம். பலன்கள் யாவையும் அவரே நமக்கு அளிப்பார்; எப்பொழுதும் கர்த்தருடனேகூட வாழ்ந்திடுவோம். இதோ, இயேசுகிறிஸ்து மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும். அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும் ஆமென்.

உணர்வடைவோம், விழித்திருப்போம், ஆயத்தமாவோம். ஆயத்தப்படுத்துவோம். ஆமென். கர்த்தராகிய இயேசுவே வாரும். மாரநாதா!

உங்களோடு சில வார்த்தைகள் .. .. ..

சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் தந்த தரிசனங்கள், வேதாகமத்தில் வெளிப்படுத்தின விசேஷமாக தொகுக்கப்பட்டுள்ளன. இந்தக் கடைசிக்காலத்தில், நாம் அவராலே பெற்ற அபிஷேகத்தினால், தேவன் தாமே இந்த இரகசியங்களை நமக்குத் தெளிவுப்படுத்தி வருகிறார்.

ஏழு சபைகளைப்பற்றின தரிசனத்தை "நீங்கள் எந்தச் சபை?" என்கிற புத்தகமாக முன்னர் பிரசுரிக்கக் கர்த்தர் உதவினார். இதைத் தொடர்ந்து, தம்முடைய வருகையைக் குறித்துத் தியானிக்கும்படி உணர்த்தினார்; தேவமனிதர் ஒருவர் மூலமாகவும் இதை உறுதிச்செய்தார். இந்தக் கடைசிக்காலத்தில் வெளிப்படுத்தின விசேஷத்தின் எஞ்சிய தரிசனங்களைப் போர்க்கால அடிப்படையில் தியானித்துத் தொகுத்து எழுதக் கிருபை செய்திருக்கிறார்.

கிறிஸ்து இயேசுவுக்குள்ளான இந்த முயற்சியின் துவக்கமும், விளக்கங்களின் தெளிவும் எளிமையும், நிறைவும் கர்த்தருடையதே. இந்தத் தரிசனங்களை, ஒவ்வொரு நிலையிலும் சோர்ந்துபோகாமல் தொடர்ந்து தியானித்து, எளிய நடையில் நிறைவுசெய்ய கர்த்தரே கிருபையருளினார். தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

எல்லையற்ற கர்த்தருடைய மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும், இதன் எல்லாப் பகுதிகளிலும் வியாபித்து உயர்ந்திருப்பதை உணரலாம். இந்த வெளிப்பாடுகளைத் தயங்கித் தடுமாறி வாசித்துத் தியானிக்கும் நிலை மாறி, எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவேண்டும் என்கிற பிதாவின் சித்தமும், நம்மேல் அவர் வைத்திருக்கிற அளவில்லாத அன்பும் இதில் புதைந்திருப்பதை அறிந்து, இப்பொழுது ஆவலோடு இதை வாசிக்கத் தூண்டுகிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகை சமீபமாயிருப்பதை இதனிமித்தமும் அறியலாம். பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு இந்நூலை வாசித்துத் தியானித்துத் தெளிவடைந்து, அவருடைய வருகைக்கு ஆயத்தமாயிருங்கள்; மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துங்கள். கூடுமானால், இந்நூலை விருப்பமுள்ளவர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்.